

# சக்தி

# என்னுரை

தினமலர் வாரமலரில் 33 வாரங்கள் வெற்றிகரமாக வெளிவந்த தொடர் இது.

வழக்கம்போல ஆன்மீக மர்மக்கதைதான். ஆனாலும் வித்யாசமாக ஒரு குடும்பக் கதையாகவும் இதை வடிவமைக்க முயன்றேன்.

சிவம் தொடரைத் தொடர்ந்து வந்த இந்த நாவலும் பரவலான வரவேற்பைப் பெற்றது.

குறிப்பாக இந்தத் தொடரில் நான் ஸ்ரீ யந்த்ரம் பற்றி எழுதிய குறிப்புகள் பலரை வசீகரித்தது. பலர் பிரமித்துப் போனார்கள். ஒரு செப்புத்தகட்டில் முக்கோணமும் சதுரமு மாய் இருக்கும் ஒரு கோலத்திற்கு பின்னால் இத்தனை பொருளா? என்று கேட்டு வியந்தவர்கள் பலர். அதன் முப்பரிமாண உருவத்தை 'மேரு' என்கிற பெயரில் வைத்து வழிபட்டு வந்தவர்களும்கூட இத்தொடரை வாசிக்கத் தொடங்கியபிறகு வெகுவாக மாறிப்போய் ஸ்ரீ யந்த்ர வழிபாட்டில் தீவிரம் கொண்டார்கள்.

பொதுவாக தகடு எந்திரம் என்பதெல்லாமே ஒரு வித கப்ஸா, வியாபார தந்திரம் என்ற தப்பான எண்ணத்தில் இருந்தவர்களும் மாறிப் போனார்கள்.

சிலர் எங்கிருந்தெல்லாமோ போன் செய்து பேசி பாராட்டு தெரிவித்தனர். ஒரு வாசகி என்னை குருநாத ராகவே வரித்துக்கொண்டு பக்தி செலுத்தத் தொடங்கி விட்டார்.

அந்த அளவுக்கு இதன் தாக்கம் இருந்தது.

வாசக உலகமும், குறிப்பாக பெரிய அளவில் ஆன்மீக ஞானம் இல்லாதவர்களும் எளிதில் விளங்கிக் கொள்ள வகை செய்யுமாறு ஸ்ரீ யந்த்ரம் பற்றி நானும் எழுதினேன்.

அதற்கான சக்தியை அந்த அம்பிகையே எனக்குத் தந்தாள் என்றால் அது மிகையில்லை.

ஒரு வாசகி எதற்கு இதில் கற்பனையான ஒரு கதை... ஸ்ரீ யந்த்ரம் பற்றி மட்டுமே இன்னும் எழுதலாமே என்றார்.

ஆனால் ஸ்ரீ யந்த்ரம் பற்றி எவ்வளவோ பேர் எழுதியுள்ளனர். அது பாமரர்களை சரியாக அடையவில்லை. குறிப்பாக அதை ஒரு குருடன் யானையை தொட்டறிந்து உணர்ந்த மாதிரி உணர்ந்தவர்களே அதிகம்.

ஒரு மர்மத் தொடரில் முன்னோட்டமாக தந்திடும் போது அது சுலபமாக மக்களைச் சென்று அடைகிறது.

அதே சமயம் இந்த தொடருக்கும் ஸ்ரீ யந்த்ரத்துக்கும் ஒரு தொடர்பு இருப்பதால் பொருத்தமாகவும் உள்ளது.

என்வரையில் எனக்கு மிக மன நிறைவு அளித்த தொடர்களில் இதுவும் ஒன்று. வாசகர்கள் விளங்கிக் கொள்ளும் முன் நான் விளங்கிக் கொள்ள வேண்டுமல்லவா? அதற்காக அனேக புத்தகங்களைப் படித்தேன். ஸ்ரீ யந்த்ர உபாசகர்களிடமும் உரையாடினேன்.

ஸ்ரீ புவனேஸ்வரி ஸ்வாமிகளின் அருளாசியும் அவரது நூல்களும் பெரும் துணை செய்தன. இன்று அவர் முக்தி பெற்றுவிட்டார். அவரது வழியில் அவரது புதல்வரவர்கள் அந்த பீடத்தை அலங்கரித்து வருகிறார்கள்.

அவர்களுக்கெல்லாம் இவ்வேளையில் என் பணிவான வந்தனங்களைச் சொல்லி தினமலர் வாரமலர் இதழிற்கும் என் நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

அதன் ஆசிரியர் திரு கோபால்ஜி அவர்கள் அளித்த ஊக்கம், ஆசிரியர் குழுவில் திரு பாஸ்கர் காட்டிய ஆர்வம், திரு. ஸ்யாமின் ஓவியங்கள் உண்டாக்கிய மகிழ்வு என்று நான் குறிப்பிட வேண்டியவர்கள் பலர். அனைவருக்கும் என் நன்றிகள்.

அன்புடன்
**இந்திரா சௌந்தர்ராஜன்**

# சக்தி

## 1

### கதைக்குள் போகும் முன்...

'ஒன்று ஒன்றாக இருக்கின்ற வரையில் அதைப் புரிந்து கொள்வது கடினம். அதுவே இரண்டாகி விட்டால் அதை பகுத்து உணர்வது மிகச் சுலபமாகி விடுகிறது.

மானிடர்கள் வாழும் இந்த உலகம் ஒன்றுதான். ஆயினும் இரவு-பகல் என்கின்ற இரண்டாலேயே அது ஜீவனுடன் இயங்குகிறது.

ஒன்றுக்குள் உள்ள அந்த இரண்டுதான் ஒன்றை முற்றிலுமாய் உணர வழிவகை செய்கிறது.

காணும் ஒவ்வொன்றிலும் இன்னொன்று உள்ளது.

நெருப்புக்குள் உஷ்ணம், தண்ணீரில் சிலுசிலுப்பு, பாலுக்குள் வெண்மை என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

இறை உருவிலும் ஒன்றாகி இறை 'சிவ சக்தி' என்னும் இரண்டாலேயே அறியப்படுகிறது. இதில் சிவம் என்பது சேதனம். அதாவது அறிவுப் பொருள்.

*சக்தி என்பது அசேதனம். அதாவது ஜடப்பொருள். இவை இரண்டும் இணை பிரியாதவை. பிரிக்க முடியாதவையும் கூட... கண்ணுக்குப் புலனாகாத ஒரு அணுத்துகளில் கூட இவை இரண்டும் புரோட்டான், நியூட்ரான்களாக இருப்பதுதான் விந்தை.*

*எதிலும் இரண்டு இருப்பதை உலகிற்கு உருவப் பாட்டுடன் விளக்க இறை எடுத்த வடிவமே அர்த்த நாரீஸ்வர தோற்றம்.*

*இதில் இடப்பாகம் சக்தியாகிய உமையைச் சேர்ந்தது. பாதாதிகேசம் இந்த வடிவத்தை கூர்ந்து கவனித்தால் காமனை எரித்த கண்முதல், காலனை உதைக்கும் கால் வரை இடதாகவே இருக்கிறது.*

*இதன் சூட்சமத்தை காஞ்சிப் பெரியவர் அற்புதமாக விளக்குகிறார்.*

*'இறை சொரூபத்தில் அம்பிகையே ஜனன, மரணங்களிலிருந்து ஜீவனை விடுவிக்கிறவள். சிவனே கூட இயங்கிச் செயல்பட அவளே பெரிதும் தேவைப்படுகிறாள்' என்கிறார்.*

*சிவனுக்கே இயக்க சக்தி அவள்தான் என்றால் மற்ற உயிர்களுக்கெல்லாம் கேட்கவா வேண்டும்?'*

பரபரப்புடன் இருந்தது சேலம் பேருந்து நிலையம். மதுரைக்கு எந்த பஸ் போகும் என்று விழிகளால் தேடியபடி இருந்தான் தேவநாதன்.

அவன் கைவசம் ஒரு பிரீஃப்கேஸ். இறுக்கமாக அதை பற்றிக் கொண்டிருந்தான். கறுப்பு பேன்ட் அணிந்து மேலே வெள்ளைச் சட்டை போட்டிருந்தான். டக் செய்து கொண்டிருந்தால்இன்னும் நன்றாக இருக்கும் போல தோன்றியது. காலிலும் ஒரு சுமாரான செருப்புதான். வாங்கி ஒரு வருடமாவது ஆகியிருக்க வேண்டும் என்பது போல் தேய்ந்திருந்தது. முகத்திலும் ஒருவாரத்து தாடை முடிகள். பார்வையில் கூட ஒரு வித சோகம்.



தெரிந்தவர்கள் யாராவது பார்த்தால் 'என்னடா தேவா... நீயா இப்படி இருக்கே?' என்று கேட்டு வருத்தப்பட ஆரம்பித்து விடுவார்கள். அவனுக்கும் யாராவது பார்த்து விடுவார்களோ என்கிற மாதிரி ஒரு குறுகுறுப்பு இருந்தது.

பிரீஃப்கேசுடன் சுற்றிச் சுற்றி வந்து இறுதியாக ஒரு மதுரை செல்லும் பஸ்சை கண்டுபிடித்து அதில் ஏறி அமர்ந்தான்.

அடுத்த ஐந்து மணி நேரத்தை நினைக்க சற்று மலைப் பாக இருந்தது. காலை நீட்டி மடக்கக் கூட முடியாதபடி அமர்ந்தே கிடக்க வேண்டும். நினைக்கும்போதே எரிச்சலாக வந்தது.

'மிஸ்டர் தேவநாதன் உங்களுக்கு மதுரை ட்ரான்ஸ்ஃபர்' என்று எப்பொழுது அவனது நிறுவனத்தில் கூப்பிட்டுச் சொன்னார்களோ அப்பொழுதே அந்த எரிச்சல் ஆரம்பமாகிவிட்டது. பிறந்து வளர்ந்தது முதல் படித்தது பாடியது என்று எல்லாமே சேலத்தில் அமைந்து விட்டவனை ஒரு ட்ரான்ஸ்ஃபர் பிரிக்க முன்வந்து விட்டது. மதுரை எப்படி இருக்குமோ?

நிச்சயம் சேலம் போல மாம்பழம் கிடைக்காது. பட்டு வேட்டி கிடைக்காது, இத்தனை சினிமா தியேட்டர்கள் சத்தியமாய் வேறு எந்த ஊரிலும் இருக்காது. கிளைமேட்டிலும் கோவை, சேலம்தான் தமிழ்நாட்டிலேயே சற்று குளிர்ச்சியான நகரங்கள். மதுரையில் சூரியன் சுட்டு வறுத்து விடுவானாம். நண்பர்கள் சிலர் சொன்னதெல்லாம் அவனுக்குள் நெளிந்து கொண்டிருந்தது. ஒருவர் மட்டும் அவனைப் பார்த்து பொறாமைப்பட்டார்.

"தேவா... நீ போறது மதுரைக்கு இல்ல. மீனாட்சிப் பட்டணத்துக்கு... கொடுத்து வெச்சவன் நீ. எதாவது சின்ன சலனம்னாலும் அவ சன்னதிக்குப் போய் மன முருக சொல்லிட்டு வந்துட்டா போதும். அப்புறம் அவ பார்த்துப்பா" என்று கூறியிருந்தார்.

அவன் அக்கா வனிதா கூட "மதுரைக்கு போய் நல்ல வீடா பார்த்துட்டு திரும்பி வரும்போது மீனாட்சி குங்கு மம் வாங்கிவிட்டு வாடா. அதுலையும் தாழம்பூ குங்குமம் அப்படி கமக்குமாம்ல?" என்று சொல்லி அனுப்பி யிருந்தாள்.

சகலத்தையும் அசைபோட்டபடியே அமர்ந்திருந்தான் தேவநாதன். ஒரு தனியார் நிறுவனத்தில் அக்கவுன்ட்ஸ் அசிஸ்டென்ட் ஆக இருக்கிறான். அந்த நிறுவனத்தின் ஹெட் ஆபீஸ் மதுரையில் இருக்கிறது. ஹெட் ஆபீசில் அக்கவுன்ட்ஸ் டிபார்ட்மென்டில் இருந்த அசிஸ்டென்ட் ஒருவர் எழுதிக் கொடுக்கவும் அந்த சீட்டுக்கு தேவ நாதனைப் போடும்படி ஆகிவிட்டது. ஒரு கிரேட் கூடக் கொடுத்து சம்பளத்திலும் ஒரு அறுநூற்றுச் சில்லரையை ஏற்றிக் காட்டி அதன்பிறகுதான் மதுரைக்கு அவனை போகச் சொல்லியிருக்கிறார்கள்.

மாட்டேன். முடியாது என்றெல்லாம் அடம்பிடிக்க முடியாது. 'வி.ஆர்.எஸ்' பூதம் ஒன்று ஆறு மாதத்திற்கு ஒருமுறை விஸ்வரூபம் எடுத்தபடி இருக்கிறது. அதில் தேவநாதனை மாட்டி வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள்.

ராஜா வீட்டு கன்னுக்குட்டிகளாய் மதர்ப்புடன் திரிந்து கொண்டிருந்த அரசு ஊழியர்களாலேயே கோரிக்கை, ஸ்டிரைக் என்று வாயைத் திறக்க முடியவில்லை.

ஆப்புகள் அப்படி வைக்கப்பட்டிருக்கின்றன.

இதில் தனியார் நிறுவனத்தில் இருந்துகொண்டு எதை சாதித்துவிட முடியும்?

ஆற்று நீரில் விழுந்த காய்ந்த சருகு மாதிரிதான். அதன் போக்கில் போய்க் கொண்டே இருக்க வேண்டியது தான்.

பெருமூச்சு வெளிப்பட்டது தேவநாதனிடம்.

'எக்ஸ்க்யூஸ் மீ தம்பி' என்று ஒரு குரல்.

அதேசமயம் 'எக்ஸ்க்யூஸ் மீ தம்பி' என்று ஒரு குரல். திரும்பினான். ஒருவர், அவன் பக்கத்தில் அமர இடம்



கேட்டு நின்று கொண்டிருந்தார். அந்த இடத்தில் அவன் பிரீஃப் கேஸ் இருந்தது.

தேவநாதனும் அந்த பிரீஃப் கேசை கையில் எடுத்துக் கொண்டான். கூடவே 'சாரி சார்... நீங்க உக்காருங்க' என்று சற்று ஒதுங்கி அமர்ந்தான். தேவநாதன் சாரி சொன்னவிதம், அந்த பரிதாபமான முகம் எல்லாமே அவரைக் கவர்ந்து விட்டது.

சிலரைக் கவர சில நொடிகள் போதுமானது என்பது உண்மைதான். சிரித்தபடியே அவரும் அவன் அருகே அமர்ந்தார்.

யார் செய்த புண்ணியமோ முன்னும் பின்னும் அவ்வ ளவாய் கூட்டமில்லை. ஸ்பீக்கர் வைத்து கண்ட பாடல்களைப் போட்டு அந்த பஸ் டிரைவரும் காதை ரணமாக்கவில்லை. ஓரளவு நிசப்தமாக இருந்தது அந்தச் சூழல். அருகில் அமர்ந்தவருக்கு ஒரு அறுபது வயதிருக் கலாம். காவி வேட்டியும். ஜிப்பாவும் அணிந்திருந்தார். நெற்றியில் நல்ல பருமனில் குங்குமப் பொட்டு. தலை முடியிலும், தாடியிலும் ஒரு கொக்குக் கூட்டமே தெரிந் தது. அவ்வளவு வெண்மை.

தேவநாதனும் அவரைப் பார்த்து சற்று மதிப்பாகவும், மரியாதையாகவும்தான் உணர்ந்தான். அவரிடம் இருந்து கும்மென்ற தாழம்பூ வாசம், தேவநாதனை அப்படியே கிறக்கியது. ஆழ்ந்து சுவாசித்து அதை அனுபவித்தான். அவரும் அதை கவனித்தார்.

நடுவில் கண்டக்டர் வந்து, 'டிக்கெட்' என்றதும் மதுரை என்று சொல்லி டிக்கெட் வாங்கிக் கொண்டான். அவரும் மதுரைக்குத்தான் டிக்கெட் வாங்கினார்.

கண்டக்டர் விலகவும், "தம்பிக்கு மதுரைல எந்தப் பக்கம்?" என்று ஆரம்பித்தார்.

"இல்லீங்க... நான் மதுரைக்கு புதுசு. இனிமேதான் வீடு பாக்கணும்" என்றான் அவனும்.

"அப்ப இனிதான் மதுரைவாசி ஆகப் போறீங்கன்னு சொல்லுங்க."

"ஆமாங்கய்யா... நீங்க?"

"எனக்கும் மதுரைதான்."

"மதுரைல எத்தனை வருஷமா இருக்கீங்க?"

"அது இருக்கேன் ஒரு ஏழெட்டு ஜென்மமா!" -அவர் பதிலில் அவனுக்குள் குழப்பம் மேலிட்டது.

அது அவனது நெற்றிப் பரப்பில் ரேகை மடிப்பில் நன்கு தெரிந்தது. அவரே அவன் குழம்புவது புரிந்து சிரித்தபடி பேச்சைத் தொடர்ந்தார்.

"என்ன தம்பி... ஏதோ சில வருஷங்களா இருக்கேன்னு சொல்லாம ஏழெட்டு ஜென்மம்னு சொன்ன உடனே குழம்பிட்டீங்களா?"

அவன் ஆமோதிப்பாக சிறிய அளவில் சிரித்தான். அந்த பஸ்சும் உதறிக் கொண்டு புறப்பட ஆரம்பித்தது. "நான் ஒரு கிரஹஸ்த சன்யாசி. பொறந்து வளர்ந்ததே மதுரைன்னாலும் பொறக்கறதுக்கு முந்தி எங்க இருந்தேன், என்ன செய்துகிட்டிருந்தேன்னும் நான் தெரிஞ்சு கிட்டேன். அப்பவும் என்னடான்னா நான் மதுரைலதான் திரிஞ்சிகிட்டிருந்துருக்கேன். அட மதுரையைச் சுத்தற கழுதைதான் மதுரையை தாண்டிப் போக விரும்பாதுன்னா இந்த கட்டையும் அப்படித் தாங்கறது பொறவுதான் புரிஞ்சிச்சு."

-அவர் தாடியை நீவியபடியே சொன்னது இந்த முறை அவனைக் குழப்பவில்லை. அவனுக்கு புரிந்துவிட்டது. இந்த மனிதர் ஒன்று மறை கழண்ட ஒருவராக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் போலிச் சாமி வர்க்கமாக இருக்க வேண்டும் என்று தீர்மானித்தவன் அதன்பின் ஜன்னல் வழியே வெளியே பார்த்துக் கொண்டுவர ஆரம் பித்தான். அவரும் விடுவதாயில்லை.



"என்னதம்பி... திரும்பிட்டீங்க. நான் எப்படிப்பட்ட வங்கற சந்தேகமா? மறை கழண்டவனா இல்ல போலிச் சாமியார் வர்க்கமான்னு யோசிக்கற மாதிரி தெரியுதே...?"

-அவர் அவன் மனதை ஏதோ புத்தகத்தைத் திறந்து படித்த மாதிரி சொன்னது அவனைக் கொஞ்சம் நெருடி யது.

"அது... அது..."

"சும்மா நினைக்கறத பேசுங்க தம்பி. அஞ்சுமணி நேரம் பொழுது போகணுமில்ல..."

"ஆமாங்க... நான் உங்களை எந்த லிஸ்டுல எடுத்துக் கறதுன்னு தெரியாம நீங்க சொன்ன மாதிரி கொஞ்சம் குழம்பிட்டேன்."

"ஏன் ஜென்மங்கள்ல உங்களுக்கு நம்பிக்கை இல் லையா?"

"அடுத்த நிமிஷம் எப்படி இருப்போம்னு தெரியாது. இதுல அறிவுக்கு எட்டாத கற்பனையான ஜென்மங்கள் பத்தியெல்லாம் நினைச்சுப் பாக்கறதே வேஸ்ட்டுங்கறது என் எண்ணங்க..."

"நீங்க என்ன பண்ணுவீங்க... படிச்ச படிப்பும் பார்த்த மனுஷங்களும் உங்களுக்குள்ள ஏற்படுத்தின தாக்கம் உங்களை இப்படி பேச வைக்குது..."

"நீங்க என்ன சொல்றீங்க. அதெல்லாம் உண்மைங் கறீங்களா?"

"ஆமா நீங்க எப்ப பொறந்தீங்க?"

"1975ல!"

"அப்ப 74ல எங்க இருந்தீங்க?"

"பொறந்ததே 75ல தான். இதுல 74ல எங்க இருந் தேன்னா என்னங்க கேள்வி இது?"

"இல்லாத ஒண்ணு எப்படிப்பா வர முடியும்?"

"அப்படின்னா... நான் அப்பவும் இருந்தேன்னு சொல்ல வர்றீங்களா?"

"எதுவும் புதுசா உருவாகறது கிடையாது. இந்த பூமியில புதுசு புதுசா யார் எதை கண்டுபிடிச்சாலும் அது இங்க ஏற்கனவே இருக்கற ஒண்ணாதான் இருக்க முடியும். இல்லாத ஒண்ணு இருக்க வழியே கிடையாது."

"அவர் பதில் அவனைச் சளைத்தது. அவர் போரடிக்க ஆரம்பித்து விட்ட மாதிரி உணர்ந்தான்.

"சாரிங்க... உங்க வேதாந்தத்துல எனக்கு இன்ட்ரஸ்ட் கிடையாது. அரைச்ச மாவையே அரைப்பீங்க. சிம்பிளா சொல்லிக்கறேனே... நான் கடவுள் நம்பிக்கை எல்லாம் பெருசா இல்லாத ஒருத்தன்.

உண்மையும் நேர்மையும்தான் என் வரைல கடவுள். நீங்க கொஞ்சம் வேற விஷயங்கள் பேசறீங்களா?"

தேவநாதன் கொஞ்சம் போல சூடானான். அவர் முகமும் உடனே அதன் காரணமாக சற்று வாடிவிட்டது. மலங்க மலங்க பார்த்துவிட்டு அவனிடம் அதன்பின் எதுவும் பேசாமல் தன் தோளில் தொங்கியபடி இருந்த ஜோல்னா பையில் இருந்து தடிமனான ஒரு புத்தகத்தை கையில் எடுத்தார்.

தேவி மகாத்மியம் என்கிற அதன் அட்டையை தேவநாதனும் கவனித்தான்.

"அப்பாடா... அஞ்சுமணி நேரம் இனி இந்த ஆள் வாயே திறக்க மாட்டார்" என்று நினைத்துக் கொண்டான். அவன் பார்வை ஓடும் பஸ்சுக்குள் சற்று முன்னும் பின்னும் சென்றது.

முன்வரிசையில் ஒரு பெண்! அவள் கூந்தலில் அப்பொழுது பறித்தாற் போன்ற ஒரே ஒரு ரோஜா! கூந்தலும் மெதுமெதுவென்று கரும்பட்டாட்டம் வெகு நீண்டு பின் சாய்மானத்தின் பின்னே ஓடி தேவநாதனின் கால் முட்டியைத் தொட்டுப் பின் தேங்கி பரவியிருந்தது.



பக்கத்திலிருப்பவர் படிக்கும் தேவிமகாத்மியத்தை அவன் நேரிலேயே அனுபவிக்கிற மாதிரி இருந்தது.

அவனது இருபத்தி எட்டு வயது வாலிபத்திடம் நிறையவே கற்பனைகளும், கிறுக்குகளும் இருந்ததால் அவள் எழுந்து அந்த கூந்தல் விலகிவிடக் கூடாதே என்றெல்லாம் மனதுக்குள் நினைத்தான். மெல்ல திருட்டுத்தனமாக அதை வருடியும் கொடுத்தான். கூந்தலே இவ்வளவு அழகாக இருக்கிறதே இவளது முகம் எவ்வளவு அழகாக இருக்கும் என்று அவன் யூகிக்கும் முன் அவளே திரும்பினாள்.

ஐய்யோ... நிலா ஒன்று திரும்பியது போல் இருந்தது. அந்த நிலாவும் பேசியது.

'சாரி... வெரி சாரி...' என்றபடி கூந்தலை இழுத்து தன் முன் மார்பின் மேல் விட்டுக் கொண்டாள் அவள்.

போதும்... அந்த ஒருசில நொடிகள் போதும். அவனுக்கு மிகக் கிறக்கமாக இருந்தது. டிரான்ஸ்பர் வருத்தம், குடும்ப அழுத்தம் எல்லாமே இலவம்பஞ்சாகிவிட்டது.

அவள் கழுத்தில் ஒரு தங்கச் சங்கிலி தென்பட்டது. கைகளிலும் கலகலவென்று தங்க வளையல்கள்.

புடவையும், ரவிக்கையும் மைசூர் சில்க்சில்! பின் கழுத்தும், அதற்குக் கீழான முதுகும் பொன்னிறத்தில் கோதுமை அல்வா நெய் மினுமினுப்போடு கிளறிக் கொட்டினது போல தென்பட்டு, அவள் நிச்சயம் படித்த பெரிய குடும்பத்துப் பெண்ணாகத்தான் இருக்க வேண்டும் என்றது.

அதை ஆமோதிக்கிற மாதிரி அவளும் அவளது ஹேண்ட் பேக்கில் சிணுங்கிய செல்ஃபோனை எடுத்து சங்குப்பூ போன்ற காதருகே வைத்து "ஹாய் அனி... நான் திவ்யாதான் பேசறேன்" என்றாள். "ஓ... வெரி க்யூட்... எக்சலன்ட்! நான் மதுரைக்குத்தான் போய்கிட்டிருக்கேன். நகர்ல இருக்கற எங்க வீட்டுக்குத்தான்

போறேன். அங்க லேண்ட் லைன்ல கூப்டு... நம்பரை நோட் பண்ணிக்க..." என்று அவள் திருவாய் மலர்ந்ததெல்லாம் அவனுக்காகவே போல தோன்றியது. அவன் அவள் பெயரையும், நம்பரையும் மனதுக்குள் குறித்துக் கொண்டான். அந்தப் பெரியவர் நடுவில் அவன் கிறங்கிப் போய் கிடப்பதை கவனித்தார்.

அவள் பேச்சை தொடர்ந்து கொண்டிருந்தாள்.

"அனி... உனக்கு என் கல்யாணப் பத்திரிகை வந்துதா?"

அவளது கேள்வி இப்பொழுது அவன் இதயத்தில் ஒரு கிள்ளு கிள்ளியது. அடுத்த நொடி இது கைக்கு மட்டுமே எட்டிய பழம் என்று நினைத்துக் கொண்டான்.

அதிகபட்சம் ஒரு பத்து நிமிட நேரம் கூட ஆகியிருக்காது. அதற்குள் ஒரு உறவு ஏற்பட்டு பின் அது பிரிந்து இல்லாமலும் போய்விட்ட ஒருவித பாரம் அவன் நெஞ்சை அழுத்தும் போது அந்தப் பெரியவர் அவனை திரும்ப அழைத்தார்.

"தம்பி..."

-அவனும் திரும்பினான்.

"நான் இப்ப ஒண்ணு சொல்வேன். ஆனா நீங்க சிரிப்பீங்க" என்றார் அவர்.

"பரவால்ல சொல்லுங்க..."

"நீங்க பெரிய ஆளா ஆகப்போறீங்க... அந்த மீனாட்சி உங்களை அப்படி ஆக்கப் போறா. அதுக்காகத்தான் நீங்க மதுரைக்கே போறீங்க. உங்களுக்கு பிறந்த இடத்துல யோகமில்ல... இடம் மாறினாதான் யோகம். அந்த யோகம் வேலை செய்ய ஆரம்பிச்சிடிச்சு. உங்க வரைல எல்லாமே மாறப் போகுது..."

-அவர் சொல்லிவிட்டு கண் சிமிட்டினார்.



"நீங்க சாமியார் கம் ஜோசியரும் கூடவா. இதுக்கு நான் எவ்வளவு தரணும்?"

-அவனிடம் துளியும் நம்பிக்கையற்ற பதில் கிண்டல்.

"இருங்க, முக்கியமான விஷயத்தையே இனிமே தானே சொல்லப் போறேன்."

"என்ன... ஒரு பெரிய பாவம் தடையா இருக்கு, பரிகாரம் பண்ணிட்டா சரியாயிடும். அதுக்கு ஒரு ஆயிரத்தெட்டு ரூவா ஆகுமா?"

-அவன் கிண்டலாக கேட்க அவர் பதிலுக்குச் சிரித்தார்.

"அதானே... வேறென்ன சொல்லப் போறீங்க. ஒண்ணு ஆயிரத்தெட்டுன்னுவீங்க, இல்லாட்டி நூத்தி எட்டும்பீங்க. இல்ல ஐநூத்தி ஒண்ணும்பீங்க.

படிச்சு பட்டம் வாங்கி ஆபீசுக்குப் போய் உழைச்சு சம்பாதிக்கறது ஒரு வகைன்னா உங்கள மாதிரி இப்படி அருள் வாக்குங்கற பேர்ல புளுகிப் பொழைக்கறது ஒரு வகை."

அவன் மெல்ல தன் சிந்தனை எப்படிப்பட்டது என்று சொல்ல ஆரம்பிக்க அவர் அதற்கும் சிரித்துவிட்டு பின் மெல்ல வாயைத் திறந்தார்.

"தப்பா புரிஞ்சுகிட்டு பேசறீங்க.

நான் குபேரனுக்கே கடன் கொடுக்கற அளவு செல்வந்தன். பாக்கறீங்களா?"

-அவர் தன் ஜோல்னா பையை தேவநாதன் எதிரே திறந்து காட்டினார். உள்ளே கட்டுக் கட்டாய் ரூபாய் நோட்டுகள்.

அவனுக்கும் கண்ணில் மின்னல் இறங்கினது போல் இருந்தது.

"அவசரப்படறீங்களே... கொஞ்சம் நான் சொல்றதையும் கவனமா கேட்டுக்குங்க. காரணமில்லாம இங்க நீங்களும் நானும் சந்திக்கல. அத புரிஞ்சுக்கோங்க.

காரணமில்லாம ஒரு காக்கா கூட கரையாது" என்றவர் முன் வரிசையில் அமர்ந்திருக்கும் ரோஜாப்பூ கூந்தல் பெண்ணைப் பார்த்தபடியே சொன்னார்.

"இந்த மகாலட்சுமியதான் நீங்க இன்னும் ஒரு வாரத்துல கல்யாணம் பண்ணிக்கப் போறீங்க!"

அவனுக்கு அடுத்த நொடி மனது சிலீர் என்று ஆனது.

## 2

சிவம் என்னும்போது லிங்க சொரூபம் தோன்று கிறமாதிரி, சக்தி என்னும்போது ஸ்ரீ யந்த்ர ரூபம் அனைவருக்குள்ளும் தோன்றும்.

இறை சிந்தனை குறித்து நடுவு நிலையோடு ஆய்வு செய்தவர்களுக்கு எல்லாம் லிங்க சொரூப மும், ஸ்ரீ யந்த்ர சொரூபமும் பேராச்சரியம் அளித்த வையாகும். அளித்து வருபவையுமாகும்.

உலகம் என்றால் எவ்வளவோ உயிரினங்கள். மைப்புள்ளியளவுக்கும் சிறிதான அந்துப் பூச்சியி லிருந்து மலைபோல் பருத்த யானை வரை எத்தனை உயிர்கள் எத்தனை உயிர்கள்?

இத்தனை உயிர்களையும் படைத்த இறைவன் மனித வடிவத்தில்தான் இருக்க வேண்டும் என்பது என்ன கட்டாயம்?

மனிதனை விட மேலான ஒரு உயிரினம் ஏன் இருக்கக் கூடாது...? இதெல்லாம் ஆய்வாளர்கள் எண்ணிப் பார்த்தவை.

அவர்களை லிங்க சொரூபமும், ஸ்ரீ யந்த்ர சொரூபமும் அப்படியே கட்டிப்போட்டுவிட்டன. அது வடிவத்துடன் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. அதேசமயம் அது எந்த உயிரைப் போன்றும் இல்லா



மல் அதே சமயம் ஏராள உட்பொருளைக் கொண்ட படி இருக்கிறது.

அதிலும் ஸ்ரீ யந்த்ரம் ஒரு கணிதக் கொட்டாரம். நீளம், அகலம், உயரம், முக்கோணம், சதுரம், செவ்வகம், வட்டம், விழிவட்டம் என்று அதில்தான் எத்தனை வடிவார்த்தங்கள்?

இன்று நாகரீக வளர்ச்சி மிகுந்து விட்டநாளில் கம்ப்யூட்டர் நுட்பத்துடன் கணித நுட்பங்களில் சாதுர்யமாக விளங்குவது ஒன்றும் பெரிதேயில்லை. பல்லாயிரம் ஆண்டுக்கு முன்பே ஒட்டுமொத்த கணிதச் சிறப்போடும். ஸ்ரீ யந்த்ரம் இருந்ததுதான் ஆச்சரியம்.

ஸ்ரீ யந்த்ரம் கணிதச் சிறப்புடையதாக இருப்ப தற்கும் சக்தியான தேவிக்கும் என்ன சம்பந்தம் என்று ஒரு கேள்வி எழுகிறதா?

சக்தி என்பது செயல்பாடு!

சக்தி என்றால் இயக்கம்!

சக்தி என்றால் விழித்த நிலை!

இப்படி பலவாறு அடுக்கிக் கொண்டே போக லாம். இந்த செயல்பாடு, இயக்கம், விழித்த நிலைக் கெல்லாம் ஒரு அடையாளக் குறியாய் உள்ளதுதான் ஸ்ரீ யந்த்ரம்.

பூமி உருண்டையில் மேல் நாடுகளின் வரை கோடுகளை வைத்து அது எந்த நாடு என்று அறிகிறமாதிரி ஸ்ரீ யந்த்ர கோடுகளும் பல விஷயங்களைச் சொல்கிறது.

அது...?

தேவநாதன் சில்லிட்டுப் போனான். தனக்கு முன்னால் தேவதைபோல் அமர்ந்திருப்பவள்தான் தனக்கு மனைவி யாக வரப்போகிறாளா?

அதுவும் ஒரு வாரத்தில்...?

அந்த கேள்வியும் நினைப்பும் அவனுக்கு முதலில் பரம சுகமாகத்தான் இருந்தது. ஆனால் புத்தி எப்போதும் மயக்க உணர்ச்சிகளைத்தான் நெடுநேரம் சரீரத்தில் அனுமதிப்பதில்லையே...?

அது உடனேயே அந்த உபாசகர் போன்ற மனிதரைப் பார்த்து ஒரு சிரிப்பு சிரிக்க வைத்தது. அவர் என்னவோ வெளியே நழுவும் மரங்களைப் பார்த்தபடிதான் வந்தார். அதே சமயம் அவன் நம்பாமல் சிரிக்கிறான் என்பதையும் ஒரு ஓரப் பார்வையால் உணர்ந்து கொண்டார்.

"ஆமா... நீங்க என்ன தடாலடி ஜோசியரா... போற போக்குல எதையாவது சொல்லி ஆழம்பாக்கறதுதான் உங்க வேலையா?"

-மெல்ல சீண்டினான் தேவநாதன்.

"உன்னால நான் சொன்னதை நம்ப முடியலை. அதை நேரா சொல்லு தம்பி. எதுக்கு இப்படி ஆழம்பாக்க றேனான்னுல்லாம் கேக்கறே?" அவர் அவனை உரிமை யோடு ஒருமையில் அழைக்கத் தொடங்கிவிட்டார்.

"ஆமாம்... நம்பத்தான் முடியலை. பொதுவுல இந்த வயசுல அழகா வித்யாசமா யாரைப் பார்த்தாலும் ஐய்யோ இந்த பொண்ணு எனக்கு பொண்டாட்டியா வந்தா எவ்வளவு நல்லா இருக்கும்னு வாலிப மனசு ஆசைப்படும்.

ஆசைக்கு சாதி, குலம், கோத்ரம் இதெல்லாம் ஏது? ஆனா நடைமுறைன்னு ஒண்ணு இருக்கே...? நான் மட்டும் இந்த மாதிரி எத்தனை பெண்ணைப் பார்த்து ஆசைப்பட்டிருப்பேன் தெரியுமா...?"

"நானும் உன் வயசைக் கடந்தவன்தானே தம்பி. வாலிப மனசைப் பத்தி நீ எனக்கே பாடம் நடத்தறி யாக்கும்...?"

"பாடம் நடத்தலை... இப்படி யாரையோ காட்டி இவதான் உன் மனைவின்னா அதை எப்படி நம்பறது...?



ஒரு விஷயம் தெரியுமா...? இந்த பொண்ணுக்கு கல் யாணம் நடக்கப் போகுது. அதாவது இவளுக்கு மாப்ளை பாத்தாச்சு. அதை இந்த பொண்ணு செல்போன்ல பேசினத வெச்சு தெரிஞ்சுகிட்டேன்.

நீங்க என்னடான்னா...?"

காதோரமாக தேவநாதன் கடிக்காத குறையாக கர்ஜித்தான்.

அவர் அதற்கு மேல் எதுவும் பேசவில்லை. ஒரு சிரிப்பு சிரித்துவிட்டு, கண்களை மூடிக்கொண்டார்.

அவனுக்கு எரிச்சலாக வந்தது.

அதை கலைக்கிற மாதிரி அந்த பெண்ணின் கூந்தல் திரும்பவும் அவன் தொடைமேல் வந்து விழுந்து குசுகுசு வென்று உரசியது. அது அவனை என்னவோ செய்தது. கூடவே தான் பேசியதை எல்லாம் அந்த பெண் கேட் டிருப்பாளோ என்று ஒரு சந்தேகமும்...

லண்டியின் ஓட்ட சப்தத்திற்கு நடுவில் எதுவும் காதில் விழுந்திருக்க வாய்ப்பில்லை என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

அந்த முன் விழுந்து உரசும் கூந்தலை மெல்ல தொட்டுப் பார்க்க விரும்பி கை விரல்களை அதன் அருகே கொண்டு சென்றான். அப்படியே திரும்பி அந்த காவிச்சட்டை உபாசகரை ஒரு பார்வை பார்த்தான். கண்களை மூடிக்கொண்டு அவர் மனதுக்குள் ஏதோ மந்திரம் சொல்லிக்கொண்டு முணுமுணுக்கிற மாதிரி தோன்றியது!

❖ ❖ ❖

**கரூர்!** ஒரு காலத்தில் சேர நாட்டின் தலைநகர். இன்று அப்படிப்பட்ட பெருமைகள் எதுவும் இல்லாத குறு நகரமாகத்தான் அவனுக்குத் தோன்றியது. சென்னை

யின் ஒரு மாம்பலம் பகுதி போதும்... மொத்த கரூரை அதற்குள் அடக்கி விடலாம் என்றெல்லாம் நினைத்துக் கொண்டான். பஸ்சும் கரூர் பஸ் ஸ்டாண்டுக்குள் நுழைந்தது. அதேசமயம் பஸ் ஸ்டாண்டில் சூட்கேசை லபக்குப வர்களை நினைத்து எச்சரிக்கை உணர்ச்சியும் ஏற்பட்டது.

இறங்கிச் சென்று ஒரு காபியோ, டீயோ குடிக்க வேண்டும் போல தோன்றியது-

அந்த உபாசகரைப் போன்ற பெரியவரைப் பார்த்தான். அவர் கண்ணைத் திறக்கவேயில்லை. அவரை உசுப்பி பெட்டியைப் பார்த்துக் கொள்ளச் சொல்லலாமா? என்று ஒரு புறமும், கையோடு எடுத்துக் கொண்டு இறங்கி விடலாம் என்று மறுபுறமும் தோன்றியதில் எடுத்துக் கொண்டு இறங்குவதே உசிதம் என்று முடிவுக்கு வந்து பிரீப்கேசுடன் இறங்கினான்.

இறங்கும்போது அந்தப் பெண்ணின் பரம திவ்யமான முகத்தைப் பார்க்க பெரிதும் முயன்றான். அவளோ குனிந்து மடிமேல் ஒரு புத்தகத்தை விரித்து படித்தபடி இருந்தாள்.

சற்று ஏமாற்றமாய் இருந்தது.

அத்துடனேயே இறங்கினான். காபி, டீ கிடைக்கும் கடைக்குச் சென்று கடையைப் பார்த்தவுடன் அப்படியே காபி, டீ குடிக்கும் ஆசை மாறிப்போகத் தொடங்கியது. காரணம் அங்கு நிலவிய சுகாதாரமே இல்லாத சூழல். கண்ணாடி கிளாஸ் எல்லாம் நுனியில் உடைந்து விரிசல் கண்டிருந்தது. பொடக்கென்று அந்த கண்ணாடி டம்ளர்களை ஒரு கழுவிய வாளிக்குள் விட்டு அப்படியே எடுத்து அதை வரிசையில் அடுக்கி டீ வடிகட்டியை அதன்மேல் ஒரு ஓட்டம் ஓடவிட்டு பின் பவுடர் பாலை நுரை ததும்பத் ததும்ப ஊற்றி...

தேவநாதன் திரும்பிவிட்டான்.



ஆபீஸ் டாக்டர் அமீபியாசிஸ் என்னும் வயிற்று உப்புச வியாதி எப்படி வருகிறது என்று விளக்கமளித்தது ஞாபகத் திற்கு வந்தது.

அமீபியாசிசின் அடைக்கல இடமே இந்த மாதிரி டீக்கடைகளும், அங்கு போடும் கசட்டு எண்ணை வடை, பஜ்ஜிகளும்தான்.

யாரையாவது மெல்லக் கொல்ல வேண்டும் என்றால் ஒரு சில மாதங்கள் இந்தக் கடைகளில் அவர்களுக்கு வடை, பஜ்ஜி வாங்கித் தந்தால் போதும். அவர்கள் எவிடன்சே இல்லாமல் செத்துப் போய்விடுவார்கள் என்றெல்லாம் ஆபீசின் ஹெல்த் சென்டர் டாக்டர் வேடிக்கையாகச் சொல்வார்.

எல்லாம் மனதுக்குள் ஓட திரும்ப பஸ்சில் ஏறி அமர்ந்தான்.

அந்தப் பெண் குனிந்த தலையை நிமிர்த்தவே யில்லை. அவனுக்கு மிக ஏமாற்றமாக இருந்தது.

எப்போதும் அவனுக்கு ஒரு ராசி உண்டு. டி.வி.யில் பிடித்த சீன்கள் வரும் நேரம்பார்த்து குறுக்கில் யாராவது வந்து மறைத்துக் கொண்டு நிற்பார்கள். அதே போல்தான் கபகப என்று பசிக்கும் நாளில் வீட்டில் சோறு இருக்காது. இனிமேல்தான் அடுப்பில் வைத்து பொங்க வேண்டும் என்பாள் அவள் அம்மா!

காலில் அடிபட்டு நகம் பிய்ந்திருக்கும். அது எப்படித் தான் எல்லோருக்கும் தெரியுமோ தெரியாது. அந்த நகம் பிய்ந்த இடமாகப் பார்த்து மிதித்து அவனை அலற விட்டு விட்டு சாரி சொல்லிவிட்டுப் போவார்கள்.

அதையெல்லாம் ஒருமுறை நினைத்துக் கொண்டவன் அந்த பெண்ணைப் பார்க்க முயற்சி செய்வதும் வேஸ்ட் என்றே நினைத்துக் கொண்டான்.

ஆசையான எந்த ஒரு விஷயமும் அவஸ்தைப்படாமலோ இல்லை படுத்தாமலோ கிடைத்ததேயில்லையே...?

ஹூம்... நானும் ஒரு ஜென்மம்!

அவனுக்குள் சுயபச்சாதாபம் கனன்று புரண்ட வேளை அந்த் உபாசக பெரியவர் கண்ணைத் திறந்தார். பஸ்சும் புறப்பட்டு விட்டிருந்தது.

"என்னதம்பி... அந்த பெண்ணோட முகத்தைப் பாக்கணுமா?" என்றுதான் கேட்டார். அவனுக்கு விக்கித் தள்ளியது.

"அது... அது..."

"கவலைப்படாதே... அந்த பொண்ணு இப்ப உன்கூட பேசுவா பார். அப்ப முகத்தைப் பார்த்துக்கோ..."

-அந்த பதிலோடு அவர் திரும்ப கண்களை மூடிக் கொண்டார். அவனுக்குள் திரும்பவும் குழப்பம். இந்த மனிதர் உண்மையில் யார்?

எப்படி மனதில் நினைத்ததை அத்தனை கச்சிதமாய் உணர்ந்து பேசினார்...? எல்லாம் மிகமிக தற்செயலான விஷயங்களோ?

இப்போது இவரே எனக்காக இந்தப் பெண்ணை கூப்பிட்டு என்னோட பேசவைக்கப் போகிறாரோ...? பஸ்சின் ஓட்டம் ஒருபுறம். அவனது ரத்த ஓட்டத்தில் பரபரப்பு மறுபுறம். அவனது தவிப்புக்கு நடுவில் அந்தப் பெண்ணே திரும்பினாள்.

நல்ல செழித்த சதைப் பாங்கான முகம். கண்ணிரண்டும் கரு முத்தாய் மின்ன, நெற்றியில் ஒரு மெல்லிய விபூதி கீற்றும் குங்குமப் பொட்டுமாய் "எக்ஸ்க்யூஸ் மீ என் செப்பல் உங்க காலுக்கு கீழே வந்துடுச்சாட்டம் இருக்கு... கொஞ்சம் முன்னால தள்ளி விட்றீங்களா?" என்றாள்.



தேவநாதனுக்கு தலைகுப்புற ஒரு ஐஸ் கிரீம் தொட்டிக்குள் விழுந்த மாதிரி இருந்தது. அந்த பரபரப்பும் பதட்டமும் குறையாமலே அவள் செப்பலை தன் காலுக்கு கீழே தேடியவன் அதை குனிந்து கையிலேயே எடுத்தான்.

புத்தம்புதிதாய் அப்போதுதான் கடையில் வாங்கியது போல் இருந்தது.

"ஐயோ... ஏன் கைல எடுக்கறீங்க...?"

-என்று குழைந்தபடி அவள் அதை வாங்கி தன் காலில் அணிந்து கொண்டாள்.

அந்த குழைவு... நெளிவு... குரல் பார்வை... எல்லாமே அவனை அப்படியே சுருட்டி விழுங்கியது.

உபாசகப் பெரியவர் எதுவுமே தெரியாதவராட்டம் கண்களை மூடியபடியேதான் இருந்தார். அவரை இப்போது சற்று மதிப்பும் மரியாதையாகப் பார்த்தான். பின் திரும்பினான். அவன் வரையில் அந்த அனுபவம் பரம சுகமான அனுபவமாக ஆகிவிட்டது.

சில பெண்கள் சில கோணங்களில்தான் அழகாக இருப்பார்கள். நெருக்கமாக பார்க்கும்போது முகத்தில் ஏதோ ஒரு குறை இருக்கிற மாதிரி தோன்றும்.

ஆனால், இவளிடம் உதிர்ந்து விழும் தலைமுடி கூட தனி அழகாக இருக்கிறது. சன்னமாய் ஒரு நறுமணம் வேறு அவள் உடலில் இருந்து...

ஏகத்துக்கும் பரவசமாகிவிட்டது தேவநாதனுக்கு!

முகத்திலறைந்தது சாலையோரப் புளியமரங்களின் காற்று. அப்படியே கண்களைச் செருகியபடி கனவோடு வந்தது தூக்கம்!

❖ ❖ ❖

அவன் தோளைத் தொட்டு எழுப்பி விட்டுப் போனார் கண்டக்டர். கண் திறந்த தேவநாதனுக்கு சற்று பகீர் என்றது.

பஸ் மதுரை ஆரப்பாளையம் பஸ் நிலையத்தில் நின்று கொண்டிருந்தது. பஸ்சில் ஒருவர் கூட இல்லை. குறிப்பாக அந்த பெண்...

அவனுக்கே சற்று வெட்கமாகிவிட்டது. வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தான்.

நல்லவேளை பிரீப்கேஸ் காலடியில் களவாடப்படாமல் அப்படியே இருந்தது. அதை ஒட்டி ஒரு துணிப்பையும் கிடந்தது.

எடுத்துப் பார்த்தான்!

உள்ளே குங்குமப் பிரசாதம், அம்பாள் படம், சில மஞ்சள் துண்டுகள். இத்துடன் ஒரு ஐம்பது, அறுபது தங்க நாணயங்கள்! ஒவ்வொன்றும் தாராளமா.. ஒரு பவுன் இருக்கும்.

தேவநாதனுக்கு வியர்க்க ஆரம்பித்துவிட்டது.

கண்டக்டர் வேறு கத்தினார்.

"இறங்குய்யா... வண்டியை ஷெட்டுக்கு எடுத்துகிட்டு போகணும்."

-வேறுவழியின்றி இறங்கினான். இறங்கும்போது கண்டக்டரிடம் "என் பக்கத்தில் உக்கார்ந்திருந்த காவிவேட்டி பெரியவர் எங்க இறங்குனாரு?" என்று கேட்டான்.

"அவர் பாத்திமா காலேஜ்கிட்டையே இறங்கிப் போய்ட்டாரே..." என்றார் அவர்.

கடவுளே இதென்ன சோதனை?"

கையில் கனத்தது அந்த பொற்காசு மூட்டை.



# 3

சக்தி என்னும்போது பலருக்கு உடம்பின் பலம் தான் முதலில் நினைவுக்கு வருகிறது! ஏன் என்றால் அதுதான் மனிதன் இயங்க ஆதார சுருதியாய் உள்ளது. அந்த சக்தி கூட உண்ணும் உணவுப் பொருளுக்குள் இருந்தே தனக்குக் கிடைப்பதாக நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், இந்த சக்தி மிக அற்பமானது. நம்மைச் சுற்றிலும் பல்வேறு சக்திகள் இறைந்து கிடக்கின்றன.

அவற்றால்தான் நாம் நல்ல சிந்தனைத் தெளிவுள்ள மனிதர்களாகவே வாழ்ந்து வருகின்றோம். அவற்றில் குறிப்பிடும்படியான ஒரு சக்தி கருவறைக்குள் இருக்கிறது. இதை அந்த அம்பிகையே உணர்த்திய ஒரு சம்பவமும் உண்டு.

மழையம்மன் என்ற கிராமதேவதைக் கோயில் ஒன்று ஒரு சிறு குன்றின்மேல் இருக்கிறது. மும்பையில் விஞ்ஞானப் பேராசிரியராக இருக்கும் ஒருவரை அது பெரிதும் வியக்க வைத்தது.

அவருக்கு தீராத ஆஸ்துமா தொல்லை.

பொதுவில் நமது கர்மவினைகளே வியாதியாகி நம்மைத் தண்டிக்கின்றன என்று ஒரு நம்பிக்கை நம்மில் பலரிடம் உண்டு. அதுதான் உண்மையும் கூட.

நம்முடைய வினைத்திட்பத்திற்கு ஏற்ப அவை நம்முள் வியாதியாகின்றன. விஞ்ஞானம் வியாதிக்குச் சொல்லும் காரணமே வேறு... கிருமிகள், பாக்டீரியாக்கள் என்று வியாதிகளின் வழிமுறைகளைச் சொல்லுவது விஞ்ஞானம். அதுவும் உண்மைதான். ஆனால் அந்த கிருமியையும், பாக்டீரியாவையும்

வைத்துக்கொண்டு வினைதான் நம்மை தண்டிக்கிறது.

வினைக்கு சரியான மருந்து அருள் ஒன்றுதான். குறிப்பாக இறையருள் வினையை மூட்டைக்கட்டி முடக்கி விடக்கூடியது. அந்த இறையருளை நமக்கு பெற்றுக் கொள்ளத் தெரிய வேண்டும்.

மழையம்மன் சன்னிதியில் அது இறைந்து கிடந்தது. அந்த சன்னிதிக்கென்று எங்கும் இல்லாத சில ஐதீகங்கள் கடைபிடிக்கப்பட்டு வந்ததுதான் முக்கிய காரணம்.

குறிப்பாக அந்த ஆலயத்தின் இடிதாங்கி கம்பமும், கோபுரத்தின் செப்புக்கலசமும் மழையம்மன் அமர்ந்திருக்கும் சன்னிதிக்கு கீழே இணைக்கப்பட்டிருந்தது.

இடியில் இறங்கும் மின்னலின் சக்தி அப்படியே அவளது கருவறைக்குள் போய் சேமிக்கப்பட்டு விடும். அத்துடன் சக்தி மிகுந்த துர்க்காசக்கர யந்திரமும் அங்கே நவமணிகளுடன் சேர்ந்து ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. பெரும்பாலான கோயில்களில் இப்படிப்பட்ட ஸ்தாபிதமே நடைமுறையில் உள்ளது. ஆனால், மழையம்மனிடம் சற்று வேறுபட்ட முறையில் சன்னிதிக்குள் 51 திரிபோட்டு 'நல்லெண்ணை, நெய், ஆமணக்கு எண்ணை, வேம்பு' என்று நால்வகை கலந்த எண்ணையைத்தான் ஏற்ற வேண்டும். மின் விளக்குக்கும் அங்கே இடமில்லை. போடவும் கூடாது. இதனால் கார்பன்டை ஆக்சைடைவிட நைட்ரஜன் வாயுவே மிகுதியாக அங்கே வெளிப்படும் ஒரு நிலைப்பாடு.

மழையம்மன் உருவமும் நவபாஷாணத்தால் ஆனதாக ஒரு நம்பிக்கை. இதனால் கருவறை முன் நின்று வணங்கும்போது ஒருவித வாசமும் வணங்குபவர்களால் உணரப்பட்டது.

அந்த விஞ்ஞானப் பேராசிரியரும் ஒருவர் விளையாட்டாக அழைத்தார் என்று அந்த சன்னிதிக்குச்



சென்றார். ஆழமான பக்தி இல்லாதவர் அவர். நமக்கு மேல் ஒரு சக்தி இருக்கிறது என்பது மட்டும்தான் அவர் நம்பிக்கை.

அப்படிப்பட்டவர் அன்று ஆஸ்துமாவால் மிகுந்த துயரத்தில் இருந்தார். அரை மணிக்கு ஒருமுறை வாயில் ஸ்ப்ரே வேறு செய்து கொண்டார். அப்படிப்பட்டவர் மழையம்மன் ஆலயக்கருவறையில் சில நிமிடங்கள் நின்றபோது மூக்கடைப்பு இன்றி நல்ல சுவாசத்தை உணர்ந்தார். இதுதான் ஆரம்பம்.

வெளியே வந்தவரை திரும்பவும் அந்த நோய் கவ்வி ஆட்டிவைத்தது. ஆனால் முன்போல் அதனிடம் வலிமை இல்லை.

தொடர்ந்து காலை மாலை இருவேளை ஆலயத்திற்குச் சென்று சற்று அமர்ந்து ஆழ்ந்து சுவாசித்து வணங்கினார். பிறகு பூர்ண குணம் பெற்றார்.

அங்கே தனக்கேற்பட்ட மாற்றத்தை அருளாகத்தான் உணர்ந்தார். உண்மைதான். அது அப்படிப் போய்ச் சேர அங்குள்ள யந்த்ரம்தான் பிரதான காரணம்...

எப்படி?

ஆரப்பாளையம் பேருந்து நிலையத்தில் கையில் ஒரு பொற்காசு பையுடன் தேவநாதன் திணறத் தொடங்கி விட்டான்.

கைகடிகாரத்தைப் பார்த்தான்.

மணி மாலை நான்கு. 5 மணிக்குள் ஆபீசுக்குச் சென்று மேலதிகாரியைச் சந்தித்துப்பேச வேண்டும்.

அன்றே நல்ல நாளாக இருப்பதால் சீட்டில் அமர்ந்து ஒரு பேப்பராவது பார்த்துவிடு என்று அம்மா சொல்லியனுப்பியதும் ஞாபகத்தில் ஒரு மின்னலாய் வெட்டியது.

பொற்காசு மூட்டையோ என்ன செய்யப் போகிறாய் என்று பார்த்தது? அந்த காவிச்சட்டை உபாசகப் பெரியவருக்குத்தான் எத்தனை அலட்சியம்...

அந்தப்பேச்சு பேசினாரே...?

அடுத்த வாரத்துக்குள் கல்யாணம் என்றெல்லாம் ஜோசியமே சொன்னாரே...? ஆனால், அவர் தொலைக்கப் போவது அவருக்கே தெரியவில்லை...!'

ஒரு வினாடி சிரிப்புகூட வந்தது.

தேடி வரட்டும் என்று விட்டு விடுவதா? இல்லை போலீசுக்குப் போவதா என்பதில் கொஞ்சம் மனது சிக்கிக்கொண்டது.

பஸ் ஸ்டாண்டிலிருந்து வெளியே வந்தான். ஒரு டிராபிக் போலீஸ்காரர் ஒரு மோட்டார் பைக்காரனிடம் அது இல்லை, இது இல்லை என்று நூறு ரூபாய்க்கு அடி போட்டுக் கொண்டிருந்தார். நறுக்கென்று அது மனதை தைத்தது. போலீசுக்கு போவதும் விவகாரத்தை இழுப்பதும் ஒன்று போலத் தோன்றியது.

மீடியாக்களும் அவர்களைப்பற்றி நல்ல கருத்தையே உருவாக்கித் தந்திராதது பெரிதாக இடித்தது...

லேசாக தேவநாதனின் கண்டங்கழுத்து, தோள்பட்டை எல்லாமே வியர்த்தன. இறுதியில் ஆட்டோ ஒன்றைப் பிடித்தான். ஆபீஸ் அட்ரசைச் சொன்னான். அதுவும் பறக்க ஆரம்பித்தது.

வெளியே பார்த்துக் கொண்டே வந்தான்.

'சேலத்துக்கும் மதுரைக்கும் பெரிய வித்தியாசம் தெரியவில்லை. பெட்டிக்கடைகள், டீக்கடைகள், வடை பஜ்ஜி வியாபாரங்கள், சினிமா வால்போஸ்டர்கள், கோயில் மாடுகளின் மேய்ச்சல்கள், சாலையிலும் மேடுபள்ளங்களில் குலுக்கல்கள், ஆட்டோக்காரரிடமும் இருபது



ரூபாய்க்கு அறுபது ரூபாய் கேட்கும் கொடுமை...' எல்லாம் அப்படியே இருந்தது.

ஊரோ உலகமோ எதுவுமே துளிகூட சரியில்லை. எல்லோரிடமும் சுயநலம். யார் எக்கேடு கெட்டாலும் கவலையில்லை. தனக்கு மட்டும் எந்த கேடும் வந்து விடக்கூடாது என்பதில் மட்டும் விழிப்புணர்ச்சி.

இதில் ஒருவன் காரில், ஒருவன் சைக்கிள் ரிக்ஷாவில்... அந்த சாலையைப் போலவே மனித வாழ்க்கையிலும் எக்கச்சக்க மேடுபள்ளங்கள்.

இதில் நேர்மைக்கும் நியாயத்துக்கும் மதிப்பு இருக்கிறதா என்ன?

கையில் பொற்காசுகள் கனக்க மனதுக்குள் கேள்வி கனத்தது. ஆட்டோவும், சினிமா தியேட்டர் ஒன்றைக் கடந்து கொண்டிருந்தது. பிளாக் டிக்கெட் விற்பவர் சீட்டுக்கட்டு மாதிரி டிக்கெட்டை வைத்துக்கொண்டு நிற்பது பளிச்சென்று தெரிந்தது.

அவன்தான் பிழைக்கத் தெரிந்த புத்திசாலியோ என்றும் ஒரு குறு எண்ணம்.

ஆட்டோ அடுத்து ஒரு சாலையோர கோயில் விழாக் கூட்டம் ஒன்றில் சிக்கிக் கொண்டது. மதுரையில் இப்படிப்பட்ட கோயில்களுக்குப் பஞ்சமே கிடையாது என்று யாரோ சொன்னது முதலில் ஞாபகத்தில் வந்தது. அடுத்து "முதல் காரியமா மீனாட்சியை தரிசனம் பண்ணிட்டு அப்புறமா ஆபீசுக்கு போய் கையெழுத்து போடு" என்று அம்மா சொன்னதும் ஞாபகத்திற்கு வந்தது.

திரும்ப கைகடிகாரத்தைப் பார்த்தான்.

மணி நாலரையை நெருங்கிக் கொண்டிருந்தது. அரைமணியில் கோயிலுக்குப் போய்விட்டு ஆபீசுக்குப் போவது சாத்யமில்லை. சாமி இல்லாத இடம்தான் எது?

என்ன பெரிய மீனாட்சி? என்றும் ஒரு குறு எண்ணம். அந்த நொடி அவன் ஆட்டோவுக்கு பக்கத்தில் யாரோ ஒருவனோடு பைக்கில் அவன் பஸ்சில் பார்த்த அந்த பெண்! அவன் பார்த்த வேகத்தில் மறைந்து விட்டாள். இறுதியில் சரியாக 4.35க்கு ஆபீஸ் வாசலில் இறங்கினான். பிரீப்கேஸ், அந்த பொற்காசு மஞ்சள் பையுடன் ஆட்டோ டிரைவருக்கு பணத்தைக் கொடுத்துவிட்டு உள்ளே நுழைந்தான். மனதுக்குள் அந்த பெண் தோன்றித் தோன்றி மறைய சிரமப்பட்டுக் கொண்டு ஆபீசைப் பார்த்தான்.

அவனது சேலம் ஆபீஸ் மாதிரி அந்த ஆபீஸ் இல்லை. பெரும்பாலோர் சீட்டில் இல்லை. இருக்கும் சிலரில் ஒருவர் பல்குத்திக் கொண்டிருந்தார். ஒருவர் மாத நாவல் படித்துக் கொண்டிருந்தார்.

தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான் கிளார்க் ஒருவரிடம். அவர் மேனேஜர் அறையை காட்டினார். அப்போது பிரீப்கேசையும் மஞ்சள் பையையும் அவர் ஒருமாதிரி பார்த்தார். ஒன்றுக்கு ஒன்று பொருத்தம் இல்லாத மாதிரி அது இடித்ததுதான் காரணம். அவனுக்கும் புரிந்தது. முதல் காரியமாக பிரீப்கேசை திறந்து அந்த பொற்காசு பையை உள்ளே வைத்து மூடினான்.

ஒரு அரை விநாடி அது தன்னுடையதாக இருந்தால் எப்படி இருக்கும் என்றும் ஒரு எண்ணம். வானத்து மின்னல் ப்ளாஷ் கணக்காக ஒருவெட்டு வெட்டியது. பரமசுகமாக இருந்தது.

அதே உணர்வோடு உள்ளே நுழைந்தான்.

எதிரில் சீட்டில் மேனேஜர், அவர் தலைக்கு மேலே பெரிய மீனாட்சி படம். அப்போதுதான் சூட்டிய மாலையுடன் ஊதுவத்தி வாசம் கமகமத்துக் கொண்டிருந்தது.

ஒரு வினாடி உடம்பு ஒரு ஆட்டம் ஆடியது. அதற்கு நடுவிலேயே அறிமுகத்தை முடித்துக்கொண்டு டிரான்ஸ்



ஃபர் ஆர்டரை அவரிடம் கொடுத்தான். அவரும் கை குலுக்கினார். "நல்ல நேரத்துக்கு வந்திருக்கீங்க... இன்னிக்கு இந்த ஊர் வரைல ஒரு விசேஷமான நாள்" அவர் புதிர் போட்டார். அவன் பார்வையே எப்படி என்ற கேள்வியைக் கேட்டது.

"எங்க மீனாட்சி இன்னிக்கு கோயில்ல செங்கோல் வாங்கியிருக்கா... அதான் சொன்னேன். அதோட இப்ப நல்லநேரம். நீங்க எதைத் தொட்டாலும் தங்கம்தான்" என்றார் அவர். அவனுக்கு பிடரியில் ஜில்லிட்டது. சிறிது நேரம் வேறு விஷயம் பேசிவிட்டு வெளியில் வந்தான். காத்திருந்த மாதிரி ஒரு கிளார்க் அவனைப் பிடித்துக் கொண்டார்.

"சார்... உங்க சீட்டுல இதுக்கு முந்தி இருந்த ஆள் எழுதிக்கொடுத்து விட்டார்.

மனுஷன் பெரிய கில்லாடி. சரியான சீட்டு. கையை மேலேயும் கீழேயும் மாறிமாறி நீட்டி ஒரு அள்ளு அள்ளிட்டான். விஷயம் மேலபோய் என்கொயரி புக் ஆகும் போல தெரியவந்துச்சு. நைசா எழுதிக் கொடுத்துட்டு நழுவிட்டான்.

சப்-கான்ட்ராக்ட்காரங்ககிட்டே மட்டுமே பல லட்சம் பார்த்துருப்பான். அண்ணா நகர், டி.வி.எஸ். நகர்னு நகருக்கு ஒருவீடு. நீங்க எப்படி?"

அவர் அவனை ஆழம்பார்த்தார். தேவநாதன் மலங்க மலங்கப் பார்த்தான்.

"தேன் எடுக்கறவன்னா பொறங்கையை நக்கித்தானே தீரணும்... ஆனா ஒண்ணு சார் சத்தியமா சொல்றேன்... நல்லதுக்கு இதுகாலம் இல்ல சார். திருட்டுத்தனம் பண்ணனும். மொள்ளமாரித்தனம் பண்ணனும். அடிச்சுப் பேசத்தெரியணும். அவங்களுக்குத்தான் காலம். நேர்மை நியாயம்னு கிடந்தா போக வேண்டியதுதான். அப்படிப் பட்டவங்க பொணத்தைகூட சுடுகாட்டுல சரியா அவிக்க

மாட்டேங்கறாங்க. பாதி எரிஞ்சிகிட்டிருக்கும்போதே இழுத்துப் போட்டுட்டு அடுத்த பொணத்துக்கு கட்டை அடுக்க ஆரம்பிச்சிட்றாங்க..."

அந்த கிளார்க் தேவநாதன் மனதை புலிக்கால்களால் பிறாண்டுவதைப் போல் பிறாண்டினார். எதற்காக அப்படி பேசினார் என்பது கடைசிவரை அவனுக்கும் புரியவில்லை. ஆனால் கைப்பெட்டியோ "தங்கக் காசுகளோடு அப்படியே என்னை அமுக்கிவிடேன்... நீ என்ன திருடவா செய்தாய்? அதுவாக உன்னைத் தேடி வந்ததுதானே" என்று ஒரு கேள்விகேட்கிற மாதிரி தோன்றியது.

அதேசமயம் அவன் அக்கா ஒரு கல்யாணக் கூட்டத்தில் ஐந்து பவுன் சங்கிலியை தொலைத்துவிட்டு அழுதும் அதை யாராவது எடுத்துக் கொண்டு வந்து தந்துவிட மாட்டார்களா என்று மனது தவித்ததும் அதேபோல ஒருவர் 'இது உங்களதுதானே?' என்று கேட்டுவந்து தந்தபோது நெஞ்சில் பால்மழை பெய்ததும் அவன் மனதில் சட்டென்று ஞாபகத்தில் எழும்பியது.

அவன் மனதும் உடனே கவிழப் பார்த்த தஞ்சாவூர் பொம்மை முடியாமல் திரும்ப நிமிர்ந்தது போல நிமிர்ந்து விட்டது!

❖ ❖ ❖

எப்படியோ முகவரியைக் கண்டுபிடித்து அந்தப் பெரியவர் வசிக்கும் வீட்டுக்கு முன்னால்போய் நின்றபோது இரவு எட்டுமணி.

வீடா அது?

ஒரு பெரிய மாளிகை! சுற்றிலும் பூமரங்கள். எங்கும் இல்லாதபடி நாகலிங்கமரம் வேறு... ஏரியா முழுக்க அதன் மகரந்தவாசம். வீட்டு மெயின் கேட்டின் முன் 'சக்தி இல்லம்' என்று ஒரு பெயர்ப்பலகை!



மற்றபடி ஆளரவமில்லை.

உள்ளே நுழைந்தபோது கோயிலுக்குள் நுழைகிற மாதிரி இருந்தது.

முன்னாலே கதவு சாத்தப்பட்டிருந்தது. பக்கத்தில் காலிங் பெல் ஸ்விட்ச்.

அழுத்தி அவரை அழைப்பதற்காக கையை உயர்த்தும் போதே கதவு திறந்துவிட்டது. கதவுக்கு பின்னாலே அவர்தான்!

முகத்தில் அதே அழியாத புன்னகை. அத்துடன் "வாப்பா... உனக்காகத்தான் காத்துக்கிட்டிருக்கேன். எட்டு மணிக்கு நீ வந்துடுவேன்னு அம்மா சொன்னா... அதே போல வந்துட்டியே..." -அவர் பேச்சில் அவன் உணர முடியாத சிடுக்குகள். 'எந்த அம்மா சொன்னாள். அதுவும் எட்டு மணிக்கு என்று துல்லியமாக?' -கேள்விகள் நெற்றியில் ஓட அவரை வெறித்தான்.

## 4

**மும்பையைச் சேர்ந்த அந்த மனிதர் தனது ஆஸ்துமா மெல்ல பரிபூரணமாக குணப்பட்டுவிட்டதை மிக அதிகபட்சம் ஒரு மாதத்திற்குள் உணர்ந்து விட்டார்.**

**அவருக்குள் வியப்பான வியப்பு. அதே சமயம் அந்த ஆலயத்தில்தான் தன் குணப்பாட்டுக்கான மருந்து ஒளிந்திருக்கிறது என்பதையும் புரிந்து கொண்டுவிட்டார். வேறு எந்த ஆலயத்திலும் இல்லாத ஒரு மகத்துவம் அந்த ஆலயத்தில் இருக்கிறது! அது என்ன என்று கண்டறிய அவர் முனைந்தபோதுதான் மழையம்மனின் விக்ரகச் சிறப்பு முதல் நால்வகை எண்ணெயால் சன்னிதியில் விளக்கு எரிவதும், மின் விளக்கின் ஒளியை**

எக்காரணம் கொண்டும் அனுமதிக்காததும் அவருக்கு தெரியவந்தது.

இறுதியாக ஒரு உண்மை அந்த கோயிலின் ஒரு மூலையில் மவுன உபாசனையில் இருந்து வரும் ஒரு பிச்சைக்கார சன்யாசி மூலம் தெரிய வந்தது.

அவர் தன் கருத்தை எழுதியே காண்பித்தார்.

"துர்காயந்த்ரம் இங்கே அற்புதமாக பிழையின்றி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

யந்த்ரம் என்றால் இயக்கம் என்று பொருள்.

துர்காயந்த்ர இயக்கம் என்பது பீஜாட்சர மந்த்ர சப்தத்தால் இயங்குவது. ஒருமுறை நிறுவப்பட்ட காற்றாலையானது காற்று வீசப்படும்போதெல்லாம் இயங்கி மின் சக்தியை தயாரித்து அளிப்பதுபோல இந்த யந்த்ரமும் மந்திர சப்தம் ஒலிக்கப்படும் போதெல்லாம் அதன் காரணமாக இயங்கும். காற்றாலையில் பல்வேறு கருவிகள் இருந்து இயங்குவதை உணர முடிகிறது. ஒரு தகட்டின்மேல் கோலம் போல் வரையப்பட்டிருக்கும் யந்த்ரம் எனப்படும் தகடு இயங்குவதாகக் கூறுவது புரியாத புதிராக உள்ளதே என்று கேட்கலாம். சர்க்கரைக்கும், சர்க்கரை என்று எழுதிய ஏட்டுக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. அசல் சர்க்கரைதான் தித்திக்கும். காகிதத்தில் எழுதப்பட்டது தித்திக்காது.

யந்த்ரங்களும் அதுபோல எழுதப்பட்டவை தானே...? இன்ஜினியரிங் டிராயிங் போன்ற அவையே இயங்குகிறது என்று சொன்னால் எப்படி என்று கேட்கத் தோன்றும்.

உண்மைதான்!

நெடுஞ்சாலை பயணத்தில் சாலைகளில் பலவகை குறியீடுகளைப் பார்க்கிறோம். பார்த்த மாத்திரத்தில் அதற்கேற்ப நமது வாகனத்தின் போக்கு மாறுகிறது.



உதாரணமாக ஒரு ஹேர் பின் பெண்ட் அடுத்து வரப் போகிறது என்பது தெரிய வந்தால் முன்பே காலும் கையும் தயாராகி நாம் அதை சந்திக்கும் போது விபத்து ஏற்படாமல் தப்பிக்கிறோம்.

கண்ணில்பட்ட குறிப்பால் புத்தி தானாக செயலாக்கத்திற்கு மாறுவதுதான் இங்கே நடக்கிறது. வெளிப்படையாக இங்கே நிகழும் இதே செயல்பாடுதான் சூட்சமமாக ஆலயங்களில் நடக்கின்றன.

வெளிப்படையாக நடப்பதை உணரமுடிகிறது.

சூட்சமமாக நடப்பதை நமக்கு ஏற்படும் பலன்களை வைத்துத்தான் அறியமுடியும்.

இங்கே அந்த யந்த்ரத்தை, அதன் அலைகளை உங்கள் உடம்பு ஸ்வீகரித்தது... அதன் காரணமாக உடம்பின் நாடித்துடிப்பில், சக்கரங்களில் இயக்க விசையில் ஏற்பட்ட மாற்றங்கள் உங்களுக்கான மூச்சுக் காற்று சிக்கலைத் தீர்த்து வைத்தது.

இந்த உலகம் எங்கும் இறைந்து கிடப்பது காற்று. மிகுந்து கிடப்பதுவும் இதுதான். ஆனால், இப்படி மிகுந்தும், இலவசமாகவும் சர்வ சல்லிசாகவும் கிடைக்கும் ஒன்று உனக்கு மட்டும் தண்டனைக்குரியதாகியது. அதாவது சுவாசிப்பதற்கு கூட நீ சிரமமும் செலவும் செய்தாக வேண்டிய உன் நிலைப்பாடு கர்ம வினைப்படி மிக மோசமானது.

எப்பொழுதோ எங்கோ ஊருக்கும் உலகுக்கும் பொதுவானதை நீ அபகரித்து மற்றவர்களுக்குக் கிடைக்காமல் செய்திருக்க வேண்டும்.

அந்த வினை தான் இப்போது உன் வரையில் மலிவான காற்றைக்கூட உனக்கு கிடைக்கவிடாமல் செய்தது. அதுவும் இங்கே வரவும் யந்த்ர விசையால் சரியானது.

சக்தி ஆலயங்கள் ஒவ்வொன்றிலும் இதுபோல ஒரு விசை உள்ளது. அதையும் தெரிந்துகொள்...!"

அவர் எழுதிக்காட்டியதில்தான் எத்தனை நுட்ப மான உட்பொருள்!

அந்த மாளிகை போன்ற வீட்டில் அந்த பெரியவர் முன் அயர்ந்துபோய் நின்று கொண்டிருந்தான் தேவ நாதன்.

'எட்டுமணிக்கெல்லாம் டாண்ணு நீ வந்துடுவேன்னு அம்மா சொன்னா...!' என்று அவர் சொன்னதிலேயே மனது சுழன்று கொண்டிருந்தது.

"எந்த அம்மா...? அவளுக்கு எப்படி நான் எட்டு மணிக்கு வருவேன் என்பது தெரியும்...?"

"அடடே... நான் மறதியா விட்டுட்டவை. கொண்டு கிட்டு வந்துட்டியா... பலே!" -என்று அவரும் அந்த பையை பார்த்தார்.

அவனுக்கு மிளகாய் நுனியைக் கடித்த மாதிரி ஒரு கோபம் வந்தது.

"என்னங்க நீங்க... ஏதோ பழைய துணிப்பை ஒண்ணை மறந்து வெச்சுட்ட மாதிரி சாதாரணமா சொல்றீங்க. இதுக்குள்ள என்ன இருக்கு தெரியுமா?" தேவநாதன் வெடித்தான். அவரோ சிரித்தபடி "தொலைச்ச எனக்கு தெரியாதாக்கும்... இருந்தாலும் இது அம்பாள் சமாச் சாரம். என்னைத்தேடி எப்படியும் வந்துடும்னு எனக்கு தெரியும். அவளை ஒருத்தன் திருட முடியுமா என்ன?" என்று கேட்டு அவன் எதிரில் தாடியை நீவிவிட்டுக் கொண்டார்.

தேவநாதன் திரும்பவும் மிளகாயைக் கடித்தான்.

"என்னய்யா நீங்க, உங்க நம்பிக்கையை நினைச்சு சிரிக்கறதா அழறதான்னே எனக்கு தெரியல... இந்த தங்க காசுங்க என் கைல கிடைச்சதுல இருந்து நான் தவிச்ச தவிப்பு எனக்குதான் தெரியும். உங்க வீட்டை கண்டு பிடிக்கவும் எவ்வளவு சிரமப்பட்டேன் தெரியுமா...?



நல்ல வேலை கண்டக்டர் நீங்க இறங்கின ஸ்டாப் பைச் சொன்னார். அந்த ஸ்டாப் கிட்ட வந்து பக்கத்துல இருந்த மளிகை கடைக்காரரை பார்த்து உங்க உரு வத்தை அவர்கிட்ட விளக்கி குருட்டுத்தனமா முயற்சி செய்தேன். நிஜமா உங்களை நான் கண்டுபிடிப்பேன்னே நினைக்கலை..."

"அப்ப நீ நினைக்காததெல்லாம் நடக்க ஆரம்பிச்சிடிச் சுன்னு சொல்..."

-அவர் இருபொருள்பட கேட்ட கேள்வி முன் மீண்டும் சிவந்தான்.

"கோவிக்காதே... அதே சமயம் வாங்க போங்கன்னு பஸ்சில பேசினவன் வா போ நீன்னு பேசறேன்னு நினைச் சிடாதே... நீ ரொம்ப நல்லவன். அதான் இந்த அரை கிலோ தங்கக் காசுகளோட ஓடாம இதை ஒப்படைக்க சிரமப்பட்டுருக்கே... உன்னை மனசார பாராட்றேன். என் மனப்பூர்வமான ஆசிகள் உனக்கு..." -என்று அவனருகே வந்து அவன் தலைமேல் கைவைத்தார். அந்த நொடி அவன் உடம்பில் மின்சாரம் பாய்ந்ததுபோல ஒரு சிலிர்ப்பு. அப்படியே அவரை வெறித்தான். சுற்றி ஒரு பார்வையும் பார்த்தான். மாளிகை போன்ற அந்த வீடு பளபளவென்று அவன் கண்ணில்பட்டது.

சுவற்றில் அந்த நாளைய புகைப்படங்கள்.

ஒரு புகைப்படத்தில் அந்த பெரியவர் மகாத்மா காந்தியோடு நின்று கொண்டிருந்தார். ஆச்சரியமூட்டியது அந்த கறுப்பு வெள்ளை புகைப்படம்.

"என்ன பாக்கறே... அது நான்தான்! மகாத்மா மதுரை வந்தப்போ எடுத்துக்கிட்ட போட்டோ. அவரோட மட்டு மில்ல... நேரு பட்டேல்னு ஒருத்தரை நான் விடலை. போ... போய்ப்பாரு..." என்றார்.

கூடவே அவனோடு சேர்ந்து நடந்தார்.

தேவநாதனுக்கு ஒரு கோயிலுக்குள் இருப்பது போல் இருந்தது. மெல்லிசாய் மூக்கை நிரடும் தசாங்க வாசம், அமைதியான சூழல், ஒரு புதிய உலகத்துக்கே வந்தது போல இருந்தது அவனுக்கு.

அந்த மாளிகை போன்ற வீட்டை வலம் வந்தபடியே அவரிடம் பேச்சுக்கொடுத்தான்.

"நீங்க காங்கிரஸ்காரரா...?"

"தேசபக்தன்..."

"இந்த வீட்ல நீங்க மட்டும்தானா இருக்கீங்க...?"

"ஆமாம்..."

"உங்க மனைவி...?" -அவன் கேட்கும்போது சுவற்றில் அவரும் அவர் மனைவியும் சேர்ந்து எடுத்துக் கொண் டிருக்கும் புகைப்படம்.

அவர் மனைவி நெற்றியில் திருநீற்றுப்பட்டை குங்குமம் என்று சைவ சிந்தாமணியாகத் தெரிந்தாள்.

"மனோரஞ்சிதம் இப்ப இல்ல... நான் முன்னபோய் உங்களுக்காக ஒரு இடம் போட்டு வெச்சுட்டு காத்துட் டிருக்கேன். நீங்க மெல்ல வாங்கன்னு சொல்லிட்டு போய்ட்டா..." -என்று அவர் அண்ணாந்து ஒரு பார்வை மேலே பார்த்தார்.

அவனுக்குப் புரிந்துவிட்டது.

"உங்களுக்கு எத்தனை பசங்க...?"

"இப்போதைக்கு நீதான்!"

அவர் பதில் அவனை சற்று சில்லிட வைத்தது. தனக்கு வாரிசுகள் இல்லை என்று அவர் சொன்னவிதம் நெஞ்சைக் குத்தவும் செய்தது.

"மன்னிச்சுக்குங்க... தனியா நீங்க இவ்வளவு பெரிய வீட்ல இருக்கறத நினைச்சா எனக்கே ஆச்சரியமா இருக்கு..." என்று மிடறு விழுங்கினான்.



"நான் ஒண்ணும் தனியா இல்லப்பா... இதோ என்னைச் சுத்தி எவ்வளவு பேர்..." அவர் படங்களைக் காண்பித்து சிரித்தார். அப்படியே சமையல்கட்டு. பெட்ரூம். கொல்லை என்று சுற்றிவிட்டு மாடிக்குச் செல்லும் மரப் படிகளிடம் வந்தவர் "இந்த வீடுகட்டி நூறு வருஷம் ஆச்சு தெரியுமா?" என்றார்.

"ஆனாலும் கருக்குலையாம நல்ல உறுதியோடதான் இருக்கு..."

"அந்த மாதிரி கட்டியிருக்கார் என் தாத்தா... சும்மாவா... இன்னிக்கெல்லாம் ஐம்பது லட்சம் போகும். மரமெல்லாம் பர்மா தேக்கு. தியாகராய செட்டியார் எவ்வளவோ கேட்டுப் பார்த்தார். நான்தான் இது சக்தி இல்லம். விலைக்கு கொடுக்க முடியாதுன்னுட்டேன்..."

மரப்படிக்கு கீழே நின்றபடி அவர் சொன்னதை வெகுவாக ரசித்த தேவநாதன் நிமிர்ந்து மேலே பார்த்தான்.

"என்ன பாக்கறே...?"

"இல்ல மேல எப்படி இருக்கும்னு பார்த்தேன்..."

"கீழ பார்த்த எல்லாம் மேல உண்டு. வாடகைக்கு கேட்டு பல பேர் வந்தாங்க... திருப்பி அனுப்பிட்டேன்..."

"ஏன்...?"

"எனக்கு எதுக்கு வாடகை பணம். அது வந்துதானா விடியப்போகுது...?"

-அவன் முகம் உடனே வாடியது.

"உன் முகம் ஏன் வாடுது தம்பி..."

"இல்ல... இந்த வீட்டுக்கு வர்றதுக்கு முந்திவரை எனக்கு எந்த அபிப்ராயமும் இல்ல. ஆனா உள்ள நுழைஞ்ச பிறகு என் மனசும் உடம்பும் லேசா இருக்கு. நானும் இந்த மதுரைக்கு குடி வந்தாகணும். நாலு நாள்ல வீடு ஒண்ணு பார்த்து அட்வான்ஸ் கொடுத்தாகணும்... மாடி காலியாகத்தான் இருக்குன்னு நீங்க சொன்ன

நிமிஷம் ஒரு கற்பனை... நான் மாடிக்கு குடிவர்ற மாதிரி... ஆனா அடுத்த நொடியே நீங்கதான் வாடகைக்கு விடறதில்லன்னு சொல்லிட்டீங்களே!"

"ப்பூ இவ்வளவுதானா?" -அவர் ஊதித்தள்ளினார்.

"இவ்வளவுதானான்னா... புரியல"

"இப்ப என்ன... உனக்கு வீடு வாடகைக்கு வேணும் அவ்வளவுதானே?"

"ஆமாம்..." அவன் தலை ஆடியது.

"தெரியும்... நீ இப்படி வீடு கேட்பேன்னும் எனக்குத் தெரியும். அம்மா சொன்னா தவறாப்போகுமா என்ன?"

-அவர் மீண்டும் முன்பு பேசியது போல அம்மாவிடம் போய் நின்றார்.

"நீங்க அடிக்கடி அம்மா சொன்னா... அம்மா சொன்னான்னு சொல்றீங்க... எந்த அம்மா...யாரு... எப்ப என்ன சொன்னாங்க?"

-அவரோ பதிலுக்கு சிரித்துவிட்டு "உன் குடும்பத்துல எத்தனை பேர்?" என்று திருப்பிக் கேட்டார்.

"அதை உங்க அம்மாகிட்டையே கேட்க வேண்டியது தானே?" -எதனாலோ அப்படி ஒரு கேள்வியை சற்று எரிச்சலுடன் கேட்டுவிட்டான். ஆனால் அவர் அதற்காக கோபப்படவில்லை.

திரும்பவும் தாடியை நீவியபடி சிரித்தவர் கண்களை சில நொடி மூடி நெற்றியில் வரிக்கோடுகள் விழ யோசித்துவிட்டு "என்ன... ஒரு அக்கா, ஒரு தங்கச்சி, அம்மான்னு மூணு ஒண்ணும் நாலு பேரா?"

-அவனுக்கு தூக்கி அடித்தது.

எத்தனை கச்சிதமான அனுமானம். எப்படிச் சொன்னார் இத்தனை சரியாக? வெறித்தான்.



"நீ தாராளமா உன் குடும்பத்தோட இந்த வீட்டுக்கு குடிவரலாம்... ஆனா மாடிக்கு இல்ல... கீழ... அதாவது இங்க..."

-அவரின் அனுமதியால் சற்றே ஸ்தம்பிப்பு.

"நான் காசியாத்திரை போகப்போறேன். திரும்பி வர இரண்டு மூன்று வருஷமாகும். அதுவரை இந்த வீடு உன் வீடு. ஒரு பைசா வாடகை தர வேண்டாம். பத்திரமா இந்த வீட்டை பார்த்துக்கிட்டா போதும்."

-அவர் அவன் ஸ்தம்பிப்பை கூட்டிவிட்டு இறுதியாக ஒன்று சொல்லத் தொடங்கினார்.

"நான் திரும்பி வந்த பிறகும் உங்களைப் போகச் சொல்ல மாட்டேன். நான் மாடியில இருந்துக்கறேன்... ஆனா அதுவரை நீயோ உன் குடும்பத்துல யாருமே மாடிபக்கம் மட்டும் போகக் கூடாது... போகவே கூடாது. அப்படின்னா இந்த வீட்டுக்கு நீங்க குடிவரலாம்..."

-அவர் அப்படிச் சொல்வதன் பின்னால் ஏதோ மர்மம்!

## 5

**இந்த மண்ணில் உள்ள ஒவ்வொரு சக்தி ஆலயமும் ஒவ்வொரு விதமான சக்தியை தங்களுக்குள் புதைத்துக் கொண்டுள்ளன. அவற்றை வாரி வழங்கத்தான் நிதமும் பூஜைகள், அபிஷேக ஆராதனைகள் மற்றும் திருவிழாக்கள்.**

**பொதுவாகவே ஆலயம் கட்டி இறைவனை அங்கே மனித உருவத்தில் நிலைநிறுத்தி பின் தங்கம், வைரம் என்று அந்த உருவிற்கு அணிவித்து அதை ஒரு சுபீரியர் பவராகக் கருதி வழிபடுவது என்பதுதான் மனிதன், தன் கண்டுபிடிப்பில் செய்திருக்கும் மிக உயர்ந்த செயல்.**

நமக்குப் பயன்தரும் பல விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் கூட இதற்கு பின்னேதான்...

விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளான தொலைபேசி, ரேடியோ, டி.வி., சினிமா, புகைப்படம், பத்திரிகை என்று எதை எடுத்துக் கொண்டாலும் முதலில் அதை மனிதன் நாடிச்செல்ல வேண்டும். அதற்கு ஒரு விலையும் கொடுக்க வேண்டும். பின் அதை முறையாகப் பயன்படுத்தினால் மட்டுமே அவன் நோக்கம் நிறைவேறும்.

ஆனால் ஆலயம் என்பது அப்படியல்ல...

இது கடவுளைப் பற்றி எண்ணிப் பார்க்கத் தெரியாத, சிந்தித்துப் பார்க்க முடியாத ஆடு மாடுகளுக்கும், பயிர் பச்சைகளுக்கும் கூட உதவுவது. அதுவும் தேடிச்சென்று இடைவெளியின்றி உதவிக் கொண்டிருப்பதுதான் அதன் மகத்தான செயல், சிறப்பு. இப்படி இது உதவ வேண்டும் என்பதற்காகத்தான் நமது ஆலயங்களில் கூர்மையான கலசங்கள் கோபுரங்களில் பொருத்தப்படுகின்றன.

அந்தக் கலசங்கள் செயல்படும் விதம் போன்றதுதான் ரேடியோ அலைவரிசை டவர்களும். ரேடியோ அலைவரிசை என்பது அந்தரம் முழுக்க பரவிக் கிடக்கிறது. அதை இழுப்பதற்கும், ஒலிக்கச் செய்வதற்கும் கருவி (ரேடியோ) தேவை. ட்யூன் செய்யவும் தெரிந்திருக்க வேண்டும்.

ஆனால் கோயில் கலசங்களின் அருள் அலைவரிசை ஆனது காற்றோடு நாம் சுவாசிக்கும் போதே தானாக உள்ளே வருகிறது. அதற்கேற்பவே அதன் செயல்பாடுகளும் நம்மனத்தில் நடக்கின்றன.

அப்படி என்றால் ஒரு ஊரில் உள்ள ஒவ்வொரு உயிரும் அந்த அருள் அலைகளால் மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும்தானே இருக்க வேண்டும். ஆனால் அப்படி எங்கே இருக்கிறது? கோயில் வாசலிலேயே சோற்றுக்கில்லாத பிச்சைக்காரன்! சற்றுத்தள்ளி குடித்துவிட்டு படுத்துக்கிடப்பவன்.



அருள் அலைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு மனிதன் இப்படியா இருப்பான். கேள்வி எழுகிறது!

இதற்கு சரியான ஒரு விடையும் உள்ளது. அது?

அந்த காவிவேட்டி கட்டிய உபாசகரைப் போன்ற பெரியவர், “மாடிக்கு மட்டும் யாரும் போகக்கூடாது என்று சொன்ன ஷணத்தில் தேவநாதனுக்குள் ஏராளமான சந்தேகங்களும், பயமும் கூட உருவாகத் தொடங்கிவிட்டது. அது அப்பட்டமாய் அவன் கண்ணில் மின்னியது.

அதை அந்தப் பெரியவரும் கவனித்தார்.

“என்ன தம்பி... மாடியில ஏதாவது பேய் பிசாசு இருக்குமோன்னு நினைச்சு பயப்படறியா?”

அவன் நினைப்புக்கு ஏற்பத்தான் கேட்டார். தேவநாதனும் மவுனமாக அதை ஒப்புக்கொண்டு பார்த்தான்.

“வெச்சுக்கோ... பேய் பிசாசு இருக்கறதா நீ நினைச்சா அது நல்லதுதான். ஆனா எனக்கு இல்ல. உனக்கு!”

அவர் பதில் புதுமையாக இருந்தது. கொஞ்சம் குழப்பவும் செய்தது.

“ஏன் இப்படி பயமுறுத்தறீங்க... உங்க பேச்சை புரிஞ்சிக்கறதுக்கு ரொம்ப சிரமப்பட வேண்டியிருக்கு. நான் இந்த வீட்டுக்குள்ள நுழைஞ்ச நிமிஷம் ‘தெரியும்... நீ எட்டுமணிக்கெல்லாம் வந்துடுவேன்னு அம்மா சொன்னான்னு சொன்னீங்க... அடிக்கடி அம்மா சொன்னான்னு சொன்னதும் புரியல... இப்ப பேய் பிசாசு இருக்கறதா நினைச்சுக்கோங்கறதும் புரியல. உண்மையச் சொல்லுங்க மேல அப்படி என்ன இருக்கு?”

“ஆகாசத்துல என்ன இருக்கு?” உடனே அவர் திருப்பிக் கேட்டார்.

“என்னங்க இது கேள்வி... ஆகாயத்துல என்ன இருக்குன்னா... அங்க எதுவும் இல்லை. எதுவும் இல்லாதது தானே ஆகாயம்?”

"மேலேயும் எதுவும் இல்லேன்னு சொல்லத்தான் அப்படிச் சொன்னேன்"

"அப்ப ஏன் போகக் கூடாதுன்னு சொல்றீங்க...?"

"அது என்னோட இடம்... உனக்கு உன் பேனா, கர்ச்சீப் இதை யாராவது உபயோகப்படுத்தினா பிடிக்குமா?"

"நீ... நீங்க அந்த அர்த்தத்துல சொல்றீங்களா?"

"ஆமாம்... திரும்பவும் சொல்றேன். மாடின்னு ஒண்ணு இருக்கறதையே நீங்க மறந்துட்டு இங்கு குடி இருக்கணும். முடியுமா?"

"இப்ப சேலத்துல குடியிருக்கிற வீட்டுல ஒரு இடத்துல கூரையே இல்லை. அங்கேயே குடி இருக்கும் போது இங்க குடியிருக்கறதா கஷ்டம்...?"

-தேவநாதன் கொஞ்சம் கிண்டலாகவும் பேசி சூழ்நிலை இறுக்கத்தைத் தளர்த்தினான்.

"அப்ப சரி... நீ எப்ப குடிவரப் போறே?"

அவரும் உடனடியாக விஷயத்துக்கு வந்தார்.

"டியூட்டில சேர்ந்துட்டேன். இனி எப்ப வேணும்னாலும் வரவேண்டியதுதான். அம்மா, அக்காகிட்டே போய் வீடு பார்த்துட்டேன்னு சொன்னா போதும். பால் காய்ச்ச நாள் பார்த்துடுவாங்க"

"அப்ப புறப்படு... நாள் பாரு... பால் காய்ச்சு... உடனே குடிவா..."

"வாடகை...?" -இழுத்தான்.

"மாசம் நூத்தி எட்டு ரூபா!"

"நூத்தி எட்டா....!" -அவனால் நம்பமுடியவில்லை.

"ரொம்ப குறைவா நினைச்சா ஆயிரத்து எட்டு கொடு. ஆனா எனக்கு தராதே. என் பேரைச் சொல்லி... இல்லையில்லை சக்தி பேரைச் சொல்லி ஒரு நூறு ஏழைகளுக்கு ஒருநாள் சாப்பாடு போட்டுடு. ஆங்... அதான் கோயிலுக்கு கோயில் அன்னதானம் பண்றாங்களே... அந்த திட்டத்துக்கு கொடுத்துடு. ரசீதை மட்டும் பத்திரமா வெச்சி என்கிட்ட கொடுத்துடணும்!"



தேவநாதனுக்குள் அவர் வார்த்தைகள் ஒவ்வொன்றுமே குளத்தில் விழும் கற்களைப் போலத்தான் விழுந்தன விழுகின்ற கல்லானது நீர்மட்டத்தில் வட்டமாய் சலன அலைகளை உருவாக்கும்.

அவன் மனத்திலும் சலன அலைகள்.

இவர் நல்லவரா... கெட்டவரா? இல்லை இரண்டும் கெட்ட பைத்தியமா? அதுவும் இல்லை ஏதாவது சித்து வேலை செய்கின்ற ஏமாற்றுக்கார சாமியாரா?

கேள்விப் பந்துகள் அவன் மன மைதானத்தில் ஒவ்வொன்றாக விழுந்து எம்பி எம்பிக் குதித்தன.

"இதோ பார் தம்பி. நான் ஒரு ஒண்டிக்கட்டை. அந்த சக்தியை தினமும் உபாசிக்கிற ஒரு உபாசகன். என் பேர் சச்சிதானந்தம். எதுக்கு நான் நல்லவனா, கெட்டவனா, இரண்டும் கெட்ட பைத்தியமா இல்லை சித்து வேலைக்காரனான்னு நினைக்கறே.

நீ நேர்மையானவன். அந்த அம்பாள் உன் மேல ரொம்ப கருணையோட இருக்கா. அதனாலதான் நான் உன் கூட பேசிக்கிட்டிருக்கேன். உன்னை நம்பி இந்த வீட்டையே விட்டுட்டு போறேங்கறேன்.

இதுல ஏதாவது சூது இருக்கறதா நீ நினைச்சா வராதே. இப்ப என்ன? பூட்டி சாவிய எடுத்துகிட்டு நான் பாட்டுக்கு காசிக்கு கிளம்பிட்றேன்."

அவ்வளவுதான்!

அவன் கேள்விகளை கண்ணாலேயே புரிந்துகொண்டு அவர் சொன்ன பதிலில் அவன் ஆடிப்போய்விட்டான்.

இருந்தும் அவரிடம் "ஊருக்கு போய் அம்மா, அக்காகிட்டே பேசிட்டு உங்களுக்கு போன் பண்றேன். போன் நம்பர் இருக்கா?" என்று கேட்டான்.

"அவசியமில்ல... இங்க இந்த வீட்டுக்கு குடிவர துன்னு முடிவு செய்துட்டா மனசுக்குள்ள நினைச்சுக்கோ. எனக்கு உடனேயே தெரிஞ்சிடும்!"

அது எப்படி? என்கிற மாதிரி பார்த்தாலும் வார்த்தை களால் எதுவும் கேட்கவில்லை. பின் அதற்கும் அவர் எதையாவது கூறுவார் என்கிற பயம்.

"சரிசரி... சீக்கிரம் கிளம்பு. இன்னும் ஆறே நாள்ல புதுமாப்பிள்ளையா வேற மாறப்போறே... எவ்வளவு வேலை இருக்கு உனக்கு..."

தேவநாதனுக்குள் திரும்பவும் பஸ்சில் கண்ட அந்த பெண்ணின் நினைவு முண்டியது. அதுவும் அவர் புது மாப்பிள்ளை என்று சொல்லவும்... அந்த நினைப்பு மட்டும் தித்தித்தது.

ஆனால் ஒரு நூலளவு கூட அதை நம்புவது புத்தி யுள்ள தனக்கு அழகல்ல என்றும் கூடவே ஒரு எண்ணம்! அந்த எண்ணங்களின் கலவையோடு அவரைப்பார்த்து அளவாக ஒரு சிரிப்பு சிரித்தான். பின் கை குவித்தான்.

"வணக்கம்... அப்ப நான் புறப்படறேன்!" என்றபடி அந்த மாளிகை வீட்டை விழுங்கவிழுங்கப் பார்த்தபடியே வெளியேறத் தொடங்கினான்.

நண்பன் பிரகாஷின் வீட்டிற்குள் நுழைந்தபோது ஏகத்துக்கும் சப்தம். அவனும் அவன் மனைவி லஷ்மியும் முட்டி மோதிக் கொண்டிருந்தார்கள்.

"வீட்டுக்குள்ள சிகரெட்டுதான் பிடிச்சீங்க... சகிச்சுக் கிட்டேன். இப்ப தண்ணியுமா... இப்படியே இருந்தீங் கன்னா நான் ஒரு நாள் ஓடிப் போயிடுவேன்..."

"யாரோட லஷ்மி...?"



"யாரோடையா... என் நிழலோடதான். ஏன்னா அதுதான் எப்பவும் என்னை விட்டு பிரியாம என் கூடவே இருக்கும். எனக்கு தெரியாம அது எந்த தப்பும் செய்யாது..."

"ராத்திரியில அது காணாம போய்டுமே. அப்ப என்ன பண்ணுவே?" கொஞ்சம் போதையோடு பிரகாஷ் திருப்பிக்கேட்க, லஷ்மி கோபத்துடன் பதிலுக்கு முறைக்க அவ்வளவு வாக்குவாதங்களும் உள்ளே நுழைந்திருந்த தேவநாதனின் காதிலும் விழுந்திருந்தது.

லஷ்மியும் அவனைப் பார்த்து லேசாக துளிர்த்துவிட்ட கண்ணீரைத் துடைத்துவிட்டுக் கொண்டவளாய் விம்மினாள்.

"யாரு... தேவநாதனா... வாடா!" பிரகாஷ் கோணல் வாயோடு, கோப்பைக் கையோடு வரவேற்பு கூறினான்.

"என்னடா பிரகாஷ் இது... வீட்லயே..."

"நல்லா கேளுங்கண்ணா, நான் கேட்டதுக்குதான் வார்த் தைல என்னை வறுத்தெடுத்துக்கிட்டு இருக்காரு..."

"டேய் பிரகாஷ்... கொஞ்சம் கூட நல்லா இல்லடா இது."

"போடா ஃபூல். பாருக்கு போய் அடிச்சா வெளிய போய்குடிச்சு ஏண்டா மானத்தை வாங்கறேன்னு கேக்க றீங்க. சரி அடக்கமா வீட்டுக்குள்ள குடிச்சா அதுவும் தப்புன்னா என்னடா அர்த்தம்?"

"ஆகக்கூடி நீ குடிப்பே அப்படித்தானே?"

"ஆமாம். நைட் ஷிப்ட் பார்த்துட்டு வந்துருக்கேன். உடம்புவலி. குடிக்கறேன். இது தப்பா. குடிக்கறதுக்கு தானேடா கடவுள் மதுவையே படைச்சிருக்கான்."

"ஆமா... கடவுளுக்கு ரொம்ப தேவைபாரு. பிராந்தியை யும், விஸ்கியையும் அவர்தான் பேக்டரி போட்டு நடத்தி வித்துகிட்டுருக்காரு..."

"விட்றா... வந்த விஷயத்த சொல். ஆமா டிரான்ஸ்பர்னு சொன்னியே டியூட்டிலே சேர்ந்துட்டியா?"

"நேத்துதாண்டா சேர்ந்தேன். அப்படியே அங்க ஒரு வீடும் பார்த்துருக்கேன். கிளம்ப வேண்டியதுதான் பாக்கி..."

"வெரிகுட்... அதான் சொல்லிட்டு போக வந்திருக்கியா?"

"இல்ல பிரகாஷ் உன்கூட கொஞ்சம் மனம் விட்டு பேசனும்."

"என்னடா... ஏதாவது பணம் கிணம் தேவைப்படுதா..."

"சேச்சே... அதெல்லாம் ஒண்ணுமில்ல. இது வேற விஷயம்."

"சொல்லு... நீ போய் விருந்துக்கு ஏற்பாடு பண்ணு லஷ்மி. பய இனி எப்ப வருவானோ... எப்படி வருவானோ...?"

"ஏண்டா அப்படி எல்லாம் சொல்றே... லஷ்மி... நீ எதுவும் செய்யாதே. இதோ பாருடா என்னை விட்டுத் தள்ளு. நீ இப்படி குடிக்கறத விடுடா..."

"சரிடா... மனம்விட்டு பேசனும்னு சொன்னியே. என்ன அது? கமான் பேசு!"

பிரகாஷ், தேவநாதன் கூறப்போவதை கேட்கத் தயாரானான். லக்ஷ்மியும் காபி போட்டு எடுத்துவர உள்ளே சென்றாள்.

"வா... மாடிக்கு போவோம்..." -தேவநாதன் பிரகாஷோடு அவன் வீட்டு மொட்டை மாடிக்குச் சென்றான். மாடியின் கைப்பிடி சுவர் மேல் ஏறி அமர்ந்து கொண்டான். மனதுக்குள் அந்தப் பெரியவர் சச்சிதானந்தம் விசுவரூபம் எடுத்திருந்தார்!



கீழே போஸ்ட் என்று போஸ்ட்மேனின் குரல். லக்ஷ்மி தான் சென்று வாங்கினாள். ஒரு கல்யாணப் பத்திரிகை. பத்திரிகையில் தேவநாதன் பஸ்சில் சந்தித்த அந்தப் பெண்தான் மணமகள்! அவள் புகைப்படமும் பளிச் சென்று பார்க்க லட்சணமாக அழகாக இருந்தது. பக்கத்திலேயே லக்ஷ்மியின் மாமன்மகன் திலகராஜின் புகைப் படம்.

மாமன்மகன் அத்தை மகளுக்கு திருமணப்பத்திரிகை அனுப்பியிருக்கிறான். அதைப் பார்த்தவள் முகத்தில் லேசான அதிர்ச்சி.

"ஐய்யய்யோ... இவனுக்கு கல்யாணமா?" -என்று மனதிலும் ஒரு கேள்வி.

## 6

**நமது ஆலய வழிபாட்டு முறைகள் அற்புதமானவை. வழிபடுபவர்களுக்கு நலன்களை வாரி வழங்குபவை. உலகின் உயிரினங்களில் மனிதன் மட்டுமே தன்னையறிய முடிந்தவன். அப்படியே மற்ற உயிர்களையும் புரிந்து வைத்திருப்பவன்.**

**உயிராக மண்ணிடை தெரித்து விழுந்துவிட்ட நிலையில் ஒரு வாழ்க்கை அவனுக்கு காத்திருக்கிறது. அதை அவன் வாழ்ந்து முடித்தாக வேண்டும். அப்போது மனமானது நினைவுகளாலும், உடம்பானது உணவுகளாலும் இயங்குகிறது. ஒன்றுக்கு ஒன்று ஆதாரமாகவும் உள்ளது.**

**இந்த இயக்கத்தில் இன்பம் என்றும் துன்பம் என்றும் இருவித உணர்ச்சி நிலைகள் அவனை ஆட்டிப் படைக்க மனிதனும் அதற்குள் சிக்கிக் கொண்டு விடுகிறான்.**

இதனால் வினைகள் செய்யத் தொடங்குகிறான். அதுவும் நல்வினை, தீவினை என்று அடையாளம் பெற்று அவனைத் தொடருகிறது. அதிலிருந்து விடுபட அவனால் முடியவில்லை. இன்பத்திலேயே சதா இருக்கவும் முடியவில்லை. துன்பத்திலும் அவனால் உழல முடியவில்லை. மொத்தத்தில் தத்தளிப்பு என்பது அவன் வரையில் நிகழ்கிறது.

கூட்டிக்கழித்துப் பார்த்தால் அவன் ஒரு வலைச் சிலந்தி. வலைச் சிலந்திக்கு வலைதான் வீடு. ஆனால் பார்ப்பதற்கு அது வலையில் சிக்கிக் கொண்டது போல் இருக்கும். மனிதனின் இந்த தத்தளிப்பில் இருந்து அவனை விடுவிக்க ஸ்ரீ சக்ரம் வழிகாட்டுகிறது.

ஸ்ரீ சக்ரம் பற்றி ஒருவனுக்குத் தெரிந்து விட்டால், அது புரிந்து விட்டால் அவன் மெல்ல தான் யார் என்பதில் இருந்து உலகின் அனைத்து ரகசியங்களையும் அறிந்து கொண்ட ஒருவனாகி விடுவான்.

ஸ்ரீ சக்ரத்திற்கு இன்னொரு பெயர்தான் ஸ்ரீ யந்த்ரம்!

**லக்ஷ்மி**யின் கைகளில் அந்த கல்யாணப் பத்திரிகை கனத்தது. மனதிலும் இனம்புரியாத ஒரு பரபரப்பு.

லக்ஷ்மியின் மாமன் மகன் ஒரு ட்ரக் அடிக்ட். ஒரு முறை போதை ஊசிக்காக அவனது அம்மாவின் தாலிச் சங்கிலியையே அறுத்துக் கொண்டு சென்றவன். இத்தனைக்கும் ஒரே பிள்ளை. லக்ஷ்மியின் மாமா அவனைத் திருத்த போராடினார். பல ஆஸ்ரமங்களில் சேர்த்து யோகப் பயிற்சியெல்லாமும் அளித்துப் பார்த்தார்... ஆஸ்ரமத்தில் இருந்து கொண்டே தவறு செய்தான். இறுதியில் அவன் ஜாதகத்தை தூக்கிக் கொண்டு ஜோசியரிடம் ஓடினார்.

ஜோசியர் கட்டங்களைப் பார்த்து விட்டு என்ன சொன்னாரோ தெரியாது. உடனேயே அவனுக்கு பெண் பார்க்க ஆரம்பித்துவிட்டார். லக்ஷ்மியையே கூட மருமகளாக்கிக் கொள்ள விரும்பி பேசிப் பார்த்தார். லக்ஷ்மியின் தாய் பெரிதாக கும்பிடுபோட்டு திருப்பி அனுப்பி விட்டாள்.



அதெல்லாம் ஒட்டுமொத்தமாக லக்ஷ்மிக்கும் ஞாபகத்தில் வந்தது.

'ஹூம்... பாவம் அந்த பெண்!

மாமா எந்த பொய்யைச் சொல்லி அந்த பெண்ணை பிடித்தாரோ?' என்றும் ஒரு கேள்வி ஓடியது.

இடையில் மாடியில் இருந்து பிரகாஷின் குரல் கேட்டது.

"லக்ஷ்மி என்ன பண்றே... இன்னுமா காபி ரெடியாகலை?"

கேள்வியைத் தொடர்ந்து கல்யாணப் பத்திரிகையை மேஜைமேல் உள்ள ஒரு புத்தகத்தில் செருகியதுபோல வைத்து விட்டு காபியுடன் மொட்டைமாடிக்கு ஏறினாள்.

தேவநாதன் யோகத்தில் இருக்கும் ஒரு மவுனத் துறவியைப் போல உட்கார்ந்து கொண்டிருந்தான்.

"காபி எடுத்துக்குங்கண்ணா... என்ன யோசனை?"

"அத ஏன் கேக்கறே... மதுரைக்குப் போன இடத்துல பயலுக்கு வித்தியாசமான அனுபவம். ஒரு கிழட்டு சாமி யார்கிட்ட மாட்டியிருக்கான். இப்ப அவர் நல்லவரா கெட்டவரா... அவர் வீட்டுக்கு குடி போலாமா வேண்டாமான்னு ஒரே குழப்பம்..."

"சாமியார், விஷயம்னாலே ஜாக்கிரதையா இருங்க. புத்தகத்தைத் திறந்தா அவங்க கூத்துதான் கண்ணுல படுது. குரங்கு சாமி, தேங்கா சாமி, மாங்கா சாமின்னு அவங்களுக்கும் விதவிதமா பட்டப் பேருங்க..."

"சரி சரி... நீ போய் ஆகவேண்டியதபாரு! இதோ பார்டா தைரியமா குடிபோடா. வீட்டுக்காரன் இல்லாத

ஒரு வீடு வாடகைக்கு கிடைக்க கொடுத்து வெச்சிருக்கணும். அதுலையும் நீ கொடுக்கறத வாங்கிக்கற பார்ட்டி கிடைக்க மச்சம் வேணும். என்ன தயக்கம்?"

"இல்லடா பிரகாஷ். அவர் பேச்சு, அப்புறம் அந்த மாளிகை மாதிரி வீடு, அப்புறம் அந்த மாடிக்கு போகக் கூடாதுங்கற சங்கதி எல்லாம் கொஞ்சம் யோசிக்க வைக்குது..."

"என்னடா... மூடுபனி படத்துல வர்ற பிரதாப் மாதிரி. மாடில ஏதாவது எலும்புக் கூடு இருந்து அதோட அவர் வாழ்ந்துகிட்டிருக்கறதா நினைக்கறியா?"

"சந்தேகம் தானேடா... ஏன் இருக்கக் கூடாது?"

"அப்ப ஒண்ணு பண்ணு. அந்த ஆள் அசல் சாமியார்னா அவர் சொன்ன மாதிரி உனக்கு ஒரு வாரத்துல கல்யாணம் நடக்கணும். அதுல கூட ஒரு நாள் போயிடிச்சில்ல...?"

"ஆமாம்டா. இது இன்னும் பெரிய கூத்து. அந்த பொண்ணை பார்த்தா எப்படி இருக்காங்கறே?"

தேவநாதன் கல்யாணம், பெண் என்றெல்லாம் பேசவும் லஷ்மியும் கல்யாணப் பத்திரிகை ஞாபகம் வந்தவளாக "என்னங்க... மதுரைல திலகராஜிக்கு கல்யாணம்...!" என்றாள்.

"எந்த திலகராஜ்... உன் மாமா மகன்னு ஒரு போதைக் காரனைச் சொல்வியே... அவனா?"

"அவனேதான்... எங்க சொந்தம்னா உடனே போதைக் காரன். அவன் இவன்னு பேர்வெச்சிட வேண்டியது. உங்க சித்தப்பா பையன் கூடதான் ஒரு தண்ணிவண்டி. அவனை தண்ணி வண்டின்னு சொல்லுங்களேன்."

"போதும்... இதுதான் சாக்குன்னு காலட்சேபம் பண்ண ஆரம்பிச்சுடாதே!"



"வாயத்திறந்துடக் கூடாதே... உடனே மூடச் சொல்லிடுவீங்களே..." அலுத்துக் கொண்டே அவள் விலக மீண்டும் பிரகாஷ் பார்வை தேவநாதன் பக்கம் திரும்பியது.

"என்னடா... என்ன இன்னும் யோசனை? கேட்டேல்ல. மதுரைல கல்யாணமாம். எனக்கும் மதுரை வர்றதுக்கு ஒரு சந்தர்ப்பம். போ... போய் தைரியமா அடுத்து செய்ய வேண்டியதைச் செய்.

ரொம்ப கற்பனை பண்ணாதே.

பாசிடிவாவே நினை. எல்லாம் நல்லபடி நடக்கும்."

-பிரகாஷ், தேவநாதனை ஒருவழியாக நம்பிக்கை வட்டத்திற்குள் வைத்து பூட்டியும்விட்டான்!

❖ ❖ ❖

**மீ**ண்டும் மதுரை பயணம்!

அக்கா, அம்மாவை சேலத்திலேயே தற்காலிகமாக இருக்கச் சொல்லிவிட்டு புறப்பட்டான்.

அவர்களும் "உடம்ப பார்த்துக்க..." என்கிற மாறாத பல்லவியைப் பாடி அவனை வழி அனுப்பி வைத்தார்கள். அவனும் புறப்பட அந்த நேரம் பார்த்து சமையல்கட்டில் மஞ்சள் பொடி பாட்டில் கீழே விழுந்து உடைந்தது.

உடனே அவன் அம்மாவும் "தேவா புறப்படும் போது, மஞ்சள் பாட்டில் உடையுது. நல்லதுதான். ஏதோ ஒரு நல்ல காரியம் நடக்கப் போகுது போல..."-என்று திருவாய் மலர்ந்தருளினாள்.

உள்ளுக்குள் தேவநாதன் மனதும் நிஜமாலும் நடந்துவிடுமோ என்று ஒரு நப்பாசையில் விழுந்தது. பிறகு அவள் எங்கே... நான் எங்கே...? எதற்கும் சந்தர்ப்பமேயில்லை என்றும் சொல்லிக்கொண்டு புறப்பட்டான்.

"இந்த வாரம் எங்க தங்கப் போறே?"

"எங்க ஏதாவது லாட்ஜ்ல ரூம் போட வேண்டியது தான்."

"எந்த லாட்ஜ். அப்புறம் ரூம் நம்பர்லாம் என்னன்னு போன் பண்ணு! நான் நேரா உன் ரூமுக்கு தான் வருவேன்" -என்றாள் அவன் அம்மா.

தேவநாதன் தலை பதிலுக்கு வேகமாக ஆடியது. ஆடிய வேகத்திலேயே புறப்படவும் செய்தான்.

❖ ❖ ❖

நாட்கள் சிறகு கட்டிக் கொண்டுதான் பறந்தன. பெரியவர் சச்சிதானந்தத்திற்கு போனே செய்யவில்லை. ஆபீஸ். ஆபீசை முடித்தால் லாட்ஜில் ரூமில் என்று ஐந்துநாள் ஓடிவிட்டது.

அவ்வப்போது அவகாசம் கிடைக்கும்போது மீனாட்சி கோயில் என்று அந்த ஐந்து நாளும் முடியப்போகும்போது சொல்லி வைத்த மாதிரி வந்து சேர்ந்தான் பிரகாஷ்!

"எங்கடா கல்யாணத்துக்கா?"

"ஆமாம்... அது சரி கல்யாண மண்டபம் எங்க இருக்குன்னு பார்க்கணுமே..."

"அட்ரஸ் சொல்லு. நான் சொல்றேன்..."

"என்னடா நாலஞ்சு நாள்ல மதுரையையே கலக்கிட்டியோ...?"

"மண்ணாங்கட்டி. ஆபீஸ் வேலையே சரியா இருக்கும்போது எங்க வெளியே போறது?"

"அப்ப இன்னிக்கு நீ என் கூட வர்றே...?"

"எங்கடா...?"

"கல்யாண வீட்டுக்குதான்"

"அங்க நான் எதுக்குடான்னா!"



"சும்மா கூட வாயேன். உன்னை என்ன கடிச்சா தின்னுடப் போறேன்"

"இல்லடா... பத்திரிகை வந்திருக்கறது உனக்கு. நான் வந்து என்னடா பண்ணப் போறேன்?"

"தாழ்வு மனப்பான்மையா?"

"சுயமரியாதை..."

"மண்ணாங்கட்டி... கிளம்புடான்னா?"

-சரி என்று அரைமனதாக தேவநாதன், பிரகாஷிடம் தொற்றிக்கொள்ள இருவரும் கல்யாணத்திற்கு புறப்பட்டனர்.

"ஆமாம் லட்சுமி வரலியா?"

"இல்ல... பசங்களுக்கு பரீட்சை இருக்குல்ல?"

"அதுதான் அவ வரலியா?"

"அதுமட்டுமல்ல... லட்சுமிக்கு கொஞ்சம் உடம்பும் சரியில்லை... நீங்க முன்னப் போங்க. நான் பின்னால வரேன்னா... நானும் கிளம்பி வந்துட்டேன்."

"ஏதாவது சொல்லு... சரியான ஆள்டா நீ".

-என்றபடியே பிரகாஷ், தேவநாதனை இடையைத் தொட்டு இழுக்க தேவநாதனும் அந்த இழுவைக்குள் அகப்பட...

கல்யாண மண்டபத்தை நெருங்க நெருங்கவே தேவநாதனுக்கு இதயத்துடிப்பு அதிகரித்துவிட்டது. வழியெங்கும் திவ்யா முகமும். அந்த திலகராஜின் படமும் போட்ட போஸ்டர்கள் அவன் கண்ணில் பட்டு அவனுக்குள் அமில உற்பத்தியை ஆரம்பித்துவிட்டன.

"ஆமாம் இந்த பொண்ணா மணப் பொண்ணு..."

"ஆமாம்... எதுக்கு கேக்கறே?"

"இல்ல... சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டியே..."

"சொல்லு..."

"இவதாண்டா போனவாரம் பஸ்ல எனக்கு முந்தி உட்கார்ந்துகிட்டு வந்த பொண்ணு"

-தேவநாதன் எடுத்துக் கொடுக்க அப்படியே லபக் என்று பிடித்துக் கொண்டான் பிரகாஷ். அப்படியே கல்யாண மண்டபத்தில் நுழைந்தனர்.

அந்த சமயமாகப் பார்த்து உள்ளே ஏதோ பரபரப்பு. என்னவென்று விசாரித்த போது தூக்கிவாரிப்போட்டது.

"கல்யாண மாப்பிள்ளையால் நாலு நாளைக்கு எழுந் திருக்க முடியாதாம்! அப்படி ஒரு போதையில் இருக் கானாம்...!"

-அவ்வளவுதான் பிரகாஷ் பாய்ந்து முன்னாலே ஓடினான். பின் தொடர்ந்தான் தேவநாதன்.

உள்ளே நுழைந்து பார்த்தபோது பிரம்மாண்டம் சுண்டி இழுத்தது. திரும்பின பக்கமெல்லாம் சலவைக் கற்கள்தான்.

எப்படியும் பலகோடி போகும். இதற்கு நடுவே மட்ட மல்லாக்க போதை ஊசியை ஏற்றிக்கொண்டவனாய் திலகராஜ்! அந்தப் பெண் திவ்யாவின் அப்பா ஆவேசமாக கத்தத் தொடங்கிவிட்டார்.

"சண்டாளங்களா... கல்யாண நாளன்னிக்கு கூட குடிக்காம இருக்க முடியாத ஒருத்தனுக்கு போய் என் மகள் மாட்டத் தெரிஞ்சா. நல்லவேளை தப்பிச்சுட்டா..." என்றார்.

"என்னத்த தப்பிச்சுட்டா... இப்பதான் சாமி உம்ம பொண்ணு வசமா மாட்டிக்கிட்டிருக்கா. நல்லா யோசிச்சு பாருங்க. ஒரு தடவை ஒரு பொண்ணுக்கு கல்யாணம் நின்னுபோனா மூணு தடவை அப்புறமா அது நிக்கு மாம்."-யாரோ ஒருவர் கிளப்பிவிட்டார்.

"அதனால... இந்த போதைக்காரனுக்கு நான் என் மகளைத் தரணுமாக்கும்..."



"அப்படிச் சொல்லலை... எப்படியாவது கல்யாணத்த நடத்தப் பாருங்கறேன்..."

"கல்யாணம்னா மாப்பிள்ளை வேணும்... தெரியும்ல?"

-திவ்யா என்கிற அந்தப் பெண்ணின் அப்பா ராம நாதன் கையை ஆட்டி கேட்ட விதத்தில் நல்ல அழுத்தம்.

தேவநாதனுக்கு தன்முறை வந்துவிட்டது போலத் தோன்றியது. அந்தப் பெரியவர் சொன்னது பலிக்கப் போகிறதோ?

நிமிர்ந்து உட்கார்ந்தான்!

## 7

"ஸ்ரீ யந்த்ரம் என்று சொல்லும்போதே எந்திரம் என்னும் ஒரு சொல் நினைவுக்கு வருகிறது. எந்திரம் என்றால் எலலோருக்கும் தெரிந்ததுதான். பலவிதமான கருவிகளுடன் இயங்குகிற எல்லாமே எந்திரங்கள்தான். இவை கண்ணுக்கு தெரிந்து இயங்குபவை. இது இயங்குவதைப் பார்க்க முடி யும். உணர முடியும். இதை இயக்க வேண்டியதும் அவசியம். இந்த இயக்கத்தால் பல விளைவுகள். கரும்புச்சாறு பிழியும் எந்திரம் நாம் குடிக்க கரும்புச் சாற்றை தருகிறது. காபிக் கொட்டை எந்திரம் அதை பொடியாக்கித் தருகிறது. காருக்குள்ளே உள்ள மோட் டார் எந்திரம் காரை வேகமாக ஓடவைக்க துணை செய்கிறது. இதை இயக்குவதும் மனித சக்திதான். உடல் பலம் மற்றும் கண்காணிப்பு இவைகளால் இயக்குகிறோம்.

இந்த வகை எந்திரங்களில் இருந்து மிக வேறு பட்டது யந்த்ரம். மனிதனின் உடல் சக்தியாலோ அல்லது கருவியாலோ இயங்குவது போன்றதல்ல இது. இதன் இயக்கம் சூட்சமமானது. எந்திரம்

கருவிகளால், மனித சக்தியால் இயங்குவது. யந்த்ரம் குறியீடுகளால் மந்த்ரம் எனும் கண்ணுக்குத் தெரியாத காதால் மட்டுமே கேட்கமுடிந்த சப்த சக்தியால் இயங்குவது...! ஒரு குறியீடு சப்தத்தால் இயங்குகிறதா... எப்படி? கேள்விகள் எழும்புகிறதா?.

கல்யாண வீட்டு களேபரத்தைப் பார்த்த தேவநாதனுக்கு அந்த சக்தி உபாசகர் சொன்னதும் சிரித்ததும் தான் ஞாபகத்தில் பீறிட்டது. மணப்பெண்ணின் அப்பா ஒரு ஓரமாய் போய் அப்படியே அமர்ந்துவிட்டார். அவரைச் சுற்றி நான்கு பேர் நின்றுகொண்டு தேற்றத் தொடங்கியிருந்தனர். எல்லோருக்கும் ஒரு துணைப் பெயர் இருக்கிற மாதிரி அவருக்கும் குட்டி என்று ஒரு பெயர் இருந்தது. அதைச் சொல்லி சொல்லி அவரிடம் பேசினர்.

"குட்டி... இந்தாப்பா! என்ன நீ, இதுக்கெல்லாம் மனசு தளர்ந்துகிட்டு, நல்லாவா இருக்கு? இதை நல்லதுக்குன்னு நினைப்பா, அந்த போதைக்காரன்கிட்ட மாட்ட இருந்த உன் பொண்ணு தப்பிச்சிட்டிருக்காப்பா. இந்த நேரம் நீ சந்தோஷப்படணும் எகிறிக் குதிக்கணும்"

-அவர் சொன்னது அவர் வரையில் உண்மையோ பொய்யோ மணப்பெண் திவ்யா வரையில் உண்மை போலத் தோன்றியது.

மார்பின் மேல் கை வைத்து நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். அருகில் இருந்து கவனித்த தோழி கூட அவளைப் பார்த்து ஆச்சரியப்பட்டாள்.

"திவ்... பரவால்லடி... எங்க நீ நொறுங்கிப் போய்டுவியோன்னு நினைச்சேன். இதை நீ பாசிடிவா எடுத்துக்கிட்டே..."

"பாசிடிவை பாசிடிவாதான் எடுத்துக்கணும். நாம் நெகடிவ்வா நினைச்சா அது நெகடிவ் ஆயிடுமா? எது எப்படியோ கடவுள் என்னை காப்பாத்திட்டார்..."



இந்த சமாசாரங்களுக்கு நடுவில் பிரகாஷ் அவ்வளவையும் கவனித்துக் கொண்டிருந்த தேவநாதன் அருகில் வந்து அமர்ந்தான்.

"தேவா... சாரிடா!"

"எதுக்குடா...?"

"இந்த கல்யாணம் இப்படி ஆகும்னு நான் நினைக்கல... இதுக்குப் போய் உன்னையும் கூட்டிகிட்டு வந்து உன்னோட கால நேரத்தையும் கெடுத்துட்டேன்... அதுக்குதான் சாரி சொன்னேன்"

"ஆனா நான் உனக்கு தேங்ஸ் சொல்ல விரும்பறேண்டா பிரகாஷ்"

"தேங்சா... எதுக்குடா?"

"பல அதிசயங்கள் நடக்கப் போகுது பார்..."

"என்ன சொல்றே?"

"இந்த ஊர்ல ஒரு வயசான பெரியவர்..."

"யாரு?"

"அதாண்டா சக்தி உபாசகர் ஒருத்தர் வீட்டை வாடகைக்கு விட்றேன்னு சொன்னதைச் சொல்லி கூடவே ஒரு வாரத்துல நான் கல்யாண மாப்பிள்ளை ஆயிடுவேன்னு சொன்னார் இல்லியா?"

"அ... ஆமாம்... ஏ...! நீ இப்ப அப்படி வர்றியா?"

"அப்ப இங்க கல்யாண மாப்பிள்ளை நீன்னு சொல்..."

"நான் சொல்லலை. இனி நடக்கப் போற விஷயங்கள் என்னை நோக்கி திரும்பலாம். திரும்புதான்னு பார்ப்போமே?"

"என்னடா அப்படி சொல்லிட்டே இவ்வளவு தூரம் சொல்லி வெச்ச மாதிரி நடந்திருக்கு. இனிதானா நடக்காம போயிடும்?"

பிரகாஷ் தன் நம்பிக்கையை வெளிப்படுத்த அவன் மனைவி லட்சுமி பட்டுப் புடவையும் காசுமாலையும் சரசரக்க அவனருகே வந்து நின்றாள். வாடகை சேர்கள் சுற்றிலும் இறைந்து கிடக்க அதில் ஒன்றை இழுத்துப் போட்டு அமர்ந்தாள்.

"என்ன லட்சுமி...?"

"என்னவோங்க... பத்திரிகையை பார்த்தப்பவே இந்த நாய்க்கு கல்யாணமான்னு யோசிச்சேன். கடைசில நான் நினைச்ச மாதிரியே ஆயிடிச்சு. கல்யாணம் பண்ணா திருந்திடுவான்னு ஒரு ஜோசியர் சொன்னாராம். உடனே இவங்களும் எல்லாத்தையும் மூடிமறைச்சு கல்யாணத் துக்கு தயாராயிட்டாங்க. இப்ப பாருங்க... சந்தி சிரிக்குது!"

-லட்சுமி புலம்பத் தொடங்கிவிட்டாள்.

"சரிடி... உன் மாமன், மாமி என்ன சொல்றாங்க? இருக்காங்களா... இல்லை ஓடிட்டாங்களா?"

"அவங்க ஏன் ஓடறாங்க.. எப்படியாவது கல்யாணம் நடக்கணும்னு நினைக்கறாங்க. முகூர்த்தமே நெருங்கி கிட்டு இருக்கு. என்ன ஆகப்போகுதோ?"

-லட்சுமியின் விளக்கத்தைத் தொடர்ந்து ஒரு அர்த்த புஷ்டியுள்ள பார்வையை தேவநாதனை நோக்கி செலுத் தினான் பிரகாஷ்.

"என்னண்ணே... இவர் ஏன் உங்களப் பாக்கறாரு?"

"தெரியலம்மா..."

"இல்ல... ஏதோ இருக்குது! அன்னிக்கு நீங்க வீட்டுக்கு வந்ததுல இருந்தே பாக்கறேன். உங்களுக்குள்ள ஏதோ ரகசியப் பரிமாற்றம்..."

"பிரகாஷ்... லட்சுமிக்கு எதுவும் தெரியாதா?"

"இல்லடா... இவகிட்ட சொன்னா ஊர்பூரா போய் சொல்லிட்டு வந்துடுவா... அதான் சொல்லலை"



"என்னண்ணே... என்ன விஷயம்?"

"சும்மா இரு லட்சுமி. சுருக்கமா ஒரு வரில சொல்றேன். ஆனா யார்கிட்டேயும் சொல்லிடக்கூடாது சரியா?"

"முதல்ல விஷயத்தைச் சொல்லுங்க..."

"திவ்யாவுக்கு இப்ப கல்யாணம் நடக்கும். ஆனா மாப் பிள்ளை உன் மாமன்மகன் திலகராஜ் கிடையாது. நம்ம தேவநாதன்!"

"வாவ்!" -வாயைப் பிளந்து விட்டாள் லட்சுமி.

❖ ❖ ❖

அப்படியே குண்டுக்கட்டாக தூக்கி காரில் போட்டுக் கொண்டு புறப்பட்டு விட்டிருந்தனர் மாப்பிள்ளை திலகராஜின் நண்பர்கள்.

அவன் அப்பாவும் அம்மாவும் கல்யாண வீட்டை விட்டு வர மறுத்து விட்டனர்.

"அந்தப் பொண்ணு கழுத்துல, தாலி ஏறுவதை பார்க் காம வரமாட்டோம். ஒரு பொண்ணை தவிக்க விட்ற பாவம் எங்களுக்கு வேண்டாம். மகன்தான் முகத்துல கரிய பூசிட்டான். வேற யாராவது கைகொடுக்க மாட்டாங்களா என்ன?"

-கண்ணீருடன் அவர்கள் சொன்னதில் அவர்களுக்கும் இதயம் இருப்பது விளங்கியது.

மணப்பெண் திவ்யாவின் அப்பாவான ராமநாதன் தன் உறவுக்கார பையன் ஒருவனுடன் கெஞ்சிக் கொண்டிருந் தார். பார்க்கும்போதே தெரிந்துவிட்டது. அவர் அவனை மாப்பிள்ளையாக சம்மதமா என்று கேட்பது... அவன் முகத்திலோ தீவிர சிந்தனை.

அவர் சார்பில் சிலர் செல்போனில் பரபரப்பாகப் பேசிக் கொண்டிருந்தனர். அசுர வேகத்தில் ஒரு மாப்பிள்ளை வேட்டை நடப்பது தெரிந்து போயிற்று.

லட்சுமி அவர்கள் அருகில் சென்று நின்றவள் "இங்கையே ஒருத்தர் தயாரா இருக்காரு... நல்ல வேலை... கை நிறைய சம்பளம்" என்று ஆரம்பித்தாள். ராமநாதனும் வேகமாக திரும்பி அவளைப் பார்த்தார்.

"இந்தாம்மா இதுதான் சாக்குன்னு கழிசடை யாரை யாவது காட்டி வைக்காதே" ஒருவர் எச்சரித்தார்.

"எங்க தேவநாத அண்ணன் ஒண்ணும் கழிசடை இல்ல. அவர் தங்கம்" என்று பதிலுக்கு சீறினாள் லட்சுமி.

"யாரும்மா அது.. கொஞ்சம் கூப்பிடேன்"

-ராமநாதன் வேகமாக முன்வரவும் அவள் கை நீண்டது.

தேவநாதனும் அதைப் பார்த்தான்.

குப்பென்று அவனுக்கு வியர்க்கத் தொடங்கி விட்டது. பிரகாஷ் அலறினான்.

"தேவா... லட்சுமி போட்டுவிட்டுட்டா... நீ மாட்டப் போறே."

அடுத்த நொடியே அவர் அவன் முன் வந்து நின்றார். உறவினர்களும் சூழ்ந்து கொண்டனர். அவர் பார்வை அவனை அளந்தது.

நல்ல பர்சனாலிட்டி... தீட்சண்யம். நெற்றியில் வேறு மீனாட்சி குங்குமம். பக்தி உடையவன். கண்களில் ஒரு ஒளி தெரிகிறது. நிச்சயம் பெரிய தீய பழக்கங்கள் எதுவும் இருக்காது..."

"தம்பி..." அவர்தான்.

"சொல்லுங்க..."

"நடந்துகிட்டிருக்கறதை பார்த்துகிட்டு இருப்பீங்க..."



"தெரியும். உங்க தவிப்பும் புரியது. உங்க பெண்ணை கல்யாணம் செய்துக்க எனக்கு ஆட்சேபணை இல்லை... ஆனா..."

"என்ன தம்பி..."

"அவசரப்பட்டுட்டேன். நெருக்கடியான கால கட்டத்துல பல விஷயங்களை தெரிஞ்சுக்கவோ, புரிஞ்சுக்கவோ முடியலைன்னு நீங்க பின்னால வருத்தப்படக்கூடாது..."

"உண்மைதான். ஆனா இந்த முகூர்த்தம் தவறினா அதைவிட கூடுதலா நான் வருத்தப்பட வேண்டி வரலாம் இல்லையா?"

"பதட்டம் வேண்டாம். இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போயிடலை. என் பிறந்த தேதி, நேரம் எனக்குத் தெரியும். கம்ப்யூட்டர் ஜாதகம் கணிக்கறவங்க கிட்ட கொடுத்தா இரண்டாவது நிமிஷம் ஜாதகம் ரெடி... உங்க பெண்ணோட ஜாதகத்தை கம்பேர் பண்ணிப் பாருங்க..."

"ஐய்யோ அதுக்கெல்லாம் நேரமில்லை. உங்களைப் பத்தியும், உங்க குடும்பம் பத்தியும் மட்டும் முதல்ல சொல்லுங்க..."

-தேவநாதன் சொல்லி முடித்தான்.

"இதுபோதும்... நான் உங்களை நம்பறேன்..." இனி நடக்கறதை கடவுள்கிட்ட விட்டுட்றேன் என்றவர் வேகமாக எழுந்தார்.

"ஒரு நிமிஷம்" -தடுத்தான்.

"என்ன தம்பி..."

'மணப்பெண்கிட்ட ஒரு வார்த்தை..."

"அவ நாங்க சொன்னா மறுபேச்சு பேசமாட்டா"

"இல்லீங்க... என்னைக் கட்டிக்கற பொண்ணு உங்களுக்காக என்னை கல்யாணம் பண்ணிக்கக் கூடாது. அவங்களா விரும்பிதான் ஏத்துக்கணும்."

"ரொம்ப சந்தோஷம் தம்பி. ரொம்ப தெளிவா பேசறீங்க. உங்க பேச்சோட ஆழமும் அழுத்தமும் எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. இதுவே நீங்க எப்படிப்பட்டவர்ங் கறதை காட்டிக் கொடுக்குது..."

அவர் பாராட்டும்போது அந்தப்பெண் திவ்யாவே நேரில் வந்தாள். தேவநாதனைப் பார்த்தாள். மிகக் கூர்மை யான பார்வை.

"உங்ககிட்டே கொஞ்சம் தனியா பேசணும்" -என்றாள்.

மற்றவர்கள் உடனே ஒதுங்கிக் கொண்டனர். அவனுக்கும் பரபர என்று இருந்தது.

"என்னபேசணும் நான் எப்படி, என் கேரக்டர் எப்படின்னு தெரியணுமா?"

"அதெல்லாம் எதுக்கு... உங்க சம்பளம் எவ்வளவு?" -அவள் கேட்ட விதமே அலாதியாக இருந்தது.

"கிட்டதட்ட பத்தாயிரம்...?"

"அக்கா தங்கைன்னு கல்யாணத்துக்கு இருக் காங்களா?"

"இருக்காங்க..."

"நீங்கதான் செலவழிக்கணுமா...?"

"நிச்சயமா...?"

"என் நகை நட்டை தொடக்கூடாது. இதுதான் என் கண்டிஷன். ஓ.கே.வா.?"

-அவள் எதற்காக அதை எல்லாம் கேட்டாள் என்பது அப்போதுதான் புரிந்தது. அவனுக்கு சிரிப்போடு சிந்தனையும் வந்தது.

"டயமாச்சு... பத்து நிமிஷம் கூட இல்லை" -அலறினார் ஐயர்.

ஒரு போன் பண்ணி நடந்ததை எல்லாம் தன் அம்மா விடமும், அக்காவிடமும் கூறக் கூட அவகாசமில்லாத



வனாக படுவேகமாக பட்டுவேட்டி சட்டை என்று மாப் பிள்ளை ஆனான் தேவநாதன். மனதுக்குள் அந்த உபாசக பெரியவரை நினைத்துக் கொண்டான்.

பதினைந்தாவது நிமிஷம் தாலியையும் கட்டி முடித்தான். அப்போது கூட்டத்தில் சலசலப்பு.

"சாமி வந்துருக்கார்... சாமி வந்துருக்கார்..." யாரென்று பார்த்தான். அந்த உபாசகர்தான்!

## 8

**எந்திரம் புலன்களுக்குத் தெரிந்து இயங்குகிறது என்பதையும் யந்த்ரம் புலன்களுக்குப் புலப்படாத நிலையில் சூட்சமமாக செயல்படுகிறது என்பதை யும் சில அனுபவங்களை வைத்தே உணரலாம்.**

**ஒரு மனிதன் தன் உடம்பின் இயக்கத்தை ஒவ் வொரு நொடியும் உணரலாம். ஆனால் காண லாகாது. உடம்பு எவ்வாறு இயங்குகிறது என்பதை அவன் காண வேண்டுமாயின் அவன் மருத்துவன் ஆகவேண்டும். மருத்துவன் ஆகி ஒரு செத்த உடம்பை வைத்துக் கொண்டு உறுப்புக்களை பார்த்து அறிந்து. படிப்படியாக மேலேறி பின் உயிருள்ள உடல்களையே அறுத்து அறுவை சிகிச்சை செய்யும் அளவுக்கு அவன் வரலாம்.**

**ஒரு உடம்பின் இயக்கத்தைக் காண்பதற்கே அவன் மருத்துவன் ஆனால்தான் உண்டு... ஆனால் உணர்வதற்கு எதுவும் அவசியம் இல்லை.**

**நாம் நடமாடிக் கொண்டிருப்பதை வைத்தே நமது உடம்பு இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் உணர்ந்து விடலாம். சூட்சுமமான யந்த்ர இயக்கப் பலன்களையும் உணர்வதுதான் சுலபம். காண்பதற்கு உடம்பு வரையில் மருத்துவன் ஆகவேண்டியிருப்**

பது, போல சித்தயோகிகளாக இங்கே மாற வேண்டும்.

சித்த யோகியாக நம்மைநாம் உயர்த்திக் கொண் டால் சூட்சம இயக்கங்களை எல்லாம் காணலாம்.

ஆனால், எல்லாருக்கும் இது சாத்யமில்லை. சித்தயோகியாவது என்பது உலகில் உள்ள அத்தனை கல்வி நிலைகளிலும் மிக மேம்பட்ட ஒரு நிலை.

ஆனால் உணரலாம்...

மந்திர யந்த்ர இயக்கங்களை அற்புதமாக உணரலாம்.

ஒரு மழையம்மன் ஆலயத்தில் அப்படித்தான் அந்த ஆஸ்துமாகாரரும் உணர்ந்தார்.

ஒரு மனிதர் உணர்ந்தார் என்பதா பெரிது? ஒரு ஊரே உணர்ந்து கொண்டிருக்கும் அதிசயத் தைச் சற்று பார்ப்போமா?

உள்ளே நுழைந்த அந்த சக்தி உபாசகப் பெரிய வரைப் பார்த்து தேவநாதன் விதிர்த்துவிட்டான். தாலி கட்டுவதற்கு முன்வரை அவர் ஒரு கேள்விக்குறி யாகத்தான் அவனுக்குள் தொங்கிக் கொண்டிருந்தார்.

இப்போது மிகப்பெரிய ஆச்சரியக் குறியாகிவிட் டிருந்தார்.

இவர் எங்கே இங்கே?

கேள்வி அவனுக்குள் ஓட மணப்பெண் திவ்யாவின் அப்பா ஓடிப்போய் அவர் கால்களில் விழுவதை கவனித் தான்.

"சாமி வாங்க சாமி. எங்க வராம போய்டுவீங்க ளோன்னு நினைச்சேன்..." என்று அவர் உருகுவதெல் லாம் அவன் காதில் விழுந்தது.



திவ்யாவின் அம்மா செண்பகமும் அவர் காலில் விழுந்து வணங்கி எழுந்தாள். அவர்களைத் தொடர்ந்து பலர் விழுந்தனர்.

தேவநாதன் திவ்யாவைப் பார்த்தான்.

"இவரை உங்களுக்கு முந்தியே தெரியுமா?"

-அவள் தலை மறுப்பாக ஆடியது.

"அப்ப எப்படி இங்க?"

"அப்பா தனக்கு ஒரு சாமியாரைத் தெரியும்னு அப்பப்ப சொல்லக் கேட்டுருக்கேன். அது இவர்தானோ என்னவோ?"

அவள் பதிலின் முடிவில் அவர், அவர்கள் இருவர் எதிரிலும் வந்து நின்றார்.

கம்பீரமான தோற்றம்.

வெள்ளைத் தாடியை மீறிக்கொண்டு தெரியும் அந்த மாயச் சிரிப்பு.

தேவநாதனால் அதற்கு மேல் சும்மா இருக்க முடியவில்லை.

கைகளை உயர்த்தி அவரைப் பார்த்து வணங்கினான்.

திவ்யாவும் அவனைப் பின் தொடர்ந்தாள். அப்படியே காலிலும் விழுந்து எழுந்தாள்.

"என்ன... கல்யாணம் நடந்து முடிஞ்சிடிச்சா?"

தொண்டையை செருமிக்கொண்டு அவர்தான் கேட்டார்.

"ஆயிடிச்சு சாமி... கல்யாணத்துல கலந்துக்க வந்த நான் மாப்ளையாகிட்டேன்..."

"அதுதான் விதி!"

"இதை எப்படின்னு சொல்றது. நீங்க சொன்ன மாதிரியே சொன்ன மாதிரியே..."

"ஏன் தயங்கறே... நான் சொன்ன மாதிரியே நடந்து முடிஞ்சிடிச்சுன்னு சொல்ல வர்றியா?"

"ஆமாம் சாமி.. இதை எப்படி எடுத்துக்கறது, புரிஞ்சுக் கறதுன்னே எனக்குத் தெரியல...

"எதுக்கு புரிஞ்சுக்க முயற்சிக்கணும். காத்து கண்ணுக்குத் தெரியாமதான் நம்மை சுத்தி இருக்கு. அதை கண்ணால பார்த்தே தீரணும்னு யாராவது முயற்சி செய்வாங்களா?"

"அது... அது..." அவனிடம் பரவசம், பதட்டம், பக்தி என்று பல்வேறு உணர்வுகளின் தட்டாமாலை.

மணப்பெண் திவ்யாவின் அப்பா ராமநாதன் அவன் பேசுவதைப் பார்த்து குறுக்கிட்டார்.

"சாமி... மாப்ள தம்பிய உங்களுக்கு முந்தியே தெரியுமா?"

"இப்பதான் ஒரு வார பழக்கம்..."

"அப்படியா... ரொம்ப நல்லதா போச்சு. கல்யாணத்துல பிரச்னை வரலாம் எச்சரிகையா இருன்னீங்க... ஆனாலும், பிரச்னையை தவிர்க்க முடியலை. கடைசில இவர் தான் கை கொடுத்தார்.

அவசரத்துல கிடைச்ச மாப்ளைய வெச்சு ஒப்பேத்திட்டேன்னு நாளைக்கு என்னை யாரும் சொல்லிடக்கூடாது. இவங்க நல்லா இருக்கணும். நீங்க வாழ்த்தினா கட்டாயம் இவங்க நல்லா இருந்தே தீருவாங்க. மனசார வாழ்த்துங்க சாமி" அவரிடம் பாசமும் பரிவும் கொப்பளித்தது.

அவரும் இருவரையும் அருகே அழைத்து தலையை வருடிக்கொடுத்து ஆசீர்வதித்தபடியே காதோரமாக மெல்லிய குரலில் பேசத் தொடங்கினார்.

"நல்லா கேட்டுக்கோங்க...

வாழ்க்கைங்கறது காசு பணத்தால ஆனது இல்லை! நம்பிக்கை, நாணயம், குறிப்பா சொல் பிசகாத் தன்மையால ஆனது.



சொல்லுல ஒருத்தர் நின்னுட்டா அவர் வெல்வது நிச்சயம்.

ராமனைப் பத்தி சொல்லும்போது 'ஒரு பாணம், ஒரு சொல்'னு சொல்வாங்க.. தேவநாதன் திவ்யா உங்களைப் பத்தி சொல்லும்போது அப்படி சொல்லணும். இப்படி நான் சொல்றதால காசு பணமே வேண்டாம்னு சொல்றதா பொருளில்லை. அதை நிறைய சம்பாதிக்கணும். அடுத்தவங்களுக்கு கொடுக்கறதுக்காக சேத்து வைக்கறதுக்காக இல்ல! காசும் பணமும் நம்மகிட்ட மட்டும் இருந்தா அது பூமிக்கடியில இருக்கிற பயன்படாத எண்ணை மாதிரி. மத்தவங்க கிட்ட இருந்தா அதுவே ஓட்ற வண்டியில இருக்கற எண்ணை மாதிரி.

பணத்துக்கு எப்பவும் கொம்பு மொளைச்சுடக்கூடாது. முளைச்சா அவ்வளவுதான். அது பிணம். பிணம்னாலே பேயும் பிசாசும் வந்துடும். நிம்மதி போயிடும். ரொம்ப பேர் பிணத்தைத்தான் பணம்னு சொல்லி வெச்சிகிட்டிருக்காங்க. நீங்க பணத்தை பணமா வெச்சுக்குங்க..."

அவர் சொல்வது அவர்களை ஒட்டி நின்று கொண்டிருந்த பிரகாஷ் காதிலும் விழுந்தது. அவன் அதை வெகுவாக ரசித்தான். குறிப்பாக பணத்துக்கு கொம்பு முளைத்தால் பிணம் என்பதை மனதுக்குள் எழுதியே பார்த்தான். 'ப' என்கிற எழுத்தின் மேல் ஒரு கொம்புச் சுழிபோடவும் அது 'பி' ஆனது. பிணம் ஆனாலே பேயும் பிசாசும் வந்துவிடும் என்றெல்லாம் அவர் சொன்னதும் மிகப் பெரிய சிந்தனையாக அவனுக்குத் தோன்றியது.

அதேசமயம் காரணம் இல்லாமல் அவர், அவர்களுக்கு அப்படி ஒரு அட்வைசை செய்யவில்லை என்றும் அவன் உள் மனம் எண்ணியது.

❖ ❖ ❖

சேலத்தில் உள்ள தேவநாதன் வீடு!

சரேல் சரேலென்று வீட்டு வாசலில் வந்து நின்ற கார்களைப் பார்த்து தேவநாதனின் அம்மா கல்யாணியும், அக்கா வனிதாவும், தங்கை ஜெயந்தியும் மிரண்டு போயினர். அக்கம்பக்கம் கூட என்ன என்று எட்டிப் பார்த்தது. ஒரு காருக்குள் இருந்து மாலையும் கழுத்து மாய் தேவநாதனும், கூடவே திவ்யாவும் இறங்கி வர அவர்களோடு புடை சூழ இறங்கினர் பெண் வீட்டார்.

தேவநாதனின் தாயான கல்யாணிக்கு கிறுகிறுவென்று தலையைச் சுற்றிக்கெண்டு வந்தது. அவளுக்கு மேல் அவன் அக்கா வனிதாவிற்கு... இளையவள் கண்களில் மட்டும் ஒரு ஆச்சரிய அதிர்ச்சி தெரிந்தது.

'அம்மா...' -முன்னால் ஓடிச்சென்று கீழே விழப்போன அம்மாவைத் தாங்கிக்கொண்டான் தேவநாதன்.

"தேவா... என்னடா இது கோலம்?" பட்டாசு வெடித்தது போல் சத்தமாகக் கேட்டாள் வனிதா.

"அக்கா... பிரகாஷ் வரலையா? உங்ககிட்ட நடந்த விஷயத்தை எல்லாம் சொல்லலையா?" என்று எதிர் கேள்வி கேட்டான்.

அப்போது ஒரு ஆட்டோ ஒன்று அங்கே திருவிழாக் கூட்டத்து எருமை மாடு போல முண்டி அடித்துக் கொண்டு முன்னால் வந்து நின்றது. அதிலிருந்து படு வேகமாக குதித்தான் பிரகாஷ்.

"சாரிடா... நீங்க வர்றதுக்கு முந்தி உன் வீட்டுக்கு வந்து கல்யாண வீட்ல நடந்ததை சொல்லத்தான் ஓடி வந்தேன். வழியில என்னோட பஸ் நாமக்கல் கிட்ட பிரேக் டவுனாகிடுச்சு. அப்புறம் சரியாகி கிளம்பி வந்தா வழியில ஒரு ஸ்கூட்டர்காரன் என்மேல் இடிச்சிட்டான். சரியான அடி! டாக்டர்கிட்ட போய் ஊசிபோட்டுகிட்டு இப்பதான் வரமுடிஞ்சது.. ஆமா நீங்க வந்து ரொம்ப நேரமாச்சா?" -அவன் சொன்னதைக் கேட்டு தேவநாதன்



ஒரு முறை முறைத்தான். அப்படியே வீதியை ஒரு பார்வை பார்த்தான்.

"தேவா... கங்கிராஜுலேஷன்ஸ்! என்ன லவ் மேரேஜா" -என்றான் எதிர் வீட்டு வேணுகோபால்.

"என்னப்பா எங்களை எல்லாம் கூப்பிடாம விட்டுட்டியே...?"

"சரிசரி... முதல்ல உள்ள போய் பேசுங்க... அம்மாடி வனிதா ஆரத்தி எடு. முதல் முதலா வர்றவங்க ஆரத்தி எடுக்காம உள்ள போகக்கூடாது..."

ஆளுக்கு ஆள் பேசி இறுதியாக அந்த வீட்டு வாசலில் ரத்தச் சிவப்பில் ஆரத்தி நீர் தெறித்து ஓட தேவநாதனும் திவ்யாவும் உள்ளே நுழைந்தார்கள்.

கல்யாணிக்கு மனதே ஆறவில்லை. வீடு பார்த்துவிட்டு ஒரு லாரியோடு வந்து எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு புறப்படலாம் என்றவன் இப்படி மாலையும் கழுத்துமாய் வந்து நின்றால் தாங்குவாளா என்ன?

"அம்மா... என்ன நடந்ததுன்னு தெரிஞ்சா நீங்க வருத்தப்பட மாட்டீங்க. அதுக்கு பதிலா தேவநாதனை உச்சி மோந்து முத்தம்தான் கொடுப்பீங்க."

"இப்படி இவன் கல்யாண கோலத்துல வந்து நிக்க நானும் ஒரு காரணம். எங்க வீட்டு கல்யாணத்துக்கு நான், வாடாநீயும்னு கூட்டிகிட்டு போனதாலதான் அவன் புதுமாப்பிள்ளையாவே ஆயிட்டான்."

-பிரகாஷ் வேகமாக முன் வந்து கல்யாணியிடம் நடந்ததை எல்லாம் கூற ஆரம்பித்தான். அதே சமயம் சீர்பொருட்கள் வரிசையாக அந்த வீடு கொள்ளாத அளவுக்கு நிரம்ப ஆரம்பித்தது.

வரிசையாக காரில் இருந்து தட்டுத்தட்டாய் வந்து கொண்டே இருந்தது. இனிப்பும் பலகாரமும் ஒரு

வரிசை. புதிய துணிமணிகள் ஒரு வரிசை, பாத்திரம் பண்டம் ஒரு வரிசை, நகைநட்டு ஒரு வரிசை...

வரிசைகள் அதிகரிக்க அதிகரிக்க அங்கேயும் ஒரு மாற்றம் நிகழ ஆரம்பித்தது.

பெண்கள் மனதை எப்போதுமே பொன்னும் பொருளுமே ஆட்சி செய்து வந்திருக்கின்றன என்று எங்கோ யாரோ சொன்னது உண்மையாகி தேவநாதனின் அக்கா வனிதா நகைகளை கையால் எடுத்துப் பார்த்து 'இந்த மாடலோட பேர் என்ன?' எத்தனை பவுன்? என்றெல்லாம் கேட்கத் தொடங்கி விட்டாள்.

பிரகாஷும். திவ்யாவின் அப்பா அம்மாவும் நடந்து முடிந்ததை எல்லாம் சொல்லி கல்யாணியின் காலில் சாஷ்டாங்கமாக விழுந்தேவிட்டனர்.

பிறகென்ன?

கரன்ட் வந்தவுடன் இருட்டு ஓடி ஒளிந்துகொண்டு விட்டமாதிரி அந்த வீட்டினுள் புதிதாக ஒரு கலகலப்பு.

கல்யாணி, திவ்யாவை அருகே அழைத்து கன்னத்தை வருடி திருஷ்டி கழித்தாள். அப்படியே முழம் மல்லிகைச் சரத்தை எடுத்து அவள் தலையில் வைத்து தனக்கு முன் போய் சேர்ந்துவிட்ட தேவநாதனின் அப்பா ரங்கநாதனின் போட்டோவுக்கு முன்னால் கொண்டுபோய் நிறுத்தினாள்.

"கும்புட்டுக்கம்மா... இவர்தான் தேவாவோட அப்பா. உன் மாமனார். இவர் இடத்துல இருந்துதான் தேவா இப்ப இந்த குடும்பத்தை நடத்திகிட்டு இருக்கான்..." என்று எடுத்தும் கொடுத்தாள்.

அவளும் கைகளைக் குவித்து வணங்கினாள்.

பக்கத்திலேயே ஒரு குபேரயந்த்ரத்தின் படம்.

அதற்கு ஒரு மாலையும் சூட்டப்பட்டிருந்தது. அதைப் பார்த்து அவள் பார்வையில் விரிவு. புருவங்கள் வளைந்தன.



"இது குபேர யந்த்ரம்... போன வாரம்தான் திருப்பதி போன இடத்துல இருந்து ஒருத்தர் வாங்கிட்டு வந்து கொடுத்தார். அவர் இதை என் கைல கொடுக்கும் போதே பக்கத்து கோயில் மணி சப்தம் கேட்டுச்சு. அப்பவே இனிமே நமக்கு நல்ல காலம்தான்னு என் மனசு சொன்னிச்சு... அது உண்மையாயிடிச்சு. மகாலட்சுமியே என் வீட்டுக்கு மருமகளா வந்துட்டே..."

-என்றாள். பதிலுக்கு திவ்யா ஒரு கேலிச்சிரிப்பு சிரித்தாள்.

"இந்த தகடு யந்த்ரம் தாயத்து இதெல்லாம் ப்ராடு. ஐ டு நாட் பிலீவ்..." என்றாள் உதட்டைப் பிதுக்கி.

ஆனால் கல்யாணி அவளுக்கு ஒரு பதிலைச் சொல்லி காலநேரத்தை வீணாக்க விரும்பவில்லை.

"எல்லாரும் ஒரு அரைமணி நேரம் காத்திருங்க. முதல்ல ஒரு காபி, பிறகு ஏதோ என்னால முடிஞ்ச அளவுல ஒரு விருந்து. வனிதா.... ஓடுடா கண்ணு! பால் பூத்ல போய் ஒரு பத்து பாக்கெட் பால், அப்படியே நாடார் கடைல என்னவெல்லாம் காய் இருக்கோ அவ்வளவையும் வாங்கிட்டு வா..."

என்று மூத்தவளை துரிதப்படுத்தினாள்.

"அம்மா... என்ன இது? நான் எதுக்கு இருக்கேன்? வனிதா நீ போய் அம்மாவுக்கு ஒத்தாசை பண்ணு. லட்சுமி நீயும்தான். இது நம்மவீடு. நான் போய் எல்லாத்தையும் வாங்கிட்டு வரேன்..."

பிரகாஷ் சுறுசுறுப்பானான், தேவநாதனுக்கு அவனது அந்த ஈடுபாடும் அக்கறையும் மிக பிடித்துப்போனது. அது அவன் முகத்தில் பட்ட வர்த்தனமாய் தெரிந்தது!

நள்ளிரவு!

தேவநாதனின் வீட்டிலுள்ள ஒரே படுக்கையறையை வனிதாவும் லட்சுமியும் தலைகீழாக மாற்றிவிட்டிருந்

தார்கள். சுவர்களில் அங்கங்கே சின்னச் சின்ன விரி சல்கள்! அதன்மேல கலர்காகிதத்தை ஒட்டி அதற்கு மேல் ஒவ்வொரு தனி ரோஜா மலரை ஸ்டிச் செய்து ஜமாய்த்து விட்டார்கள்.

போதாததற்கு சென்ட்டும், ஊதுவத்தியும் கலந்த ஒரு வித கம்பீரமான வாசம்.

பின் நல்ல நேரம் பார்த்து இருவரையும் தள்ளி விட்டு கதவையும் தாழிட்டுக் கொண்டார்கள்.

திவ்யா அப்படி ஒன்றும் வெட்கப்பட்டுக் கொண்டு தலைகுனிந்தெல்லாம் நிற்கவில்லை. மிக கேஷுவலாக இருந்தாள். அறை முழுக்க ஒரு பார்வை பார்த்தாள். பரண்மேல் ஏகத்துக்கும் பழைய சாமான்கள். அறை மூலையில் அந்த நாளைய கண்ணாடி இல்லாத மரபீரோ ஒன்று...

அனைத்தையும் பார்த்தவள் சன்னமாய் முகம் சுழித்தவளாக "இது வாடகை வீடா... சொந்த வீடா?" என்று கேட்டாள்.

"வாடகை வீடுதான்... சொந்த வீட்டுக்கெல்லாம் எங்க போறது. அக்கா தங்கச்சின்னு இரண்டுபேர் கல்யாணத் துக்கு வேற தயாரா இருக்கும்போது..." அவன் யதார்த்த மாக பதில் சொன்னான்

அதே சமயம் அவளை விழுங்கிவிட்டது போலவே பார்த்தான்.

"என்ன சார்... இதுக்கு முந்தி பொம்பளையையே பார்த் திருக்காதவர் மாதிரி..." அவளிடம் மைன்யூட் கிண்டல்.

"ஆமாம் திவ்யா... உன் மாதிரி ஒரு பேரழகியை நான் பார்த்ததே இல்லை. உனக்கு தெரியுமா? நாம கல்யாணத்துக்கு முந்தியே சந்திச்சுகிட்டிருக்கோம்..."

"தெரியும்... அந்த சேலம் மதுரை பஸ்லதானே?"

"பரவாயில்லியே... ஞாபகம் வெச்சிருக்கியே..."



"இப்ப நான் சொல்லப்போறத நீங்க இனி மறந்துடாம ஞாபகம் வெச்சுக்கணும்..." -அவள் பெரிதாக ஏதோ சொல்லத் தயாரானாள்.

## 9

'எங்கெல்லாம் யந்த்ரம் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறதோ அங்கெல்லாம் எல்லா விதங்களிலும் வளர்ச்சிகரமான ஒரு நிலைப் பாட்டைக் காணலாம். பொதுவில் யந்த்ரம் மந்திர மாகிய சொற்களால் அதிவேகமாக தூண்டப்பட்டு இயங்குவதாகும்.

மந்திரம் என்பது இடைவிடாமல் கூறப்படும் ஒரு இடம் இன்று ஆலயங்கள் மட்டுமே.

108 சக்தி பீடங்கள் உள்ள 108 ஆலயங்களில் ஸ்ரீ யந்த்ரமும் சரி, மற்ற உபயந்த்ரங்களும் சரி இடையறாது இயங்கி பஞ்சபூதங்களை ஒரு கட்டுக் குள் வைத்துள்ளன.

ஒருபுறம் மனிதன் பஞ்ச பூதங்களை நசித்தும், கலைத்தும், அழித்தும் தனது இயக்கங்களை வளர்ச்சி என்கிற பெயரில் இயக்கியபடி உள்ளான். அவற்றிற்கு நடுவில் மீண்டும் அவை ஆக்கப்பூர்வ மாய் மனித வாழ்விற்கு பயன்படும் விதமாய் செயல்பட இந்த ஆலயத்து யந்த்ரங்களும் அவை களுக்கு நிகழும் பூசனைகளுமே காரணங்களாகும்.

இந்த யந்த்ர இயக்கம் என்பது சற்றே வாஸ்து பலத்தையும் சார்ந்து செயல்படுவது. வாஸ்துபலம் என்பது பூமி சார்ந்த ஒரு விஷயம். பஞ்ச பூதங்களில் ஒன்றான நிலத்தின் மேல் சதாசர்வ காலமும் புவி ஈர்ப்பு விசைப்பாட்டுக்கு நடுவே உள்ள மற்ற அம்சங்களான காற்று, நீர், நெருப்பு, வெளி ஆகிய

வைகளைப் பற்றிய ஞானத்தை நமக்குத் தருவதே வாஸ்து சாஸ்திரம் ஆகும்.

மனித வாழ்க்கைக்கு வரப்பிரசாதமான ஒரு விஷயம் இந்த வாஸ்து. இன்று லாட்ஜ்களில் ரூம் போட்டு போவோர் வருவோர் எல்லாம் பேசுவதால் இதை மிக மலிவாக அசட்டுக் கற்பனையாக பலரும் நினைக்கும் ஒரு நிலை உள்ளது.

ஆனால் வாஸ்து ஞானம் என்பது ஒரு அற்புதமான பஞ்சபூதம் பற்றிய விஞ்ஞான அறிவு.

பஞ்ச பூதங்கள் சமச்சீராக பழுதின்றி இயங்கும் ஒரு நிலம், கட்டடம் என்பது வாஸ்து பலம் உள்ள ஒரு இடமாகும். இங்கே யந்த்ர இயக்கங்களும் அற்புதமான பலனைத் தரும்.

வாஸ்து பலத்தோடு, யந்த்ர பலமும் தூக்கலாக உள்ள ஒரு ஆலயமும் நமது மண்ணில் உண்டு. இந்த ஆலயத்துக்கு செல்பவர்கள் தனக்கு உணவு கிடைக்கவில்லை, தண்ணீர் கிடைக்கவில்லை, தங்க இடம் கிடைக்கவில்லை, அதை வாங்கமுடியவில்லை, இதை வாங்க முடியவில்லை என்று வாழ்க்கைத் தேவைகள் பற்றியெல்லாம் குறையே பட்டுக் கொள்வதில்லை. அதற்கு அவசியமும் அவர்களுக்கு ஏற்படுவதில்லை. இத்தனைக்கும் ஆயிரம், லட்சம் என்றுதான் ஜனக் கூட்டம் இங்கே திரள்கிறது.

அப்படி ஒரு திரட்சி இந்த மண்ணில் வேறு எங்கு திரண்டாலும் எல்லாவித வியாதிகளும் வந்து அந்த இடமே அழிந்துபோய் விடும்.

ஆனால், இந்த மண்ணில் வாஸ்து பலமும், ஆலயத்து யந்த்ர பலமும் மனிதர்கள் மனதில் அங்கே ஒரு பெரும் குறையாக உருவாக்கி இருப்பது எதைத் தெரியுமா? சொன்னால் நம்பமாட்டீர்கள். ஆனால், இதுதான் உண்மை. எனக்கு 'இறை தரிசனம்' போதுமான அளவு கிடைக்கவில்லை என்பதுதான் அந்தக் குறைபாடு ஆகும். மனிதப் பிறப்பின் மேலான நோக்கமே இறைவனை அடைய



வேண்டும் என்பதே... ஆண்டி முதல் அரசன் வரை இங்கே 'அடடா... இறைவனை மனதார திவ்யமாக வணங்க முடியவில்லையே... இன்னொரு முறை வந்தாவது அவனை தரிசித்து விட வேண்டும், என்றுதான் நினைக்கின்றனர்.

அப்படி ஒரு நல்ல நினைப்பை உருவாக்கும் அந்த ஆலயம் திருப்பதி. அங்கே வாஸ்து பலமும் யந்த்ர பலமும் நல்ல நிலையில் இருப்பதே இதற்கு காரணம்! அதனாலேயே பொருள்சார்ந்த மற்ற தேவைகள் இங்கே சாதாரணமாகி விட்டன.

திவ்யாவின் பீடிகையைத் தொடர்ந்து அவளை சற்று ஆச்சரியத்துடனும், பயத்துடனும் பார்த்தான் தேவநாதன்.

இவள் இப்போது எதையெல்லாம் ஞாபகம் வைத்துக் கொள்ள சொல்லப் போகிறாளோ தெரியவில்லையே? அவன் மனதில் தந்திக்கம்பி போல சற்றே மெல்லிய நடுக்கம்.

பலரது முதல் இரவுகள் மனம்விட்டு பேசுகிறேன் என்கிற பெயரில் கொள்ளிக் கட்டையை எடுத்து தலையில் செருகிக் கொண்ட மாதிரியான ஒரு அனுபவத்தைத் தான் உருவாக்கியிருக்கின்றன.

இங்கே இவளிடமும் அப்படி ஏதாவது நடக்கப் போகிறதா...? தான் காதலித்த யாரைப் பற்றியாவது கூறி அதிர்ச்சி தரப்போகிறாளா?

தேவநாதன் மனதுக்குள் கேள்விகள் குதித்து எழும்ப மனதும் படபடத்தது.

அவளோ அவனது அந்த பதட்டத்தையோ பயத்தையோ துளியும் லட்சியம் செய்யாமல் வாயைத் திறந்தாள்.

"இதோ பாருங்க... நான் உங்களை அத்தான் ஆட்டுக்குட்டின்னுல்லாம் கூப்பிட மாட்டேன். நீங்க என்னை திவ்யான்னு கூப்பிட்ற மாதிரியே, நானும் தேவான்னு

உங்களை பேர் சொல்லித்தான் கூப்பிடுவேன். அப்புறம் கூட்டுக் குடும்பம், ஒன்றுபட்ட வாழ்க்கை இதுல எல்லாம் எனக்கு நம்பிக்கை கிடையாது." -அவள் அழுத்தமாக பேச ஆரம்பித்துவிட்டாள்.

"ஆகையால நாம தனியா வாழறதுதான் நமக்கு எல்லா வகைலையும் நல்லது. உங்க அம்மா, அக்கா, தங்கையை என்ன பண்றதுன்னு நீங்க கேட்கலாம்.

அவங்கல்லாம் நீங்க அவங்க கூட பிறக்கலைன்னா என்ன செய்திருப்பாங்களாம்? ஆகையால அவங்க இப்ப இருக்கற மாதிரியே இதே வீட்ல இங்கையே இந்த சேலத் துலயே இருந்துடட்டும்.

இந்த காலத்துல பெண்கள் வேலைக்குப் போய் ஆண்களுக்கும் மேலையே சம்பாதிக்கிறாங்க. ஆகையால உங்க அக்காவும், தங்கையும் வேலைக்குப் போகட்டும். அவங்க கல்யாணத்துக்கு பிறகும்கூட உங்கம்மா மூணு பேர் வீட்லையும்தான் இருக்கணும். பையன்கிட்ட அம்மா, இருக்கறதுதான் முறைன்னு நம்மளோட மட்டுமே டேரா போட்றது எனக்குப் பிடிக்காது.

ரொம்ப முக்கியமான விஷயம் உங்க சம்பளம்! அது இப்ப பத்தாயிரமா இருந்தா அடுத்த வருஷம் பதினைஞ்சு, அதுக்கு அடுத்த வருஷம் இருபதுன்னு உயர்ந்தே தீரணும். உயர்ந்துகிட்டே போகணும். இல் லேன்னா உங்களை பிழைக்கத் தெரியாத, சம்பாதிக்க தெரியாத ஒரு சோப்ளாங்கியாதான் நான் நினைப்பேன்.

என் லட்சியம் என்ன தெரியுமா?

ஸ்விஸ் பேங்க்ல அக்கவுண்ட் ஓபன் பண்ணனும். அதுக்கு எவ்வளவு சம்பாதிக்கணுமோ அதை நீங்க சம்பாதிச்சே தீரணும்..."

மூச்சு விடாமல் பேசிய திவ்யா நடுவில் ஒரு சிறிய இடைவெளி விட்டவளாக பக்கத்துபால் சொம்பை



எடுத்து கொஞ்சம் போல வாய் முன்னால் கவிழ்த்து பருகினாள்.

தேவநாதன் ஸ்தம்பித்திருந்தான்.

அவனுக்கு நடந்து கொண்டிருப்பது முதல் இரவாகத் தெரியவில்லை. முதல் வழக்கு மேடை போலத் தோன்றி யது. அவனை ஆக்ரமித்திருந்த அவளது அழகும் பர்சனாலிடியும் இப்போது மெழுகாய் கரைந்து திட்டுத் திட்டாக எதற்கும் பயனின்றி தேங்கிவிட்டது போல பிரமை தட்டிற்று.

அந்த நொடி நிஜமாலுமே அவனுக்கென உள்ள மாமன்மகள் பூங்கொடியின் ஞாபகமும் வராமல் போகவில்லை.

அவள் அட்டைக் கறுப்பு! தலைமுடியும் ஒரு எலிவால் அளவுக்குத்தான். அவளுக்கு கல்யாணம் நடப்பது என்பது குதிரைக்கு கொம்பு முளைக்கிற மாதிரி ஒரு அசாதாரண விஷயம் என்றே பேசிக் கொண்டார்கள்.

இதனால் தேவநாதனின் மாமா அவள் பெயரில் தனது சொத்து முழுவதையும் எழுதி வைத்து அவளுக்கு எப்படியாவது மணம் செய்ய முயன்றார். சொந்தத்து உறவு என்று தேவநாதனிடமும் கேட்டார். தேவா பிடியே கொடுக்கவில்லை. பூங்கொடியும் வெட்கத்தை விட்டு அவனிடம் தன் ஆசையை சொல்லிப் பார்த்தாள். ஊஹூம் பலனேயில்லை. இறுதியில் ஒரு வயதான வருக்கு இரண்டாம் தாரமாகத்தான் அவள் ஆக நேர்ந்தது.

ஆனாலும் பூங்கொடி அதற்காகத் தளர்ந்துவிட வில்லை. அவரை தாங்கு தாங்கு என்று தாங்கி அந்த குடும்பத்தையும் இன்று தன் தோளில் சுமந்து தன் கணவரின் மூத்ததாரத்து மகளுக்கு திருமணமும் செய்து வைத்து...!

தேவநாதன் அமைதியாக கறுப்புப் பூங்கொடியையும், வெள்ளை திவ்யாவையும் மனத்திரையில் ஓட்டிப்பார்த்து பெருமூச்சுவிட ஆரம்பித்தான்.

முதல் இரவுக்கே உண்டான அந்த அந்தரங்கமான ஆசைகள், அதன் தொடர்பான உஷ்ணங்கள் எல்லாம் அப்படியே அவிந்து அடங்கியிருந்தது.

திவ்யாவும் அவனை சில நிமிடங்கள் வரை வெறித்து விட்டு "என்னடா முதல் நாளே இந்த போடு போட்றாளே... இவளோட எப்படி குடுத்தனம் நடத்தறதுன்னு யோசிக்கிறீங்களா தேவா...?"

-என்று கச்சிதமாக கேட்டாள்.

"எக்சாக்ட்லி..."

"நோ பிராப்ளம். நான் ஒரு பெக்கூலியர் கேரக்டர். எதுலையும் வெளிப்படையானவ. நான் இப்படி பேசிட்டதுக்காக வருத்தமெல்லாம் படலை... நீங்க நல்லா யோசிச்சுக்குங்க. இந்த இடத்துல கமலஹாசனே இருந்தாலும் நான் இப்படித்தான் பேசி இருப்பேன். வாழ்க்கையில தெளிவான சிந்தனைகள் முக்கியம். செக்செல்லாம் எனக்கு இரண்டாம்பட்சம்தான்."

தேவநாதனுக்குள் அவளது ஒவ்வொரு வார்த்தையும் திராவகச் சொட்டுபோலத்தான் சிந்தியது.

❖ ❖ ❖

அதற்கு மேல் அவனது அக்கா வனிதாவுக்குள்! அந்த அறைக்கு வெளியே சுவற்றை ஒட்டிப் படுத்திருந்த அவள் காதில் திவ்யா பேசிய அவ்வளவும் விழுந்திருந்தது.

படுப்பதற்கு முன்பு வரை தன் தம்பி தேவநாதனுக்கு திருமணம்தான் நடந்திருப்பதாக நினைத்துக் கொண்டிருந்தாள்.



இப்போது அது அப்படியே மாறிப்போய் அவன் விலை போய்விட்டது போல ஒரு நெருடல். கட்டில் சப்தம் கேட்கப் போகிறது. நம்முடைய வாழ்க்கையிலும் அப்படி ஒரு சப்தம் கேட்கும் என்று கற்பனையில் இருந்தவளுக்கு வயிற்றைப் பிசைந்தது.

கடவுளே இது எதில் போய் முடியுமோ தெரியவில்லையே...?

அவள் விழியோரமாக கண்ணீர் துளிர்த்துவிட்டது.

❖ ❖ ❖

*சக்தி இல்லம்!*

ஒரு பெரிய மாளிகையான அந்த வீட்டுத் தோட்டத்தில் விதவிதமான பூச்செடிகள். எல்லாவற்றுக்கும் தன் கையாலேயே தண்ணீர் விட்டுக் கொண்டிருந்தார் சச்சிதானந்தம் என்கிற அந்த சக்தி உபாசகர். செடிகளிடம் நல்ல தழைப்பு.

அப்போது யாரோ ஒருவர் அவரைப் பார்க்க வந்தார்.

"என்னங்க சாமி... நீங்கபோய் ஒரு தோட்டக்காரன் மாதிரி வேலை பார்த்துகிட்டு..." என்று ஆரம்பித்தார்.

அவர் பதிலுக்கு சிரித்து விட்டு வாயைத் திறந்தார்.

"வாழ்க்கைல ராஜாவா, மந்திரியா இருக்கறதைவிட பெரிய விஷயம்யா தோட்டக்காரனா இருக்கறது.. அது தெரியுமா உனக்கு?" என்று அவரைப் பார்த்து எதிர் கேள்வி கேட்டார்.

அவரிடம் விழிப்பு.

"தோட்டக்காரனை மட்டுமில்ல... சமையல்காரனா இருக்கறதும் ரொம்ப பெரிய விஷயம். தோட்டக்காரனா இருந்து செடி கொடிகளுக்கு தண்ணீர் விட்டா அது தழைச்சு வளரும். அப்படி அது தழைச்சா மழை மேகம்

திரண்டு வந்து மழை பெய்யும். மழைங்கறது மகாதேவ னோட பரிசு. ஆனா அதை பூமிக்கு ஒரு தோட்டக்காரன் சுலபமா வாங்கித்தர்றான். அப்ப அவன் யாரு... அவனும் ஒரு மகாதேவன்தானே?"

சமையல்காரனும் அப்படித்தான்...!

"போதும் போதும்னு ஒரு மனுஷன் சாப்பிட்ற இலைல மட்டும்தான் சொல்வான். வாய்க்கு ருசியா சாப் பிட்றவன் சே... வாழ்க்கைங்கறது எவ்வளவு இனிமை யான விஷயம்ப்பான்னு நினைப்பான். மனசார வாழ்த்து வான்.

வேற எந்த பணியாளனும் இப்படி ஒரு திருப்தியை உருவாக்கித் தந்து வாழ்த்தை பரிசா வாங்கிக்க முடியாது..."

-அவர் சூட்சமமான விஷயங்களாகப் பேசியபோது மாடியில் யாரோ குதித்து ஆடுவது போல சலங்கை சப்தம்.

வந்தவர் பார்வை ஆச்சரியமாக மாடிப்பக்கம் திரும்பியது...!

## 10

'பெண்ணும் மண்ணும் ஒண்ணு' என்பார்கள். அது எப்படி என்று சிந்தித்தால் ஆச்சரியங்கள் அணி வகுக்கின்றன.

நிலமாகிய மண் இல்லையேல் நமக்கு வாழ்க் கையே இல்லை. அந்த மண்மேல்தான் வீடு கட்டி வாழ்கிறோம். விதை விதைத்து பயிர் செய்கிறோம். இருக்க இடமோ உண்ண உணவோ இல்லா விட்டால் உயிர்வாழ முடியுமா?



பெண் இல்லாவிட்டாலும் நமக்கு வாழ்க்கை யில்லை. ஒவ்வொரு மனிதனும் தாய்ப் பாசத்தை தளமாக கொண்டே அன்பு என்றால் என்ன என்று அறிகிறான். பெண்ணாகிய தாய்தான் மலம், மூத்தி ரம் வரை ஒருவனை சகிக்க முடிந்தவள். மற்றவர்கள் பொறுமையிழந்து முகம் சுளித்து விடுவார்கள். தாய்க்குப் பிறகு அந்த இடத்தை நிரப்ப மனைவி என்பவளால் மட்டும்தான் முடிகறிது. இங்கேயும் மலம், மூத்திரம் வரை தொட்டுத் தாங்கும் சக்தி அவளிடமே இருக்கிறது.

மொத்தமாய் மனித சமூகம் பெண்களிடம்தான் எதையும் ஒப்படைக்கிறது. அவளே சிறந்த காவல் காரி, அவளே தாங்க முடிந்தவள் என்பதால்தான்! இதில் வக்ரமான ஒரு பகுதியும் உண்டு. அதுதான் அவர்களை அடிமைகளாய் கருதி ஆட்டுவிப்பது என்பது...

உண்மையில் நிலைப்பாடு என்ன தெரியுமா? பெண் என்னும் மகாசக்தி தன்னை பாதுகாத்துக் கொள்ளவே உடல் வலிவுள்ள ஆணினத்தைப் படைத்தது.

ஒரு ஆணின் அர்த்தமுள்ள கடமை என்பது பெண் சக்தியை வணங்குவது, பாதுகாப்பது. அவ ளிடம் தன்னை ஒப்படைத்துவிட்டு அவளுக்காகவே வாழ்வது என்பதில்தான் இருக்கிறது.

இப்படிச் செய்யும்போது மண்ணைப் போலவே பெண்ணும் கேட்டதை எல்லாம் தருபவள் ஆகிறாள்.

ஒரு விதை மண்ணுக்குள் விழுந்தால் போதும்... அது வளர்ந்து ஆயிரம் விதைகளை பதிலுக்கு தருகிறது.

பெண்ணும் அப்படித்தான். ஒரு துளி உயிர்த் துளியை வாங்கிக்கொண்டு பதிலுக்கு கண், காது, மூக்கு கொண்ட முகத்துடன் ஒன்னரை முழத் திற்கு, ஒரு உயிர்ப் பதுமையையே அவள் தந்து விடுகிறாள்.

இங்கேயே அவள் சக்திக்கு அர்த்தம் விளங்கி விடுகிறது. நாமெல்லாம் கூட சக்தியின் ஒரு அங்கம்தான். ஒரு தாய் எனும் நிலமிசை அவளது சக்தியால்தான் நீர்த்துளியாக இருந்த நாம் திட சொரூபிகளாக மனம் என்கிற ஒன்றைப் பெற்று உலகை தரிசிக்கின்றவர்களாக இருக்கிறோம்.

ஆண் சக்தி எப்போதும் பயன் படத்தான் முடியும்.

பெண் சக்தியே ஆண் சக்தியை பயன்படுத்தி எதையும் ஆக்கவல்லது. இதை மொழியாகிய சொற்களால் சொல்லாமல் உலகின் அனைத்து மக்களுக்கும் பொதுவான ஒரு மொழியான வரிவடிவில் சொல்வதுதான் ஸ்ரீ யந்த்ரம்!

ஸ்ரீ யந்த்ரத்துக்குள் நுழைய நிறைய திராணி வேண்டும். நுழைய முயல்வோமா?

❖ ❖ ❖

மாடியில் கேட்ட அந்த சப்தம் மெல்ல அதிகமாகிக் கொண்டே போனது! யாரோ ஜதி சொல்வது போலவும் அதற்கேற்ப யாரோ சலங்கை கட்டிக்கொண்டு ஆடுவது போலவும் கூடத் தோன்றியது.

அதைக் கேட்ட அந்த நபரின் முகத்தில் ஒருவித ஆச்சரியம். அவர் முகத்தில் ஆச்சரியம் பரவுவது உபாசகராகிய சச்சிதானந்தத்திற்கும் புரிந்துவிட்டது.

"அம்மாடி... கொஞ்சம் சும்மா இருக்கியா... இங்க நான் ஒருத்தரோட பேசிகிட்டிருக்கேம்மா..." என்று அவர் உடனே பதில் குரல் கொடுக்க அடுத்த நொடியே சப்தம் அடங்கியது.

அதை உணர்ந்த அந்த மனிதர் மேலும் ஆச்சரியமடைந்தார்.



"சாமி... இந்த வீட்ல நீங்கமட்டும்தான் இருக்கறதா நினைச்சேன்... மாடில யாரு...?"

"அது... அது..."

"என்ன சாமி தயங்கறீங்க. நான் தெரிஞ்சுக்கக் கூடாதுன்னா விட்ருங்க..."

"ஆமாம்... நீங்க தெரிஞ்சுக்க வேண்டாம். நானும் பொய் பேச விரும்பலை. உண்மை மட்டும் பேசறதுங்கற விரதத்துல இருக்கேன்..." என்று பதிலுக்கு சச்சிதானந்தம் சொல்லவும் கேட்டவர் முகம் அறைபட்டது போல ஆகிவிட்டது.

திரும்பத் திரும்ப மாடிப் பக்கம் பார்த்தார்.

சட்டென்று ஒரு படு கலகலப்பான சிரிப்பொலி சப்தம் கேட்டது. பெரிய சபை ஒன்றில் பலரைப் பார்த்து ஒரு பெண் சிரிக்கிறாற்போல் இருந்தது அந்தச் சிரிப்பு.

நிச்சயம் எந்த ஆண் அந்த சிரிப்பை எதிர்கொண்டாலும் சிதறிப் போவான். அப்படி ஒரு சிரிப்பு.

சச்சிதானந்தம் முகத்தில் மீண்டும் ஒருவித சிக்கலான உணர்வுகளின் பரவல். வந்தவர் புரிந்தது போல.

"அப்ப நான் உத்தரவு வாங்கிக்கறேன். பிறகு சந்திக்கிறேன்" என்று கிளம்ப முயன்றார்.

"நல்லது... கிளம்புங்க!" சச்சிதானந்தமும் அவரைத் துரிதப்படுத்தி அனுப்பிவிட்டு படுவேகமாக மாடிப் படியில் ஏற ஆரம்பித்தார்.

ஏறும்போது அவரிடம் ஒருவிதமான புலம்பல்.

"ஏம்மா இப்படி என்னை சோதிக்கறே... இதுல உனக்கு ஒரு ஆனந்தமா...?"

❖ ❖ ❖

சமையல் கட்டுப்பக்கம் எட்டிப் பார்த்தாள் திவ்யா. சுமாரான சமையல் கட்டு. வெள்ளை கண்டு பல வருடம் ஆகிவிட்டது போல உள்ளே புகை படிந்த கருமை. மிக சன்னமான குண்டு கோலி பல்ப் வெளிச்சம். அதன் மேலும் பொரிப்பொரியாய் பறக்கும் பூச்சிகளின் கழிவுப் புள்ளிகள்.

திவ்யா முகம் கோணலாக சுழிய, அரிசி களைந்தபடி இருந்த வனிதா பதிலுக்கு அவளைப் பார்த்து சிரித்தாள்.

முதல் நாள் இரவில் அவள் தேவநாதனிடம் பேசியது மனதுக்குள் எட்டிப் பார்த்தது. ஆனாலும் காட்டிக் கொள் ளாமல் ஒருவித செயற்கைச் சிரிப்போடு திவ்யாவை உள்ளே அழைத்தாள்.

திவ்யாவும் உள்ளே நுழைந்தாள். ஏதோ வழிதெரியாத இடத்தில் மாட்டிக் கொண்டது போல சுற்றிச் சுற்றிப் பார்த்தாள்.

"என்ன திவ்யா பாக்கறே... எங்கவீட்டு சமையலறை உனக்குப் பிடிக்கலையா?"

"இல்ல... ரொம்ப இருட்டா இருக்கேன்னு பாக்கறேன்"

"உங்க வீட்ல நல்லா பெருசா இருக்குமா?"

"ஆமாம்... இதைப்போல் நாலஞ்சு மடங்கு பெருசு. மார்பிள்ல மேடை, சுவரெல்லாம் டைல்ஸ், எவர்சில்வர் ஜிங்க், நல்ல தண்ணிக்கு ஒரு குழாய், உப்பு தண்ணிக்கு ஒரு குழாய்..."

-அடுக்கினாள் திவ்யா.

"கவலைப்படாதே... மதுரைல நீங்க குடிபோகப் போற வீடு கூட பெருசுதான். அரண்மனை மாதிரின்னான் தேவா..."

-வனிதா எடுத்துக் கொடுத்தாள்.

திவ்யாவுக்குள் ஆச்சரியம்.



"அவர் வீடு பார்த்துட்டாரா?"

"போன வாரமே பார்த்துட்டான். அதாவது உங்க கல்யாணத்துக்கு முந்தியே..."

"என்கிட்ட அவர் சொல்லவேயில்லையே..."

"மெல்லச் சொல்லலாம்னு நினைச்சிருப்பான்..."

அதைக்கேட்டு சமாதானமடையாமல் லேசாக குமைய ஆரம்பித்தது திவ்யாவின் மனது.

"என்ன யோசிக்கறே... உனக்கு ஒரு பிளசண்ட் சர்ப் ரைசா இருக்கட்டும்னு கூட சொல்லாம இருந்துருக்க லாம். நல்லா பெரிய வீடாம். வாடகையை கேட்டா மயக்கம் போட்டுருவே..."

"என்ன ஒரு அஞ்சாயிரம் இருக்குமா?"

"இல்லை... உன்னால சரியா சொல்ல முடியாது..."

"பத்தாயிரம்..."

"அதுதான் அவன் சம்பளம். அதை தூக்கி வாடகைக் குக் கொடுத்தா சாப்பிட்றது எப்படி?"

"எவ்ளோ நீங்களே சொல்லிடுங்க..."

"அடநீதான் கொஞ்சம் யோசியேன்..."

"ஐ ஆம் சாரி... இதெல்லாம் அல்ப விஷயம். இதுக்கு அலட்டிக்கறது எனக்கு பிடிக்கலை."

-அவள் சினமாகத் தொடங்கிவிட்டதை வனிதாவும் உணர்ந்தவளாக "வெறும் நூத்தி எட்டு ரூபாதான்..." என்றாள்.

திவ்யா முகம் அடுத்த நொடி அஷ்ட கோணலாகியது.

"வாட்... வெறும் நூத்தி எட்டு ரூபாயா...? ஏதோ அரண்மனை மாதிரின்னுல்லாம் சொன்னீங்க..."

"அவன் சொன்னதைத்தான் நான் சொன்னேன். பெரிய வீடுக்கா... நீங்கள்லாம் தனித்தனியா ஒரு ரூம்ல

இருந்துக்கலாம். நல்ல பிரைவசி கிடைக்கும்னு எல்லாம் சொன்னான்."

"ஐ.சீ... ஆமா எப்ப ஷிப்ட் பண்றதா உத்தேசம்?"

"அது எங்க கைல இல்லம்மா... உன் கைலதான் இருக்கு..."

"என் கைலையா?"

"ஆமாம்... நீதானே அங்க இனி வாழப்போறே?"

"அப்ப நீங்க எல்லாம்..."

"நாங்க எதுக்கு... அவன் தனியா கஷ்டப்படுவானே, நாங்க இருந்தா நல்லதாச்சேன்னுதான் அப்ப மதுரை வர சம்மதிச்சோம். இப்பதான் நீ வந்துட்டியே..."

-வனிதா அவளுக்கு பிடித்த விதத்தில் பேசினாள்.

திவ்யாவுக்கும் மனது மிக லேசான மாதிரி இருந்தது. அதே சமயம் "நீங்க இங்க எப்படி தனியா இருப்பீங்க. யார் உங்களை பார்த்துப்பா?" என்ற கேள்விகள் எல்லாம் தோன்றினாலும் ஏனோ அவளால் அவைகளைக் கேட்க முடியவில்லை.

ஒருவேளை கேட்டதுதான் சாக்கு என்று நாங்களும் வந்துவிடுகிறோம் என்றால் என்ன செய்வது என்ற பயம் அவள் நெஞ்சுக் கூட்டில் இருப்பது வனிதாவுக்கும் புரிந்தது.

மெல்ல உள்ளே நுழைந்திருந்த அம்மா கல்யாணி காதிலும் கூட வனிதா பேச்சு விழுந்தது. அம்மாவிடம் முன்பே வனிதா அந்த முதல் இரவு பேச்சைக் கூறி விட்டதால் அவள் முகத்திலும் சுரத்தில்லை.

"அம்மா... தேவா இனி உன் மகன் இல்லை. எனக்கும் தம்பி இல்லை. அவனை காலம் ஒருத்திகிட்ட வித்துடிச்சு. அவனை திரும்ப வாங்க உன்னாலையும் முடியாது. என்னாலையும் முடியாது. நாம முயற்சி செஞ்சா ரசா



பாசம்தான் மிஞ்சும். தேவாவாவது இனி கஷ்டப்படாம நல்லா இருக்கட்டும்."

-என்று ஒரு சில கண்ணீர்த் துளிகளோடு அவள் கூறியது கல்யாணிக்குள் எதிரொலித்தது-

அவளை அந்த அறைக்குள் பார்க்கவும் திவ்யாவிடமும் கொஞ்சம் போல ஒருவித போலி மரியாதை.

"அய்யரைத்தான் போய் பார்த்துட்டு வரேன்... நாளைக்கு நாள் நல்லா இருக்குதாம். விட்டா அதுக்கப் புறம் பதினைஞ்சு இருபது நாள் கழிச்சுதான் நல்லநாள் வருது. ஆகையால நாளைக்கே மதுரைல அந்த புது வீட்ல பால் காச்சிடலாம்ன்னாரு..."

கல்யாணி சுரத்தில்லாத குரலில் சொல்லச் சொல்ல திவ்யா முகம் பளிச்சென்று மாறியது.

"அப்படின்னா இன்னிக்கேல்ல நானும் அவரும் மதுரைக்கு கிளம்பணும்..." -திருப்பிக் கேட்டாள்.

"ஆமாம்மா... அதுக்குதான் அவனும் டிக்கெட் வாங்கிட்டு வர போயிருக்கான். புதுசா சென்னை- நாகர் கோயிலுக்கு ஒரு ரயில் விட்டிருக்காங்களாமே அதுல போயிடப் போறதா சொன்னான்..."

கல்யாணியின் அந்த பதிலும் அவள் முகத்தில் சலனத்தை உருவாக்கியது.

"இப்படி ஊருக்குப் போவதைப் பற்றி முடிவெடுத்த விஷயத்தைக் கூடதன்னிடம் சொல்லவில்லையே அவன்!" என்கிற பொசசிவ் பாய்ன்ட்டில் போய்ப் போய் மனது முட்டிக் கொண்டு நின்றது.

❖ ❖ ❖

ஒரு பெரிய சூட்கேஸ், ஒரு படுக்கை, ஒரு ஜோல்னா பை! அதில் ஒரு விசிறி, சில புத்தகங்கள், தண்ணீர்

பாட்டில் என்று ஊருக்குப் புறப்பட தயாராகிவிட்ட ஒரு தோற்றம்.

மாடிப்படியில், இருந்து இப்படித்தான் இறங்கினார் சச்சிதானந்தம். கீழ்வரை வந்தவர் திரும்பி மேலே பார்த்தார்.

"அவன் அங்க கிளம்பி வந்துகிட்டிருக்கான்... இன்னும் ஒரு பத்து நிமிஷத்துல வந்துடுவான். இனி அவன்தான் இந்த வீட்டு எஜமான். ஜாக்கிரதையா பார்த்துக்கோம்மா. உனக்கு அவனால எந்த தொந்தரவும் இருக்காது. மாடியே ஏறக்கூடாதுன்னு சொல்லியிருக்கேன். நல்லபய! ஏறமாட்டான். நானும் நல்லவிதமா காசி, கயான்னு போய்ட்டுவரேன். வைஷ்ணவ தேவி மலைக் கோயில்ல உன்னையும் பாக்கறேன்..."

-என்று மாடியில் யாரோ இருப்பது போலவும் அவரிடம் பேசிவிட்டு திரும்பினார். திரும்பின நொடி வெளியே ஆட்டோ ஒன்று வந்து நிற்கும் சப்தம். பார்த்தார்! திவ்யாவும் தேவநாதனும் இறங்கிக் கொண்டிருந்தனர்!

## 11

ஸ்ரீ யந்த்ரம் பற்றி அறியப் புகுமுன் மனித சக்தியின் உச்சத்தையும், எச்சத்தையும் பற்றி தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். அப்படியே உலகம், உயிர்கள், கோள்கள் என்று ஒரு சுற்றுப் பார்த்து விடுவதும் நல்லது.

இதெல்லாம் எதற்கு என்கிற கேள்வி எழும்பலாம். பொதுவில் எழுதவும் படிக்கவும் அரிச்சுவடியாவது அறிந்திருக்க வேண்டும். அதுவும் தெரியாத பட்சத்தில் எழுத்துக்கள் என்பது பார்க்கும் கண்களுக்கு வளைகோடுகளாக மட்டுமே தெரியும்.



அடுத்து எழுதப்படிக்கத் தெரிந்திருந்தாலும் எல்லாரும் எல்லாவிதமான சப்ஜெக்டுகளையும் தெரிந்து வைத்திருப்பதில்லை. அது சாத்தியமுமில்லை. ஒருவர் ஆடிட்டராக கணிதத்தில் சிறந்து விளங்குகிறார். ஒருவர் எழுத்தாளராக சரித்திரத்தில் சிறந்து விளங்குகிறார். நமக்கு தெரியாததை அது யாருக்குத் தெரியுமோ அவரிடம் சென்று கேட்டு அறிந்து கொள்கிறோம். இதுதான் நடைமுறை சாத்யம். இதை மனதில் கொண்டு ஆன்மீகக் கல்வியின் பக்கம் வருவோம்.

ஆன்மீகக் கல்வியில் கணிதம், விஞ்ஞானம், வரலாறு என்று மூன்றையும் ஒரு வடிவாக்கிக் கொண்டு காட்சி தருவதுதான் ஸ்ரீ யந்த்ரம்! எப்படி என்பது போகப்போக விளங்கும். முன்பே விளக்கியது போல இதைப் பார்த்த மாத்திரத்தில், இதற்குண்டான மந்த்ரங்களை நாம் உச்சரிக்கத் தொடங்கி அதனால் நாம் இயங்கு கருவியாகி விடுவோம் என்பதுதான் இதில் உள்ள விந்தை!

அது ஒரு ஜடமாக தாளில் வரையப்பட்டிருக்கும் ஒரு படமாக (அ) அந்தப் படத்தின் முப்பரிமாண வடிவாக மட்டுமே நம்முன் இருக்கும். அந்த வகையில் பார்த்தால் அது நம்மை இயக்கத் தொடங்கி விடுவதால் நாம் இயக்கப் பொருளாகிறோம் என்பது எத்தனை விந்தை?

அதாவது ஸ்ரீ யந்த்ரமாக நாமே மாறி நம்முள் இயக்க வினைகள் தொடங்குகின்றன. அதாவது நாம் ஸ்ரீ யந்த்ரமாவதால் நாம் அந்த ஸ்ரீயாக அதாவது மாதா லலிதா வாழும் சக்திக் கோட்டையாகிறோம்.

கோட்டை என்று வந்தாலே அடுக்குகள், மாடங்கள், கொத்தளங்கள், அங்கே காவல் இருப்பவர்கள் என்று ஒரு வரிசை வந்துவிடும்.

நாமே மாதா லலிதாவாக, அவள் வாழும் கோட்டையாக மாறும்போது மற்றவை யாவும் நம்முள்

வந்து விடுகிறது என்பது ஏதோ ஒரு கற்பனை அல்ல. அது ஒரு பிரம்மாண்ட நிஜம்.

இந்த உடம்பை வெறும் எலும்பும் சதையும் ரத்தமுமாக மட்டுமே பார்த்தால் கற்பனையாகத்தான் தோன்றும்.

திருமூலர் சொன்னதுபோல உள்ளம் கோயில். இந்த ஊனுடம்பு ஆலயம். இந்த உலகில் மனிதன் இன்று எவ்வளவோ எந்திரங்களை எல்லாம் கண்டுபிடித்து அதை இயக்கிக் கொண்டிருக்கிறான். ஆனால், எந்திரங்களுக்கெல்லாம் எந்திரம் என்றும், எந்திரங்களின் தாய் என்றும் இந்த உடம்பைத்தான் சொல்லாம்.

இன்னொரு ஆச்சரியம். மனிதனின் கண்டு பிடிப்பான எந்திரங்கள் அவன் எப்படிக் கண்டுபிடித் தானோ அப்படியேதான் இருக்கின்றன. சொல்லப் போனால் தேய்ந்து அழியவும் செய்கின்றன.

ஆனால், இந்த உடல் என்னும் எந்திரம் ஒரு வளரும் அதிசயம். ஒரு பாமரன் கூட தன் உடல் இயக்கம் பற்றி சிந்தித்தால் பிரமிப்பில் ஆழ்ந்து விடுவான்.

விஞ்ஞானத்தை பெரிய ஞானமாக கட்டிக் கொண்டு அழுபவர்கள் கூட ஒரு சொட்டு திரவத் தில் உருவாகி வளரும் மனித உடல் எனும் எந்திரம் பற்றி சிந்தித்தால் பிரமிப்பில் புதைந்து போய்த்தான் தீர வேண்டும்.

எல்லாதவித இன்ஜினியரிங் அறிவும், டிசைன் களும் உடம்புக்குள்ளேயே இருக்கின்றன.

உடம்புதான் உலகுக்கு சிவில் இன்ஜினியரிங் கையும், மெக்கானிகல் இன்ஜினியரிங்கையும் தானமாக வழங்கியது.

ஆச்சரியமாக உள்ளதா?



இவைகள் பற்றி சிந்திக்காமல், இந்த வியப்பில் விழாமல் ஸ்ரீ யந்த்ரம் பக்கம் செல்ல முடியாது. அதனாலேயே இத்தனை நீண்ட விளக்கம்!

❖ ❖ ❖

வாசலில் தேங்கிய ஆட்டோவில் இருந்து இறங்கிய தேவநாதனையும் திவ்யாவையும் பார்த்த நொடி சச்சிதானந்தருக்குள்ளும் ஒரு சின்ன சிலிர்ப்பு. மாடிப் பக்கமாக கழுத்தை உயர்த்திப் பார்த்தவராக "நீ எனக்குள்ள இருந்து சொன்னது போலவே அவங்க வந்தாச்சு. நானும் சாவியை ஒப்படைச்சுட்டு கிளம்ப வேண்டியதுதான்..." என்றார்.

உள்ளே ஒருவித பிரமிப்போடு நுழைந்து கொண் டிருந்த திவ்யா அவர் மாடியில் இருக்கும் யாரோ ஒருவருடன் தான் பேசுவதாக. நினைத்தாள். அதே வேகத் தில் "தேவா... வீட்ல இவர் மட்டும்தான் இருக்கறதா சொன்னீங்க... வேற யாரோ இருக்கறமாதிரி தெரியுதே..." என்றாள்.

"தெரியாது. அவர் சொன்னதைத்தான் நான் சொன் னேன்..." - என்று கிசுகிசுத்தவன் அவளோடு அவரை சமீபித்தான்.

அவரிடமும் ஒரு தீர்க்கமான ஊடுருவல்.

"நமஸ்காரம் சாமி..."

"ஆசீர்வாதம்ப்பா..." அப்படியே அவர் பார்வை மற்றவர்கள் எங்கே என்கிற மாதிரி பின்னால் பார்த்தது.

"நாங்க இரண்டு பேர் மட்டும்தான் சாமி வந்துருக் கோம். சாமான்லாம் நிறைய இருக்கு. மெல்ல வரும். திவ்யா முதல்ல வீட்டை பாத்துட்றேன்னா..." தேவநாதன், மிடறு விழுங்கினான்.

"அப்ப உன் வரைல இது வீடா...?" -அவர் இரட்டைப் பொருள் பட கேட்டதில் ஏராளமான உட்பொருள்.

அவளோ அவரை வணங்குவதோ நலம் விசாரிப்பதோ எதுவும் பெரிதில்லை என்பதுபோல் அந்த மாளிகை போன்ற வீட்டின் உட்பாகங்களையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் கண்களில் பிரமிப்பின் வழிசல். அந்த நொடியே அவள் ஒரு ஆசைகளின் பிரதிநிதி என்பது அவருக்கும் புரிந்துவிட்டது.

"என்ன திவ்யா வீடு எப்படி இருக்கு?" அவன்தான் கேட்டான்.

"என்ன தேவா... இது வீடா? மாளிகை! நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கலை. ஒரு சாணிபோட்டு மெழுகின ஓட்டு வீட்டுக்குத்தான் இழுத்துகிட்டு வந்து காட்டப் போறீங்கன்னு நினைச்சேன்..."

"ஸ்ஸ்...!" அவன் அவர் இருக்கிறார் என்று அவளை சப்தத்தால் அடக்கப் பார்த்தான். அவள் பெயர் சொல்லி அழைப்பதும் என்னவோ போல் இருந்தது.

உபாசகர் சச்சிதானந்தமோ அவளை கூர்மையாக நோட்டமிட்டபடியே இருந்தார்.

"சாரி, சாமி... உங்களுக்கு தெரியாததில்ல. இந்த காலத்து பெண்களுக்கு சில சவுகரியங்கள் தேவைப்படுது. அதுலையும் திவ்யா பணக்கார வீட்டுப் பெண்..." அவனிடம் சமாளிப்பு தொடர்ந்து. அவளோ மொத்த வீட்டையும் சுற்றிவர ஆரம்பித்தாள். அவன் விட்டு விட்டான். அவர் மெல்ல நடந்து மாடிப்படி அருகில் போய் நின்று கொண்டார். ஆழமாக சிந்திக்கத் தொடங்கிவிட்டது போலவும் தோன்றியது.

"சாமி..."

"என்ன தேவநாதா..."



"உங்களப் பார்த்தா நீங்க யாத்திரைக்கு தயார் ஆயிட்ட மாதிரி தெரியுது"

"சரியாச் சொன்னே..."

"நாங்க கொஞ்சம் லேட்டா வந்திருந்தாலும் பூட்டிகிட்டு போயிருப்பீங்கன்னு சொல்லுங்க..."

"தப்புப்பா..." அவர் திருத்துவது போல ஆரம்பித்தார்.

அவனும் அவர் என்ன சொல்லப் போகிறார் என்று பார்த்தான்.

"நீ வரப்போறேன்னு எனக்கு தெரியும். எப்ப உள்ள நுழைவேன்னும் தெரியும். அதனாலதான் தயாரா இருக்கேன். நீ வரமாட்டேன்னோ, இல்ல லேட்டா வருவேன்னோ பூட்டிகிட்டு சாவிய எடுத்துக்கிட்டு போக எனக்கு தெரியாம இல்லை. ஆனா நான் எப்பவுமே சொன்னா சொன்னதுதான்"

-அப்படி அவர் சொல்லும்போதும் அதில் ராட்சசமாய் ஒரு அழுத்தம். தேவநாதனுக்குள் தான் கொஞ்சம் அவசரப்பட்டுவிட்டது புரிந்தது.

அதற்குள் திவ்யா வீடு முழுக்க ஒரு பார்வை பார்த்துவிட்டு பரவசமான பரவசத்துடன் அவர்கள் நின்று கொண்டிருக்கும் மாடிப்படி அருகே வந்தாள்.

ஆவலாக படியில் ஏறி மாடியைப் பார்க்கவும் முயன்றாள். சட்டென்று சச்சிதானந்தரின் கரம் முன் விழுந்து தடுத்தது. பார்வை என்னவோ தேவநாதனைத்தான் பார்த்தது. அவனும் புரிந்துகொண்டான்.

"திவ்யா... மாடிக்கு போகாதே! மாடிலதான் சாமி இருக்கார். கீழமட்டும்தான் நாம குடிவரப்போறோம். நம்ம ஏரியா கீழமட்டும்தான்..."

-சின்னச்சின்ன திணறல்களோடு அவன் சொல்வது அவள் முகத்தில் ஒரு கோணலை உருவாக்கியது. "அப்ப

துணி காயப்போடணும், வடாம் பிழியணும்னாலும், மாடி பக்கம் போகக்கூடாதா?"

"இப்ப என்ன.. அதான் பின்னால அவ்வளவு இடம் இருக்கே..."

"சரி... மாடி எப்படிதான் இருக்குன்னு பார்த்துட றேனே..."

-திரும்பவும் படி மீது கால் வைத்தாள்.

"நில்லும்மா..." இந்த முறை சச்சிதானந்தமே பேசினார்.

அவளும் அவரைப் பார்த்தாள்.

"அங்க நீ பார்க்க எதுவும் இல்லை. தயவு செய்து மாடிப் பக்கம் மட்டும் போகாதே. இந்த வீட்டுக்கு மாடின்னே ஒண்ணு இல்லைன்னு நினைச்சு இங்க இருக்க முடியும்னா இரு இல்லேன்னா..."

-அந்த 'னா'வின் அழுத்தம் தேவநாதனைப் பதறச் செய்தது.

"வெறும் நூத்தி எட்டு ரூபாய்க்கு எங்களுக்கு கீழ் போர்ஷனே அதிகம் சாமி. நீங்க கவலைப்படாதீங்க. நானும் சரி, திவ்யாவும் சரி இந்த மாடிப்பக்கம் மட்டும் திரும்பிக்கூட பார்க்க மாட்டோம்..."

"சொன்னா போதாது... காப்பாத்தணும்"

"என்ன நீங்க... தசரதன்கிட்ட கைகேயி வரம் கேக்கற மாதிரி கேக்கறீங்க... மாடிக்கு போறதுங்கறது அவ்வளவு பெரிய குற்றமா என்ன?"

-திவ்யா சட்டென்று வெடித்தாள்.

"திவ்யா... சும்மா இரு. சாமி ஒண்ணும் சாதாரண மனுஷர் இல்ல. அவர் சொன்னா காரணம் இருக்கும்"

வேகமாக அவளை அடக்கிவிட்டு அவரைப் பார்த் தான். அவர் முகத்தில் மர்மமாய் ஒரு சிரிப்பு.



அப்படியே பார்வை திரும்பி வாசல் நோக்கியபோது அவரை அழைத்துச் செல்வதற்காக ஒரு கால் டாக்சி வந்து நிற்பது தெரிந்தது. அதில் இருந்து இறங்கி வந்த ஒருவன் இணக்கமான பார்வையுடன் அவரது சாமான் களை ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு சென்று காரில் வைக்கத் தொடங்கினான். ஒரு வார்த்தை பேசவில்லை.

"எப்ப சாமி காருக்கு சொன்னீங்க?"

"நீ வர்றது பார்த்துட்டுதான்..."

"எப்படி...?" என் கூடல்ல பேசிகிட்டு இருக்கீங்க.

-அவர் திரும்ப மர்மச் சிரிப்பு சிரித்தார்.

"உங்ககிட்ட சில கேள்விகளை கேட்கக்கூடாது. அதான் உண்மை. எங்களால புரிஞ்சுக்க முடியாத ஒரு சில சக்தி உங்ககிட்ட இருக்கு. இல்லேன்னா நீங்க சொன்ன மாதிரி நான் விரும்பின பெண்ணே எனக்கு மனைவியா கிடைச்சிருப்பாளா என்ன?"

-அவனிடம் நன்றி உணர்ச்சிகளின் கசிவு.

அதற்கு அவர் ஒன்றும் சொல்லவில்லை. சரி நான் புறப்படுகிறேன் என்று பாவனைகாட்டிவிட்டு மாடிப் பக்கம் திரும்பினார். அண்ணாந்தார். கன்னத்தில் போட்டுக் கொண்டார்.

திவ்யாவும் பார்த்தாள். அவர் புறப்படும் முன் அவர் காலில் விழுந்து வணங்கத் தோன்றியது தேவநாதனுக்கு. சாதாரணமாக அப்படி எல்லாம் தோன்றாது. மனிதனுக்கு மனிதன் என்ன வணங்கிக் கொண்டு...? வணங்குவது என்பதே ஒருவித மேலாதிக்க குணத்தின் தூண்டுதல்தான் என்றெல்லாம் சிந்திக்கின்றவன்தான் தேவநாதன்.

அப்படிப்பட்டவன் தன் உள்ளுணர்வுகளையும் மீறி அவரை வணங்க விரும்பி வணங்கவும் செய்தான். அவளோ நின்று கொண்டேயிருந்தாள்.

அதைப் பார்த்தவர் 'அம்மா உன்னைக் கொண்டு எனக்கு எதையோ உணர்த்தப் போறா போலிருக்கு...' என்றார். அவர் சொன்னது அவளுக்குப் புரியவில்லை. "நல்லாருப்பா... சொல்லுல நில்லு. சொல்லைக் காப்பாத்தற ஒருத்தனை எல்லா தேவ தேவதைகளும் காப்பாத்தும். சொல்தான் மந்திரம். அதுல மாறவே கூடாது. சொல்லுல நிக்கும்போது சங்கடம் வந்தா அதுக்கு சரியான காரணம் இருக்கும். சங்கடத்தைத் தாங்கிக்கணும். சட்டி சுட்டா அதை விட்டுட்ற மாதிரி விட்டுடக் கூடாது. கவனம். இந்தா வீட்டுச்சாவி" பேச்சோடு சாவியைக் கொடுத்து விட்டு விறுவிறுவென்று நடந்து சென்று காரில் ஏறிக்கொள்ள காரும் புறப்பட்டுவிட்டது.

கார் கண்ணைவிட்டு மறைந்த நொடி வீட்டுக் கூடத்தின் அந்த நாளைய கறுப்பு நிற குழல் வடிவ போன் சிணுங்கியது. அந்த சப்தமே அவனுக்கு புதிதாக இருந்தது. பழைய சினிமாக்களில் கேட்டிருக்கிறான்.

ஓடிச்சென்று காதைக் கொடுத்தான்.

"சாமி... நான்தான் சங்கரானந்தா பேசறேன்..."

"ஐயா நான் சாமி இல்ல. அவர் வீட்டுக்கு குடி வந்திருக்கிறவன்... சாமி காசிக்கு கிளம்பிட்டாரு..."

"அப்படியா... நானும் அவர்கூட காசிக்கு பயணிக்கப் போற ஒரு அம்பாள் உபாசகர்தான். ஆமா அவர் தன் வீட்டை வாடகைக்கா விட்டிருக்காரு..."

"ஆமாம்... ஏன்?"

ஆச்சரியமாயிருக்கே..."

"இதுல ஆச்சரியப்பட என்ன இருக்கு. சும்மா பூட்டி வைக்கறதுக்கு வாடகைக்கு விட்றது பெட்டர்னு நினைச்சிருக்கலாம்..."

"இல்லீங்க... நீங்க சராசரி மனுஷங்க சிந்தனைல பேசறீங்க. அவர் அதை எல்லாம் கடந்தவரு"



"என்ன சொல்றீங்க... வாடகைக்கு ஒரு வீட்டை விட்றதுக்கும் அப் நார்மலா சிந்திக்கறதுக்கும் என்ன சம்பந்தம்?"

-தேவநாதன் கேட்கவும் மறுமுனையில் பதிலில்லை தொலைபேசியும் முடங்கியது. அவன் முகத்திலும் ஒரு வித ஆச்சரிய ரேகைகளின் ஆக்ரமிப்பு.

திவ்யா நெருங்கி வந்தாள்.

"ஆமா அந்த சாமியார் என்ன லூசுங்களா?"

-என்றுதான் ஆரம்பித்தாள். அதே வேளையில் மாடியில் காலில் கொலுசுடன் யாரோ நடந்து செல்வது போல் ஒரு சப்தம்!

தேவநாதனும் திவ்யாவும் கூர்மையானார்கள்!

## 12

**ஸ்ரீ யந்த்ரம் புரிய உடம்பு புரிய வேண்டும் என்பதால் அதைச் சற்று வியப்போமா?**

**நம் உடம்பில் எவ்வளவு நடந்தாலும் தேயாத பாகமாக இந்தக் கால் இருப்பது எவ்வளவு பெரிய விந்தை... அந்த கால் விரல் நீளங்களைப் பாருங்கள்... ஒவ்வொன்றும் ஒவ்வொரு அளவுகளில்! ஒரே நீளமாய் இருந்தால் வேகமாக நடக்க முடியாது பேலன்ஸ் செய்ய இயலாது. அதற்கேற்ப நீளம்- அதன் தலை பாகத்தில் நகங்கள்! இவை உயிருள்ளவா, உயிரற்றவையா என்றே தீர்மானிக்க முடியாத படி அவைகளை வெட்டினால் நமக்கு வலிப்பதில்லை. தொட்டாலே பரவசமாகிற தொடு உணர்ச்சி என்னும் நுட்பம் கொண்ட உடம்பில்தான் எவ்வளவு தொட்டாலும் நம்மால் உணரமாட்டாத அளவு ஒரு பாகமாய் நகங்கள் இருக்கின்றன.**

ஹிரண்ய கசிபுவின் புத்திசாலித்தனத்தையே மண்ணோடு மண்ணாக்கிய உறுப்பு இந்த நகம். அவனது சாமர்த்திய வரங்களில் எந்த உயிருள்ள, உயிரற்ற ஆயுதங்களாலும் கூட எனக்கு உயிர் போகக்கூடாது என்பதும் ஒன்று.

நகத்தை உயிருள்ளது என்பதா... உயிரற்றது என்பதா? இரண்டுமானது என்பதா? அதனால்தான் நரசிம்ம மகாபிரபு தன் நகங்களால் அவன் வயிற்றைப் பிளந்து குடலை மாலையாக அணிந்து கொண்டாரா?

நகம் இவ்வளவு வியப்பைத் தருகிறதே... இதன் மதிப்பு தெரியாமல் வெட்டி வெட்டிப்போடும் நாமெல்லாம் வெட்டிகள்தானே?

நகத்தை தொடர்ந்து மேலேறுங்கள். முழங்கால்! தொடை, கால் பாகத்தோடு ஒரு பந்துக்கிண்ண மூட்டு மூலமாக இணைப்பைத் தொடருகிறது. ரயில் சக்கரம் இயங்குவதே இதைப் பார்த்துத்தான். மடக்கலாம், நீட்டலாம் ஆனால் முழங்கால் தொடையை விட்டுப் பிரிந்து வெளியேறிவிடாது. எத்தனை ஆச்சரியம்? அடுத்து புட்டம்... இங்கே மட்டும் கூடுதல் சதை. மனிதன் அமரும்போது உறுத்தக் கூடாது என்பதற்காக. அடுத்த வயிறு... உள்ளே உள்ள குடல் அமைப்பு ஒரு உன்னதம். ஒரு பானையின் உட்பாகம் போல அப்படியே ஒட்டுவிடாமல் நாரணன் துயில் கொண்டிருக்கும் ஆதிசேஷன் கணக்காக மடங்கி வளைந்திருக்கும் குடல். சிறிய இடத்தில் கூட பெரியதை வைக்க முடியும் என்பதைச் சொல்கிறமாதிரி அப்படியே பக்கவாட்டில் கல்லீரல், சிறுநீரகம் என்று உப உறுப்புகள்.

மேலேறினால் 'லப்தப்' என்று இடையறாத இயக்கத்தில் இதயம். அதனுள், நில்லாமல் ஓடிக் கொண்டேயிருக்கும் ரத்தம். அது ஓடும் ரத்தக்குழாய்



களின் நீளமோ எத்தனையோ நூறு கிலோ மீட்டர் நீளம்! அடேயப்பா!

அப்படியே மேலேறுங்கள்.

பஞ்ச பூதங்கள் வேறு கிடையாது, பஞ்ச புலன்கள் வேறு கிடையாது என்பதற்கு சான்றாக கண், காது, மூக்கு, வாய், மனம் என்று அவ்வளவும் சிரத்தில் ஒன்றுக்கு பக்கத்தில் ஒன்றைத் தொட்டு ஒன்று...

வாய்க்குள்ளேயே மிக மென்மையான ஒரு உறுப்பான நாக்கு... மென்மையை வன்மையால் தான் பாதுகாக்க முடியும் என்கிற மாதிரி அதற்கு முன்னால் பல்வரிசை. அதிலும் கூட சூட்சமம். ஒரு பல்லே மேலே மொத்தமாகவும், கீழே மொத்தமாகவும் வளர்ந்து விடாமல் பாகம் பிரித்துக் கொண்டு 32 என்று அங்கே ஒரு கணக்கு...

நம் உடம்பை நாம் இப்படி பாகம் பாகமாகப் பார்த்து எப்போதாவது வியந்திருக்கிறோமா?

அதன் இயக்கம் எப்படிப்பட்டது என்பதை அறிய ஆசைப்பட்டிருப்போமா? வயிறு பசித்து எரிச்சல் மூட்டும்போது சோற்றைப் போட்டு அதை அடக்கத் தெரிகிறதே... தினமும் இவனுக்கு தீனி போடவே நமக்கு நேரம் சரியாக இருக்கிறது என்று எப்போதாவது அதைப்பற்றி நினைத்து நம்முன் நம்பிடியில் தானே அது இருக்கிறது. அதை அடக்கி வைப்போம் என்று ஒரு நாளாவது நினைத்திருப்போமா? அதுவல்லவா நம்மை அடக்கி வைத்திருக்கிறது? இப்படி உடம்பைப் பற்றி நிறைய யோசிக்க வேண்டியுள்ளது. உடம்புக்குள் அடங்கிக் கிடக்கும் மனம் பற்றியும் நிறைய பார்க்க வேண்டியிருக்கிறது. இதைப்பற்றி விவரமாகவும் நுட்பமாகவும் தெரியாமல் புரியாமல் ஸ்ரீ யந்த்ரம் பக்கம் போகவே கூடாது. போனால் ஒன்றும் புரியாது!

அந்த கொலுசுச் சப்தம் திவ்யாவை சற்று குழப்பவும் செய்தது.

"மாடியில் யாராவது இருக்காங்களா?" என்று வேகமாக கேட்டாள்.

"இல்ல திவ்யா. இருந்தா சாமி சொல்லியிருப்பாரே..."

"அப்ப கொலுசு சப்தம் கேட்டுச்சே... யாரோ ஒரு பெண் பிள்ளை நடந்து போன மாதிரி..."

"தெரியலையே..."

"வாங்க போய் பார்ப்போம்..."

-அவள் அவன் கையைப் பற்றி இழுத்தாள்.

"வேண்டாம். அவர்தான் மாடின்னு ஒண்ணு இருக்கற தையே மறந்துட்டு இருக்கச் சொல்லியிருக்கார் இல்ல..."

"நாம மறக்க நினைக்கலாம். கொலுசு சப்தம் ஞாபகம் மூட்டுதே."

"கொஞ்சம் அமைதியா இரு. அது வேற எங்க இருந்தாவது கூட கேட்டிருக்கலாம்..."

"மண்ணாங்கட்டி... உங்களுக்கு என்ன காது செவிடா? மாடியிலதானே சப்தம் கேட்டது...?"

"திவ்யா ப்ளீஸ்...!"

-தேவநாதன் கெஞ்சலாக அவளை கட்டிப் போட்டான். நல்லவேளை ஒரு வேன் வந்து நின்றது. அதிலிருந்து திவ்யாவின் அப்பா இறங்கினார்.

"அப்பா..." முன் ஓடினாள் திவ்யா. அவரும் கட்டிக் கொண்டார். தேவநாதனும் வரவேற்றான்.

"உங்க கல்யாண சீர் சாமான் அவ்வளவையும் போட்டு எடுத்துகிட்டு வந்துட்டேன் மாப்ளை..." என்றார் அவரும்.

"வீடு கண்டுபிடிக்க கஷ்டமா இல்லையே..."



"என்ன அப்படி கேட்டுட்டீங்க. இது நம்ம சாமி வீடுங் கறது தெருவுக்குள்ள நுழைஞ்ச மாத்திரத்துல தெரிஞ்சு போச்சு. எனக்கு ஒரே சந்தோஷம். ஆமா எங்க சாமி?"

"அவர் காசி யாத்திரை கிளம்பிப் போய்ட்டார்"

"அப்படியா... என்கிட்டல்லாம் ஒரு வார்த்தைகூட சொல்லலையே..."

"அவரோட உங்களுக்கு நல்ல அழுத்தமான தொடர்போ..."

"அப்படி சொல்ல முடியாது. மீனாட்சி அம்மன் கோயில்ல பவுர்ணமிக்கு பவுர்ணமி கட்டாயம் சந்திச்சுக் குவோம். ஆமா... எங்க உங்க அம்மா, அக்கா, தங்கச்சி எல்லாம்..."

"அவங்க வரலை மாமா..."

"அட.... அவங்க ஏன் வரலை?"

"முதல்ல நாம போய் பாலைக்காய்ச்சி செட்டிலாயிட்டு அப்புறம் கூட்டிகிட்டு வந்து காட்டலாம்னு திவ்யாதான் சொன்னா..."

அவரும் உடனே வேகமாக திரும்பி திவ்யாவைப் பார்த்தார்.

"ஆமாம்ப்பா... நான்தான் சொன்னேன். அவங்க சேலத்துலதான் இருக்கப் போறாங்க. மதுரைக்கு வர அவங்களுக்கு இஷ்டமில்லையாம்"

-அப்பாவுக்கு ஏற்ப கொஞ்சம் பொய்யும் சொன்னாள். அதை அவர் நம்புகிறாரா இல்லையா என்கிற கவலையே துளியும் இன்றி வாசலில் நிற்கும் வேனை நோக்கி ஓடினாள்.

உள்ளிருக்கும் கட்டில், மெத்தை, சோபா அவ்வளவை யும் வேக வேகமாக ஒரு பார்வை பார்த்தாள்.

"அப்பா... எல்லாம் உட்லாண்ட்ஸ்ல வாங்கினது தானே?" -என்று வெளியில் இருந்தே சுத்திக் கேட்டாள்.

அவருக்கு அது சங்கடமாக இருந்தது.

தேவாவோ மிரளமிரளப் பார்த்தான்.

"என்ன மாப்ள... நீங்கதானே உங்கப்பம்மாவுக்கு ஒரே பிள்ளை..."

"ஆமாம் மாமா"

"நீங்கதானே அவங்களை பாத்துக்கணும்"

"ஆமாம் மாமா..."

"திவ்யா என்னமோ அவங்க வரஇஷ்டம் இல்லேங்கற மாதிரி சொல்றா... உண்மையா?"

"அப்படித்தான் நினைக்கறேன்"

"அவளுக்காக அப்படி எல்லாம் நினைக்காதீங்க. என் மகளை எனக்கு தெரியும். அவளுக்கு எப்பவுமே சுயநலம் அதிகம். ஒரு துணி மணி வாங்கும்போது கூட அவளுக்கு பத்துரூவா கூட போட்டு வாங்கணும்னு எதிர்பார்ப்பா. அப்படி வாங்காட்டி யாருக்குமே வாங்கவிடாம பண்ணி டுவா... அது ஒரு மனநோய்"

"அப்ப உங்களுக்கு உங்க மகளைப் பத்தி நல்லது கெட்டது எல்லாமே தெரிஞ்சிருக்குன்னு சொல்லுங்க"

"ஒரு தகப்பனுக்கு எப்படி தெரியாம போகும்?"

"அதுசரி... மாப்ளை மட்டும் அதுங்கல் பிதுங்கல் இல்லாம ராமச்சந்திர மூர்த்தியா இருக்கணும்கற மாதிரி எதிர்பார்த்தீங்களே. அது மட்டும் சரியா மாமா?"

-தேவநாதன் அப்படிக் கேட்பான் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. பதிலுக்கு மலங்க மலங்கத்தான் பார்க்க முடிந்தது.

"நான் தப்பா கேட்டிருந்தா மன்னிச்சிடுங்க..."



"இல்ல மாப்ள... சரியாதான் கேட்ருக்கீங்க... பொண்ணு தான் ஒரு மாதிரி. மாப்ளையாவது நல்லபடி அமைய ணும்னு நினைச்சுதான்..."

-அவர் சொல்ல வந்தது அவனுக்கும் புரிந்தது.

"கவலைப்படாதீங்க. இப்பதானே கல்யாணம் ஆயிருக்கு. அவளை கொஞ்சம் கொஞ்சமாதான் வழிக்கு கொண்டு வரணும். கொண்டு வந்துடுவேன்..."

-அவன் சொன்ன விதம் அவருக்கு நம்பிக்கையளித் தது. கட்டிக்கொண்டார். அதைப்பார்த்து "சபாஷ்... மாமனார், மாப்ளை ஒண்ணாயிட்டீங்களா...?" என்ற படியே வந்தாள் திவ்யா.

சாமான்கள் இறங்கி அவர்களைக் கடந்து அதற்குரிய இடங்களில் அமர ஆரம்பித்திருந்தன.

அவரும் கூடமாட ஓடி அவைகளை உரிய இடங் களிலும் வைக்க ஆரம்பித்தார்.

திவ்யா சட்டென்று வெளியே சென்று அக்கம்பக்கம் யாரெல்லாம் இருக்கிறார்கள் என்கிற மாதிரி பார்க்கத் தொடங்கினாள்.

அந்த வீட்டுக்கு இரண்டு பக்கத்திலும் பெரிய அள வில் காலி மனைகள். அந்த மனைகளுக்கு அப்பால்தான் வீடுகள் அமைந்திருந்தன. வீட்டைச் சுற்றி தோட்டம். எல்லாதவித பூச்செடிகளும் புஷ்டியாக வளர்ந்திருந்தது. ஒரு இடத்தில் நீளமான ரப்பர் டியூப் பைப் ஒன்றின் மூக்கில் செருகப்பட்டு தண்ணீர் பாய்ச்சத் தயாராக கிடந்தது.

திவ்யாவுக்கு அந்தக் காட்சி மிகப் பிடித்துவிட்டது.

"வாவ்... பெரிய தோட்டம்! நல்லா ஜில்லுன்னு இருக் கும்" என்றபடியே தோட்டத்துக்குள் நுழையப் போனாள்.

அப்போது வீதியில் போய்க்கொண்டிருந்த ஒருவர் மாடியைப் பார்த்து கன்னத்தில் போட்டுக்கொண்டபடி நடந்து செல்வதையும் பார்த்தாள்.

அப்படியே ஆகாயத்தையும் பார்த்தாள். ஒரு கருடன் பறந்தபடி இருந்தது. ஒரு வேளை அதைப் பார்த்துத் தான் கன்னத்தில் போட்டுக் கொள்கிறாரோ என்று நினைத்தவள் தோட்டத்துக்குள் புகுந்தாள்.

தேவி பூஜைக்குத் தேவையான சம்பங்கி, செம்பருத்தி, மல்லிகை, முல்லை, ரோஜா, கொழுக்கட்டை மந்தாரை, நந்தியாவட்டை என்று ஒரு செடிகூட பாக்கி இல்லாதபடி இருந்தது. மறுபக்கமும் தோட்டம் நீண்டது. திரும்பினாள். அங்கே ஒரு மருதாணி, தாழம்பூ என்கிற வகைகள். ஒரே குதூகலமாக இருந்தது. அருகில் ஒரு கழிவுப் பாதை. அதில் பார்வை சென்று குவிந்தபோது சற்று பகீர் என்றது. வெகு நீளமான ஒரு பாம்புச்சட்டை ஒன்று அங்கே கிடந்தது!

கண்களில் மளுக்கென்று ஊசி ஏறின மாதிரி ஒரு வலி... பக்கத்தில் ஒரு கோல் கிடந்தது. அதை எடுத்து அந்த சட்டையை தொட்டு தூக்கினாள். ஆறடிக்கு குறையாத நீளம். தலைபாகத்தில் இருந்து கால்பாகம் வரை துளி கூட கிழிசல் இல்லை.

நெடுநேரம் உற்றுப் பார்த்தவள் அதை திரும்ப கீழே போட்டாள்.

இந்த தோட்டத்தில் பாம்பு நடமாட்டம் இருக்கிறது போல் தெரிகிறது-எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்கிற நினைப்புடன் நடந்தாள்.

சட்டென்று கலகலவென்று யாரோ சிரிப்பது போல ஒரு சப்தம். கூடவே சொக்கட்டான்கள் தரையில் உருளும் சப்தமும். அண்ணாந்தாள். மாடி ஜன்னல் தெரிந்தது. சப்தம் அங்கிருந்துதான் கேட்டது.



நிச்சயம் யாரோ உள்ளே இருக்கிறார்கள். அந்த கிழவர் அதைப்பற்றி எல்லாம் சொன்னால் விபரீதம் என்று நினைத்து மறைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் வேறு ஏதாவது காரணம் இருக்க வேண்டும் என்று தோன்றியது. யார் என்று பார்க்கவும் ஆசையாக இருந்தது. பக்கத்திலேயே ஏணி ஒன்று கிடந்தது. புத்தியில் ஒரு மின்னல். அதை எடுத்து மாடி ஜன்னல் அருகே சுவர் அருகே சாய்த்து வைத்தவள் மளமளவென்று ஏற ஆரம்பித்தாள். மேலே ஏறி ஜன்னல் வழியே உள்ளே பார்த்தவள் முகம் அப்படியே வெளிறிப் போனது!

## 13

**மனிதனைப் பொறுத்த அளவில் உடம்பு எவ்வளவு வியப்பை அளிக்கிறதோ, அதைப்போல பல மடங்கு வியப்பைத் தரவல்லது மனம்! இதை குரங்குக்கு ஒப்பிடுகின்றவர்களும் உண்டு. இதை மிகத்தூய்மையான க்ஷேத்ரம் என்று கூறுகின்றவர்களும் உண்டு.**

**உடம்பில் சதா இதயம் துடித்துக் கொண்டிருக்கிற மாதிரி, ரத்தம் ஓடிக் கொண்டிருக்கிற மாதிரி இயங்கியபடியே உள்ள இன்னொரு அம்சம் மனம்.**

**ஒருவரின் மன அமைப்பை வைத்தே அவரது பாத்திரச் சிறப்பு உருவாகிறது. இதனுள் அடங்கிக் கிடக்கும் நினைவுகளுக்கு வானம்தான் எல்லை. செயல்பாடுகளே பின்னர் நினைவுகளாகின்றது. நினைவுகளோ மூளையோடும் அதன் பலத்தோடும் கை கோர்த்துக் கொண்டு செயல்பாடுகளாகிறது. இதிலிருந்து அதுவும் அதிலிருந்து இதுவுமாக உள்ள மனம்தான் பேச்சாகிய வாக்குக்கு கர்த்தா.**

**மனம் தெளிவாகவும், அறிவு பிரகாசமாகவும் உள்ள ஒருவரால்தான் முதலில் தான் யார் என்று**

உணரமுடியும். தன்னை உணராமல் இந்த உலகத்தை, அதாவது உலகத்திலுள்ள எதையும் உணரமுடியாது.

நான் யார்?

எனது பெயர்தான் நானா?

அல்லது என்னுள் இருக்கும் எலும்பும் சதையும் ரத்தமும்தான் நானா? இல்லை இவைகளைப் பற்றி எல்லாம் சிந்தித்துப் பார்க்க முடிந்த எனது அறிவும் அது சார்ந்த மனமும்தான் நானா?

எனது உடம்பு ஒரு நிலையில் நில்லாமல் மாறிக் கொண்டேயிருக்கும் இயல்பில் உள்ளதே... இதை வளர்ச்சி என்பதா? சிதைவு என்பதா?

எதற்காக நான் உருவானேன்? ஏன் வளர்ந்து கொண்டிருக்கிறேன்? இனி நான் என்னாவேன்?

கேள்விகள்... கேள்விகள்... கேள்விகள்!

இந்த கேள்விகளுக்கு விடையை கண்டவர்கள் ஞானிகளாகி விட்டார்கள். கண்டு என்ன செய்யப் போகிறோம் என்று வாழ்க்கையை அதன் போக்கில் போய் வாழ்ந்து கொண்டிருப்பவர்களோ சராசரி மனிதர்களாக விளங்குகிறார்கள்.

ஞானியாவதால் பலன் என்ன?

சராசரியாக இருப்பதால் நஷ்டம்தான் என்ன?

தொட்டுத் தொட்டு கேள்விகள்... இந்த கேள்விகளுக்கு விடை விஞ்ஞானப் பூர்வமாக சிந்தித்தால் கிடைக்குமா? இல்லை ஆன்மீக பூர்வமாக சிந்தித்தால் கிடைக்குமா?

அனைத்திற்கும் விடைதருவது போல உலகின் நிகரில்லாத ஒரு அதிசயமாக காட்சி தருகிறது ஸ்ரீ யந்த்ரம்!

மேலே கண்ட கேள்விகள் அவ்வளவையும் ஒரு பக்கம் ஒதுக்கி வைத்துவிட்டு அதே சமயம் அதை மறந்துவிடாமல் ஸ்ரீ யந்த்ரத்துக்குள் நுழைவோம்!



ஏணி வழியாக ஏறி ஜன்னல் வழியாக மாடி அறையைப் பார்த்த திவ்யாவுக்கு ஒரு வினாடி மூச்சே நின்றுவிடும் போல் இருந்தது. மாடி ஜன்னல் கம்பியை வளைத்துக் கொண்டு ஒரு நாகம். அதுவும் விடைப்பாக படம் எடுத்தபடி... பாம்பைப் பார்த்த நொடி அப்படியே தலையைத் தழைத்து குனியப் பார்த்தாள். பதட்டத்தில் ஏணியில் நின்று கொண்டிருந்த கால்கள் இடறி விட்டன. அப்படியே கீழே விழத் தொடங்கினாள். உதடுகளில் அலறல் சத்தம் எழும்பியது. வீட்டிற்குள் சாமான்களை அங்கும் இங்குமாய் எடுத்துவைத்தபடி இருந்த தேவ நாதன் ஓடிவரத் தொடங்கினான்.

நாலாபுறமும் பார்த்தபடியே தோட்டத்துக்குள் நுழைந்தான். திவ்யா முனங்கியபடி கிடந்த இடம் நோக்கிச் சென்றவன், அவள் கிடந்த கோலத்தைப் பார்த்து அப்படியே ஸ்தம்பிக்க திவ்யாவின் அப்பாவும் ஓடிவந்தார்.

"திவ்யா என்ன ஆச்சு... இது என்ன ஏணி பக்கத்துல கிடக்குது..."

"மாப்ளே முதல்ல அவளைத் தூக்குங்க. அப்புறமா பேசலாம்..."

"அப்பா பாம்பு... பாம்பு..."

"எங்கம்மா... எங்க?"

-சரிந்து விழுந்துகிடந்த நிலையில் அவள் பதறியபடி மாடி நோக்கி அங்குள்ள ஜன்னலைக் காட்டினாள்.

"ஒண்ணுமில்லையேம்மா... எங்க இருக்கு பாம்பு?" - என்று அவரும் எழுந்து சென்று நாலாபுறமும் பார்த்தார். தேவநாதன் அவளை எழுப்பி உட்கார்த்தி வைத்தான்.

அவள் உடம்போ மீட்டி விட்ட தந்திக் கம்பி போல நடுங்கியபடியே இருந்தது. தேவநாதனுக்கு புரிந்து விட்டது.

"ஏணி வெச்சு மேலே ஏறிபார்த்தியா?"

-அவள் தலை ஆடி ஆமோதித்தது.

"பார்த்தாலே தெரியுதே... எதுக்கு உனக்கு இந்த அல்ப க்யூரியாசிட்டி... சரி... சரி... எழுந்திரு."-என்று அவளை எழுந்து நிற்கவைக்கப்பார்த்தான்.

அவள் அப்பாவும் வந்து ஒத்தாசித்தார். ஆனால் அவளால் நிற்க முடியவில்லை. மாறாக நிற்க முயன்று 'வீல்' என்று அலறினாள். "மாமா... கால்ல எலும்பு முறிவுன்னு நினைக்கிறேன்."

தேவநாதன் சொன்னதுதான் தாமதம் திவ்யாவுக்கு மயக்கம் வந்துவிட்டது!

❖ ❖ ❖

*சேலம்!*

பக்கத்து வீட்டுக்காரர் போன் வந்திருப்பதாக கூற ஓடினாள் தேவநாதனின் அக்காவான வனிதா. போன வேகத்தில் திரும்பிவந்தாள். முகத்தில் ஈயாடவில்லை.

"என்னடி... யார்கிட்ட இருந்து போன்"

தேவநாதனின் அம்மா கல்யாணி வேகமாய் வந்து கேட்டாள்.

"என்னத்த சொல்ல... ஹூம்!"

-பெருமூச்சு விட்டாள் வனிதா.

"விஷயத்தைச் சொல்லுடி... யாருக்கு என்ன?"

"எல்லாம் உன் மருமக விவகாரம்..."

"என்ன... அவன் பார்த்துருக்கற வீடு பிடிக்கலை யாமா?"

"அதெல்லாம் இல்லம்மா... குடிபோன இடத்தில உள்ள நுழைஞ்ச உடனேயே கால் ஒடிஞ்சு போச்சாம்"

"என்னடி சொல்றே?"



"தேவாதான் போன் பண்ணான். நாம உடனே கிளம்பி வந்தா நல்லா இருக்குமாம்..."

"என்னடி இது கூத்து..."

"கூத்துதான்... எப்ப பெரிய தர்மப்பிரபு மாதிரி அவ கழுத்தில் தாலியை கட்டுனானோ அப்பவே கூத்து ஆரம்பமாயிடிச்சு... இது அந்த கூத்தோட இரண்டாவது கட்டம்..."

"நீ ஒருத்திடி... குடிபோன முதல் நாளே இப்படி கால் ஒடியறது நல்லதுக்கு இல்லையே..."

"இனி எதைப்பத்தி யோசிச்சு என்ன பண்ண? ஊருக்கு கிளம்பற வழியைப் பாரு."

"ஏன்... அந்த பொண்ணு ஊர்தானே அது? அவங்க அப்பா அம்மா இருப்பாங்களே..."

"நீ என்ன சொல்றே... அவங்க பாத்துக்கட்டும் நாம இங்கயே இருப்போம்கறியா?"

"அதத்தானே அவ விரும்பினா..."

"அவ விரும்பினமாதிரியா எல்லாம் நடக்குது? இப்ப உன் பையன் உன்னை கூப்பிட்டிருக்கான். என்ன பண்ணப் போறே?"

-வனிதா கையை கட்டிக் கெண்டு கேட்ட தொனியில் ஏகப்பட்ட தினவு. கல்யாணிக்கோ தயக்கமாக இருந்தது.

"இப்ப நீ தயங்கினே ரொம்ப விபரீதமாயிடும். எனக்கு கால் ஒடிஞ்சு போச்சுன்னு தெரிஞ்சும் நீங்கள்லாம் யாரும் வந்துபார்க்கவே இல்லைன்னு ஆரம்பிச்சிருவா உன் மருமக... சமாளிக்க நீ தயார் ஆகிக்கோ..."

"அதுசரி... நாம போய் பார்த்துட்டு வந்துடப் போறோமா... இல்ல அங்கையே..."

-கல்யாணி எங்கே வருகிறாள் என்பது வனிதாவுக்கு புரிந்துவிட்டது. க்ளுக்கென்று சிரிப்பு வந்துவிட்டது.

"அம்மா... இப்போதைக்கு போறோம். போய் பார்க்கிறோம். உன் பையன் இருன்னு சொன்னாலும் நாம இருக்க வேண்டாம். அவளோடெல்லாம் நாம ஒண்ணா இருக்கமுடியாது... அவ வடிவத்துலதான் அழகான பொண்ணு... ஆனா?"

-வனிதா அவளை ராட்சசி என்று சொல்ல விரும்பி பின் அதை மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்.

கல்யாணி அலுப்புடன் புறப்படத் தயாரானாள்!

ஒருபெரிய மாவுக்கட்டு. பதினைந்து நாட்களுக்கு காலை அப்படி இப்படி அசைக்கக்கூடாது என்று டாக்டர் கூறிவிட்டார். கட்டிலில் கிடத்தப்பட்டிருந்த திவ்யாவின் அருகே அவளது தாயான செண்பகம் அவளுக்காக ஆரஞ்சு ஜூஸ் பிழிந்து கொண்டிருந்தாள்.

திவ்யாவிடம் உறைந்தது போல ஒரு நிலை.

"இந்தாடி... குடி இதை!" -என்று ஜூஸை நீட்டிய போதும் அவளுக்கு பிரக்ஞை கலையவில்லை.

"உன்னத்தாண்டி..."

"ஆங்... அம்மா..."

"இந்த ஜூஸைக் குடி!"

"அம்மா..."

"என்னடி...?"

"டாக்டர் பயப்படும்படியா ஒண்ணும் சொல்லலையே..."

"பேசாம ஜூஸைக் குடிச்சிட்டு அமைதியா இரு."

"இல்லம்மா... என்னால இருக்கமுடியாது. வந்த முதல் நாளே இந்த வீடு வேலையைக் காட்ட ஆரம்பிச்சிடிச்சு. எனக்கு இந்த வீடே வேண்டாம்மா!"



"நானும் அதைத்தான் நினைச்சேன். ஆனா உன் அப்பா இந்த வீட்டை குறை சொன்னா உருப்படாம போய்டுவோம்கறார்..."

"அவர் ஒண்ணு. அவருக்கு அந்தச்சாமியார் மேல விருப்பம்கறதுக்காக நான் இங்க கஷ்டப்படமுடியுமா?"

"இதோ பார்... எப்பவுமே நீ நினைக்கறதுதான் சரின்னு பேசறது உன் வழக்கம். உன் அப்பா தெளிவா சொல்லிட்டார். எப்ப கல்யாணம் பண்ணி கொடுத்துட்டோமா அப்பவே அவ நம்ம பொண்ணு இல்லை. அவ விஷயத்துல எல்லா முடிவையும் அவ புருஷனும் அவ மாமியாரும்தான் எடுக்கணும். நீ கிளம்பு... நாம் புறப்படுவோம்னுட்டார்..."

"அம்மா..."

"என்ன லொம்மா! உன் அப்பாவை பத்தி உனக்கு தெரியும்தானே?"

"அப்படின்னா..."

"உன் மாமியார்! நாத்தனார்லாம் வந்துகிட்டேயிருக்காங்க. அவங்க வந்துட்டா நாங்க கிளம்பிடுவோம்."

"ஐய்யய்யோ..."

"வாய மூடுடி... அவங்க எங்க போய் இருப்பாங்க. பெத்த பையன் கூட ஒரு தாய் இருக்காம தனியா இருந்தா ஊர் சிரிக்காது."

"நீயே போதும்மா எனக்கு... இதுக்குதான் நான் கல்யாணமே வேண்டாம்னு சொன்னேன்."

"இதோ பார் உன்னைக் கேட்டுகிட்டு ஒண்ணும் நாங்க உன்னை பெத்துக்கலை. இப்ப நீ சொல்றத நாங்க கேட்டுக்கறதுக்கு... கெட்ட நேரத்துலயும் ஒரு நல்ல நேரம் மாதிரி அந்த குடிகாரன்கிட்ட இருந்து நீ தப்பி இந்த பிள்ளைக்கு மனைவியாயிருக்கே.. முதல் ராத்திரியிலேயே நல்லா முந்தானையிலையும் முடிஞ்சு கிட்டே.

அதான் தாய் தங்கையை எல்லாம் ஊர்லவிட்டுட்டு உன் கூட தனியா அந்த பிள்ளையும் வந்துடிச்சு. இது கடவுளுக்கே பொறுக்கல போல் இருக்கு. அதான் உன் காலை உடைச்சு படுக்க வைச்சுட்டான்."

"வாய மூடும்மா... இந்த வீடு ஒரு மர்ம மாளிகை. நான் பார்த்த பாம்ப நீ பார்த்திருந்தா உயிரையே விட்டிருப்ப..."

"தோட்டம் துரவுன்னு இருந்தா பாம்பு வரதாண்டி செய்யும். அதை எதுக்கு இவ்வளவு பெருசுபடுத்தறே..."

"சரிம்மா... பாம்பைவிடு! அந்த மாடி பக்கமே யாரும் போகக்கூடாதாம். இது உனக்கே டூ மச்சா தெரியலை."

-அவள் கேட்ட நொடி மாடியில் யாரோ சதங்கைக் கால்களுடன் ஒரு முனையில் இருந்து மறுமுனைக்கு நடந்து செல்லும் சப்தம் கேட்டது. செண்பகம் உடனே கூர்மையாகி திரும்பிப் பார்த்தாள்.

"அம்மா... பார்த்தியா? இந்த சப்தம் மாடியில இருந்துதான் கேக்குது. யாரோ மாடியில இருக்காங்க"

-கண்கள் மருள திவ்யா சொன்னதைத் தொடர்ந்து செண்பகம் அங்கிருந்து விலகி மாடிப்படி அருகே சென்று மேலே பார்த்தாள். மஞ்சள் வாசம் காற்றில் கலந்து வந்து மூக்கில் ஏறிற்று. ஆனால் அவள் பார்வைக்கு யாரும் தென்படவில்லை. எதற்கும் மேலே சென்று பார்த்தால் என்ன என்று தோன்றிற்று!

"யாரு..?" குரல் கொடுத்தாள். மறு பதில் இல்லை. ஆனால் தொடர்ந்து கால் சதங்கைச் சப்தம்!

"யாரது மேல... வாயத்திறந்து பேச மாட்டீங்களா?" -பலமாக கத்திப் பார்த்தாள் செண்பகம். அப்பொழுதும் பதிலில்லை. செண்பகத்திடமும் ஒரு வித பயமும் பதட்டமும் தொற்றிக் கொள்ள ஆரம்பித்தது. மேலே சென்று பார்த்தால்தான் என்ன என்றும் ஒரு கேள்வி.



அவள் வரையில் சச்சிதானந்த சாமி சொல்லிச் சென்ற எதுவும் அவளுக்குத் தெரியாது.

திவ்யாவும் அதைப்பற்றி எல்லாம் கூறவில்லை. தேவநாதனோ வேலைக்குப் போயிருந்தான்.

கணவரும் தொழிலைப் பார்க்க போய் விட்டார். அவர்கள் இருந்தால் அவர்களையாவது பார்க்கச் சொல்லலாம்.

செண்பகத்துக்குள் குழப்பமும் பயமும் ஒருசேர கட்டிப்பிரண்டது.

"அம்மா... அங்க என்ன பண்றே?" -என்று திவ்யா வேறு படுத்த நிலையில் இருந்து கூப்பிட்டாள். மேலேறிச் சென்று பார்ப்பதா... திரும்புவதா என்கிற குழப்பத்திற்கு நடுவே "இருடி வரேன்..." என்று மளமளவென்று மாடியில் ஏற ஆரம்பித்தாள் செண்பகம்!

## 14

*அறிவதே அறிவு!*

இது கூட இரண்டு விதம். தன்னலத்திற்காக குறிப்பாக பசி, தாகம், காமம் போன்ற உடல் உபாதைகளை உத்தேசித்து அனிச்சையாக பசிக்கு உணவும், தாகத்துக்கு தண்ணீரும், காமத்துக்கு வடிகாலும் எங்கே கிட்டும் என்று அறிவது! இந்த அறிதலில் இயங்குபவைதான் மனிதன் நீங்கலான மற்ற உயிரினங்கள்.

அடுத்து தன்னலத்திற்காக அறிவதோடு தான் யார் என்றும் அறிவது!

இந்த அறிவு மனிதனுக்கு மட்டுமே சாத்தியம். தான் யார் என்று அறிய இன்னொரு மனிதர் தயவும் மிக அவசியம். ஒருவன் புறத்தில் ஒரு

அரிசி மூட்டையையே சாதாரணமாக தூக்கிவிட லாம். ஆனால் அவனை அவன் அது போல் தூக்கிக் கொள்ளுதல் சாத்தியமில்லை. அதற்கு புறத்தில் இருந்து ஒருவர் வந்தாக வேண்டும். அப்படி வரும் ஒருவர் அவனைவிட கல்வி, கேள்விகளில் மேலான வராக இருப்பது மிக அவசியம். அப்படி ஒருவராக ஒரு குருவால் மட்டுமே திகழ முடியும்.

எனவே ஒருவன் தன்னையறிய அவனுக்கு ஒரு குரு வேண்டும். அவர் அவனுக்கு அவனைக் காட்டு வார். அந்த குருவுக்கோ அவரது குரு அவரைக் காட்டியிருப்பார். இப்படி தன்னையறியும் முயற்சிக்கு புறத்தில் ஒருவர் துணையும், தயவும் தேவைப்படுகிறது. (புத்தர், ரமணர் போல வெகு சிலர் இம்மட்டில் விதிவிலக்கு). புறத்தேயிருந்து நமக்கு நம்மை உணர்த்த வந்த குருவும் கூட எடுத்த எடுப்பில் உணர்த்தமாட்டார். உணர்த்தவும் இயலாது... நமக்கு நம்மை உணர்த்துவது எனும் பொழுது நாம் கற்பவர்கள் ஆகிறோம். உணர்த்து பவர் கற்பிப்பவர், அதாவது ஆசான் ஆகிறார்.

அவர் எப்படி நமக்கு நம்மை உணர்த்துவார்?

நிச்சயம் அவர் உணர்ந்துகொண்ட விதத்தில் தான்... எப்பொழுதும் ஒன்றை விளங்க வைக்க இன்னொன்றை உதாரணத்திற்கு எடுத்துக் கொள் வது நமது இயல்பாகும். ஒருவருக்கு உருண்டை யான முகம்... அது பூசணிக்காய் போல் இருக்கிறது எனும் பொழுது எளிதாய் விளங்கிவிடும். முத்து போல் பற்கள்.

திராட்சை போல் கண்கள்-எனும் பொழுது பளிச், பளிச்சென்று அனைத்துமே விளங்கிவிடக் காண் கிறோம். புறத்தோற்றத்துக்கு இந்த உதாரணங்கள் மிகச்சரி... அகத்திற்கு எதைச் சொல்லி விளங்க வைப்பது...

அகத்துக்குள் எலும்பும் சதையும் ரத்தமும் விதவிதமான பெயர்களில் அழைக்கப்படுகிறது.



அவைகளை இதயம், ஈரல், குடல், கணையம் என்று சொல்லி விளங்க வைத்துவிடலாம். இதையும் கடந்து மனம் என்று ஒன்று இருக்கிறதே...? அது உடம்பில் எங்கே இருக்கிறது என்றோ எப்படி அது செயலாற்றுகிறது என்றோ அதன் கூர்மை எப்படிப் பட்டது என்றோ எப்டி விளங்கவைப்பது? பலர் வரை யில் உடல் வலிமை ஒருவிதமாயும். மன வலிமை ஒருவிதமாயும் இருக்கிறது. ஒன்றுக்கொன்று சம்பந்தமேயில்லை. ஈர்க்குச்சிபோல ஒரு சன்யாசி முப்பது நாள் நாற்பது நாள் பச்சைத்தண்ணீர் கூட பல்லில் படாதபடி உபவாசம் இருக்கிறார். அவரால் முடிகிறது.. யானைபோல் இருக்கும் ஒருவரோ ஒருவேளை உபவாசத்துக்கே மனம் நடுங்குகிறார். இதிலிருந்து உடம்பின் பலம் வேறு... மனதின் பலம் வேறு என்பது விளங்கும். அதுமட்டுமல்ல மனபலம் மட்டும் இருந்துவிட்டால் போதும், மற்ற பலங்கள் அதன்பிறகே என்பது புரிந்திருக்கும்.

இந்த மனம் பற்றி... அதன் பலம் பற்றி சிந்திப் பதற்கும் ஸ்ரீ யந்த்ரத்திற்கும் நிறைய தொடர்பு இருக்கிறது. அதனாலேயே இத்தனை பீடிகை! பஞ்ச உலோகத்தில் இரண்டு அடி சதுர அடித்தளத்தில் அதன்பின் ஏழெட்டு அடுக்குகளில் ஒரு ஒண்ணரை அடி உயரத்தில் தாமரை மடல் அவிழ்ந்த மாதிரி ஒரு தோற்றத்தில் கொஞ்சம் கொஞ்சமாக குறுகிக் கொண்டே போய் முடிவில் ஒரு நெற்றிப் பொட் டளவு புள்ளியில் முடிகிற வடிவம் கொண்ட ஸ்ரீ யந்த்ரமானது உலோகமாகும்! மனமோ எங்கே இருக்கிறது என்பதே தெரியாத அரூப வடிவமாகும். ஒன்று தெரியக்கூடியது-இன்னொன்றோ தெரியா தது. இதற்கும் அதற்கும் எப்படி தொடர்பு என்று கேட்கிறீர்களா?

அழுக்குத் துணியை ஒருமுறைக்கு பத்துமுறை. அலசுகிற மாதிரி ஸ்ரீ யந்த்ரம் பற்றி பேசுமுன் திரும்ப திரும்ப உடம்பு, மனசு என்று பேச வேண்டியிருக்

**கிறது. இப்படிப் பேசினாலும் கூட லட்சம் பேருக்கு ஒருவருக்கே இது புரியவரும்!**

**காரணம்... இது ஒரு அற்புதப் புதையல்! இது இருக்குமிடம் எல்லா சக்திகளும் மண்டிக்கொண்டு கிடக்கின்றன!**

அந்த மாளிகை வீட்டின் மாடியில் செண்பகம் விறுவிறுவென்று ஏறிவிட்டாள். படிகள் முடிந்து பெரிய அளவில் ஒரு வராண்டா ஆரம்பமாகியிருந்தது. அதுவும் யாருமின்றி வெறிச்சோடிக் கிடந்தது. சற்றே பயத்துடன் செண்பகம் அதை ஒரு பார்வை பார்த்தாள். வராண் டாவை ஒட்டி பெரிதாக நிலைகாலும் கதவும் தென்பட் டது. அதன் வலது இடது புறங்களில் சாத்தப்பட்டது போல ஜன்னல்கள். கதவில் பூட்டு தொங்கியது. சாதாரண பெட்டிப்பூட்டு. தேர்ந்த திருடன் ஒரு இழுப்பில் பிடுங் கிப் போட்டு விடுவான். பெயருக்கு பூட்டிவிட்டு போனது போல்தான் இருந்தது. அதற்கு மேல் அங்கே பார்ப்பதற்கு எதுவும் இல்லை. யாரையும் காணவுமில்லை. செண்பகம் கொஞ்சம் போல குழம்பிப்போனாள். சாவித்துவாரம் ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தாள். அப்படியும் எதுவுமில்லை. ஜன்னலருகே சென்றாள். கீழிருந்து திவ்யா "அம்மா... அம்மா..." என்று அவளை அழைக்கும் குரல் கேட்டது.

"இருடி வரேன்..." என்று கத்திய போது மட்டும் அந்தக் குரலுக்கான எதிரொலி பல மடங்கு துல்லியமாகக் கேட்டது. ஜன்னல் கதவு கொஞ்சம் ஒதுங்கியிருந்தது. கைவைத்து அழுத்தவும் திறந்து கொண்டது.

அது திறந்து கொள்ளும் போது நைய்ய்...! என்று ஒரு தினுசான சத்தம். திறந்து கொண்ட அந்த கதவ வழியாக உள்பக்கம் பார்த்தாள்.

விசாலமான பெரிய ஹால். ஹால் நடுவே கூரையில் லாந்தர் விளக்கு. தொட்டுத்தொட்டு புத்தக அலமாரிகள்.



அவைகளில் கட்டுக்கட்டாய் பழுப்பேறிப் போன புத்த கங்கள். ஒரு குறிப்பிட்ட அலமாரியில் மட்டும் ஏராள மான பழங்கால சுவடிக்கட்டுகள்.

செண்பகம் அவ்வளவையும் ஒருவித ஆச்சரியத்துடன் தான் பார்த்தாள். சச்சிதானந்தம் ஒரு புத்தகப் புழு என்பதை அதைப் பார்த்த மாத்திரத்தில் விளங்கிவிட்டது. அந்த ஹாலைக் கடந்து ஒரு வாசல்... அது எங்கே போகிறது. அதற்கு அப்பால் என்ன உள்ளது என்பதை அந்த ஜன்னலிடம் மட்டும் நின்று பார்த்து அறிய முடியாது என்பதும் செண்பகத்துக்குப் புரிந்தது.

மொத்தத்தில் யாரும் இல்லை.

ஆனால் சப்தம் கேட்டதே... எப்படி?

அவள் திரும்ப கேள்வி வயப்பட்ட போது எங்கி ருந்தோ டி.வி.யின் மெகா சீரியல் டயலாக்குகள் காதில் விழத்தொடங்கின.

யார் வீட்டிலோ ஒலிக்கும் அந்த வசனங்கள் போல் தான் கொலுசுச் சப்தமும் காதில் விழுந்திருக்குமோ? ஒரு பதில் சமாதானமாக வந்து மனதை நிரப்பியது. ஒரு மாதிரி சமாதானமாகி கீழே இறங்கத் தொடங்கினாள். படுக்கையில் காலில் கட்டுடன் கிடக்கும் திவ்யாவும் "எங்கம்மா போயிட்டே.. எத்தனை தடவை நான் கத்தறது.." என்று ஒரு பாய்ச்சல் பாய்ந்தாள்.

"நீ ஒருத்திடி... மாடிப்பக்கம் போய் எட்டிப்பார்த்துட்டு வரேன். சும்மா சத்தம் அது இதுன்னு கிட்டு... அங்க யாருமில்லை. பெருசா பூட்டுதான் தொங்கிகிட்டு இருக்குது..."

-செண்பகம் அவள் அடுத்தடுத்து கேள்விகளாய் கேட்க இடமேயின்றி பொலபொலவென்று உதிர்த்து விட்டாள்.

"என்னம்மா சொல்றே... இப்ப நீ மாடிக்கா போனே?"

"ஆமாண்டி. நான் என்ன இமயமலைக்கு போனேன்னா சொன்னேன். நீ நம்பாம இப்படி ஒரு கேள்வி கேட்க?"

"உனக்கு பயமா இல்லையா?"

"பயப்படறதுக்கு அது என்ன சுடுகாடா.. உள்ள கூட ஜன்னல் வழியா எட்டிப் பார்த்தேன். அந்த சாமியார் மனுஷன் பெரிய புத்தகப்பிரியர் போல தெரியுது. அலமாரி அலமாரியா புத்தகங்க... இதுல ஏட்டுக்கட்டுங்க வேற!"

"நிஜமாவா?"

"என்ன நீ திரும்பத் திரும்ப நம்பமாலே கேள்வி கேட்டுட்டு. நீ வேணா போய்ப்பாரு. அங்க எதுவும் இல்ல. யாரும் இல்லை."

"அப்ப அந்த சத்தம்?"

"அக்கம் பக்கம் வீடுங்கல்ல டி.வி. போட்டிருப்பாங்க. அதுல இருந்து வந்ததா இருக்கும்..."

"அது எப்படி மாடில இருந்து கீழே கேட்கும்...?"

"உனக்கு என்னால பதில் சொல்ல முடியாது. நீ தேவையில்லாம குழப்பிக்கிற. அமைதியா ரெஸ்ட் எடுத்துக்கற வழியப்பாரு..."

"அப்ப பயப்பட ஒண்ணுமில்லேங்கறே..."

"ஒண்ணுமில்லே... ஒண்ணுமில்லே... ஒண்ணுமில்லே..."

செண்பகம் கோர்ட்டில் டவாலி கூறுவது போல சொன்னது அவளையும் சற்று லேசாக்கியது. "அப்பாடா..." என்று ஒரு நிம்மதிப் பெருமூச்சு அவளிடம்.

அந்த மாளிகை வாசலிலும் ஆட்டோ தேங்கும் சப்தம். செண்பகம் யாரென்று எழுந்து சென்று பார்த்தாள். தேவநாதனின் அம்மா கல்யாணி, அக்கா வனிதா, தங்கை ஜெயந்தி என்று மூவரும் ஒரே ஒரு சிறு சூட்கேசுடன் இறங்கிக் கொண்டிருந்தனர்.



செண்பகம் உடனே அவர்களை வரவேற்க ஓடினாள்.

"வாங்க... வாங்க... வாங்க சம்பந்தியம்மா... வாங்க..." கல்யாணியும் சிரித்தபடி அதை அங்கீகரித்தவளாக உள்ளே நுழைந்தாள். வனிதாவும், ஜெயந்தியும் அந்த மாளிகை வீட்டைப் பார்த்து மிரண்டு போயிருந்தனர். தயங்கித் தயங்கி அவர்கள் நடந்து வருவதில் தெரிந்தது அது. பார்வையிலும் ஏராள அளவில் மிரட்சி.

"காலையில் இருந்தே உங்களை எதிர்பார்த்துகிட்டு இருக்கோம்." என்றபடி கல்யாணியை திவ்யா படுத்தபடி இருக்கும் படுக்கை அறைக்குள் கூட்டிச் சென்றாள் செண்பகம். திவ்யாவுக்கு மாமியாரைப் பார்க்கவும் கொஞ்சம் கருக்கென்றது. இருந்தும் சுதாரித்தாள்.

"வாங்கத்தை... இப்பதான் வர்றீங்களா?"

"ஆமாம்மா... உனக்கு இப்ப எப்படி இருக்கு?"

"அஞ்சாறு மாசம்... அசையக்கூட கூடாதுன்னு சொல்லிட்டார் டாக்டர்..." -பதில் செண்பகத்திடம் இருந்து வந்தது...

"அடடா! அதனால என்ன? எல்லாத்தையும் பார்த்துக்கத்தான் நீங்க இங்க இருக்கீங்களே..."

-கல்யாணியின் பதிலால் செண்பகம் முகம் லேசான அதிர்வைக் காட்டியது. அவர்களும் ஒரே ஒரு சூட்கேசுடன் தற்காலிகமாக தங்கிவிட்டு செல்ல வந்தவர்கள் போல்தான் தோன்றினார்கள்.

"என்ன சம்பந்தியம்மா... அப்படி சொல்லீட்டீங்க. திவ்யா எங்க மகதான். இல்லேங்கலே... ஆனா அவ கழுத்துல எப்ப தாலி ஏறிடிச்சோ அப்ப இருந்தே அவ உங்க வீட்டுப் பொண்ணாயிட்டா... நீங்க அவளைப் பார்த்துக்கறதுதானே முறை..."

-செண்பகம் வெகுவேகமா கல்யாணிக்கு ஒரு பதிலைச் சொன்னாள். அதற்குள் வனிதாவும் ஜெயந்தியும் வீட்டை

ஒரு நோட்டம் போட்டு முடித்தவர்களாக "நல்லா பெரிய வீடாத்தான் பார்த்து வெச்சிருக்கான்..." என்றபடியே அந்த அறைக்குள் நுழைந்தனர்.

"வாங்கக்கா..." -என்று திவ்யாவும் அவளை மிக செயற்கையாக வரவேற்றாள்.

"ஒரு நிமிஷம்..." -என்று வெட்டிக் கொண்டு அங்கிருந்து நழுவினாள் செண்பகம்.

"எங்கே போறீங்க...?" -பிடித்து இழுத்தாள் கல்யாணி.

"உங்களுக்கும் ஒரு காபி கூட கொடுக்கல... அதான்!"

"அட... அதெல்லாம் எதுக்கு? நாங்க வர்ற வழியில குடிச்சுட்டுத்தான் வந்தோம். அடுத்த பஸ்சுக்கே கிளம்பிடலாம்னு... ஆமா தேவா எப்ப வருவான்?"

-கல்யாணியின் கேள்வி செண்பகத்தின் நெஞ்சில் குத்தியது.

ஒரு மூணாம் மனுஷி போல அவள் கேட்பதும், அங்கே இருக்க தவிப்பதும் அவளால் புரிந்து கொள்ள முடிந்தது. இத்தனைக்கும் உறவு துளிர்விட்டு முழுதாக ஒரு வாரம் கூட ஆகவில்லை. அவள் பார்வை படுத்தபடி கிடக்கும் திவ்யாமேல் தான் சென்றது. அவளோ கல்யாணியின் அந்த விட்டேத்தியான பதிலுக்காக துளியும் கவலைப்பட்ட மாதிரியே தெரியவில்லை. செண்பகமும் 'உங்க வீடு... உங்க மருமக...' என்று பேசுவதும் துளியும் பிடிக்கவில்லை. உம்மென்று முறைத்தாள்.

"நீங்க அப்படியெல்லாம் சொல்லக்கூடாது... ஒரு நிமிஷம் வர்றீங்களா...?" -செண்பகம் கையைப் பிடித்தே இழுத்துக் கொண்டு சமையல்கட்டு நோக்கி சென்றாள்.

வனிதாவும் ஜெயந்தியும் செயற்கையாக திவ்யாவிடம் நலம் விசாரிக்கத் தொடங்கிவிட்டனர். சமையல் கட்டில்...



"சம்பந்திம்மா... என்ன நீங்க? ஏன் மூணாம் மனுஷங்க மாதிரியே பேசறீங்க..."

"மாதிரி இல்லே... நாங்க அப்படித்தான்! உங்க பொண்ணு என் மகன்கிட்ட பேசுனதை நீங்க கேட்கல. நான் கேட்டவ. நான் இப்ப ரொம்ப பெருந்தன்மையா நடந்துகிட்டிருக்கேன் சம்பந்திம்மா..."

"தெரியும். என் மக எப்படின்னு எனக்கு நல்லா தெரியும். நீங்களாவது கேட்டுதான் தெரிஞ்சுகிட்டீங்க. நான் கேட்காமலே அவ எப்ப எப்படி சிந்திப்பான்னு சொல்வேன்.

எல்லாம் காலத்தோட கோலம். ஒரு காலத்துல கூட்டு குடும்பமா ஒருமரத்து பறவைகளா ஒண்ணா இருந்தோம். அப்புறம் பிரிஞ்சு தனித்தனியா போனோம். ஆனாலும் அதுக்கு கொஞ்ச காலம் எடுத்துகிட்டோம். ஆனா இப்ப அப்படியெல்லாம் இல்ல... கல்யாணம் நிச்சயம் பண்ணும் போதே உறவுகளுக்கு நூத்திநாப்பத்தி நாலு சட்டம் போடாத குறைதான்.

இந்த காலத்து பெண்களுக்கு தான் தன் புருஷன்தான் குடும்பம்கிற எண்ணம் உருவாயிடிச்சு. என் பொண்ணு அதுல ஒரு படிகூட...

உண்மைய சொல்லப்போனா... அவளுக்கு நீங்க மாமியாரா கிடைக்க அவ கொடுத்து வெச்சிருக்கணும். என் பையன் என் வீடுன்னு பதிலுக்கு பதில் முண்டா தட்டாம ஒதுங்கிப்போக நீங்க விரும்பும்போதே நீங்க ரசாபாசத்தை விரும்பலைங்கறது தெரிஞ்சுபோச்சு. உங்களை கெஞ்சி கேட்டுக்கறேன். அவங்கள தனியா விடாதீங்க. கூட இருங்க... அதுதான் அவளுக்கு நல்லது. இல்லாட்டி...!"

-செண்பகம் பெரிதாக ரகசியம் போல ஒன்றை சொல்லவந்து எதனாலேயோ சொல்லாமல் தயங்கி நின்றாள்.

அதே சமயம் அதிசயமாக அந்த சமையல் கட்டில் பூனை ஒன்று ஓடியது. அதன் நடு உடம்பில் அழகாக பூட்டியதுபோல ஒரு தங்கச் சங்கிலி... கழுத்திலும் ஒரு கல் வளையல்!

அப்படியே பளபளவென்று ஜொலித்தது!

## 15

ஸ்ரீ யந்த்ரம் ஒரு புதையல்! அதனுள் சர்வ மய சக்திகளும் புதைந்து கிடப்பதாகக் கூறப்படுவதை எப்படிப் புரிந்து கொள்வது? புரிதல்களை அப்படியே ஒதுக்கிவிட்டு ஸ்ரீ யந்த்ரத்துக்குள் நுழையும் போது அது ஒரு புதையல் சர்வமய சக்திகளும் உடையது என்பது நாம் உணர வேண்டிய ஒன்றாகிறது.

எப்படி என்கிற கேள்விக்கு முன் அதன் வடிவத்தைத் தெளிவாக்கிக் கொண்டு விடுவது நல்லது. ஒன்றின்மேல் ஒன்று என்று ஒன்பது அடுக்கு உடையது ஸ்ரீ யந்த்ரம்.

அடித்தளம் இதில் முதலாகிறது. இதை பூபுரம் என்பார்கள். அடுத்தது ஷோடசதள என்னும் பதினாறு இதழ்கள் கொண்ட பாகம். இதன்மேல் மூன்றாவதாக அஷ்ட தளமாகிய எட்டு இதழ்கள் கொண்ட பாகம், நான்காவதாக சதுர்தசாரம் (இதில் பதினான்கு கோணங்கள் உள்ளது) ஐந்தாவது பஹிர்தசாரம் என்னும் உள்பத்து கோண அடுக்கு. ஆறாவதாக அந்தர்தசாரம் என்னும் வெளிப்பத்து கோணங்கள். ஏழாவதாக அஷ்டகோணம் என்னும் எட்டு கோணம், எட்டாவதாக த்ரிகோணம். அதாவது மூன்று கோணம். ஒன்பதாவதாக பிந்து என்னும் மையப்புள்ளி. இப்படி ஒன்பது வித தளங்கள் ஒன்றன்மேல் ஒன்றாக ஒரு கூம்பு போல் உயர்ந்து



அமைந்திருப்பதே ஸ்ரீயந்த்ர வடிவமாகும். இதை சுருக்கமாக ஒன்பது ஆவரணங்கள் என்பார்கள்.

ஸ்ரீயந்த்ரத்திற்கு இன்னொரு பெயரும் உண்டு. 'மஹாமேரு' என்றும் கூறுவார்கள்.

இப்படி ஸ்ரீயந்த்ரம் என்றும், மஹாமேரு என்றும் அழைக்கப்படும் இந்த வடிவம் எப்படி அனைத்து சக்திகளின் அடிப்படை ஆதாரமாகத் திகழ்கிறது?

எதனால் இது ஒன்பது தளங்களில் இதழ்கள், முக்கோணங்கள் கொண்டதாக வடிவமைக்கப் பட்டது?

இது ஏன் அடிப்பாகம் சதுரமாகவும், உச்சிப்பாகம் குறுகி முக்கோணம் போல சுருங்கி பிந்து என்னும் ஒன்பதாவது தளமான புள்ளியோடு முடிகிறது?

கேள்விகள்...

கேள்விகள்...

கேள்விகள்...!

மெல்ல அதற்கான விடைகளை தேடிச் செல்வோமா?

கல்யாணியும், செண்பகமும் பார்க்க, அந்தப் பூனை விருட்டென்று சமையல்கட்டின் ஜன்னல் மேல் தாவி வெளிப்பக்கமாய் ஓடிப் போய்விட்டது.

நகை அணிந்த பூனையை அவர்கள் வாழ்நாளில் பார்ப்பது இதுதான் முதன்முறை! அடுத்த நொடி இருவரிடமும் திவ்யா பற்றிய பேச்சு அறுந்து போனது. ஊருக்கு போவதா இங்கேயே இருப்பதா என்கிற எல்லாவித சிந்தனைகளும் அப்படியே தொக்கிக் கொண்டு நிற்க, மனது அந்தப் பூனை பின்னால் ஓடத் தொடங்கியது.

"என்னங்க இது? அந்த பூனை கழுத்துல... கால்ல எல்லாம் நகைங்க...!"

"அதானே... அது யார்வீட்டு பூனை?"

"யார் வீட்டுதா இருந்தா என்ன.. இப்படியா பளபளன்னு நகைங்கள மாட்டிவிடுவாங்க?"

"அதானே... குபேரன்கூட இப்படி பண்ணமாட்டான். அதுதான் அந்த நகைங்கள எப்படியாச்சும் எடுத்து மாட்டிகிட்டிருக்கும்..."

-கல்யாணி தனக்கு தோன்றிய பதிலோடு அந்தப் பூனை எங்கே போகிறது என்று பார்க்க சமையல் அறையை விட்டு வெளியில் வந்தாள்.

பூனையைத் துழாவத் தொடங்கியது பார்வை.

எதிரில் வந்தனர் வனிதாவும் ஜெயந்தியும்!

"என்னம்மா... யாரைத் தேடறே?" வனிதாதான் கேட்டாள்.

"ஒரு பூனையடி... கழுத்து கொள்ளாத நகையோட ஓடிப் போச்சு. நீங்க பாக்கலை?"

"பூனையா... அதோட கழுத்துல நகையா?"

"ஆமாம்மா. நானும் பார்த்தேன். உடம்புல தங்கச் சங்கிலி. கழுத்துல கல் வளையல்னு நாங்க பார்த்துகிட்டு இருக்கும்போதே ஓடிப்போயிடிச்சு." என்று ஆமோதித்தபடி வந்தாள் திவ்யாவின் அம்மா செண்பகம்.

அவ்வளவுதான்...

அவர்களையும் ஆர்வம் தொற்றிக் கொண்டது.

"என்னங்க நீங்க... பூனை மேல நகையா?" - என்று நம்பாதது போலக் கேட்டாலும் ஆர்வமாகத் தேட ஆரம்பித்து விட்டாள் வனிதா.

சின்னவள் ஜெயந்தியையும் ஆர்வம் தொற்றிக் கொண்டது. "மியாவ்... மியாவ்" என்று குரல் கொடுத்துக் கொண்டே அவளும் ஒரு பக்கமாக தேடிக் கொண்டு போனாள்.



மொத்தத்தில் திவ்யா பற்றிய கசப்பு, அங்கேயே தங்குவதா வேண்டாமா என்கிற கேள்விக்கான குழப்பம் எல்லாம் ஒரு மூலையாக பார்த்து ஓடி ஒளிந்து கொண்டு விட்டன.

வனிதா அந்தப் பூனையை மாடிப் படியருகே பார்த்து அசந்து விட்டாள். நடுப்படி மேல் ஏதோ நாற்காலி மேல் அமர்ந்திருக்கும் ராஜா கணக்காக அது!

செண்பகம் சொன்னதுபோல கழுத்தில் கல் வளையல். நிச்சயம் வைரமாக இருக்க வேண்டும். ஜொலித்தது.

வனிதா பார்க்கவும், மேலேறி ஓடத் தொடங்கியது பூனை.

சச்சிதானந்தம் எங்கே போகவே கூடாது என்று சொல்லியிருந்தாரோ அதே மாடிப் பக்கம்தான் அதுவும் ஓடியது. இது எதுவும் தெரியாத வனிதாவும் துரத்திக் கொண்டே மேலே ஓடினாள்.

அதுவும் வராண்டாவில் ஓடி பூட்டிய கதவுக்கு பக்கத்தில் திறந்து கிடந்த ஜன்னல் கம்பி வழியாக மாடி போர்ஷனுக்குள் குதித்தது.

"நில்லு... நில்லு..." என்றபடியே பின் தொடர்ந்த வனிதாவும் ஜன்னல் வழியே உள்ளே பார்த்தாள். முன்ப செண்பகம் பார்த்த அதே காட்சிகள். வரிசையாக புத்தக அலமாரி... பழைய புத்தகங்கள், நடுநடுவே ஓலைச் சுவடிக் கட்டுக்கள்.

ஆச்சரியம் வனிதா விழிகளை நிரப்பியது.

ஏமாற்றத்துடன் இறங்கி வரும் போது மாடிப் படியில் ஏதோ ஜொலித்தது. என்ன என்று எடுத்துப் பார்த்தாள். சங்கிலியோடு இணைந்து தொங்கும் டாலர். நடுவில் பச்சை மரகதக் கல்!

அவள் விழிகள் அகண்டன!

சேலம்!

வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தான் பிரகாஷ். பார்க்க அதிக களைப்புடன் தெரிந்தான்.

ஆபீசில் அதிக வேலை இருந்திருக்க வேண்டும். லஷ்மி அவனை ஒரு காபி டம்ளருடன் எதிர் கொண் டாள். லேசான வியர்வை துளிர்த்த நெற்றியை தொட்டு தலை வரை வருடி விட்டாள்.

அவனிடம் பெருமூச்சு.

"என்னப்பா... ரொம்ப டல்லா இருக்கீங்க?"

"புது மேனேஜர் பிழியறான் போட்டு."

"அதனால என்ன... காபியை சாப்பிட்டுட்டு கொஞ்சம் ரெஸ்ட் எடுங்க. நான் டிபன் பண்றேன். சாப்ட்டு நல்லா படுத்து தூங்குங்க..."

"இல்ல லஷ்மி... இனி என்னால தூங்க முடியாது."

-சட்டையை கழற்றியபடியே புலம்பலைத் தொடர்ந் தான். சட்டையில் அங்கங்கே ரத்தப் புள்ளிகள்.

அதை அவள் பார்க்காதபடி மறைத்தான்.

"தெரியும்... தண்ணியடிச்சாதான் தூங்க முடியும்னு ஆரம்பிச்சிடாதீங்க... இப்பதான் அந்த பாழாப் போன பழக்கத்துகிட்ட இருந்து கொஞ்சம் மீண்டிருக்கீங்க. திரும்ப ஆரம்பிச்சிடாதீங்க..."

-லஷ்மியின் கவலையில் நியாயம் இருந்தாலும் அதை பிரகாஷ் துளி கூட சட்டையே செய்யவில்லை... அவனது பேண்ட் பாக்கெட்டில் ஒரு குவாட்டர் பாட்டில் ஒளிந்திருந்தது. எடுத்து மளமளவென்று ஊற்றிக் கொள்ள ஆரம்பித்தான்.

லஷ்மி கண்களில் கண்ணீர் சேர அவனை வெறிக்கத் தொடங்கினாள்.



தொடர்ந்து பேச முடியாதபடி வாசற்புறம் பக்கத்து வீட்டுப் பெண்ணின் குரல்.

"லஷ்மி... லஷ்மி..."

"வந்துட்டேன் கமலாக்கா..."

"என்ன பண்ணிகிட்டிருக்கே?"

"ஒண்ணும் பண்ணலை... என்னக்கா விஷயம்?" - லஷ்மி கேட்க வந்தவள் பிரகாஷ் மடக் மடக்கென்று குடிப்பதைப் பார்த்தாள்.

"என்ன லட்சுமி.. ஆபீஸ்ல இருந்து வந்து அஞ்சு நிமிஷம் கூட ஆகலை... அதுக்குள்ளயா?"

-பதிலுக்கு லஷ்மி கண்ணீரைத்தான் சுண்டிவிட்டுக் கொண்டாள்.

அவனோ அவர்கள் கவனிப்பது பற்றி கவலையே படவில்லை. பெட்ரூம் நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

"விடுங்கக்கா... எல்லாம் என் தலை எழுத்து, நீங்க எங்க வந்தீங்க?"

"எல்லாம் உன் வீட்டுக்காரர் பத்தி பேசத்தான்..."

"புதுசா பேச என்ன இருக்கு?"

"என்னம்மா உனக்கு எதுவுமே தெரியாதா?"

"என்ன கமலாக்கா... என்ன தெரியணும்?"

"சரிதான்... இப்பதான் என் வீட்டுக்காரர் சொன்னாரு"

"ஐய்யோ... என்னன்னுதான் சொல்லுங்களேன்"

"உங்க வீட்டுக்காரர் ஆபீஸ்ல ரத்த வாந்தி எடுத்தா ராமே?" -கமலா என்கிற அந்த பெண் கேட்ட கேள்வி லஷ்மிக்கு நெஞ்சில் ஒரு குத்து போல வந்து விழுந்தது.

"யார் சொன்னது?"

"அட... என் வீட்டுக்காரர்னு சொல்றேன்ல"

"நிஜமாவா?"

"அவர் எதுக்கு இதுல எல்லாம் பொய் சொல்லணும். போய் உன் வீட்டுக்காரர்கிட்டையே கேளு..." -கமலா ஏற்றிவிட்டு விட்டு விலகிக் கொள்ள நெஞ்சுக் கூடு பதற பெட்ரூமுக்குள் நுழைந்தாள் லஷ்மி.

"என்னங்க...?"

-அவன் போதைப் பார்வை பார்த்தான் பதிலுக்கு.

"என்னங்க இது... நீங்க ரத்தவாந்தி எடுத்தீங் களாமே?"

அவன் பதிலுக்கு வெறித்தான்.

"உங்களைத்தாங்க... என்னங்க நடந்துச்சு?"

-நரம்பு புடைக்க கத்தினாள் லஷ்மி.

"நான் சொல்றேம்மா..." -பதில் பின்புறம் கமலாவின் கணவனும், பிரகாஷுடன் அலுவலகத்தில் வேலை செய்பவனுமான கதிர்வேலிடம் இருந்து வந்தது.

"என்னண்ணே... என்ன விஷயம்?"

"சொல்றேம்மா... ஆமா திரும்ப ஊத்திக்க ஆரம்பிச்சுட்டானா?"

"வந்ததும் முதல்வேலையே அதுதான்."

"முதல்ல பாட்டிலைப் பிடுங்கு. இனி ஒரு அவுன்ஸ் பிராந்தி உள்ள போனாலும் பரலோகம்தான்னு டாக்டர் சொல்லிட்டார்.

உள்ள ஈரல் எல்லாம் அரிச்சுக் கிடக்குதாம். ஆப ரேஷன் பண்ணி ஆகணுமாம். முதல் காரியமா அட்மிட் பண்ணுங்கன்னாங்க. நாங்களும் சரி பண்ணிடுங்கன் னோம். ஆனா, நாங்க ஆஸ்பத்திரி ரிசப்ஷன்ல உக்காந்து கிட்டு இருக்கும்போதே வேற பக்கமா நைசா நழு விட்டான்.

பார்த்தா பாட்டிலோட வீட்டுக்கே வந்துட்டான். இப்படி இருந்தா எப்படிம்மா?"



"இல்ல கதிர்வேலு... இனி நான் பொழைக்க மாட்டேன். ஆபரேஷன் அது இதுன்னு எனக்கு செலவு வைக்காதீங்க. அப்புறம் நான் சாவப் போறது மட்டுமில்ல... என் பொண் டாட்டியும் கடன்காரியா நிக்கணும். வேணாம் விட்றுங்க. அதான் ஆஸ்பத்திரிய விட்டு ஓடி வந்துட்டேன்."

-என்று பிரகாஷும் ஒரு விளக்கம் தர லஷ்மி ஒரு மூலையில் போய் நிலைகுலைந்து உட்கார்ந்து விட்டாள்.

"என்னம்மா... எதுக்காக இப்படி இடிஞ்சு உக்கார்றே... ஆபரேஷன் பண்ணா சுத்தமா நல்லாயிடும்னார் டாக்டர். இவனோட முதல்ல ஆஸ்பத்திரிக்கு கிளம்பு..."

-கதிர்வேல் கொடுத்த ஊக்கம் வேலை செய்யவில்லை. லஷ்மியின் விழிகளில் கண்ணீர் அருவியாட்டம் கொட் டிக் கொண்டேயிருந்தது.

"போனவாரம் உங்க சொந்தக்காரங்க கல்யாணத்துக்கு போன இடத்துல இஷ்டத்துக்கும் தண்ணி அடிச்சிருக் கான். அவ்வளவும் கள்ளச்சரக்கு... அதான் வேலையைக் காட்டிடுச்சு..."

"தெரியும்ணே... என்னை வரக்கூடாதுன்னு சொல் லிட்டு இவர் மட்டும்தான் முதல்ல போனாரு. இவருக்கே தெரியாம பின்னால நான் போய் நின்னேன். அங்க கல்யாண மாப்பிளையும் ஒரு போதைக்காரன். கல்யாணம் நின்னு போய் ஒரே குழப்பமாயிடுச்சு. ஆகையால கவன மெல்லாம் அதுலபோய் நல்லவேளை தேவநாதன் அண்ணன் கைகொடுத்ததால கல்யாணம் நடந்துச்சு... அப்ப இந்த மனுஷன் சைட்ல இஷ்டத்துக்கும் ஊத்திக் கப் போய்ட்டார். அப்பவே பயந்தேன்... ஆனா, அது இவ்வளவு தூரத்துக்கு வரும்னு நினைக்கலை..."

"இப்ப அதை எல்லாம் பேசற நேரமில்ல. ஆஸ்பத்தி ரிக்கு முதல்ல கூட்டிகிட்டு போ. ரிசப்ஷன்ல முப்பதா யிரம் கட்டணும்னாங்க. அதுக்கு மட்டும் எப்படியாவது ஏற்பாடு பண்ணிக்க..."

-கதிர்வேலு இறுதியாக ஒரு குண்டைப் போட்டுவிட்டு வந்த மாதிரியே திரும்ப லஷ்மிக்கு தலையை சுற்ற ஆரம்பித்துவிட்டது.

❖ ❖ ❖

வீட்டுக்குள் நுழைந்த தேவநாதனுக்கு ஒரே ஆச்சரியமாகிவிட்டது. அத்தனை பெண்களும் ஒற்றுமையாக உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். நெடுநாட்களுக்குப் பிறகு அவன் பார்க்கும் ஒரு சந்தோஷமான காட்சி.

அவனிடமும் அவர்கள் அந்த நகைப் பூனை பற்றித்தான் பேசினார்கள்.

"தேவா... இந்த பங்களா வீட்ல ஒரு பூனை... பணக்கார பொம்பள மாதிரி உடம்பு பூரா நகையை மாட்டிகிட்டு சுத்திகிட்டு இருக்கு தெரியுமா?" -என்று ஆரம்பித்தாள் வனிதா.

தேவாவிடம் ஒரு மெல்லிய ஆச்சரிய பரவல் "அது மாடில இருக்கற ரூம்லதான் இருக்குது போல இருக்கு. நானும் போய் பார்த்தேன். ஓடிப்போயிடிச்சு." -என்று வனிதா தொடரவும் பகீர் என்றது.

"என்னது... மாடில இருக்குதா அந்த பூனை?"

"ஆமாம் மாப்ளை... நான் கூட போய்ப்பார்த்தேன். அது இந்த வீட்டு பூனையா... இல்ல அக்கம் பக்கம் எங்க இருந்தாச்சும் வருதா... ஒண்ணும்புரியல..." -என்றாள் செண்பகமும்.

"அத்தை... அப்ப நீங்களும் மாடிக்கு போனீங்களா?"

"ஆமாம் மாப்ள... திவ்யா வேற ரொம்ப பயந்தா... சரி என்னதான் இருக்குன்னு போய் பார்த்துடுவோமேன்னு போய் பார்த்தேன். ஒண்ணுமில்ல... அந்த சாமியார் பெரியவர் இஷ்டத்துக்கும் புத்தகமா வெச்சிருக்காரு. அலமாரி அலமாரியா புத்தகம்..."



-சர்வசாதாரணமாக எந்த நிரடலும் இன்றி செண்பகம் பேசியது தேவநாதன் மனதில் உப்புக்காகிதத்தால் தேய்க்கிற மாதிரி ஒரு உணர்ச்சியை மூட்டியது. அதே சமயம் மீண்டும் அந்த பூனை... அதே அளவு நகைகளோடு மியாவ்!

## 16

'எந்திரம் என்பது குறித்தும் யந்த்ரம் என்பது குறித்தும் முதலில் பகுத்துணர்ந்தோம். பின் யந்த்ரம் என்பது ஒரு வரைபடம் என்பதில் தொடங்கி அது எப்படி கருவிகளோடு இயங்கும் எந்திரத்தின் மேலானதாகும்? வெறும் வரைபடம் எப்படி ஒரு எந்திரம் போல் இயங்கமுடியும் என்கிற கேள்விகளில் விழுந்தோம்.

அது (வரைபடம்) இயங்குவதை உணர நமக்கு நம் உடம்பு புரிய வேண்டும் என்பதை அறிந்து உடம்பு குறித்து சிறிது சிந்தித்தோம். பின் உடம்பின்கண் இருந்து இயங்கும் மனம் குறித்தும் சிந்தித்தோம்.

இத்தனை சிந்தனைகளுக்குப் பிறகு ஸ்ரீ யந்த்ரம் எப்படிப்பட்ட வடிவம் கொண்டது எனப் பார்த்தோம். பூபுரத்தில் தொடங்கி பிந்துவில் முடிந்த அதன் வடிவம் இப்பொழுது புலனாகிவிட்டது.

இப்பொழுது வேறு விதமாய் கேள்விகள்!

ஸ்ரீ யந்த்ரம் ஏன் இப்படி பூபுரத்தில் தொடங்கி உயர்ந்து கொண்டே சென்று பின் ஒரு முக்கோண வடிவில் பிந்துவில் முடிகிறது.

அதில் எதற்கு இதழ் வடிவில். கோணவடிவில் தளங்கள்?

இப்படிப் பலவிதமான கேள்விகள் எழுவதை நாம் வேறு விதமாகவும் பார்க்கலாம். ஒரு கார் இருக்கிறது. அது ஏன் செவ்வகமாக இருக்கிறது? அதற்கு ஏன் நான்கு சக்கரங்கள், அதற்கு எதற்கு ஸ்டியரிங்? அதற்கு எதற்கு பிரேக் என்றெல்லாம் கேள்விகள் எழும்பினால் அதற்கெல்லாம் சரியான ஒரு விடை இருப்பதுபோல இதற்கும் மிகச் சரியான ஒரு விடை இருக்கிறது.

இந்த விடை மிக மிக ஆச்சரியமூட்டுவது. பொதுவில் யந்த்ரங்களை முற்றிலுமாய் புரிந்து அதன் சக்தியைப் பயன்படுத்திக் கொள்ளும் வல்லமை ஒரு சில ஆன்மீக நாட்டமுடைய பழுத்த ஞானியர்களுக்கே உண்டு.

மற்றவர்கள் எந்த ஒரு யந்த்ரத்தையும் புரிந்து கொள்ள முயன்றதில்லை... சுலபமாக புரிந்து கொள்ளும் விதத்தில் அது இருந்ததுமில்லை.

அதிலும் யந்த்ரங்களின் தாயான ஸ்ரீ யந்த்ரத்தை விளங்கிக் கொள்ளுதல் என்பது அசாதாரணமான ஒன்று. ஆனால் விளங்கிக் கொண்டு விட்டாலோ ஒரு புது சக்தி நம்முள்ளே புகுந்து செயல்படத் தொடங்குவதை நாம் உணரலாம்.

அந்த வகையில் ஸ்ரீ யந்த்ரம் தொட்டு எழும் எந்த ஒரு கேள்வியையும் விட்டுவிட வேண்டாம். கேள்விக்குள்ளேயே பதிலும் இருக்கிறது. அது போகப் போக விளங்கும்.

இப்பொழுது ஒன்பது அடுக்கு கொண்ட முக்கோண வடிவிலான ஸ்ரீ யந்த்ரத்தில் அதன் ஒவ்வொரு தளத்தையும் வரிசையாக புரிந்து கொள்ள முயல்வோம். முன்பே பார்த்தோம்... முதல் தளம் 'பூபுரம்' என்று. இது சதுரமான தளம். நான்கு புறமும் நான்கு வாயில்களையும் உடையது. கூடவே இதில் மூன்று ரேகைகளும் உண்டு.

மேலே உள்ள அமைப்புதான் பூபுரம். இதில் உள்ளே மூன்று சக்கரங்கள் உள்ளதல்லவா...?



இதுதான் மூன்று ரேகைகள். இதை 'த்ரைலோக்ய மோஹன சக்ரம்' என்பார்கள். இது பற்றி விரிவாக பார்க்கும்போது ஏராளமான ஆச்சரியங்கள் நமக்கு ஏற்படப் போவது நிச்சயம்.

கார், லாரி, பஸ் போன்ற வாகனங்களை ஓட்டுகின்றவர்கள் தங்கள் பயணத்தின்போது சாலைகளில் பல குறியீடுகளைப் பார்ப்பார்கள். அது அடுத்து வரப்போவது வளைவுப்பாதையா, அடுத்து வரப்போவது குறுகிய பாலமா என்று அந்த சாலையின் போக்கில் உள்ளதை முன்னதாகவே அந்த வரைபடக் குறிப்பு மூலம் சொல்லிவிடும்.

அதற்கு ஏற்ப காரோட்டியும் எச்சரிக்கையாக தயாராகிவிடுவார்.

அந்த குறியீடு எப்படி ஒரு பொருளை உணர்த்துகிறதோ அப்படித்தான் இந்த சதுர பூபுரமும். இதனுள் உள்ள வட்டமான மூன்று ரேகைகளும் இந்த 'த்ரைலோக்ய மோஹன ரேகைகள்' எதை உணர்த்துகின்றன?

பார்ப்போம்!

தேவநாதன் எதிரில் ஓடிய அந்த நகைப் பூனை ஒரு வினாடி அவனை அதிரத்தான் விட்டது. 'நன்றாக நீ என்னைக் கவனிக்கலாம்' என்கிற மாதிரி நின்று அவனை ஒரு பார்வையும் பார்த்தது.

அவன் கண்களில் அடுத்த நொடியே பெரிய அளவில் விரிவு...

"அண்ணே... என்னண்ணே அதை பார்த்துகிட்டு நிக்கறே. பிடிண்ணே..." -என்றாள் அவன் தங்கை ஜெயந்தி.

அவனுக்கோ கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. இவர்கள் ஆளுக்கு ஆள் மாற்றி மாற்றி பேசிக்கொள் வதைக் கேட்டவளாக திவ்யாவே மாவுக்கால் கட்டுடன் கட்டிலில் இருந்து எழுந்து விட்டாள். கெந்திக் கெந்தி

நடந்து வந்து அறையின் நிலைகால் கதவு அருகே கதவைப் பற்றி நின்றவள் கண்ணிலும் அந்த பூனை பளிச்சென்று பட்டது.

இப்படி ஆளுக்கு ஆள் தன்னைப் பார்ப்பதை உணர்ந்த அந்த பூனைக்கு என்ன தோன்றியதோ விருட்டென்று உதறிக் கொண்டு தாவி ஓடப்பார்த்தது. அந்த முயற்சியில் அதன் உடம்பின் மேல் அது அணிந்தது போல் கிடந்த நகைகள் அப்படியே தரைமேல் உதிர்ந்து விழுந்தன.

அது உதிர்ந்து விழவும் பார்வை அதன் மேல்தான் சென்றது. பூனையை ஒருவரும் அதன்பின் சட்டை செய்யவில்லை. வனிதா ஓடிப்போய் அந்த நகைகளை கையில் எடுத்துக் கொண்டு வந்து தேவநாதன் எதிரில் நின்றாள்.

"எங்க... எங்ககாட்டு பார்ப்போம்..." -என்று ஜெயந்தியும், கல்யாணியும், செண்பகமும் மாறிமாறிப் பார்த்தனர்.

"அம்மா... என்னம்மா அது? எனக்கு காட்டமாட்டியா?" -என்று திவ்யா கேட்கவும்தான் அவளையே கவனித்தனர்.

"அடிப்பாவி மகளே... எதுக்குடி இப்படி படுக்கையை விட்டு எழுந்திரிச்செல்லாம் வந்து நிக்கறே..." -என்றபடியே செண்பகம் அவள் அருகே சென்றாள்.

"அம்மா அது என்னம்மா...?"

"ஒண்ணுமில்லம்மா... எங்கயும் இல்லாத அதிசயமா இந்த வீட்ல பூனை கூட நகைங்க போட்டுகிட்டு திரியுது பாரு... கல் வளையல், அட்டிகை, சங்கிலி!" -கல்யாணி அந்த நகைகளோடு திவ்யா முன் வந்தாள்.

திவ்யா முகத்திலும் ஒரு திடீர் பரவசம்! ஆனால் தேவநாதனோ ஸ்தம்பிப்பில் இருந்து துளியும் விடுபடவேயில்லை.



கல்யாணி மெல்ல அதை கவனித்தவளாக அவனை நெருங்கி

"தேவா..."

"..."

"டேய்... தம்பி!"

"உம்!"

"என்னய்யா சிலையாட்டம் நின்னுட்டே?"

"அது... அது..."

"என்ன... என்ன குழப்பம் உன்னுள்ளே?"

"குழப்பம் இல்லம்மா அதிர்ச்சி..."

-கல்யாணி கேள்விகளாய் கேட்க தேவநாதன் பதில் சொல்ல அதை செண்பகமும் திவ்யாவும் கூட கூர்ந்து கேட்கத் தொடங்கினர்.

"என்னய்யா அதிர்ச்சி... பூனைகூட நகை போட்டுகிட்டிருக்கேன்னா..."

"அது இல்லம்மா..."

"பின்ன?"

"வனிதா அந்த மாடிக்கு போனேன்னு சொன்னா பார் அது..."

"அவ மட்டுமா போனா... உன் மாமியாரும்தான் போய் பாத்துருக்காங்க. அதனால என்ன?"

"எந்த காரணத்தைக் கொண்டும் மாடிக்கு மட்டும் போகக் கூடாதுன்னு இந்த வீட்டுக்கு சொந்தக்காரரான அந்த சாமி சொல்லிட்டு போயிருக்காரும்மா..."

"ஏன்... மேல் என்ன புதையல் கிதையல் வெச்சிருக்காரா? எதனால அப்படி சொன்னாரு?"

"தெரியாது... போகக்கூடாது... போகாதேன்னாரு. இல்லாட்டி இந்த வீட்டுக்கு நீ குடிவர முடியாதுன்னும் சொன்னாரு..."

"போதும் நிறுத்துங்க... இப்ப அம்மாவும் வனிதாவும் போய் பார்த்துட்டு வந்ததுல என்ன குடி முழுகிப் போயிடுச்சு" -திவ்யாவின் குரல் குறுக்கிட்டது.

"அப்படி மேல ஒண்ணும் பயப்படும்படியாவோ, ஏடா கூடமாவோ எதுவும் இல்லையே... ஒரே புத்தகமாதான் தெரிஞ்சிச்சு..."

-இது வனிதா.

"வாயை மூடு! நான் அந்த சாமிக்கு சத்தியம் செய்து கொடுத்துருக்கேன் தெரியுமா?" -சத்தமாய் கத்தியபடி பதிலளித்தான் தேவநாதன்.

"சரிப்பா... எங்களுக்கு அது தெரியாதே! இப்பதானே நீ சொல்றே?" -கல்யாணி சற்று தழைந்து வந்தாள்.

"மன்னிச்சிக்குங்க மாப்ள... திவ்யா ரொம்ப பயந்தா. இந்த வீடே வேண்டாம்னா. அப்பதான் மாடியில யாரோ கொலுசு காலோட நடக்கிற மாதிரியெல்லாம் சப்தம் கேட்டுச்சு. சரி யாரோ நமக்கு தெரியாம இருக்காங்க போல இருக்குன்னு நானும் யார்னு பார்க்க போயிட்டேன். நீங்க இவ்வளவு தூரம் சொல்றத கேட்டபிறகுதான் நான் செஞ்சது தப்புன்னு தெரியுது."

-செண்பகமும் மரியாதையோடு இறங்கி வந்தாள். அவனோ சமாதானமான மாதிரியே தெரியவில்லை.

"எதுக்கு ஒரு சாதாரண விஷயத்திற்கு நீங்கள்லாம் இவ்வளவு வருத்தப்படறீங்க? முதல்ல இந்த நகைப் பூனை விஷயத்துக்கு வாங்க. இருக்கற குழப்பம் போதா துன்னு இதுவேற..."

-திவ்யா அவனை இறுதியாக அந்த நகைகளிடம் மையம் கொள்ள வைத்தாள். அவனும் அதை வாங்கிப்



பார்த்தான். நல்ல கனம் கனத்தது. தங்கமா கவரிங்கா என்று சிறிதாக ஒரு குழப்பமும் தோன்றியது.

"இந்த பூனை மாடி ரூமுக்குள்ளதான் போச்சு. அனே கமா இந்த நகைங்க அங்கதான் இருந்துருக்கணும்..."

-வனிதாவின் தொடர் விளக்கம் தேவநாதன் முகத்தில் அதிர்ச்சியையும், திவ்யா முகத்தில் ஒரு வித சந்தோஷ வெளிச்சத்தையும் ஏற்படுத்தியது.

தேவநாதனுக்கு அடுத்து என்ன செய்வது, அதை எப்படிச் செய்வது என்றே புரியவில்லை.

"தேவா... முதல்ல இது தங்கம்தானா... எவ்வளவு மதிப்பு இருக்குன்னு தெரிஞ்சுகிட்டு வா. பிறகு பேச வோம்" -என்றாள் கல்யாணி.

"ஆமாம் தம்பி... அதுதான் சரி." -என்று கல்யாணிக்கு ஒத்து ஊதினாள் அவன் மாமியாரான செண்பகம்.

"சரிம்மா... இப்பவே நகைக்கடைக்கு போய் எடை போட்டு பார்த்துட்டு அப்படியே மதிப்பையும் தெரிஞ்சு கிட்டு வரேன்" -என்றவன் திரும்ப ஒருமுறை மாடிப் பக்கம் பார்த்தான்.

அங்கே சொல்ல முடியாத அளவு ஒரு நிசப்தம்!

❖ ❖ ❖

நகைக்கடையில் நல்ல கூட்டம்!

கடையில் யாரை அணுகி எடை போட்டு விலை மதிப்பை தெரிந்து கொள்வது என்பதில் தேவநாதனுக்குள் குழப்பம் புகுந்து கொண்டது.

கடை ஊழியர்களில் ஒருவர் அவராகவே வந்து தேவ நாதனிடம் விசாரித்தார்.

"சார் எந்த மாதிரி ஐட்டம் பாக்க விரும்பறீங்க?"

"மன்னிச்சுக்கணும்... நான் பார்க்க வரலை. என்கிட்ட கொஞ்சம் நகைங்க இருக்கு. அதுக்கு இன்னிக்கு மார்க்கெட் வேல்யூ தெரியணும்."

"அப்ரைசர் கிட்ட போய் கொடுங்க. சொல்வார். நாங்க பழைய நகைங்கள வாங்கறதில்ல."

"இல்ல... எனக்கு மதிப்பு தெரிஞ்சா போதும்..."

-தேவநாதன் திமிறித் திமிறிச் சொன்னவிதம், அவர் அவனைப் பார்த்தவிதம் அனைத்திலும் ஒருவித சந்தேகம். இறுதியாக ஒரு தனி அறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டான். கொஞ்சம் பயமும் கொஞ்சம் நம்பிக் கையுமாக நகையைக் கொடுத்தான்.

"ஒரு பவுனுக்கு பத்து ரூவா சார்ஜ் சார்... எடை போட்டு துல்லியமா மதிப்பை எழுதிக் கொடுத்துடு வோம்..."

-என்றார் அப்ரைசர்.

தேவநாதன் தலை ஆடி ஆமோதித்தது. இறுதியாக மொத்தமாக மதிப்பிட்டு 33 பவுன் இருப்பதாக சொன்ன போது தேவநாதனுக்கு மயக்கமே வந்துவிட்டது.

ஒரு பூனை உடம்பிலா 33 பவுன் இருந்திருக்கிறது? அவன் அப்படியே விக்கித்து அமர்ந்துவிட

"அவ்வளவும் அசல் ஜாதிக்கல்லுங்க... இன்னிக்கெல் லாம் ரங்கூன்லதான் இதைவாங்க முடியும். அதுவும் அந்தக்கால நகை வெச்சிருக்கறவங்ககிட்ட.... கல் மதிப்பை சொல்றதும் கஷ்டம். இரண்டு மூணு லட்சம் வரை போகலாம். தங்கத்தோட மதிப்பு மட்டுமே லட்சத்து நாப்பத்திரண்டாயிரம் ரூபா இருக்குது. நூறு சத மச்சமுள்ள தங்கம் இது. அபூர்வ ஜாதி" -என்ற அப்ரைசர் ரகசிய குரலில், "விக்கிறதா இருந்தா சொல்லுங்க.. ரவுண்டா அஞ்சு லட்சம். அரை மணி நேரத்துல வித்து பணத்தை தந்துடறேன். இரண்டு பர்சன்ட் அதாவது



10,000 ரூவா கமிஷன் கொடுத்தா போதும். என்ன சொல்றீங்க?" என்றார்.

தேவநாதன் அவர் கேட்ட கூலியை மட்டும் கொடுத்துவிட்டு நகையை மூட்டை கட்டிக் கொண்டு புறப்பட்டான்.

வீட்டிற்கு போய் விவரத்தைச் சொன்னால் வாயைப் பிளப்பார்கள். இதை அதிர்ஷ்டம் என்று எடுத்துக் கொள் வதா இல்லை, பரிசோதனை என்பதா...? அவனுக்குள் குழப்பம் மேலிட்டபோது "பரீட்சைதான்..." என்று பளிச் சென்று ஒரு குரல் அசரீரி போல் கேட்டது. யார் பேசியது என்று திரும்பிப் பார்த்தான். யாரோ ஒருவர் எதிரே நின்றிருப்பவரிடம் பேசிக் கொண்டிருந்தார்.

"இது உங்களுக்கு பரீட்சைங்க. இந்த பரீட்சையை நீங்க எழுதி பாஸ் பண்றதுலதான் இருக்கு இதோட அடுத்த கட்டம்..."

-அவர் எதை வைத்து எதன் பொருட்டு அப்படி சொன்னாரோ தெரியாது. தேவநாதன் வரையில் அவன் தன்னைப் பார்த்து அவர் சொன்னதாகவே எடுத்துக் கொண்டான்.

முதல் காரியமாக நகையை மாடியில் அந்த அறைக் குள்ளேயே மூட்டைகட்டி போட்டுவிட வேண்டும். அது அந்த சாமியின் சொத்தாகத்தான் இருக்க வேண்டும் என்று தீர்மானித்தவன் அதற்கேற்ற மன உறுதியுடன் கொஞ்சம் தெளிவுடன் நடந்தான்.

❖ ❖ ❖

**வீ**ட்டுக்குள் நுழைந்தவனை எல்லாரும் சூழ்ந்து கொண்டார்கள்.

"அவ்வளவும் கவரிங்... சாமிக்கு போடற ஐம்பொன் நகைங்களும் இதுல அடக்கம். மேல சாமியோட ரூம்ல

தான் இது இருந்துருக்கனும். நகைப்பெட்டில பூனை விழுந்து பெரண்டுருக்கும். அது மேல இதுங்க மாட்டிக் கிச்சு. முதல் காரியமா இதை மேல ரூமுக்குள்ளேயே போட்டுட்டு வந்துடறேன்.

இனி நான்னு இல்ல... யாரும் மேல ஏறக்கூடாது.” -என்று ஒரு முடிவாக கூறிவிட்டு தயங்கித்தயங்கி அதே சமயம் ‘மன்னிச்சிடுங்க சாமி’ என்கிற பிரார்த்தனையுடன் மேலேறினான்.

முதல் முறையாக அப்பொழுதுதான் மாடிப்பகுதி யையே பார்க்கிறான். வசதியாக ஜன்னல் கதவு திறந் திருந்தது. புத்தக அலமாரியும், ஏட்டுக்கட்டுகளும் கண் ணில் பட்டன. அவைகளை வெறித்தபடியே நகைகளை கட்டிய கர்சீப் மூட்டையை உள்ளே விட்டெறிந்தபோது ஷெல்ப்பில் ஒரு இடத்தில் ஸ்ரீ யந்த்ரம்!

## 17

**ஸ்ரீசக்ரம் பற்றிப் புரிந்து கொள்ளும் போக்கில் அதன் வடிவம் பற்றி அறிந்தோம். ஒன்பது அடுக் காய் உள்ள அதன் முதல் தளம் அல்லது முதல் ஆவரணத்தின் பெயர் பூபுரம். இந்த பூபுரம் என்பது சதுரமாயும் நான்கு வாயில்களையும் கொண்டிருக் கும். உள்ளே வட்டமாய் மூன்று ரேகைகள் இருக்கும்.**

**இந்த ரேகைக்கு ‘த்ரைலோக்ய மோஹன சக்ரம்’ என்று பெயர். இதன் முதல் சக்கரத்தில்தான்’ அஷ்டமா சித்தி’ எனப்படும் அணிமா, மஹிமா, லகிமா, ஈசித்வ, வசித்வ, ப்ராகாம்ய, புத்தி, இச்சா, பிராப்தி இவைகளுடன் ஸர்வகாமம் என்கிற சித்திகள் கொண்ட பத்து தேவதைகள் குடிகொண்டுள்ளனர்.**

**இரண்டாவது ரேகைச் சக்கரத்தில் ப்ராஹ்மி, மாஹேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராஹி,**



**இந்த்ராணி, சாமுண்டி மற்றும் மஹாலக்ஷ்மி என்கிற எட்டு மாத்ரு தேவதைகள் குடிகொண்டுள்ளனர்.**

**மூன்றாவது ரேகையில் ஸர்வஸம்க்ஷோபினி, ஸர்வவித்ராவினி, ஸர்வ காகர்ஷினி, ஸர்வவஸங்கரீ, ஸர்வோன் மாதினி, ஸர்வமஹாங்குஸா, ஸர்வகேசரி, ஸர்வபீஜா, ஸர்வயோனி, ஸர்வத்ரிகண்டா என்கிற பத்து முத்ரா சக்திகள் பிரகட யோகினிகள் என்ற பெயரில் குடி கொண்டிருக்கின்றனர்.**

**இந்த தேவதைகளை ஒட்டு மொத்தமாய் வெள்ளை, சிவப்பு, மஞ்சள் என்கிற வண்ணங்களில் உணர்வு வாக்கில் பிரித்து அவர்களை அவர்களுக் கான நிறத்துக்குரிய பூக்களில் வழிபாடு செய்தல் வேண்டும்.**

**முதல் தளத்தில் மட்டும் இப்படி 28 தேவதைகள் வசிக்கின்றனர். இவர்களது அருளோடு அடுத்த தளத்துக்குச் சென்றாக வேண்டும்.**

***அந்த தளம்தான் ஷோடசதள பத்மம்!***

***அதில்...!***

❖ ❖ ❖

தேவநாதனின் கண்ணில் பட்ட அந்த ஸ்ரீ யந்த்ரம் அவனை அப்படியே சுண்டி இழுத்தது. முதலில்அவனுக்கு அது என்னவென்றே விளங்கவில்லை. அவ்வப்போது சிலர் வீடுகளில் யந்த்ரப் படமாய் பார்த்த ஞாபகமாய் தோன்றியது. அந்த படத்துக்கு ஒரு வடிவம் கொடுத்து உலோகத்தில் செய்தால் இப்படித்தான் இருக்குமோ?

மனதில் கேள்வி எழும்ப, வந்தது வந்து விட்டோம் என்று உட்புறத்தில் ஒரு பார்வை பார்த்தான்.

மனது படபடக்கத்தான் செய்தது. செய்து கொடுத்த சத்தியத்தை இரண்டு நாட்களில் காற்றில் பறக்க

விட்டுவிட்ட பாவி என்று அவனுக்குள் இருந்து யாரோ கத்துகிற மாதிரி கூடத் தோன்றியது...

'இல்ல... இல்ல... இங்க இருக்கிற எதையும் நான் எடுத்துக்க விரும்பல. அதான் இங்கையே போட வந்தேன்.' -உள்ளுக்குள் சமாதானத்தையும் வேகமாய் சொல்லிக் கொண்டே உள்ளே பார்த்தான்.

ஏதோ பழமையான நூலகத்தைப் பார்ப்பது போல இருந்தது. அடேயப்பா... எவ்வளவு புத்தகங்கள். நடு நெற்றியில் நாமக்கோடு போல வியர்த்து ஒழுகத் தொடங்கியது. திடுமென்று கொலுசுச் சத்தம்! பகீரென் றது. அவ்வப்போது திவ்யா கேட்டதாகக் கூறும் சத்தம். யாராவது உள்ளே இருக்கிறார்களா என்று பதட்டம் கூடிப் போக, பார்த்தவன் அருகில் கொலுசுக் கால்களோடு வந்தவள் ஜெயந்தி. அவன் தங்கை!

"நீதானா...?"

"ஏண்ணே... வேற யார்னு நினைச்சே?"

"இங்கதான் யாரோன்னு நினைச்சேன். சரி கீழ இறங்கு... இனி இங்க நிக்க வேணாம்..."

"ஏன் துரத்தறே... ஆமா, இந்த வீட்டுக்காரர் என்ன சரியான புத்தகப் பைத்தியமா?"

"அதெல்லாம் நமக்கு எதுக்கு... நீ இறங்கு..." -என்ற படியே தேவநாதன் வேகமாக கீழே இறங்கத் தொடங் கினான்.

வேறு வழியின்றி ஜெயந்தியும் பின் தொடர்ந்து இறங்கத் தொடங்கினாள். கீழே வந்தவனை ஒட்டு மொத்தமாய் அவ்வளவு பேரும் சூழ்ந்து கொண்டனர்.

"எங்கடா மேல போனே..." -அம்மா கல்யாணி கேட்டாள்.

"அந்த நகைங்களை போடப் போனேன்..."



"என்னது... நகைங்கள போடப் போனியா, எங்க?"

"ஜன்னல் வழியா உள்ள போட்டுட்டேன். அது சாமி யோட நகைங்களாதான் இருக்கணும்."

"என்னடா சொல்றே... உண்மையை சொல்லு. ஆமா, அது தங்கம்தானே?"

-தேவநாதன் தலை பதிலுக்கு நிதானமாக ஆடியது.

"தங்கம்தானே? சொல்லுடா."

"ஆமாம்மா..."

"தங்கத்தையா உள்ள தூக்கிப் போட்டேங்கறே...?"

"ஆமாங்கறேன்ல...!"

"சுத்த முட்டாளுங்க நீங்க..." -படுத்த நிலையில் திவ்யாவிடம் இருந்து கத்திபோல வார்த்தையானது வந்து அவனைக் குத்தியது.

"இருந்துட்டு போறேன்... நீங்கள்லாம் வேலையைப் பாருங்க."

"எவ்வளவு அசால்ட்டா பதில் சொல்றார் பாருங்க. ஆமா, அது எவ்வளவு பவுன் இருந்துச்சு..."

"வேண்டாத கேள்வி"

"இப்படியா வந்த லஷ்மியை விரட்டி அடிப்பீங்க..."

"உளறாதே திவ்யா, வந்தது லஷ்மியும் இல்ல. நான் விரட்டியும் அடிக்கல. அது சாமியோட நகை"

"மண்ணாங்கட்டி, பூனையோட நகைன்னு சொல் லுங்க."

"சரி... யாரோட நகையோ... நம்ம நகை இல்லல்ல..."

"அதுக்காக..."

"என்ன அதுக்காக...?"

"என்னடா தேவா... அவசரப்பட்டுட்டியேப்பா..."

"என்னம்மா நீயும் இவளோட சேந்துகிட்டு பேசறியே..."

"அப்படி இல்லப்பா... அது மாடிலதான் இருந்ததுன்னு எதை வெச்சு நம்பினே..."

"பூனை அங்க இருந்துதானே வந்தது?"

"பூனைங்கறது நாலு வீடுங்களுக்குள்ள பூந்து வர்றது. வேற எங்கையாவது அந்த நகைங்க இருந்துருக்க லாம்ல..."

"இல்லம்மா... இரண்டு பக்கமும் சாதாரண வீடுங்க தான். அதுலயும் இந்த பங்களா மாதிரி வீட்டுக்குப் பக்கத்துல வீடுங்களே இல்ல... நீ நினைக்கறது தப்பு."

"சரி, மாடில இருக்கற நகைங்களாவே இருக்கட்டும். நாமளா போய் அதை எடுத்தோம். பூனைதானே சுமந்துகிட்டு வந்து போட்டுச்சு..."

-அம்மா, அக்கா, மனைவி என்று எல்லாரும் அவனை அடுக்கடுக்காய் மடக்கிக் கொண்டே போயினர்.

அவனுக்கு எரிச்சலாக வந்தது.

"இதுக்கு மேல பேசினீங்க, நான் மனுஷனாய் இருக்க மாட்டேன்." -என்று அவன் உரத்த குரலில் கத்தியபோது கலகலவென்று யாரோ சிரிக்கும் சப்தம். அனைவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"யார் சிரிப்பது இப்ப?"

"இல்ல... நான் இல்ல..."

"நானும் இல்ல..."

"அப்ப வேற யாரு?"

"மாடியில இருந்துதான் கேட்டுச்சு..."

-பேச்சு சட்டென்று சிரிப்புக்கு மாறியபோது தொலை பேசியும் ஒலித்தது.

சலிப்போடு போய் கையில் எடுத்தான் தேவநாதன்.



"அண்ணே..."

"யாரு?"

"நான்தாண்ணே லஷ்மி. 'சேலத்துல இருந்து பேசறேன்."

"ஓ... லஷ்மியா... என்னம்மா நல்லாருக்கியா?"

-தேவநாதனின் நலன் விசாரிப்புக்கு மறுமுனையில் உடனே பதிலில்லை. ஒரு விசும்பும் சத்தம் கேட்டது.

"என்னம்மா... அழுற மாதிரி தெரியுதே... என்னம்மா பிரச்னை?"

"அண்ணே அவருக்கு ரொம்ப உடம்புக்கு முடியலைண்ணே"

"என்னாச்சு?"

"உங்களுக்குத்தான் தெரியுமே... அவரோட குடி அவரையே குடிக்க ஆரம்பிச்சிருக்குது... ஈரலெல்லாம் வெந்து புண்ணாயிடிச்சாம்... இங்கிலீஷ்ல அந்த வியா திக்கு என்னென்னவோ பேர் சொல்றாங்க..."

"அய்யய்யோ... அப்புறம்?"

-ஆஸ்பத்திரியில இருந்துதான் பேசறேன். லட்ச ரூபாவரை செலவாகுமாம். இருக்கற நகைங்கள வெச்சு முப்பதாயிரம் கட்டியிருக்கேன். மேற்கொண்டு பணத் துக்கு என்ன பண்றதுன்னே தெரியல... உங்களால..."
-அவள் முழுவதுமாய் கேட்டு முடிக்கவில்லை. தேவநாத னுக்குப் புரிந்துவிட்டது.

"எவ்வளவும்மா தேவைப்படுது..."

"எங்கப்பா ஒரு முப்பது ரூபாயை எப்படியாவது புரட்டி எடுத்துட்டு வரேன்னுட்டார். மேற்கொண்டு ஒரு நாப்பது ஐம்பது ரூபாய் ஆகுமாம்..."

"ஐய்யோ அவ்வளவா?"

"அண்ணே..."

"அழாதேம்மா... முயற்சி பண்ணிப் பாக்கறேன். ஆமா, அவன் ஆபீஸ்ல எதுவும் உதவி பண்ண மாட்டாங்களா?"

"இவர் இப்பதானே வேலைக்கு சேர்ந்துருக்கார். இன்னும் கன்பார்ம்கூட ஆகலை. அதனால ரூல்ஸ்ல இடம் இல்லியாம். இவரை வேலைல வச்சுகிட்டு இருக்கிறதே பெரிய விஷயம்னு சொல்லிட்டாங்கண்ணே..."

"சரிம்மா... நான் பணம் பொரட்டிட்டு உனக்கு தகவல் தரேன்... இல்ல... நேர்லயே வரேன்.

பிரகாஷ் எனக்கு எவ்வளவோ செஞ்சிருக்கான்."

-தேவநாதன் ரிசீவரை வைத்துவிட்டுத் திரும்பினான். தாய், தங்கை, மனைவி, மாமியார் என்று அத்தனை பேரும் அவனை வெறித்தபடி இருந்தனர்.

"அம்மா..."

"தெரியும். அதான் காதுல விழுந்துச்சே. உன் குடிகார ஸ்நேகிதனுக்கு ரொம்ப உடம்புக்கு முடியல... பணம் வேணும்?"

"ஆமாம்மா... அம்பது ஆயிரம்வரை தேவைப் படுதாம்..."

"என்ன பண்ணப் போறே?"

"தெரியலம்மா..." -அவன் சொல்லும் போதே திவ்யா தன் கழுத்து நகைகளை புடவையால் இழுத்து மூடிக் கொண்டாள். அவனுக்கு விளங்கிவிட்டது.

"பயப்படாத திவ்யா... உன்கிட்ட நான் நகைகளக் கேக்க மாட்டேன்..."

"பின்ன எப்படித் தருவீங்களாம்... பேங்க்ல போட்டு வெச்சிருக்கீங்களா?"

"கிண்டல் பண்றியா?"



"கிண்டல் பண்ணல. உங்கள நினைச்சு வேதனைப் படறேன். இப்ப அந்த நகைங்க இருந்தா எவ்வளவு உதவியா இருக்கும்...?"

-வீசி எறிந்த நகைகளிடம் அவள் வந்து நிற்க, அவனுக்குள்ளும் ஒரு மின்வெட்டு!

❖ ❖ ❖

**காசி!**

கங்கையில் தண்ணீர் அலை புரண்டது. அந்த நாளில் கட்டப்பட்ட விசாலமான கல்படிகளால் ஆன படித்துறைகள்... அங்கங்கே கங்கையில் நீந்தத் தயாராக இருக்கும் படகுகள்.

ஆயிரக்கணக்கானோர் கங்கையில் மூழ்கி எழுந்தபடி இருந்தனர்.

அனுமன் காட் எனும் படித்துறை அருகில் முழங்கால் நீரில் நின்றபடி வானத்துச் சூரியனைப் பார்த்து கை கூப்பியிருந்தார் சச்சிதானந்தம்.

கங்கையில் முதலைகள் நிறைய திரிவதாக கேள்விப் பட்டிருக்கிறார். மனித நடமாட்டமுள்ள பகுதிக்கு வந்ததாக கேள்விப்பட்டதில்லை. இருந்தும் ஒரு அதிசயம் போல, நீருக்கடியில் தெரியும் சச்சிதானந்த சாமியின் கால்களைப் பார்த்தபடியே ஒரு முதலை வேகமாக வந்தபடி இருந்தது.

## 18

**ஸ்ரீயந்த்ரத்தின் வடிவ அர்த்தத்தை சிறிது சிறிதாக உணர்ந்தபடி இருக்கிறோம். அதில் முதலாவது தளம் பூபுரம். அதன் வட்ட வடிவில் மூன்று**

ரேகைகள். மூன்று ரேகைகளிலும் அணிமா மஹிமா முதலான அஷ்டமா சித்திகளுக்கான தேவிகளும், சப்த கன்னியர்களும் அங்கே வாசம் செய்வதை அறிந்தோம்.

இனி இரண்டாவது தளம். இதை 'ஷோடச தளபத்மம்' என்பார்கள். அதாவது, பதினாறு இதழ் களைக் கொண்ட கமலமாகிய தாமரை இது. இதை எளிதாக ஸ்ரீ சக்ரம் என்பார்கள். 'ஸ்ர்வாகா பரிபூரக பாகம்' என்றும் குறிப்பிடுவர்.

இந்தப் பதினாறு இதழ்களும் நமது உடலின் பதினாறு அம்சங்களைத்தான் குறிக்கிறது.

ப்ராணன், அபாணன், உதானன், சாமனன், வ்யானன் என்று ஐந்து வித ப்ராண வாயுக்களுடன் வாய், கை, கால், புட்டம், லிங்கம் என்கிற ஐந்து கர்ம வினைகளுக்குக் காரணமான இந்திரியங்களுட னும் கண், காது, மூக்கு, நாக்கு, புத்தி என்கிற ஞானேந்திரியங்கள் ஐந்துடனும் மொத்தமாக உடம் பின் பதினைந்து அம்சங்களுடன் மனம் என்பதும் சேர்ந்திட மொத்தம் பதினாறு அம்சங்கள் வருகிற தல்லவா?

இந்தப் பதினாறே, பதினாறு இதழ் கமலம்.

இதுபோக காமாகர்ஷினி, புதியாகர்ஷினி, அஹய்காரகர்ஷினி, சப்தாகர்ஷினி, ஸ்பர்ஷாகர் ஷினி என்று வரிசையாக பதினாறு குப்த யோகி னிகள் வேறு இருக்கின்றனர்.

ப்ராணன், கர்மேந்திரியம், ஞானேந்திரியம் மற்றும் மனம் ஆகியவைகளால் நாம் உந்தப்பட்டே தினம் செயல்படுகிறோம். இதனால், புத்தி, காமம், அஹங்காரம் என்கிற உணர்வுகள் கூடவே, சத்தம் கேட்டல், ஸ்பரிசித்து உணர்தல், நவரசங்களால் பாதிக்கப்படுதல் போன்றவை ப்ராண சம்பந்த கர்மச் செயல்கள்.

இந்தக் கர்மச் செயல்களே ஒரு மனிதன் இந்த உலகின் மாயா விளையாட்டுக்கு காரணமானவை.



இந்த மாயா விளையாட்டுக்குக் காரணமான இந்த தேவதைகளே இதில் இருந்து விடுபட்டு வெளியேற வும் உதவுபவர்கள்.

இவர்களையும், இவர்களது வினைகளையும் உணர்த்துவதே இரண்டாவது தளம்.

காசி...

கங்கை ஆற்றங்கரையில் இடுப்பளவு நீரில் நின்று சூரியனை நமஸ்கரிக்க ஆரம்பித்திருந்த சச்சிதானந் தத்தை நோக்கி ஒரு முதலை வருவதோ, அது அவரது காலைக் கவ்வி அப்படியே உள்ளே இழுத்துச் செல்லப் போவதோ ஒருவருக்கும் தெரியாது. அந்த அளவுக்கு நீர்த் தாரையின் மேற்புறத்தில் லேசான காற்றின் தாக்குதலால் ஆன அலை மடிப்புகள்.

அதே வேளையில் சச்சிதானந்தத்துக்கு சற்று தள்ளி, கரையில் இறங்கிக் குளிப்பதற்கு தயாராகிக் கொண்டிருந் தார் ஒரு மத்திம வயதுக்காரர். அவர் தண்ணீரில் கால் வைத்த நொடி ஆவென்று சச்சிதானந்தம் அலறுவதைத் தான் பார்த்தார். என்ன, ஏது என்று கவனித்து முடிப்பதற் குள் அவரது உடல் தண்ணீருக்குள் முழுகுவதையும். முதலையின் வால் பாகம் தண்ணீருக்கு மேல் ஒரு சில வினாடிகள் தோன்றிப் பின் உள்ளடங்கியதையும் பார்த்த அவருக்கு பகீரென்றது.

கத்தக்கூட திராணியற்றவராய் நின்றுவிட்ட அவர், எதிரில் சச்சிதானந்தம் ஒட்டுமொத்தமாய் நீரில் மூழ்கிட அதன்பின் தண்ணீருக்கடியில் என்ன நடந்திருக்கும் என் பதை அவரால் கற்பனைகூட செய்து பார்க்க முடிய வில்லை.

கருணை மிகுந்த கங்கையிலா இப்படி ஒரு கோர பலி?

அவருக்கு மூச்சையடைத்தது!

கரையில் சச்சிதானந்தத்தின் ஜோல்னாப் பை மற்றும் அவரது சில உப பொருட்கள்!

பிரகாஷின் உடல்நிலை பற்றிய கவலையோடு ஒரு மூலையில் உட்கார்ந்து விட்ட தேவநாதனை தொலை பேசி மணிதான் அழைத்தது.

அவன் எழுந்து சென்று எடுக்குமுன் அவன் தங்கை ஜெயந்தி முந்தினாள்.

ரிசீவருக்கு காதைக் கொடுத்த அவள் முகத்தில் ஏகத்துக்கும் மாற்றங்கள்.

"அண்ணா..."

"என்ன...?"

"காசி சிட்டி போலீஸ் ஸ்டேஷன்ல இருந்து போன்..."

"காசியில இருந்தா?"

-தேவநாதன் அடுத்த நொடி பாய்ந்து எழுந்து வந்தான்.

"ஹலோ... தேவநாதன் ஸ்பீக்கிங்..." என்றான். மறு முனையில் ஹிந்தியிலும் ஆங்கிலத்திலும் ஒருவர் பேசப் பேச தேவநாதனுக்குள் சொல்லமுடியாத தவிப்பு... இறுதி யாக 'நான்தான் தேவநாதன். இப்போதே கிளம்பி வரு கிறேன்." என்று ஆங்கிலத்தில் அவன் சொன்னதை அந்த மாளிகை வீட்டைச் சேர்ந்த அவ்வளவு பேரும் கேட்டனர்.

"என்னடா... என்ன விஷயம்?" -அம்மா கல்யாணி புடவை முந்தியால் சமையல் கரை படிந்த கரங்களை துடைத்தபடியே வந்து விசாரித்தாள்.

அவனிடம் ஸ்தம்பிப்பு.

"சொல்லேண்டா...!"

"என்னத்த சொல்ல..."

"இப்ப யார்கிட்ட கிளம்பி வர்றேன்னே?"



"காசி சிட்டி போலீஸ் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர் கிட்டே..."

"எதுக்கு அப்படி சொன்னே?"

"அவங்க வரச்சொல்லி இருக்காங்கம்மா"

"உன்னை எதுக்கு வரச் சொல்லணும்?"

"இந்த வீட்டுச் சொந்தக்காரரான சாமி இருக் காருல்ல..."

"ஆமாம்... அவர் என்ன அங்க போலீஸ்ல மாட்டிகிட்டு லாக்அப்ல, கீக் அப்ல இருக்காரா?"

'உடனே புத்தி போற போக்கப் பாரு..."

"கோபிக்காம விஷயத்தைச் சொல்லு..."

"சாமி இப்ப உயிரோடையே இல்லை..."

"என்னது?" -கல்யாணியின் கண்கள் முதல் முறையாக அகண்டு விரிந்தது. மற்றவர்களிடமும் அதிர்ச்சி. திவ்யா தான் படுத்திருந்த கட்டிலை விட்டு எழுந்தே விட்டாள்.

"என்ன மாப்ளை சொல்றீங்க?"

"சச்சிதானந்த சாமியை கங்கையில முதலை இழுத்துகிட்டு போயிடுச்சாம்..."

"அடக்கொடுமையே... என்ன இது. இப்படிக் கூட நடக்குமா என்ன?

"யாரோ சொல்லலை அத்தை. போலீஸ் இன்ஸ்பெக் டரே சொன்ன தகவல் இது. கரையில கிடந்த ஜோல்னா பைல இருந்த டைரில நம்ப வீட்டு அட்ரஸ், போன் நம்பர் இருந்துருக்கு. அதான் தகவல் கொடுத்திருக் காங்க.

'அங்க ஒரு சத்திரத்துலதான் தங்கியிருந்துருக்காரு... பெட்டி படுக்கை எல்லாம் அங்க இருந்துச்சாம். எடுத்து போலீஸ் கஸ்டடியில வெச்சிருக்காங்களாம்.

சாமி உடம்பு எங்கையாவது ஒதுங்கினா எடுத்து வைப்பாங்களாம். நூத்துக்கு தொண்ணூறு சதம் சான்ஸ் இல்லையாம். நீங்க உடனே கிளம்பி வாங்க. கேஸ் ஃபைல் பண்ணியாச்சுன்னு சொன்னார் இன்ஸ்பெக்டர்."

-தேவநாதன் சொல்லச் சொல்ல திவ்யாவின் அம்மா செண்பகம் முகத்தில் ஒரு இனம்புரியாத பீதி பரவ ஆரம்பித்தது.

"என்னம்மா... நீ எதுக்கு இந்த முழிமுழிக்கறே?" -என்று கேட்டாள் திவ்யா.

"எனக்கென்னமோ இந்த வீட்டை நினைச்சா பயமாத் தான் இருக்கு. தொட்டுத் தொட்டு நடக்கிற ஒரு விஷயம்கூட நம்பும்படியே இல்லையே..." -என்று பெருமூச்சு விட்டாள்.

அப்போது அவள் கணவரும் திவ்யாவின் அப்பாவுமான ராமநாதன் உள்ளே நுழைந்து கொண்டிருந்தார்.

அனைவரும் கலவரப்பூச்சுடன் பேயடித்த மாதிரி நிற்பதைப் பார்த்து அவருக்குள் அதிர்ச்சி பரவத் தொடங்க, செண்பகமே காரணத்தை அவரிடம் பக்குவமாக கூறி முடித்தாள்.

அதன்பின் அவர் முகத்தில் ஈயாடவில்லை. உதட்டில் மட்டும் "சாமி... உங்களுக்கா இப்படி ஒரு கதி...?" என்ற முணுமுணுப்பு.

"சரிடா, என்ன பண்ணப்போறே...?"

"ஆபீஸ்க்கு லீவு போட்டுட்டு கிளம்ப வேண்டியதுதான்.

"இல்ல... இதை அவரே என்கிட்ட சொல்லியிருக்காரு. அது மட்டுமல்ல அவர் டைரில இங்கிலீஷ்ல அவர் கடைசியா எழுதினதை இன்ஸ்பெக்டர் சொன்னார்."

"எனக்கு எதாவது விபரீதம் ஏற்பட்டா என் மகனைப் போன்ற தேவநாதன்தான் இந்தக் காசியில எனக்கு எல்லா காரியமும் செய்யணும்னு எழுதியிருக்காராம்."



-அவன் சொன்ன மறுவினாடியே கல்யாணியின் கண்கள் கண்ணீரை மளுக்கென்று வடித்தன. அவரது பாசமும் ஆசையும் அவளது நெஞ்சத்தை ஒரு கிள்ளுகிள்ளி விட்டிருந்தது.

"மாப்ள... கிளம்புங்க, நானும் வரேன்!" -ராமநாதனும் அவனோடு சேர்ந்து கிளம்பத் தயாரானார்.

❖ ❖ ❖

<u>ஹாஸ்பிடல்!</u>

தலைக்குமேல் சுழலும் பேனை வெறித்தபடியே படுத்திருந்தான் பிரகாஷ். அருகில் ஜூஸ் பிழிந்து கொண்டிருந்தாள் லஷ்மி. அவள் முகத்தில் சுத்தமாக பொலிவில்லை. இருண்டு விட்ட அந்த முகத்தைப் பார்க்க பிரகாஷும் விரும்பவில்லை. இருந்தும் அவள் அவன் முகத்துக்கு நேரே பழ ரசத்தை நீட்டினாள்.

"எதுக்கு லட்சுமி இதெல்லாம்... பழத்துக்கு கேடா..." என்றான் விரக்தியாக.

"இப்படி கண்டபடி உளறாம முதல்ல இதை குடியுங்க"

"நீ குடி. நான் கிட்டதட்ட செத்துட்டேன். பொணத்துக்கு எதுக்கு பழச்சாறு?"

"எதுக்காக இப்படி தளர்ந்து போறீங்க. தன்னம்பிக்கையே கிடையாதா உங்களுக்கு?"

"அதெல்லாம் காசு பணம் இருந்தா தானா பொங்கி வழியும். நாம ஏழைங்க"

"போதும். உங்களுக்கு என்ன கேன்சரா, எய்ட்சா நான் கதிகலங்க"

"மஞ்சக்காமாலைக்கு கூட உயிர் போறதுண்டு லஷ்மி..."

"உங்களுக்கு எதுவும் ஆகாது. தைரியமா இருங்க."

"நீ பணத்துக்கு எங்க போவ?"

மதுரைல இருந்து தேவநாதன், ஐம்பதாயிரம் இல்ல லட்ச ரூபாயே கொண்டுகிட்டு வரதா சொல்லியிருக்காரு."

"யார் காதுல பூ சுத்தறே... அவன் சம்பளம் எங்கோ, சேமிப்பு எங்கோன்னு எனக்கு தெரியும் லஷ்மி"

"பொண் எடுத்த இடம் பெரிய இடமாச்சே".

"அப்படின்னா மாமனார் கிட்ட எனக்காக அவன் உதவி கேட்கப் போறானா?"

"கேட்டாச்சு. பணத்தோட வந்துகிட்டே இருக்காராம்."

"நிஜமாவா..."

"வருவார் பாருங்க..."

-லஷ்மி தற்காலிகமாக அவனை நிமிர்த்தி தெம்பைத் தந்து முடித்து விட்டாள். அதே நேரம் டாக்டர் வரவும். "இப்படிப் பேசிகிட்டிருந்தா அது ஹெல்த்தை பாதிக்கும்" என்றார். ஒரு மயக்க ஊசியையும் போட்டவர் "எட்டு மணி நேரம் அவர் இனி கண்விழிக்க மாட்டார்..." என்றார். லஷ்மியும் அதை கேட்டு அளவாக தேங்கிவிட்ட கண்ணீரை சுண்டி விட்டுக் கொண்டாள். மெல்ல வார்டை விட்டு வெளியே வந்தாள்.

அவளையே வெறித்துக் கொண்டு இருந்தான் ஒரு அரைத் தாடிக்காரன். குளித்து நாட்கள் ஆனமாதிரி ஒரு அழுக்கு மூஞ்சி. அவளை சமீபித்தான்.

"அன்னம்மா... முடிவு பண்ணிட்டியா?" என்றான் தழைந்த குரலில். லஷ்மி அவனை தீர்க்கமாக பார்த்தவள், ஆமோதிப்பாக மெல்ல தலையை அசைத்தாள்.

"அப்ப நான் தகவல் கொடுத்துடலாமா?"

"தாராளமா... ஆனா..."



"தெரியும். நான் சொன்ன தொகை கட்டுப்படியாகாது. ஒரு லட்ச ரூவாயாவது வேணும்னு சொல்லப்போறே... சரிதானே?"

"ஆமாம்!"

"எப்படியாவது உனக்கு நான் வாங்கித்தரேன். உன் புருஷனுக்காக நீ எவ்வளவு துடிக்கிறேன்னு பார்த்தாலே தெரியுது. எனக்கு கமிஷன் குறைஞ்சாலும் பரவால்ல. எப்படியாவது உனக்கு உதவி பண்றேன். ஆனா நீ அப்புறமா பல்டி அடிச்சுடக் கூடாது."

"இல்ல... அடிக்க மாட்டேன். எனக்கு இனி என்னைப் பத்திக் கவலையே கிடையாது."

-லஷ்மி விரக்தியின் விளிம்பில் நின்று சொன்னதைத் தொடர்ந்து அவன் ஒரு பெருமூச்சோடு விலகினான்.

❖ ❖ ❖

இரவு நேரம்!

அந்த சக்தி இல்ல மாளிகையே நிசப்தத்தில் இருந்தது. தேவநாதனும், ராமநாதனும் இல்லாத நிலையில் அந்த வீட்டில் அவ்வளவு பேரும் பெண்களாய் இருக்க, திவ்யாவும் காலில் கட்டோடு கட்டிலில் கிடக்கிறாள். 'மியாவ்' என்று ஒரு விதமான மூச்சுக்காற்றின் சப்தம்! திவ்யாவுக்கு அது துல்லியமாக கேட்டது. யாரது இப்படி மூச்சுவிட்டுக் கொண்டு... என்ற தேடலோடு நிமிர்ந்தவள் எதிரே...

# 19

ஸ்ரீயந்த்ரத்தைப் புரிந்து கொள்ளும் முயற்சியில் இருக்கிறோம். அதன் வடிவத்தைப் புரிந்து கொள்ள வேண்டியது இதில் முக்கியமான அம்சம்.

அதன்படி ஸ்ரீயந்த்ர அடித்தளமான பூபுரம் பற்றியும், இரண்டாம் தளமான ஷோடச தள பத்மம் பற்றியும் பார்த்தோம்.

ஒரு அரண்மனை இருந்தால் அரசர் கொலு மண்டபத்தில் சிம்மாசனத்தில் இருப்பார். அதே சமயம் அரண்மனை நுழைவாயிலில் காவலர்கள் காவலில் இருப்பார்கள். அப்படியே கொலு மண்டபம் வரும் வரை வரிசையாக பல பாகங்கள். அங்கெல்லாம் வீரர்கள், அமைச்சர்கள், தளபதிகள், சேனாதிபதிகள், கொத்தவால், கண்காணிகள் என்று பலர் அவர்கள் பணியில் இருக்க அவர்களை எல்லாம் முறையாகக் கடந்தே அரசரை சந்திக்க முடியும்.

இது அப்படியே ஸ்ரீயந்த்ரத்தில் வாசம் செய்யும் அன்னை மகாசக்திக்கும் பொருந்தும். ஸ்ரீயந்த்ரம் மொத்தம் ஒன்பது தளங்கள் கொண்டது. ஒன்பதாவது தளமான உச்சித்தளமான பிந்துவில்தான் அன்னை மகாசக்தி ராஜராஜேஸ்வரியாக வாசம் செய்கிறாள். அவ்வகையில் முதல் இரு தளங்களைக் கண்ட நாம் மூன்றாம் தளம் பற்றி அறிவோம்!

இதற்கு 'அஷ்டதள பத்மம்' என்பது பெயராகும். 'ஸர்வ ஸம்ஸோபன சக்கரம்' என்றும் இதற்கு பெயருண்டு. இதில் எட்டு தேவியர் வாசம் செய்கின்றனர்.

அநங்ககுஸிமா

அநங்கமேகலா

அநங்கமதனா

அநங்கமதனாதுரா



அநங்கரேகா

அநங்க அங்குசா

அநங்கவேகினி

அநங்கமாலினி-என்பது இவர்கள் பெயர். இவர்கள் பணி மிகவும் சிந்திக்கத் தூண்டுவது. இவர்கள் மிக மிக கண்டிப்பானவர்கள்.

இவர்கள் பற்றி முழுமையாக அறிந்து கொள்ளாமல் அடுத்த தளம் பற்றி அறிய முயல்வது நல்லதல்ல. இவர்களது கட்டுப்பாட்டில்தான் நமது இந்திரியங்களும், பஞ்ச பூதங்களும், நமது ஜீவன் முதலான விஷயங்களும் உள்ளன!

அதிர்வோடு சப்தம் கேட்டு பார்த்த திவ்யாவின் எதிரில் மீண்டும் அதே பூனை! இந்த முறையும் அதன் கழுத்தில் ஒரு தங்கச் சங்கிலி!

திவ்யாவுக்கு தூக்கியடித்தது. காலில் கட்டுபோடப்பட்டிருக்கும் பிரக்ஞையே இன்றி அந்த பூனையையே வெறித்தாள்.

அந்த வெறிப்பில் ஆசையின் வழிசல். பூனையோ உனக்கு ஆசை காட்டத்தான் நான் வந்தேன் என்கிற மாதிரி திரும்பி ஓடியது!

திவ்யாவால் அதை நகை கழுத்தோடு பார்த்துவிட்டு எனக்கென்ன என்று படுத்திருக்க முடியவில்லை. தன் மாவுக்கட்டுப் போட்ட காலை அப்படியே தூக்கி கீழே வைத்து ஒரு வித புதிய ஆவேசத்துடன் எழுந்து நின்றாள். அது மாடிப்படியில்தான் தாவி ஏறியது.

திவ்யாவும் கெந்திக் கெந்தி காலை ஊன்றி அதை பின்தொடரத் தொடங்கினாள்.

மற்ற எல்லாரும் நன்றாக தூங்கி விட்டார்கள். எரிந்து கொண்டிருந்த விளக்குகளைக்கூட யாருக்கும் அணைக்கத் தோன்றவில்லை. அது திவ்யாவுக்கு வசதியாகி விட்டது.

வெளிச்சம் வழிகாட்டியது.

ஒரு வழியாக மாடிப்படியை அடைந்து நின்றாள். ஆசையும் வேகமும் ஒன்று சேர்ந்துவிட்டால் முடியாதது என்பதே கிடையாது என்பதற்கு உதாரணம் போல் இருந்தது அவள் செயல்.

பூனை மாடிப்படியின் மேல் படிக்குப் போய் அமர்ந்து கொண்டிருந்தது. திவ்யா வரவும் திரும்பிப் பார்த்தது.

திவ்யாவும் பார்த்தாள்.

'இந்த நொடி உன் நதிமூலம் ரிஷிமூலத்தை அறியாமல் விட மாட்டேன்' என்கிற மாதிரி ஒரு அனல் பார்வையுடன் ஊனி ஊனி கைப்பிடி கட்டையைப் பிடித்துக் கொண்டு மேலேறினாள். பாதி படிகளைக் கடந்து விட்ட நிலையில் பூனை அது அமர்ந்திருந்த இடத்தை விட்டு நகர்ந்து விருட்டென்று அருகில் திறந்துகிடந்த ஜன்னலுக்கு தாவி இரு ஜன்னல் கம்பிகளுக்கு நடுவில் அமர்ந்து கொண்டது. கழுத்துச் சங்கிலியும் அவிழ்ந்து கீழே விழுந்தது.

திவ்யா மிகுந்த சிரமத்தின் பேரில் மாடியின் உச்சிப் படியான இறுதிப்படியை அடைந்தபோது பூனை உள்புறம் குதித்து ஓடிவிட சங்கிலி மட்டும் அவள் கண்ணில் பட்டது.

ஆவேசமாக அதை நெருங்கியவள் குனிந்து அதை கையில் எடுத்தாள். ஊன்றிப் பார்த்தாள். பரபரவென்று மனமும் அதன் கனத்தை எடைபோட்டது. எப்படியும் ஏழெட்டு பவுன் தேறும் என்று தோன்றியது. அதன் பளபளப்பும் அசல் தங்கம் என்கிற நம்பிக்கையை அவளுக்குள் மூட்டியது.

அப்படியே பார்வை அந்த திறந்து கிடந்த ஜன்னல் வழியாக உள்ளே சென்றது. மற்றவர்கள் பார்த்த அதே காட்சி.



வரிசையாக புத்தகங்கள், ஏட்டுகட்டுகள். உச்சபட்சமாய் ஒரு இடத்தில் ஸ்ரீயந்த்ரம்!

திவ்யாவின் கண்களை ஆச்சரியம் பிடுங்கித் தின்றது. அதே சமயம் கீழே தொலைபேசி சப்திக்கும் சப்தம்.

கொஞ்சம் போல பகீரென்றது! கீழே அதன் எதிரொலிகள். சப்தம் திவ்யாவின் அம்மா செண்பகத்தை எழுப்பியிருந்தது. கண்களை கசக்கிக் கொண்டவள் தொலைபேசி இருந்த மேஜையை நோக்கி கொட்டாவி பிரிய நடந்தாள். காதைக் கொடுத்தாள். அப்படியே மணியைப் பார்த்தாள்.

இரவு பதினோரு மணி!

இந்த நேரத்தில் யாராக இருக்கும் என்கிற கேள்வியுடன் 'ஹலோ' என்றாள்.

"யாரு அத்தையா?" -அந்தப் பக்கமாய் தேவநாதன்!

"மாப்ளே..."

"நான்தான் அத்தை... என்ன தூங்கிட்டீங்களா? தூக்கத்தைக் கெடுத்துட்டேனா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. சொல்லுங்க எங்க இருந்து பேசறீங்க?"

"வாரணாசில இருந்துதான்..."

"அப்படியா... நல்லபடியா போய் சேர்ந்தீங்களா? அப்புறம் அங்க என்ன நடந்துச்சு. தகவல்லாம் தெரிய வந்துச்சா?"

"எல்லாம் முடிஞ்சு போச்சு அத்தை. சாமியை முதலை இழுத்துகிட்டு போயிடுச்சாம். உடம்பு கடைசி வரை கிடைக்கலை..."

"அடக் கொடுமையே... அப்படி ஒரு மனுஷனுக்கு இப்படி ஒரு நிலைமையா?"

"என்னாலையும் நினைச்சு பார்க்கவே முடியலை. அவர் கூட வந்த ஒருத்தரும் ரொம்ப வருத்தப்பட்டார். இருந்

தாலும் கங்கைல இப்படி உயிரோட உடம்பைக் கொடுக்கறதும் ஒரு வித தானத்தோட சேர்ந்ததாம். சாமி ஆத்மா நேரா மோட்சத்துக்குத்தான் போகும்னு சொன்னாங்க..."

"செத்துப் போயிட்டாருல்ல... இனி என்ன வேணா பேசலாம், எதை வேணா பேசலாம். இருந்தாலும் நீங்க சொன்னதைக் கேட்டு மனசு சமாதானமே ஆகலை. ஹூம் என்ன வாழ்க்கை மாப்ளை இது..."

"என்ன செய்யறது... இதைத்தான் விதின்னு சொல்றாங்க போல... சரி, திவ்யா என்ன பண்றா, நல்லா தூங்கிட்டு இருக்காளா?"

-அவன் கேட்கவும் செண்பகம் திரும்பிப் பார்த்தாள். அவளது படுக்கையில் அவள் இல்லை. அடுத்த நொடி நெஞ்சில் ஒரு கிள்ளல்.

இருந்தும் அவனிடம் சமாளித்தாள்.

"ஆ... ஆமாம்... நல்லா தூங்கிட்டுருக்கா..."

"எழுப்ப முடியுமா... அவகிட்ட பேசணும்போல இருக்குது..."

"அது... அது... வேண்டாம் மாப்ள... அவளால எப்படி இங்க நடந்து வர முடியும். இதுவும் கார்ட்லெஸ் போனா இருந்தா பரவால்ல..."

"சரி அத்தை... இங்க போலீஸ் ஸ்டேஷன்ல சில பார்மாலிட்டீஸ் இருக்கு. அதை முடிச்சுட்டு டெத் சர்ட்டிபிகேட்டும் கேட்டு வாங்கிகிட்டு வந்துடறேன். சாமி என்னை அந்நியனாவே நினைக்கல. தன் டைரில தன் வளர்ப்பு மகன்ங்கற அளவுக்கு எழுதி வெச்சிருந்துருக்காரு. ஆகையால ஒரு மகன் அவருக்கு இருந்தா இந்த நேரத்துல என்னவெல்லாம் கர்ம காரியம் செய்வானோ அதை நான் கங்கைக்கரைல செய்துட்டே வந்துடலாம்னு பாக்கறேன். நீங்க என்ன நினைக்கறீங்க?"



"இது என்ன மாப்ள கேள்வி. தாராளமா செய்யுங்க. ரொம்ப நல்ல காரியம் அது."

"சந்தோஷம் அத்தை... என் அம்மா கிட்ட மட்டும் இந்த விஷயத்தைச் சொல்லாதீங்க. ஐய்யோ அதெல்லாம் செய்யாதேன்னு எதையாவது சொல்வாங்க."

"சரி மாப்ள... எல்லாரும் நல்லா தூங்கிட்டு இருக்காங்க. நீங்க எல்லாத்தையும் முடிச்சிட்டு சீக்கிரமா வந்து சேருங்க"

"சரி அத்தை... அப்புறம் ஒரு முக்கியமான விஷயம்..."

"என்ன மாப்ள..."

"நான் வர்ற வரை அந்த மாடிப் பக்கம் தப்பித்தவறி கூட யாரும் போயிட வேண்டாம்."

"கவலைப்படாதீங்க. நான் பாத்துக்கறேன்."

"சேலத்துல இருந்து பிரகாஷ் விஷயமா ஏதாச்சும் போன் வந்துச்சா?"

"ஒண்ணும் இல்ல. வந்தாலும் நாங்க பாத்துக்கறோம். நீங்க நல்லபடியா காரியத்த முடிச்சுட்டு வாங்க..."

"சரி அத்தை... வெச்சிடறேன்."

"ஒரு நிமிஷம்... என் வீட்டுக்காரர் எப்படி இருக்கார்?"

"ஐய்யோ சொல்லமறந்துட்டேனே, நல்லா இருக்கார். இந்த நிமிஷம் லாட்ஜ் ரூம்ல நல்ல தூக்கத்துல இருப்பார். நான்தான் போன் பண்ண வெளியே வந்திருக்கேன். இங்க நல்ல குளிர் வேற..."

"சரி மாப்ளே... வெச்சிடறேன்."

செண்பகம் போனை வைத்து விட்டு வேகமாக திரும்பினாள். திவ்யா எங்கே என்றுதான் தேடியது பார்வை... இறுதியில் சந்தேகப்பட்டது போலவே மாடிப்

படியருகே சென்று அண்ணாந்தபோது உச்சிப்படிமேல் ஒரு உயிர்ச்சிலை போல திவ்யா. "அடிப்பாவி... நினைச்சேன்... நீ இப்படி ஏதாவது பண்ணுவேன்னு..."

"சுத்தாம இங்க வாம்மா..."

"முதல்ல கீழ இறங்கு. இப்பதான் மாப்ள போன்ல பேசினார்."

"தெரியும். எல்லாம் என் காதுலயும் விழுந்துச்சு. என்ன... அந்த சாமியார் போனது போனதுதானாமா?"

"மெல்லப் பேசுடி... நேரங்காலம் தெரியாம இப்படியா இந்த காலோட மேல வருவே..."

-கேள்வியும் பதிலுமாய் படிகளில் ஏறி அவளை சமீபித்தாள்.

"நான் வேணும்னு வரல... திரும்ப அந்த பூனைதான் இங்க என்னை இழுத்துகிட்டு வந்துச்சு. வந்ததுக்கு பலன் பாரு..."

-திவ்யா அந்த சங்கிலியைக் காட்டினாள். செண்பகம் கண்களும் அகண்டது.

"அந்த பூனை உள்ளதான் போயிருக்கு..."

"அதுக்கென்ன இப்போ?"

"என்னவா... அது மகாராணி மாதிரி நகையோட வரும். வேடிக்கை பார்க்கச் சொல்றியா?"

"வேண்டாமடி... உன் புருஷன் இப்பதான் மாடிக்கு யாரும் போகாம பாத்துக்குங்க அத்தைன்னாரு..."

"அவர் கிடக்கறாரு... அந்த சாமியார்தான் செத்துப் போய்ட்டாரே. இன்னும் என்ன தயக்கம்?"

"நீ என்னடி சொல்றே?"

"மெல்ல பேசும்மா... இங்கதான் உள்ள அந்த நகைங்கல்லாம் இருக்கணும். பூட்டை உடைச்சு உள்ள போய் பார்த்துட்டா என்ன?"



"ஐய்யோ வேண்டாம்டி..."

"என்ன வேண்டாம்டி... நோண்டாம்டி. அவர்தான் மேல போய்ச்சேர்ந்தாச்சுல்ல. இனி இது நம்ம வீடுதானே..."

"நம்ம வீடா?"

"பின்ன... அவருக்கென்ன பிள்ளையா குட்டியா?"

"திவ்யா..."

"வாய மூடு... கீழே போய் ஒரு பெரிய இரும்பு கடப்பாரை இல்லாட்டி சுத்தியை எடுத்துட்டு வா. உடைச்சு உள்ள என்னதான் இருக்குன்னு பார்த்துடலாம்..."

"வேண்டாம்டி... எதாவது வினையாகிடப்போகுது..."

"என்னம்மா நீ. ஒரு பூனை நினைச்சா உள்ள போய்ட்டு வருது. நானும் நீயும் போறதுக்கென்ன?"

-திவ்யாவின் துணிச்சல் செண்பகத்தையும் தொற்றிக் கொண்டது.

திறந்து பார்த்தால்தான் என்ன? அவளும் தனக்குள் கேட்டுக் கொண்டு கீழிறங்கத் தொடங்கினாள்.

## 20

**ஸ்ரீயந்த்ரத்தின் மூன்றாவது தளம் பற்றிப் பார்த்து விட்டோம். 'பிரக்ருதி, மஹத்துவம், அகங்காரம் பஞ்சதன் மாத்திரை, பஞ்சபூதங்கள், பத்து இந்திரியங்கள், அந்தகரணம், புருஷன் என்ற எட்டு அம்சங்களின் விரிவான விளக்கங்களை ஒரு புத்தகம் எழுதலாம். அந்த அளவுக்கு உள்ளவை அவை. அவற்றை அப்படியே உள்ளடக்கமாகக் கொண்டு காட்சி தருவதுதான் மூன்றாம் தளம்.**

நான்காவது தளம் சதுர்தசகோணம் என்பது. அதாவது, 14 முக்கோணங்கள் கொண்ட சக்தி சக்கர தளம் அது.

இந்த 14 முக்கோணங்கள் ஒருவகையில் ஈரேழு பதினான்கு லோகங்களைக் குறிக்கின்றன. பதி னான்கு லோகங்களின் படைப்பாளி ஒருவன்தான்.

ஆண்பாலாய் அவனைப் பார்த்தால் அவன் பரம்பொருள். பெண்பாலாய் பார்த்தால் சக்தி அல்லது ராஜராஜேஸ்வரி.

இந்த 14 முக்கோணங்களிலும் 14 குணநலன்களு டன் ஸம்பிரதாய யோகினிகள். 14 பேர் வாசம் செய்கின்றனர்.

ஸர்வஸம்ஷோபிணி, ஸர்வவித்ரா விணி, ஸர்வ ஆகாஷிணி, ஸர்வசாதினி, ஸர்வசம்மோகினி, ஸர்வ ஸ்தம்பிணி, ஸர்வஜ்ரும்பிணி, ஸர்வசங்கரீ, ஸர்வ ரஞ்சனி, ஸர்வோனிமாதினி, ஸர்வார்த்தசாதினி, ஸர்வசம்பத்திபூரணி, ஸர்வமந்த்ரமயீ, ஸர்வத்வந்தவ ஷயங்கரி-என்கிற 14 ஸம்பிரதாய யோகினிகளால் ஆளப்படுவதே நான்காவது தளம்.

இந்த நான்காவது தளத்தின் முக்கிய நோக்கமே மாயை மூலமாக ப்ரம்மத்தை உணர்த்துவதே...

இனி, ஐந்தாவது தளம் பற்றிக் காண்போமா?

அந்த நள்ளிரவில் தேவநாதனிடம் இருந்து வந்த தொலைபேசிச் செய்தியைத் தொடர்ந்து செண்பகம் மனதிலும் ஏராளமான மாற்றங்கள்.

அதுவரை தேவநாதன் சொன்னபடி மாடிப்பக்கமே போக வேண்டாம் என்ற பிரக்ஞையில் இருந்தாள். அப்படி இருந்தவளை திவ்யாவின் கேள்வி தலைகீழாக மாற்றி விட்டது.

"இனி இது நம்ம வீடுதானே... உயிரோட இருந்த வரைதான் அந்தச் சாமியோட சத்தியத்துக்கு மதிப்பு இருந்தது. போன பின்பு என்ன? நாமும் இங்க பயந்து



பயந்து வாழ முடியாது. இங்க என்னதான் இருக்குன்னு பாத்துடுவோம்..." -என்று அவள் தூண்டி விட்டு கதவை உடைப்பதற்காக கடப்பாரையையோ, இல்லை ஏதாவது ஆயுதத்தையோ எடுத்துவர கீழே செண்பகத்தை அனுப்பினாள். செண்பகமும் கீழிறங்கி வந்தாள்.

கீழே கல்யாணியும், வனிதாவும், ஜெயந்தியும் விழித்த படி இருந்தனர்.

"அட நீங்களும் முழிச்சுகிட்டுதான் இருக்கீங்களா?"

"ஆமா... மாடில நீங்க பேசறதுதான் வெளியவரை கேட்டுதே..."

"என்ன செய்யச் சொல்றீங்க. இந்த அர்த்தராத்திரியில மாடியில என்ன இருக்குன்னு பாக்கணும்ங்கறா..."

"அப்படி என்ன திடீர்னு..."

"திடீர், திடீர்னுதானே இங்க எல்லாம் நடக்குது. காக்கா, குருவிங்க எங்கையாவது எலும்புங்க கிடக்கறத பொறுக்கிகிட்டு வந்து வீட்டு மொட்டை மாடியில போட்டுட்டு போற மாதிரில்ல இந்த வீட்டுப் பூனை நகைங்கள போட்டுட்டு போகுது..."

"ஹை... அப்ப அந்தப் பூனை திரும்ப வந்துச்சா?"

"வராமலா கட்டுப்போட்ட காலோட திவ்யா மாடிக்கு அதை துரத்திகிட்டு போனா..."

"அப்புறம்?"

-ஜெயந்தி ஏதோ மர்மக் கதை போல சுவாரஸ்யமாக கேட்க "அம்மா சீக்கிரம் வா. அவங்களையும் கூட்டி கிட்டு வா. எல்லாரும் ஒண்ணாவே மாடி ரூம்ல என்ன இரக்குன்னு உள்ள போய் பாத்துடுவோம்" -திவ்யாவின் குரல் மாடியில் இருந்து கீழே எதிரொலித்தது.

அவ்வளவுதான்...

அவர்களையும் ஆர்வம் தொற்றிக் கொண்டது.

இருந்தும் கல்யாணியிடம் மட்டும் தயக்கம்.

"என்னம்மா..."

"எதுவா இருந்தாலும் காலைல பாத்துக்கலாமே..."

"என்னம்மா நீ... இப்ப போய் பார்த்தா என்ன?"

"இல்ல... தேவா இல்லாத இந்த நேரத்துலயா? அந்தப் பெரியவரும் போய்ச் சேர்ந்துட்ட துக்ககரமான வேளையில எனக்கென்னமோ அவர் விருப்பத்துக்கு எதிரா நடந்துக்கறது நல்லதா படலை" -கல்யாணியின் கருத்தைத் தொடர்ந்து செண்பகத்திடமும் அதே கருத்து வேலை செய்தது.

"நீங்க சொல்றதும் சரிதான்... ஆம்பிளைங்க இல்லாத நிலைல நாம இப்படி நடந்துக்கறது தப்புதான். திவ்யா வுக்கு எதுலையும் அவசரம். வேகம்தான். போகட்டும், நீங்க இருங்க. நான் அவளைப் போய் கூட்டிட்டு வரேன்" -என்றபடியே செண்பகம் மகளை அழைத்துவர மாடிப் படிகளில் ஏறத் தொடங்கினாள்.

மேலே சென்று திவ்யாவைப் பார்த்தபோது அவள் கண்களில் அனல்.

"என்ன பாக்கறே... கீழ இறங்கு... அப்புறமா வந்து பாத்துப்போம்..."

"என்ன உன் சம்பந்தி சொல்லிட்டாங்கன்னு உடனே நீயும் ஜால்ரா போட்டுட்டியா..."

"மெல்லப் பேசுடி. அவங்க நல்லது தாண்டி சொல்லி யிருக்காங்க. இந்த மாடி என்ன ஓடியா போயிடப் போகுது. கீழே இறங்கு..."

"அப்ப கதவை இப்ப உடைக்கப் போறதில்ல நாம..."

"ஆமா... உன் வீட்டுக்காரரும், அப்பாவும் வந்துடட்டும்."

"அதுவரை இந்தப் பூனை உள்ள இருக்கற நகைங்கள விட்டு வைக்குமா?"



"நீ என்ன உள்ள நகைங்க மூட்டை மூட்டையா இருக்குன்னே முடிவு பண்ணிட்டியா?"

"இல்லாமதான் பூனை சங்கிலி, கல்வளைன்னு போட்டுகிட்டு திரியுதா?"

-கேள்வியோடு ஜன்னல் வழியே பார்த்தாள். தேவ நாதன் முன்புவீசி எறிந்த நகைகளும் கண்ணில்பட்டன.

"அப்படியே கண்ணைப் பறிக்குது..."

"பறிக்கும். பறிக்கும். முதல்ல கீழே இறங்கு."

"இப்ப இறங்கறேன். ஆனா, நாளைக்கு யார் தடுத் தாலும் நான் கேக்கப்போறதில்ல. ஞாபகம் வெச்சுக்க..."

-திவ்யா உறுதியாக குரல் கொடுத்தவளாக கெந்தி கெந்தி நடந்து கீழ் இறங்கத் தொடங்கினாள்.

பரிசோதனை முடிந்து வெளியே வந்திருந்தாள் லட்சுமி. அந்த ஆஸ்பத்திரி வராண்டாவில் பலர் காத்திருந்தனர். குறிப்பாக அந்த அரை தாடிக்காரன்!

லட்சுமி புடவை முந்தியை இழுத்து கழுத்துவரை மூடிக்கொண்டு அவனோடு நடந்தாள். மருந்து வாசம் மூக்கில் ஏறியது. நடையிடும்போது அவனிடம் கித்தாப்பு.

"உனக்காக பார்ட்டிகிட்ட எவ்வளவு போராடினேன் தெரியுமா? கடைசியா உன் நிலையை எடுத்துச் சொல்லி உன் புருஷன் உயிரை காப்பாத்தத்தான் நீ இந்த முடிவுக்கு வந்துருக்கேன்னு சொல்லித்தான் சம்மதிக்கவே வெச்சேன்."

-அவனது பேச்சின் முடிவில் ஆஸ்பத்திரி காரிடார் முடிந்து புறப்பகுதி தட்டுப்பட்டது.

அதில் அங்கங்கே வேப்ப மரங்கள். அதன் நிழல்களில் கூட்டம் கூட்டமாக ஆஸ்பத்திரிக்கு நோயாளிகளைப் பார்க்க வந்தவர்கள்.

ஒரு மரத்துக்கு கீழ்தான் அந்த அரை தாடிக்காரன் சொன்ன பெரிய மனிதர் நின்று கொண்டிருந்தார். லட்சுமியை நேராக அவரிடம் கூட்டிச் சென்றான்.

"வணக்கம்...."

"வணக்கம்மா... நீதானா அந்தப் பொண்ணு."

"ஆமாங்கய்யா. பாவம் ரொம்ப கஷ்டத்துல இருக்கு. நீங்கதான் பெரிய மனசு பண்ணி..."

"அதான் கீறல் விழுந்த ரிக்கார்டு மாதிரி நாலுநாளா அதையே சொல்லிக்கிட்டு இருக்கியே... ஆமா. டெஸ்ட் முடிஞ்சிச்சா..."

"முடிஞ்சிடுச்சுங்க. ஒரு கோளாறும் இல்லீங்க. இதுவும் A நெகட்டிவ், பேஷன்ட்டும் A நெகட்டிவ். இரண்டு பேருக்கும் சமவயசு வேற. இதுக்கு மனசுலதான் திடமில்லை. ஆனா, உடம்பு கல்லு மாதிரிங்க..."

"விட்டா தோல் தங்கம், பல்லு. தந்தம்னு கவிதையே எழுதிடுவியே... சரிம்மா... நீ கேட்ட பணத்தைத் தரேன். உன்னால் நல்லது நடந்தா சரி. என் மகனுக்கும் உன் வயசுதான். ஆனா, ஒண்ணுக்கு ரெண்டு கிட்னியும் போச்சு. எல்லாம் தலையெழுத்து..."

-சலித்தபடியே அவர் தன் கை இக்குளில் இருந்த தோல்பையைத் திறந்து அதனுள் கைவிட்டார்.

அரை தாடிக்காரன் கூர்மையானான். அவளும் கவனித்தாள்.

"இப்ப இருபத்தஞ்சாயிரம் தர்றேன்... ஆஸ்பத்திரியில அட்மிட் ஆறதுக்கு முந்தி சொச்சத்த தரேன்... என்ன?"

"சரிங்க..." -அவரிடம் இருந்து இருபத்தி ஐந்தாயிரம் கைமாறியது. அந்த அரைதாடி காரனுக்கும் ஆயிரம் ரூபாய் தந்தார். அதைப் பார்த்துவிட்டு லட்சுமியும் தர முன்வந்தாள்.



"வேண்டாம்மா... உன் காசு வேண்டாம். நான் கிட்னி புரோக்கரா இருக்கலாம். ஆனா, எனக்கு ஈரமுள்ள இதயம். இல்லாட்டி ஒருநாள் என் கிட்னியிலயும் கடவுள் கை வச்சுடுவான்."

'-அரைத் தாடிக்காரனின் தத்துவப் பேச்சை அந்தத் துக்கத்திலும் ரசித்தாள். பணத்தோடு பிரகாஷ் அட்மிட் செய்யப்பட்டிருக்கும் ஆஸ்பத்திரி நோக்கி ஓடினாள்.

அரைமணி நேரத்தில் அவன் முன் இருந்தாள். பணத்தைக் காட்டினாள்.

"ஏது லட்சுமி... எப்படி கிடைச்சிச்சு?"

"எல்லாம் தேவா அண்ணன்தான் கொடுத்து வுட்ருக்கு..."

"தேவநாதனா... எங்க அவன்?"

"கொடுத்துவுட்ருக்குன்னுதானே சொன்னேன். அதுவே வந்துடுச்சுன்னா சொன்னேன்..."

"யார்கிட்ட கொடுத்துவிட்டான்..."

"அதெல்லாம் உங்களுக்கு எதுக்கு... உங்களுக்கு நல்லாயிடும்... அதுதான் எனக்கும் வேணும். இன்னும் 75 ஆயிரத்தை அடுத்த வாரம் அனுப்புறேன்னு அண்ணன் போன் பண்ணி பேசிச்சு.

"நிஜமாவா...?"

"பணத்தை கண் எதிர்க்க பார்த்துமா உங்களுக்குச் சந்தேகம்..."

-லட்சுமி சாமர்த்தியமாக தன் உறுப்பு வியாபாரத்தை தேவநாதனைக் கொண்டு மூடினாள். ரகசியமாக கண்களில் ஈரம் பெருகிட அழுத போதிலும் சமாளித்தாள். ஆனால், அவனோ அதை ஆனந்தக் கண்ணீராக நினைத்தான்.

"தேங்க்ஸ்டா தேவா... நண்பன்னா நீதான்டா நண்பன்!" -என்றான் பரவசமாக.

❖ ❖ ❖

கங்கைக்கரை!

கல்படிகளில் ஈரவேட்டியோடு அமர்ந்திருந்த தேவ நாதன் எதிரில் சோற்றுப் பிண்டங்கள். அவைகளை ஒரு வாழை இலையில் வைத்து ஓடும் கங்கைக்குள் போட்டு விட்டு ஒரு தலை முழுக்கு போட்டுவிட்டு வரச் சொன்னார் தமிழ் பேசும் சாஸ்திரி ஒருவர். அருகில் பார்த்தபடி நின்று கொண்டிருந்தார் ராமநாதன்.

தேவநாதனும் பரவசமாய் பெருக்கெடுத்து ஓடும் கங்கையில் அந்த சோற்று உருண்டைகளை போட்டு விட்டு திரும்பி வந்தான்.

"காரியமெல்லாம் நல்லபடி முடிஞ்சது. ஒரு நாலஞ்சு பிராமணாளுக்கு உங்களால முடிஞ்ச உபகாரத்த பண்ணிட்டு நீங்க ஊருக்கு கிளம்பலாம்" -என்றார் சாஸ் திரிகள். பின் ஏதோ சொல்ல தவறினவர் போல "ஆங்... முக்கியமா ஒரு விஷயம், கங்கைல குளிக்கற பாக்யம் கிடைக்கறது அபூர்வம். அதுலயும் காரியம் பண்ணிட்டு ஸ்நானம் பண்றதுங்கறது ரொம்ப விசேஷம்.

இந்த மாதிரி சந்தர்ப்பத்துல ரொம்ப ஆசைப்பட்டு நேசிக்கிற ஒரு விஷயத்தை கங்கைக்கு அர்ப்பணம் பண்ணினா ரொம்ப நல்லது.

கங்கா மாதா நாம கொடுக்கற பொன் பொருளுக்கு ஆசைப்படறதில்லை. அதேநேரம் மனச் சங்கல்பத்தை பெரிசா நினைக்கறவ அவ.

காபி சாப்பிட மாட்டேன். உப்பு சேர்த்துக்க மாட்டேன், பொய் பேச மாட்டேன்-இப்படி ஏதாவது சங்கல்பம் பண்ணிக்கலாம்."

-சாஸ்திரி சொன்னது தேவநாதனை மிகவும் சிந்திக்க வைத்தது.

அவனும் ஒரு முடிவுக்கு வந்தான்.

அது...?



# 21

ஸ்ரீயந்த்ரத்தின் வடிவார்த்தத்தைப் புரிந்தபடியே மேலேறிக் கொண்டிருக்கிறோம். முதல் தளம், இரண் டாம் தளம், மூன்றாம் தளம், நான்காம் தளங்களைப் பார்த்தும், அதில் வாசம் செய்து வரும் தேவதைகள் பெயர்கள் மற்றும் அவர்களின் விசேஷ குணங் களைப் பார்த்தோம்.

ஐந்தாம் தளத்துக்கு வருவோம். முன்பே குறிப் பிட்டது போல ஸ்ரீயந்த்ரத்தைப் புரிந்து கொள்ள முயற்சிப்பது ஒருவன் 'நான் யார்?' என்ற கேள்விக்கு விடை புரிந்து கொண்டதைப் போன்றது.

கேள்விகளிலேயே மிகப் பெரிய கேள்வி 'நான் யார்?' என்பதுதான்... ஒரு ஆச்சரியம்... இதற்கான விடை மட்டும் மவுனத்தில்தான் உள்ளது. நான் யார்? என்ற கேள்விக்கு விடை கிடைத்தவர்கள் அதற்கு பதில் கூற முயன்றதே இல்லை.

உய்த்து துய்த்து அனுபவித்து மட்டுமே அறிய முடிந்த ஞானம் அது. கிட்டத்தட்ட ஸ்ரீயந்த்ரமும் அப்படித்தான்.

ஸ்ரீயந்த்ரம் எல்லாருக்கும் அவ்வளவு சுலபத்தில் விளங்கிவிடாது. கணிதத்தில் புலிகளாக இருப்ப வர்கள் ஸ்ரீயந்த்ரத்தைப் புரியத் தொடங்கினால் வியந்து போவர்.

ஏனென்றால் கூட்டல், கழித்தல், வகுத்தல் என்று இதில் கணக்குப் போட்டுப் பார்க்க வேண்டிய அவசியம் நிறைய.

அதேபோலத்தான் செவ்வகம், சதுரம், முக் கோணம், வட்டம் என்ற கணிதம் சார்ந்த அமைப்பு களும் இதில் ஏராளம்.

ஸ்ரீயந்த்ரத்தை ஏதோ மந்திரப் பொருள் போல சிலர் பார்க்கின்றனர். கும்பிடுவது நல்லது என்று

ஒருவித பயத்தோடு கும்பிடவும் செய்கின்றனர். இதைப் புரிந்து கொள்ள முயன்றதே இல்லை. அதற்கெல்லாம் என்னிடம் பொறுமையில்லை, எனக்கு விளங்கவும் விளங்காது என்று வணங்கி ஒதுங்கி விடுகின்றனர்.

மீறி அவர்களை இந்த விஷயத்துக்குள் இழுத்தால், குழம்பிப் போய் 'ச்சே... இது எதற்கு இத்தனை தளங்களுடன் இருக்கிறது? இது எப்படி தெய்வமாகும்? இதில் எப்படி சக்தி இருக்க முடியும்? தலையும் புரியவில்லை, காலும் புரியவில்லையே' என்று தத்தளிக்கின்றனர்.

அப்படிப்பட்டவர்கள் புரிந்து கொள்ள முயற்சித்து சிரமப்படுவதைத் தவிர்த்து இந்த முன்னோட்ட பாகத்தைத் தாண்டி கதைக்குள் சென்று விடுவதே உத்தமம்.

உண்மையில் ஸ்ரீயந்த்ரம் என்பது ஒரு அறிவுச் சுரங்கம். இதற்கு மேல் ஒரு கூரிய மூளை உலகில் எதுவும் இருக்க முடியாது என்று சொல்லத் தக்க மனிதர்கூட ஸ்ரீயந்த்ரம் முன்னால் மிகச் சாதாரண மானவர்.

பயபக்தியோடும், அருள் வேட்கையோடும் இதைப் புரிந்து கொள்ள முயன்றவர்களோ வாழ்க்கையில் எங்கோ சென்று விட்டனர்.

ஒன்று உறுதி! ஸ்ரீயந்த்ரம் பற்றி அறிய முயற்சிக்கும் முயற்சியே அம்பிகைக்கு அபிஷேகம் செய்வதைப் போன்ற ஒரு செயல். இதை வாசிப்பவர்கள், யோசிப்பவர்கள் அனைவருமே சக்தியை நெருங்கி சந்தோஷத்தில் திளைக்கப் போவது நிஜம்!

இனி ஐந்தாம் தளம் பற்றிப் பார்ப்போம்.

சிலுசிலுவென்று கங்கைக் கரை நீரோட்டம்! இடுப்பளவு நீரில் நிற்பதே மிகப் பரவசமான ஒன்றாக இருக்கும் ஒரு தெய்வீக சூழ்நிலை.



இந்த நிலையில் காசிக்கு வந்து காரியம் செய்பவர்கள் தாங்கள் ஆசைப்படும் ஒரு விஷயத்தை கங்கைக்கு அர்ப்பணம் செய்ய வேண்டும். அதே போல ஏதாவது ஒரு தீய குணத்தை விட்டொழித்து ஒரு நற்குணத்தைக் கடைபிடிக்க வேண்டும். அதற்காக கங்கா ஜலத்தை விட்டு சத்தியமும் செய்ய வேண்டும் என்று அந்த கங்கைக் கரை சாஸ்திரிகள் சொன்னது தேவநாதனிடமும் ஒரு தீர்க்கத்தை வரவழைத்தது.

அவனது மவுனமும் இறுக்கமும் கூடவே இருக்கும் மாமா ராமநாதனை மட்டும் என்னவோ செய்தது.

"மாப்ளை..."

"என்ன மாமா...?"

"கவனம்... நீங்க யோசிக்கிறதப் பார்த்தா எனக்கு பயமா இருக்கு..."

"பயமா இருக்கா... என்ன மாமா சொல்றீங்க?"

"இந்த மாதிரி நேரத்துல சிலர் யோசிக்காம சில சபதங்களைச் செய்துடுவாங்க. பின்னால காப்பாத்த முடியாது. அப்புறம் அரிச்சந்திரன் கஷ்டப்பட்ட மாதிரி கஷ்டப்பட வேண்டியதுதான்."

-அவர் அரிச்சந்திரன் என்று சொன்னதுதான் தாமதம். "அதோ அரிச்சந்திராகாட்." -என்று சாஸ்திரிகள் கையை நீட்டிக் காட்டினார். படித்துறை மேலேயே ஏராளமாய் விறகுக் கட்டுகள். ஒரு இடத்தில் பிணம் ஒன்று வெந்து கொண்டிருந்தது.

"பொய் பேச மாட்டேன்று சங்கல்பம் செய்திண்டவன் அரிச்சந்திரன். அப்படி இருந்தா எவ்வளவு கஷ்டம் வரும்னு பாடாபடுத்தினார் விஸ்வாமித்திரர். ஆனாலும், கடைசில முக்தி மோட்சமும் காலத்துக்கும் புகழும் அரிச்சந்திரனுக்குக் கிடைச்சது.

ஆகையால, கூடிய வரை பொய் பேச மாட்டேன்னு சங்கல்பிச்சுக்கலாம். அதுக்கு தோதா ஆசையைத் தூண்டற வெங்காயம், பாக்கு, காபிங்கற லாகிரிகளைக் கையால கூடத் தொடறதில்லைன்னும் சங்கல்பம் பண்ணிக்கலாம்"

-சாஸ்திரிகள் எடுத்துக் கொடுத்தார்.

"இல்ல சாஸ்திரிகளே... அதைவிடப் பெரிய விஷயம் ஒண்ணு இருக்கு. சொன்ன சொல்லைக் காப்பாத்துறதுங் கறதுதான் அது... 'இந்த உலகத்துலயே பெரிய விஷ யமா நான் அதைத்தான் நினைக்கறேன்..." -என்று சற்று ஆவேசமாகவே சொன்னவன், மளாரென நீரில் இறங்கி மூழ்கி பின் நிமிர்ந்து எழுந்தான். தான் சொன்னதை சங்கல்பித்துக் கொண்டு ஓடும் கங்கை நீரை அப்படியே அள்ளி, மீண்டும் ஓடும் நீரிலேயே விட்டான்.

சாஸ்திரிகள் முகத்தில் ஒரு இனம் புரியாத பெரு மிதம். ராமநாதனோ தேவநாதன் சற்று அவசரப்பட்டு விட்டதைப் போலத்தான் நினைத்தார். அது அவரது முகத்தில் தெரிந்தது.

அதன்பின் விஸ்வநாதர் ஆலயத்துக்கும் விசாலாட்சி யைத் தரிசிக்கவும் சென்ற இடத்தில் எல்லாமும் அது தொடர்ந்தது.

தேவநாதன் கேட்டே விட்டான்.

"ஏன் மாமா. ஒரு மாதிரி இறுக்கமா இருக்கீங்க..."

"ஒண்ணும் இல்ல மாப்ளே...!"

"இல்ல மாமா... இப்படி நீங்க சொல்லும் போதே நிறைய விஷயம் இருக்குதுன்னு சொல்லாம சொல்லிட றீங்க..."

"உண்மைதான் மாப்ள... இந்த காசியும், கங்கையும் ஒண்ணும் சாதாரண இடமில்ல மாப்ள..."

"நானும் மறுக்கலையே..."



"இங்கல்லாம் வரதுக்கே சிலர் ரொம்ப யோசிப்பாங்க..."

"யோசிப்பாங்களா... இங்க வந்து கங்கைல மூழ்க கொடுத்து வச்சிருக்கணும்னுல்ல சொல்வாங்க"

"அது ஒரு பக்கம். அதே நேரம் இந்த மண்ணோட புனிதத்துக்கு பங்கமா நடந்துகிட்டா அந்தப் பாவம் சாதாரண பாவமில்ல..."

"எப்படி... எப்படி?"

"ஆமாம் மாப்ள... சில விட முடியாத கெட்டப் பழக்கம் உள்ளவங்க இங்க வர மாட்டாங்க. வந்தா இங்கேயும் தப்பு பண்ணச் சொல்லும். இதுவோ பாவங்களை எரிக்கிற பூமி..."

"இப்ப எதுக்கு இவ்வளவு பீடிகை..."

"இல்ல மாப்ள... சாதாரணமா இங்க வந்தா பீடி, சிகரெட் பிடிக்கிற பழக்கம் உள்ளவங்க அதைப் பிடிக்க வேண்டி வரும்னே வர்றதை தவிர்ப்பாங்க. அந்த அளவுக்கு இந்த மண்ணுமேல ஒரு பயமும் மரியாதையும் அவங்களுக்கெல்லாம் உண்டு."

"ஐயோ... விஷயத்துக்கு வாங்க..."

"இல்ல... அப்படி ஒரு பூமியில ஓடற கங்கை ஆத்துல இனி சொல்லுல நிப்பேன்னு ஒரு முடிவெடுத்தீங்களே அதைச் சொன்னேன்."

"எனக்கு பேச்சு மாறி நடந்துக்கறவங்களைச் சுத்தமாப் பிடிக்காது மாமா. அதனாலதான் நானாச்சு அதுக்கு ஒரு உதாரணமா இருக்கணும்னு அப்படி ஒரு சங்கல்பம் பண்ணிக்கிட்டேன்."

"இப்ப இருக்கற நாள்ல அது எவ்வளவு கஷ்டம் தெரியுமா?"

"இப்ப இருக்கற நாள்ல எதுதான் கஷ்டமில்ல மாமா? சாதாரணமா குடிக்கற தண்ணி லிட்டர் பத்து ரூபாய்க்கு

விக்குது. ஒரு கொடுமை பால் இதைவிட கம்மியாதான் விக்குது..."

"அது இல்ல மாப்ள..."

"இல்ல மாமா... எனக்கு நம்பிக்கை இருக்கு. நான் சொல்லுல நிப்பேன். நின்னு காட்றேனா இல்லையான்னு பாருங்களேன்..."

-தேவநாதனின் உறுதி, இறுதியில் ராமநாதனை கட்டிப்போட்டே விட்டது!

❖ ❖ ❖

நல்ல உச்சி வெயில்...!

அதற்கு மேல் திவ்யாவிடம் பொறுமை இல்லை. கால் மட்டும் கட்டு போடப்படாமல் சரியான நிலையில் இருந்திருந்தால் இந்த நொடி திவ்யா மாடியில்தான் இருந்திருப்பாள். அப்படி ஒரு துடிப்பு அவளிடம். அவள் அம்மா செண்பகம் "கொஞ்சம் பொறு... கொஞ்சம் பொறு..." என்று தள்ளிப் போட்டுக் கொண்டே வந்திருந் தாள்.

தேவநாதன் அம்மா கல்யாணியிடமும் அரைமனசுதான். ஆனால், தேவநாதனின் சகோதரிகள் இரண்டு பேரும் மேல அப்படி என்னதான் இருக்கிறது என்று பார்த்துவிட வேண்டும் என்றுதான் நினைத்தனர். திவ்யா அவர்களைப் போலவெல்லாம் குழம்பவோ குழப்பிக் கொள்ளவோ சுத்தமாகத் தயாரில்லை. தன் மாவுக்கட்டுப் போட்ட காலைத் தூக்கிக் கொண்டு மேல போய் பார்த்துவிட முடிவு செய்துவிட்டாள். அதற்கான முயற்சிகள் அவளிடம். தேடிப் பிடித்து எடுத்து வந்திருந்த இரும்புச் சுத்தியல் ஒருபுறம், சின்ன கடப்பாரை மறுபுறம்.

செண்பகத்தின் கண்களில் பயம் தெரிந்தது.

"திவ்யா... மாப்ளயும் அப்பாவும் வந்துடட்டுமே..."



"நீ பேசாதம்மா... நீங்கள்லாம் கோழைங்க. அநாவசி யமா பயப்படறவங்க."

"பயப்பட வேண்டியதுக்கு பயந்து தான்டி தீரணும். அதுலயும் உன் கால் இப்படி ஆனதே நீ அந்த மாடியை எட்டிப் பாக்கப் போய்தான்... இதுல பாம்பைப் பாத்தேன், தேளைப் பாத்தேன்னு வேற சொன்னே... அடிக்கடி ஒரு தினுசா சத்தம் வேறு கேக்குது... எல்லாத்தையும் யோசிச்சுப் பாரு..."

"இவ்வளவு சொன்ன நீ அங்க இருந்து வந்த பூனை யைப் பத்தி யோசிச்சுப் பாத்தியா? அது கழுத்துல... உடம்புல கிடந்த நகைங்களப் பத்தி யோசிச்சுப் பாத்தியா?"

"முடிவா என்னதான் சொல்றே நீ?"

"இரண்டுல ஒண்ணு பார்த்துடணும். எல்லா மர்மத்துக் கும் ஒரு முற்றுப் புள்ளி வெச்சாகணும்கறேன்."

"சரிடி... உன் வீட்டுக்காரரும் அப்பாவும் வந்துடட் டுமே..."

"அவங்க வர்றவரை காத்திருக்கிறது முட்டாள்தனம். இந்த பூனை நகைங்களோட அக்கம்பக்கமெல்லாம் போய் அவங்க பூனைகிட்ட இருந்து நகைங்கள எடுத்து கிட்டா..."

-அப்போதுதான் திவ்யா எதற்காக துடிக்கிறாள் என்பதே செண்பகத்திற்கு வெட்ட வெளிச்சமானது. கல்யாணியும் இப்படி ஒரு எச்சரிக்கையான எண்ணம் தனக்குத் தோன்றாமல் போனதே என்று யோசித்தாள்.

"அண்ணி சொல்றதுதான் சரி... பூனைக்காகவாவது மேல என்ன இருக்குன்னு இப்பவே பாத்துடணும்" - என்றாள் சின்னவள் ஜெயந்தி.

"அப்படிச் சொல் ஜெயந்தி. இந்த கடப்பாரை, சுத்தியலை எடுத்துக்க... மேல என் கூட வா..." -திவ்யா

கட்டுபோட்ட காலுடன் படுக்கையில் இருந்து எழுந்து ஆவலாக மாடியை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

அதே நேரம் வாசல் பக்கம் குடுகுடுப்பைக்காரன் வந்து நிற்கும் சப்தம். அவன் குரல் குடுகுடுப்பை ஒலியோடு சேர்ந்து கேட்கத் தொடங்கியது.

"நல்ல காலம் பொறக்குது... நல்ல காலம் பொறக்குது... -என்ற அவனுடைய வழக்கமான ஸ்டீரியோ டைப் ஆரம்பத்துடன் தொடங்கினான். "குபேரன் குடி இருக்கும் வீடு இது... குத்தமில்லா மனை இது... இதுல லட்சுமி குடிவரப் போறா. குடியிருக்கிற மகராசன் கோபுரமா உசரப் போறான். ஆனாலும் காசும் பணமும் குவிஞ்சாலும் கூடவே ஒரு கரையான் உள்ள வந்து குடிபுகும்னு ஜக்கம்மா சொல்றா..." -என்றான்.

'கரையானா?' -அவன் கரையான் என்று சொன்னதில் நிலை கொண்டுவிட்டாள் கல்யாணி.

அதேநேரம் மாடிப் பூட்டை ஒரே தட்டில் தட்டி உடைத்து எறிந்துவிட்டு கதவைத் திறந்தாள் திவ்யா. பின்னால் ஜெயந்தி.

திறந்து கொண்ட கதவுக்கு அப்பால் உள்ளே செல்லும் நீண்ட காரிடார். காரிடார் முடிவில் பெரிய ஹால். ஹாலின் மையத்தில் ஒரு சிறிய மரத் தேர் போன்ற அமைப்பில் தேர்ப் பீடத்தில் ஸ்ரீயந்த்ரம் ஒன்று!

அதன்மேல் மாலைகள் சாத்தப்பட்டு அவை காய்ந்து போயிருந்தன. பெரியவர் சச்சிதானந்தம் பூஜித்திருக்க வேண்டும். மற்றபடி இருபக்கமும் மர ஷெல்ப்புகளில் அடுக்கடுக்காக புத்தகங்கள்... ஏட்டுக்கட்டுகள். ஜெயந்தியும் திவ்யாவும் வெறிக்க வெறிக்கப் பார்த்தனர். அப்படியே உள்ளேயும் நுழைந்தனர். திவ்யா நேராக அந்த மரத்தேர் அருகேதான் முதலில் சென்றாள். ஸ்ரீயந்த்ரத்தை உற்றுப் பார்த்தாள். குழப்பமாக இருக்கிறது. பக்கத்தில்



கற்பூர ஆரத்தித் தட்டு, சிறிய மணி என்று பூஜை சாமான்கள்.

ஜெயந்தி அந்த புத்தக ரேக்குகளிடம் சென்று நின்றாள். ஒரு புத்தகத்தை விரலால் தள்ளி இழுத்தாள். சொத்தென்று கையில் விழுந்தது. பிரித்தாள். முதல் பக்கத்திலேயே 'சொர்ண ஜாலத் திரட்டு எனும் தங்கம் செய்யும் முறை' என்ற வார்த்தைகள் கண்ணில்பட்டன. மியாவ் என்றும் ஒரு அழைப்பு. திரும்பினாள்.

திவ்யாவும்...

எதிரில்...?

## 22

**ஸ்ரீயந்த்ரத்தின் ஐந்தாம் தளத்தை 'ஸர்வார்த்த சாதக சக்கரம்' எனவும் அழைக்கலாம்.**

**இதில் ஸர்வ சித்திப்ரதா, ஸர்வ சம்பத்ப்ரதா, ஸர்வ ப்ரியங்கரீ, ஸர்வ மங்களகாரிணி, ஸர்வ காமப்ரதா, ஸர்வதுக்கவிமோசினி, ஸர்வ ம்ருத்யுப் ரசமனீ, ஸர்வ விக்னநிவாரிணி, ஸர்வாங்க சுந்தரி, ஸர்வ சவுபாக்ய தாயினி என்று பத்து சக்தி தேவதைகள் வாசம் செய்கின்றனர்.**

**இவர்களின் தலைவியாகத் திகழ்பவள் திரிபுராஸ்ரீ!**

**நமது வாழ்க்கை கர்ம பலாபலன்களால் ஆனது. நமது பிறப்பை, அதன் ஏற்றத் தாழ்வான விதத்தை நாம் நமது கர்மத்தால் வடிவமைத்துக் கொள்கிறோம்.**

**பகவை வதைப்பது, சுமங்கலிகளைத் துன்புறுத்துவது, தெய்வ நிந்தனை புரிந்து அதன் கோபத்துக்குள்ளாவது, பெற்ற தாயைக் கண்ணீர் விடச் செய்வது போன்ற கர்ம பாவங்களே நாம் பிறக்கும் நேரம்**

நமக்கான தோஷங்களாக அமைந்து விடுகிறது. அதற்கேற்பவே ஒன்பது கிரகங்கள் நமது ராசிச் சக்கரத்தில் உச்ச, நீச்ச ஆட்சிப் பலன்களுடன் அமைந்திருக்கும்.

இப்படிப்பட்ட ஜாதக அமைப்பு கொண்டவர்கள் ஸ்ரீ யந்த்ரத்தைத் துதிக்கும்போது, குறிப்பாக இந்த ஐந்தாம் தளத்து தேவிகளைப் புரிந்து, அவர்களுக்கான உபாசனா முறைகளைக் கைக் கொள்ளும் போது இவர்கள் மகிழ்ந்து உரிய குருவை நமக்கு அனுப்பித் தருவார்கள்.

தாய், தந்தை யார் என்று காட்ட, தந்தை குருவைக் காட்ட, குருவாலேயே இறைவனை நமக்கு அடையாளம் காட்ட உணர்த்திட முடியும். அப்படிப் பட்ட குருவை நாம் அடைய இந்த ஐந்தாம் தளத்து தேவியர் துணை செய்கின்றனர். அந்தக் குருவின் துணையோடு ஆறாம் தளத்துக்குச் சென்றால் அங் கேயும் தேவியர்கள் நமக்காகக் காத்திருக்கின்றனர்.

அவர்கள்...

❖ ❖ ❖

ஜெயந்தியின் கையில் கிட்டிய ஏடும் அதில் தெரிந்த 'சொர்ண ஜாலத்திரட்டு என்னும் தங்கம் செய்யும் முறை' என்ற வாசகங்களும் ஜெயந்தியை லேசாகக் குழப்பின. அதை அப்படியே செருகி வைத்துவிட்டு திரும்பினாள்.

தன் மாவுக் கட்டுக் கால்களுடன் திவ்யா அந்த மேல் மாடி அறை முழுக்க துழாவியபடி இருந்தாள். ஒரு இடத்தில் புக் ஷெல்ப் ஒன்றின் பின்னால் ஒருகதவு தெரிந்து அங்கே அறை ஒன்று இருப்பதை உணர்த்தி யது. அதைத் தொட்டுத் தள்ளிய நொடி, மூக்கில் ஜிவ்லென்று கலவையான ஒருவித வாசம் ஏறியது.



முழுக்கத் திறந்து உள்ளே சென்றபோது அதிர்ச்சியாக இருந்தது. அந்தப் பூனை அங்கேதான் ஒரு திறந்து கிடந்த பெட்டி ஒன்றில் படுக்கையில் படுத்திருப்பது போலப் படுத்திருந்தது.

அந்தப் பெட்டிக்குள் ஏராளமான தங்க நகைகள்!

ஒரு விநாடி திவ்யாவுக்கும் ஜெயந்திக்கும் வியர்த்தே போய் விட்டது.

"என் யூகம் பொய்யாகல பாத்தியா... நகைங்க இங்க தான் இருக்கு..." என்றபடியே கிட்டே நெருங்கினாள். அந்தப் பூனை தாவிக் குதித்து வேறு புறமாக ஓடியது.

அந்த நகைப் பெட்டியை ஒட்டி... பக்கத்திலும் ஒரு பெட்டி!

ஜெயந்தி அதில் என்ன இருக்கிறது என்று பார்ப்பதற் காகத் திறந்தாள். அதிலும் தங்க நகைகள்! அதிலும் நவரத்தினக் கற்கள் பதித்த நகைகளாக அவை இருந்தன. கிரீடம், ஒட்டியாணம், நெத்திச் சுட்டி என்று கைக்கு அடங்கியும், அடங்காமலும் கூட ஏராளமான நகைகள்...

"அண்ணி... இதிலேயும் நகைங்க... ஐய்யோ எவ்வளவு கல்லுங்க... என்னமா ஜொலிக்குது..." -புளகாங்கிதப்பட்ட படியே பக்கத்தில் இருந்த மூன்றாவது பெட்டியைத் திறந்தாள். எல்லாப் பெட்டிகளுமே பூட்டப் படாமல் திறந்தே இருந்தன.

அதிலும் அந்த மூன்றாவது பெட்டியைப் பூட்டுவதே சிரமம் என்கிற மாதிரி மகாபெரிதாக இருந்தது.

உள்ளே படுக்கை நிலையில் ஒரு அம்பிகை விக்ரகம்!

ஜெயந்தியும் திவ்யாவும் பிரமிப்பிலும் சிலிர்ப்பிலும் மூழ்கி விட்டனர்.

பார்ப்பதற்கு ஓரளவு உற்சாகமாகத் தெரிந்தான் பிரகாஷ். அவனை ஈரத் துணியால் சுத்தப்படுத்தி நெற்றிக்கு விபூதியெல்லாம் வைத்திருந்தாள் லஷ்மி.

டாக்டர் வந்து நிற்கவும் மலர்ச்சியோடு அவரைப் பார்த்து கை கூப்பினான். டாக்டர் பதிலுக்கு லஷ்மியைத் தான் பார்த்தார். பின் கேஸ் ஷீட்டைப் பார்த்தவர். "நல்ல இம்ப்ரூமெண்ட்" என்றார். அப்படியே அங்கிருந்து விலகியவர், அறை வாசலைக் கடக்கும்போது லஷ்மிக்கு சமிக்ஞை செய்தார்.

அவளும் ஒருநிமிஷம் என்று டாக்டரை நோக்கி நடந்தாள்.

"என்னம்மா... உன் புருஷன் முகத்தில ஒரு தெம்பு தெரியுதே..."

"ரொம்பக் கஷ்டப்பட்டு அதை உருவாக்கியிருக்கேன் டாக்டர்"

"கீப் இட் அப்... ஆமா, ஆபரேஷனுக்குப் பணம் கட்டணுமே, கட்டிட்டியா?"

"பாதி கட்டிட்டேன்... இன்னொரு பாதி கைக்கு வர, ஒருவாரம் ஆகும் டாக்டர்..."

"அந்த புரோக்கர் பயல இங்க பார்த்ததா நர்ஸ் சொன்னா. அவன்கிட்ட நீ மாட்டிக்கிட்டிருக்கியா?"

"எந்த புரோக்கர் டாக்டர்?"

"பொய் சொல்லாதே... எனக்கு எல்லாம் தெரியும்"

-அவர் அதட்ட, அவள் மவுனித்தாள். அதுவே 'ஆமாம்' என்றது.

"இதோ் பாரும்மா... உன்னைப் பார்த்தா எனக்குப் பரிதாபமா இருக்கு உன்னைப் பாராட்டறதா, இல்லை -திட்டறதான்னே தெரியல. இன்னிக்கு உன் புருஷனுக்காக நீ உடம்பு உறுப்பை வித்தா நாளைக்கு என்ன செய்வே...?"

"அதை நாளைக்குப் பாத்துக்கலாம் டாக்டர் சார். மெல்லப் பேசுங்க, அவர் காதுல விழுந்துடப் போகுது."



"என்னம்மா நீ... இப்படி தர்மசங்கடப்படுத்தறியே. இதோ பாரும்மா. உனக்காக நான் நிறைய தவணை முறையைக் கூட ஏற்படுத்தித் தரேன். அவசரப்படாதே. தயவு செய்து அந்த புரோக்கர்கிட்ட சொல்லி அவனை இங்க வர வேண்டாம்னு சொல்லு"

"கை நீட்டி அட்வான்ஸ் வாங்கிட்டேனே டாக்டர்"

"திருப்பிக் கொடு. அந்தப் பணத்தை நீ இங்க கட்டியிருந்தா நான் அதைத் திருப்பித் தரச் சொல்றேன். பிச்சைகூட எடு. நான் தடுக்கலை. ஆனா, உறுப்பை விக்கற கொடுமை வேண்டாம். கண்ணை வித்து யாரும் சித்திரம் வாங்க மாட்டாங்க. ஞாபகம் வெச்சுக்கோ"

-டாக்டர் அதட்டி விட்டுப் போக, லஷ்மிக்கு குழப்பம் தான் அதிகமாயிற்று. நெடுநேரம் வரை யோசித்தவள் எஸ்டிடி பூத் நோக்கி நடந்தாள். திரும்ப ஒரு முறை தேவநாதனிடம் பேசிப் பார்த்தால் என்ன என்று தோன்றவே, அவனுக்கு டயல் செய்தாள். ஆனால், போனை எடுத்தவள் அவனது அம்மா கல்யாணி.

"என்னம்மா எப்படி இருக்கு உன் புருஷனுக்கு"

"...."

"இப்படி மவுனமா இருந்தா எப்படி... திரும்பவும் பணத் தட்டுப்பாடா...?"

"ஆமாங்கம்மா..."

"கவலைப்படாதே.. தேவா உனக்குக் கட்டாயம் உதவி செய்வான்"

"அம்...ம்மா..."

"அவன் இப்ப பழைய தேவா இல்லை... குபேரன் அவன்"

"எப்ப... எப்பம்மா எனக்கு அண்ணன் பணம் தரும்?"

"அவன் காசிக்குப் போயிருக்கான். இன்னிக்கு வந்துடு வான். நாளைக்கு அவனைப் பணத்தோட அனுப்பி வைக்கிறேனே..."

"அம்மா... ரொம்ப நன்றிம்மா... ரொம்ப ரொம்ப நன்றிங்கம்மா..."

-லஷ்மி சந்தாஷத்தில் திணறினாள். தொலைபேசி வைத்துவிட்டு அப்படியே மார்பைத் தூளிபோல ஆட்டிப் பெருமூச்சு விட்டாள்.

சக்தி மாளிகைக்கு வெளியே தேங்கிய காரில் இருந்து இறங்கிக் கொண்டிருந்தார் அந்தப் பெரியவர்.

உள்ளே நுழைந்தவரை உற்சாகமாக வரவேற்றாள் கல்யாணி.

"அண்ணே... எப்படிண்ணே இடத்தைக் கண்டுபிடிச்சு வந்தீங்க?"

"என்ன கல்யாணி... இதுதானா பெரிசு? ஆமா, நீ எப்படி இருக்கே?" -அவர் நலம் விசாரிக்கத் தொடங்க, அவரைச் சுற்றி ஜெயந்தி, வசந்தி என்று நின்று கொண்டனர். 'யார் இந்தப் புது மனிதர்?' என்கிற மாதிரிப் பார்த்தாள் திவ்யா. அவள் அம்மா செண்பகமும்!

"மன்னிச்சுக்கம்மா... உன் மகன் கல்யாணம் பத்திக் கேள்விப்பட்டும் உடனே வந்து பாக்க முடியல. ஆமா, இதான் பொண்ணா?"

"ஆமாண்ணே... பேர் திவ்யா! திவ்யா, இவர் என் ஒண்ணுவிட்ட அண்ணன். பெரியப்பா மகன். பேர் சந்தானம். அமெரிக்காவுல இருக்காரு" -கல்யாணியும் அறிமுகத்தை முடிக்க, அவளும் கையைக் கூப்பினாள்.

"இவங்கதான் சம்பந்தியம்மா. பேர் செண்பகம். ஆமா, சுந்தர் நல்லா இருக்கானா? அண்ணி எப்படி இருக் காங்க?" -செண்பகமும் கைகூப்ப பேச்சு தொடர்ந்தது.



"அவளுக்குதாம்மா உடம்பே சரியில்ல. இரண்டு தடவை ஹார்ட் அட்டாக் வந்துடுச்சு. அடுத்து வந்தா அவ்ளோதான்னு சொல்லிட்டார் டாக்டர். அதனால சுந்தருக்கு கல்யாணத்தை வேகமாப் பண்ணிடணும்னு பாக் கறேன்" -அவர் பதிலோடு போய் சோபாவில் விழுந்தார். காபி எடுத்துக் கொண்டு வந்த வனிதாவை ஏற இறங்கப் பார்த்தார்.

"என்னண்ணே... அப்படிப் பாக்கறீங்க? பெரியவ வனிதா இவ..."

"தெரியுதும்மா. ரொம்பச் சின்னப் பொண்ணா... இருந் தப்ப பாத்தது. இப்ப நல்லா வளந்துட்டா" என்றபடியே காபியை உறிஞ்சினார். அமிர்தமாக இருந்தது.

"பிரமாதம்... இப்படிக் காபி குடிச்சு ரொம்ப நாளாச்சு. ஆமா, எங்கே தேவா?"

"வந்துடுவான்... ஒரு வேலையா வெளியூர் போயிருக் கான்"

-அழகாகச் சமாளித்தாள் கல்யாணி. அவர் பார்வை திரும்பவும் வனிதாமேல் சென்றது.

"என்ன அவளையே பாக்கறீங்க?"

"ஒண்ணுமில்லே. வனிதா எனக்கு மருமகளா வந்தா எப்படி இருக்கும்னு யோசிச்சேன்..."

-அவர் பதிலோடு பெருமூச்சு விட்டார்.

"இப்ப என்ன... சுந்தருக்கு இவளைக் கொடுக்க எனக்கும் சம்மதம். இப்பவே அப்படியே கையை பிடிச்சுக் கூட கூட்டிக்கிட்டு போங்க..."

-கல்யாணி வெகுவேகமாக விஷயத்துக்கு வந்து விட்டாள். அவரோ வாயைக் கொடுத்து விட்டவரைப் போல தடுமாறத் தொடங்கினார். கவனித்துக் கொண் டிருந்த வனிதாவுக்கு மட்டும் என்னவோ போலிருந்தது.

"என்னண்ணே... என்ன பேச்சைக் காணோம்?"

"அது இல்லம்மா... நான் என் ஆசையைச் சொன்னேன். ஆனா, உன் அண்ணியோ நூறு பவுன் நகையோட சொத்து சொகத்தோட மருமக வரணும்னு ஆசைப்படறா. உன்னால பத்து பவுன்கூடப் போட முடியாதுங்கறதுதான் தெரிஞ்ச விஷயமாச்சே..."

-அவரது மறுதலிப்பும் பெருமூச்சும் கல்யாணியைக் கட்டிப் போட்டாலும் திவ்யாவை அது நன்றாகவே கீறி விட்டது போலத் தோன்றியது.

"அப்ப நூறு பவுன் நகை போட்டா உங்க பொண்டாட்டி வாயை மூடிக்குவாங்களா?" -ஆவேசமாகக் கேட்டாள்.

பதிலுக்கு அவளை அதிர்ச்சியோடு பார்த்தார் சந்தானம் என்கிற அவர்.

"உங்களைத்தான் கேட்டேன்..." -திரும்பவும் உசுப்பி விட்டாள்.

"நூறு பவுன்நகை அப்ப உங்ககிட்ட இருக்கா?"

"நூற்றி இருபத்தி அஞ்சு பவுன் போடறோம். திருப்தியா?"

"நூற்றி இருபத்தி அஞ்சா?"

-அவர் வாயைப் பிளந்து விட்டார்.

கல்யாணி பதிலுக்கு பெருமிதத்தோடு மருகளைப் பார்த்தாள். வனிதாவுக்கோ 'பக் பக்' என்றிருந்தது.

"ஆமா, அவ்வளவு நகைக்கு எங்கே போவீங்க?"

"அதைப் பத்தி நீங்க ஏன் கவலைப்படறீங்க? எங்கப்பா எனக்கு ஐநூறு பவுன் போட்டிருக்கார். அதுல ஒரு நூத்தி இருபத்தி அஞ்சு நான் போடறேன்னு வெச்சுக்கங்களேன்"

"அப்ப பிரச்னை இருக்காது. கல்யாணத்தை நல்லா, விமரிசையா நடத்திக் கொடுக்கணும். அதுவும் முக்கியம்'



"அதெல்லாம் ஒரு குறையும் வந்துடாது... நாங்க பாத்துக்கறோம். நீங்க பேச்சு மாறாம இருந்தா சரி"

-திவ்யா அப்படிச் சொன்னதுதான் தாமதம். அவருக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்து விட்டது.

"வெத்தலை பாக்கு இருக்காம்மா...? வெத்தலை பாக்கு இருக்கா?" -படபடத்தார்.

"எதுக்கு இப்ப வெத்தலை, பாக்கு கேக்கறீங்க?"

"இப்பவே அச்சாரமா ஒரு ஒண்ணே கால் ரூபாயை வெச்சுக் கொடுக்கறேன். கிட்டத்தட்ட நிச்சயதார்த்தம் பண்ணிட்ட மாதிரிதான்னு வையுங்களேன்."

"இருந்தாலும் நீங்க அவசரப்படறீங்க... சுந்தர் அமெரிக்காவுல இருக்கற புள்ள. அதுக்கு வனிதாவைப் பிடிக்க வேண்டாமா... அவன் சம்மதத்தைக் கேட்காமலே நீங்க இங்க முடிவு பண்றது தப்புண்ணே"

-கல்யாணி ஞாபகப்படுத்துவதுபோல சில விஷயங்களை எடுத்துக் கொடுத்தாள்.

"அவன் எப்பவோ என் கிட்டச் சொல்லி முடிச்சுட்டான். அப்பா, நீங்க யார் கழுத்துல தாலியக் கட்டச் சொன்னாலும் கட்டறேன்னு... பிறகென்ன?"

-அவரது கேள்வியும், பதிலுக்குக் கல்யாணி வனிதாவைப் பார்த்த விதத்திலும் சரியான வேகம். வனிதா முகத்தில் வெட்கக் குழைவு. கல்யாணிக்கு அதுவே அவளது சம்மதத்தைக் கூறி விட்டது. அவருக்கும் அது புரிந்தது.

"எதுக்கோ வந்தேன்... எதிலையோ வந்து நிக்குது. இதைத்தான் விதின்னு சொல்றாங்க போல" என்றவர் ஓடிப் போய் ஜெயந்தி கொண்டு வந்து நீட்டிய வெற்றிலைப் பாக்கில் ஒண்ணேகால் ரூபாயை வைத்தார். அதைப் பார்த்த கல்யாணிக்குச் சந்தோஷம் ஒருபக்கம், பயம் ஒருபக்கம்.

"அண்ணே... கொஞ்சம் பொறுங்க. தேவநாதன் வந்துடட்டும். அவன் இல்லாம நாம இவ்வளவு தூரம் பேசி முடிவு பண்ணதே தப்பு..." என்றாள்.

ஆனால், திவ்யாவோ வேறு மாதிரி சிந்தித்தாள். தேவநாதன் வந்தால் மாடியைத் திறந்து பார்த்ததை எதிர்த்து கூப்பாடு போடலாம். அங்குள்ள நகை நட்டுக்களையும் நமது சொந்தமில்லை என்று ஏதாவது கோயிலுக்குக் கொடுத்து விட முயற்சி செய்யலாம்.

அதேநேரம் இப்படிக் கமிட்மெண்ட் ஏற்பட்டு விட்டால் வேறு வழியில்லாமல் அமைதியாகச் சம்மதித்துதானே தீர வேண்டும். அப்படியே இந்த ஒட்டுண்ணி நாத்தனாரையும் எப்படியோ தள்ளி விட்டோம் என்கிற திருப்தி வேறு...

இதையா தவிர்ப்பது?

யோசித்துப் பார்த்தவள்.

"நீங்க கொடுங்கமாமா" -என்றபடியே கையை நீட்டினாள்.

கல்யாணிக்கு 'சுருக்' கென்றது.

## 23

ஐந்தாம் தளம் பற்றிக் கூறும்போது அதில் உள்ள தேவ, தேவியர் அருளால்தான் குரு, சிஷ்ய உறவு உருவாவதும் அது பலப்படுவது என்பதையும் பார்த்தோம்.

குரு என்பவர் ஆசிரியரும்கூட... தாய்க்கும் தந்தைக்கும் பிறகு ஒரு மனிதன் வாழ்வில் மிக முக்கிய இடம் வகிப்பவர் குருதான்.. நமது இந்து மத சம்பிரதாயத்திலும் குருவுக்குப் பிரதான இடம்



வழங்கப்பட்டுள்ளது. ஒரு படி மேலே போய் குருவே கடவுளாகத் திகழவும் இயலும்.

கடவுளைக்கூடப் பழிக்கலாம். ஆனால், குருவைப் பழிப்பதோ, அவரது கோபதாபங்களுக்கு ஆளாவதோ மிகப் பெரிய துன்பம் தரும் என்பதாலேயே ஐந்தாம் தள தேவியர் குரு, சிஷ்ய பாவத்தைப் பிரதானமாக கருதி அதற்கு அருள்பவர்களாக இருக்கின்றனர்.

இன்றைய நவீன உலகில் குரு எதற்கு? குருவின் உபதேசங்களைக் கொண்டு புத்தகங்களையும், வழிகாட்டும் முறைகளையும் வாசித்து அதன்படி நடந்தால் போதாதா என்று கேட்பவர்கள் பலர் உள்ளனர்.

நானொரு ஏகலைவன்... மானசீகமாக குருவாக ஒருவரை வரித்துக் கொண்டு நான் சில பயிற்சிகள் செய்து வருகிறேன் என்பவர்களும் உண்டு.

குருவும் நம்போல் ஒரு மனிதர்தான்.. நான் பார்க்க அவரிடம் பெரிதாக எந்தச் சக்தியும் இல்லை... அவரை குரு என்று கூறி ஒரு ஹீரோவாக ஆக்க எனக்கு உடன்பாடில்லை என்பவர்களும் உண்டு.

குரு என்கிற ஸ்தானம் இன்று இப்படிப் பல சிதில நிலைப்பாட்டில் உள்ளது.

ஆனால், உண்மையில் குரு என்பவரிடம் அவர் வாய் மூலமாக உபதேசம் பெற்றே எந்தப் பயிற்சியையும் மேற்கொள்ள வேண்டும். அப்போதே அது சித்திக்கும்.

சில மந்திரங்களை எழுதி வைக்கக் கூடாது- அது சத்தமாக மனித மனங்களில் ஞாபகமாக பாதுகாக்கப்பட வேண்டும் என்பது விதி.

அந்த ஆதிசிவம் தட்சிணா மூர்த்தியாக வந்து பிரம்மகுமாரர்களுக்கு அவர்கள் காதுகளில் உபதேசித்த மந்திரங்கள்தான் வழிவழியாக பலப்பல

குருமார்கள் காதில் நுழைந்து மனதில் தங்கி யுகங்கள் கடந்து இன்றும் பல குருக்களின் மனதில் வாழ்ந்த வண்ணம் இருக்கின்றன.

அவரிடம் சென்று சிஷ்யனாகி நாம் உபதேசம் பெறும்போது அவர் அதை நம் காதுக்குள் புகுத்தி நம் மனதுக்குள் நுழைத்து அதற்கொரு சத்த வாழ்வை உருவாக்குகிறார்.

அவர் காலத்துக்குப் பிறகு அது நம் காலத்தில் நம் மனதில் வாழ்கிறது. நாமும் அதை நமது தனிச் செல்வமாகக் கருதிடாமல் நமது சிஷ்யர்களுக்கு அதைக் கூறி அதன் வாழ்வை நீட்டிக்க வேண்டும்.

சுருக்கமாகச் சொல்வதானால் குரு என்பவர் ஒரு டிரான்ஸ்பார்மர்... உபதேசம் என்பது வயரிங். உப தேசித்து முடித்த பின் உள்ளே மின்சாரம் பாயும்.

மாறாக ஒரு புத்தகத்தில் அல்லது பிறரைப் பார்த்து வாசித்து நாம் செயல்படுவதில் செயல்பாடு மட்டும்தான் இருக்கும். மின்சாரம் இருக்காது. எனவே, எந்தச் செயலிலும் குருவின் அம்சம் மிக முக்கியம், தனிப்பட்ட முறையில் அவர் மேலாக, கீழாக எப்படிப்பட்டவராக இருந்தாலும் அது உபதேசத்தையோ அதற்கான மந்திரவீர்யத்தையோ துளியும் பாதிக்காது.

எனவேதான், ஐந்தாம்தள தேவியர் குரு. சிஷ்ய பாவம் பலப்பட அருள்கின்றனர். இந்த நிலையில் ஆறாம் தளமானது அந்தர்தசாரம் எனப்படும். இதில் பத்து கோணங்கள் உள்ளன. இந்தப் பத்திலும் ஸர்வக்ஞா, ஸர்வசக்தி, ஸர்வ ஐஸ்வர்யப்ரதா, ஸர்வ ஞானமயீ, ஸர்வவியாதி வினாசினி, ஸர்வ ஆதார ரூபா, ஸர்வஆனந்தமயீ, ஸர்வரஷாஸ்வரூபினி, ஸர்வபாபஹரா, ஸர்வபலப்ரதா என்பது இவர்கள் பெயர்.

இவர்கள் பிரம்ம ரகசியங்களான படைப்பு, அதனுள் இருக்கும் மாயை, அதனால வரும் இன்ப துன்பங்கள் பற்றிய ஞானத்தை தன்னைத் துதிப்



பவர்களுக்கு அளிப்பவர்கள். குறிப்பாக 'நான் யார்?' என்கிற கேள்விக்கு விடை கிடைக்கப் பெரிதும் உதவுபவர்கள் இவர்கள். நான் யார் என்பது தெரிந்து விட்டாலோ தெய்வம் எது என்பதும் தெரிந்து விடும். அந்த நிலையில் ஏழாவது தளத்துக்குச் செல்ல வேண்டும். செல்வோம்.

வெற்றிலைப் பாக்கு மாற்றிக் கொண்ட நொடி தேவநாதனும் ராமநாதனும் தங்கள் காசிப் பயணத்தை முடித்துக் கொண்டு உள்ளே நுழைந்து கொண்டிருந்தனர்.

அவர்களைப் பார்க்கவும் கல்யாணிக்கும் போன உயிர் வந்ததுபோல ஒரு சந்தோஷம். தேவநாதனும் சந்தானம் மாமாவைப் பார்த்து ஆச்சரியப்பட்டுப் போனான்.

"மாமா"

"வாடா மாப்ளப்பயலே..."

"எங்க இவ்வளவுதூரம்... கைல வேற தாம்பூலம்!"

"எல்லாம் நல்ல விஷயம்தான் தேவா. உன் மாமா நம்ம வனிதாவை அவர் மகனுக்கு முடிவு பண்ணி அதுக்கு அச்சாரமும் போட்டுட்டார்..."

-கல்யாணி ஆவலாகவும் அதேநேரம் சற்று பயத் துடன்தான் சொன்னாள். தேவநாதனுக்கு சுருக்கென்றது.

"என்னம்மா இது... கல்யாண நிச்சயதார்த்தம்ங்கறது எவ்வளவு பெரிய விஷயம். இப்படி ஒரு சாதாரண வெற் றிலைப் பாக்கு சமாசாரத்துல போய் சிம்பிளா முடிச்சிட் டியே... ஆமா, நான் வரவேண்டாமா. என்ன அவசரம்?"

-அவன் கேள்வியின் நியாயம் அவளை திவ்யாவைப் பார்க்க வைத்தது. அவனுக்குப் புரிந்துவிட்டது.

"என்ன... உன் மருமகதான் நல்ல காரியத்தை ஆறப் போடக்கூடாதுன்னு உடனே முடிச்சிடலாம்னாளா?"

"கரெக்ட்... எப்படி இவ்வளவு கரெக்டா சொல்றீங்க?"
-திவ்யா மிக உற்சாகமாக முன்னே வந்தாள்.

"அப்படி என்ன அவசரம்... ஏன் மாமா உங்களைத் தான் கேக்கறேன். என்ன அவசரம்?"

-அவனது பாய்ச்சலை அவர் எதிர்பாராதபடி சற்று திணறினார்.

"இப்ப என்னப்பா... நல்ல காரியம்தானே? காசு பணத்துக்குச் சிக்கல்னா நீ தயங்கறது சரி. அதான் 125 பவுனே போடறேன்னு உன் பொண்டாட்டி தெம்பாச் சொல்றா... எதுக்கு இப்படி கிடந்து அலட்டிக்கறே?"

-சந்தானம் மாமா 125 பவுன் என்று சொல்லவும் தேவநாதன் மட்டுமல்ல, ராமநாதனும் ஆடித்தான் போனார்.

"என்ன வனிதா இவர் சொல்றாரு... 125 பவுனுக்கு நாம எங்க போக...?" -தேவநாதனின் படபடப்பைப் பார்த்து திவ்யாவுக்கு அடி வயிற்றைக் கலக்கியது.

"சரிங்க... ஒண்ணும் தெரியாத மாதிரி பேச வேண் டாம். நீங்க முதல்ல முகம் கழுவிக்கிட்டு காபிய குடிக்கப் பாருங்க... பிறகு பேசலாம்" -என்று பேச்சை மாற்றப் பார்த்தாள்.

"பேச்சை மாத்தாதே... இங்க என்னதான் நடக்குது? அம்மா, நீயாச்சும் சொல்..."

-அவன் கல்யாணியிடம் ஊன்ற வந்தான். அவளோ மாடியை ஒரு பார்வையும் அவனை மறுபார்வையும் பார்த்தாள்.

அந்த ஒன்றே அவனுக்கு எல்லாவற்றையும் விளக்கி விட்டது. ராமநாதனும் அவனைப் போலவே ஓரளவு புரிந்து கொண்டு விட்டார்.

அலையடித்த ஒரு ஆர்ப்பாட்டமான சூழல். "அட என்னங்க நீங்க... தொணதொணன்னு பேசிக்கிட்டு. 125 பவுன் இல்ல... இருநூறு பவுன்கூட இப்ப நம்மால போட முடியும். நீங்க ஒண்ணும் சேலத்துல சிங்கி அடிச்சுக்



கிட்டிருந்த பழைய தேவநாதன் இல்ல. இப்ப நீங்க கோடீஸ்வரன். இல்லேன்னா இவ்வளவு பெரிய பங்களா மாதிரி வீடு ஏது. நான்தான் ஏது...?"

-திவ்யா அசராமல் அவனுக்குப் பதிலைச் சொன்னாள். அவனுக்கு அட்சர சுத்தமாக விளங்கி விட்டது.

"மாடிக்குப் போனியா?" -என்றான் பூருடஸ் ஸ்டைலில்... அவள் கொஞ்சம் கூர்மையாகப் பார்த்தவளாக இமையை அழுந்த மூடி ஆமோதித்தாள்.

"அறிவில்லே உனக்கு?" -உச்சி மண்டையே பிளந்ததுபோல ஒரு அலறு அலறினான். ஆனால், அவள் நடுங்கின மாதிரி தெரியவில்லை.

"ஏன் உங்களுக்கு வேணுமா?" -என்றாள் துளிகூட அசராமல்.

அவனுக்குக் கன்னத்தில் அறை விழுந்த மாதிரி இருந் தது. கல்யாணி சட்டென்று கையை உயர்த்தி கும்பிட் டாள்.

"தேவா... இப்பத்தான் உள்ளயே நுழையறே. எதுக்கு வந்ததும் வராததுமா ஏதேதோ பேசிக்கிட்டு... வா... மொதல்ல கை கால் கழுவிக் கிட்டு உடுப்பை மாத்திக் கிட்டு வா. உனக்கு நான் எல்லா விஷயத்தையும் விவரமா சொல்றேன்..."

-கல்யாணியின் குறுக்கீடு ஓரளவு வேலை செய்தது. லக்கேஜ்களை வனிதாவும் ஜெயந்தியும் தூக்கிச் செல்ல, ஒரு பெரிய கேனில் கங்கை நீரை ராமநாதன் உள்ளே எடுத்துச் சென்று வைத்தார்.

சந்தானம் மாமா முகத்தில் மட்டும் ஈயாடவில்லை.

"இவன் மாடிக்குப் போனியா?" என்று கேட்க, அவள் ஆமோதிக்க, பதிலுக்கு உனக்கு அறிவில்லையா என்று இவன் கேட்பதெல்லாம் எதோடு சேர்த்தி?

குழப்பம் அவர் முகத்தில் சிலந்தி வலை போல வரிவரியாகப் பின்னிக் கொண்டு விழத் தொடங்கியது.

இடையில் தொலைபேசி வேறு...

தனக்கே உரிய குரலில் அதட்டியது.

ஜெயந்திதான் ஓடிப் போய் எடுத்தாள். காதில் லஷ்மிதான் விழுந்தாள்.

"ஹலோ... தேவா அண்ணாவா?"

"இல்ல லட்சுமி அக்கா, நான் ஜெயந்தி..."

"அண்ணன் இல்லையா ஜெயந்தி?"

"இருக்கார். இப்பத்தான் வந்தார். இருங்க அவர்கிட்டத் தரேன்" -என்றபடியே சிடுசிடுவென்று பாத்ரூம் நோக்கிப் போக இருந்த தேவநாதனைப் பார்த்தாள். அவன் அவள் பேசியதை வைத்தே அருகில் வந்து ரிசீவரை வாங்கிக் கொண்டான்.

"யாரு?"

"அண்ணே, நான் லட்சுமி பேசறேன்"

"எந்த லட்சுமி?"

"என்னண்ணே... நான் சேலம் லட்சுமி பிரகாஷ் பேசறேண்ணே..."

"ஓ... நீயா? சரி, சொல்லு. என்ன விஷயம்?"

"என்னண்ணே இது... நீங்க இன்னிக்கு இல்ல நாளைக்கு எங்க வீட்டுக்காரரைப் பார்க்கவும் எங்களுக்குப் பணம் கொடுக்கவும் ஆஸ்பத்திரிக்கு வருவீங்கன்னு அம்மா சொன்னாங்களே..."

"எந்த அம்மா?"

"உங்க அம்மாதான்"

"அதுசரி, என்ன பணம், அது எதுக்கு?"



"என்னண்ணே எதுவுமே தெரியாத மூணாம் மனுஷனாட்டம் பேசறீங்க. இங்க இவர் சாகக் கிடக்கறாருண்ணே... ஆபரேஷனுக்குப் பணம் வேணும்..."

"அது... அது... எவ்வளவும்மா?"

"அவசரமா இப்ப ஐம்பதாயிரம் தேவைண்ணே. நீங்க கட்டாயம் பணத்தோட வருவீங்கன்னு அம்மா சொன்னாங்களே..."

"சொன்னாங்களா?"

"ஆமாம். வருவீங்கதானே? அவசியம் வந்துடுங்க அண்ணே. உங்களை எதுக்கு தொந்தரவு பண்ணிக்கிட்டுன்னு நான் என்னோட கிட்னியை விக்கவே தயாராயிட்டேன். ஆனா, அது டாக்டருக்குத் தெரிஞ்சு பெரிய பிரச்னையாயிடுச்சு. தவணைலகூடப் பணம் கொடு, இப்படி எல்லாம் பண்ணாதே. நீ பண்றதா இருந்தா தடுத்து நிறுத்துவேன்னு எல்லாம் பேசறார். அதனால, எனக்கும் இப்ப உங்களை விட்டா வழியே இல்லைண்ணே"

-லட்சுமி கிட்னி, ஈரல் என்று பேசவும் தேவநாதனுக்கு உடம்பெல்லாம் நடுங்கத் தொடங்கி விட்டது.

"லட்சுமி என்ன இது? அப்படியெல்லாம் பைத்தியக்காரத்தனமா எதையும் பண்ணி வைக்காதே. நான் பாத்துக்கறேன்"

"அப்ப நாளைக்கு நீங்க பணத்தோட வருவீங்களா?"

"அது... பாக்கறேன்"

"பாக்கல்லாம் நேரமில்லைண்ணே. நீங்க பொண்ணு எடுத்த இடத்துல பணம் எப்படிக் கேக்கறதுன்னு சங்கடப்படறது புரியுது. திருப்பிக் கொடுத்துடுவேன் அண்ணே. உங்க மாமனார்கிட்டச் சொல்லியே கேட்டு வாங்கிட்டு வாங்களேன்..."

"சரி, சரிம்மா... நீ கவலைப்படாதே"

-போனை வைத்தான். முத்து முத்தாய் வியர்த்த நிலையில் நிமிர்ந்தான். கல்யாணியும் செண்பகமும் குத்துப் பார்வை பார்த்துக் கொண்டிருக்க, ராமநாதன் சந்தானம் மாமாவிடம் கண்டதைப் பேசிச் சமாளித்தபடி இருந்தார்.

திவ்யாவோ எதுவுமே நடந்து விடாதது போல ஒரு கதைப் புத்தகத்தை கையில் எடுத்து விரித்திருந்தாள். அதைப் பார்க்கவும் கல்யாணி ஓட்டமாக முன் வந்து, "வாப்பா... கை கால் கழுவிக்கிட்டு வா. நான் எல்லாத்தை யும் விவரமா சொல்றேன்" என்று அவன் கையைப் பிடித்து இழுத்துச் சென்றாள். மெல்ல சமாதானப்படுத்தி காபி கலந்து வந்து கொடுத்தாள். பிறகு அவனைக் கொல்லைப்புறமாக அழைத்துக் கொண்டு சென்றாள். கொல்லையின் தோட்டமும் பூத்திருக்கும் மலர்களும் ஒரு வாசமான சூழலை உருவாக்கியிருக்க, மெல்ல பேச் செடுத்தாள்.

"போன காரியம் நல்ல விதமா முடிஞ்சுச்சா?"

"இங்க என்ன நடந்தது... அதை முதல்ல சொல்..."

"என்னப்பா நீ... தோலுக்கு மயங்கி ஒரு ஆசைப் பிசாசைக் கட்டிக்கிட்டே... அவ சொல்லச் சொல்லக் கேக்காம மாடிக்குப் போய் கதவைத் திறந்து உள்ளே என்ன இருக்குன்னு பாத்துட்டா...."

"இந்த நொண்டிக் காலோட அவ போக நீங்க எப்படிச் சம்மதிச்சீங்க. இத்தனைக்கும் நான் என் மாமியார்கிட்ட மாடிப் பக்கமே போக வேண்டாம்னு சொல்லியிருந் தேனே..."

"அவங்க அதைச் சொன்னாங்கப்பா. இவதான் கேக்கல... ஆனா, அது தப்புதான். இதை தயவு செய்து நீ பெருசுபடுத்தாதே..."



"என்னம்மா பேசறே... எப்படி இதைப் பெருசுபடுத்தாம இருக்க முடியும்...? போகட்டும்... வெத்தல பாக்கு மாத்தி நிச்சயம் பண்ற அளவுக்கு அப்படி என்ன அவசரம்?"

"ஒருவேளை நீ வந்தப்புறம் பணம் காசு இல்லே. முடியாதுன்னு சொல்லிட்டா...?"

"இப்பவும் அதுதான் என் பதில்... எங்க இருக்கு நூறு பவுனும், இருநூறு பவுனும்...?"

"இருக்குப்பா... இருநூறு பவுன் மட்டுமல்ல, இரண்டாயிரம் பவுன் கூடத் தேறும். அவ்வளவு இருக்கு"

-கல்யாணி சொன்ன மறுநொடியே "அம்மா..." என்று ஆச்சரியமும் அதிர்ச்சியுமாக மாறினான் தேவநாதன்.

## 24

**ஸ்ரீயந்த்ரத்தின் ஆறாவது தளமானது அந்தர்த சாரம்' என்று அழைக்கப்படுவதையும் இதனுள் உள்ள பத்து கோணத்தில் ஸர்வக்ஞா, ஸர்வசக்தி உள்ளிட்ட பத்துதேவியர் வாசம் செய்வதையும் இவர்கள் 'நிகர்பயோகினிகள்' என்று அழைக்கப் படுவதையும் பார்த்தோம்.**

**இதே தளத்தின் வெளிப்பத்து கோணத்தில் ஸர்வ சித்திப்ரதா, ஸர்வசம்பத்ப்ரதா, ஸர்வப்ரியங்கரீ, ஸர்வமங்கள காரிணீ, ஸர்வகாமப்ரதா, ஸர்வதுக்க விமோசனீ, ஸர்வ மிருத்யுப்ரசமனி, ஸர்வவிக்ன நிவாரிணி, ஸர்வாங்க சுந்தரீ, ஸர்வ சவுபாக்யதா யினி என்கிற பத்து தேவியர்கள் வாசம் செய்கின்ற னர்.**

**இந்த இருபது தேவியர்கள் நமது சரீரம் சார்ந்து இயங்கி உணர்வு ரீதியாக நாம் ஞானம் பெற வழிகாட்டியிருப்பவர்கள்.**

ஆறாவது தளத்தை அடுத்து வருவது ஏழாவது தளம்! எட்டு திரி கோணங்களை உடைய தளம் இது. இந்த எட்டு கோணங்களில் வசினி, காமேஸ் வரி, மோதினி விமலா, அருணா, ஜயினி, ஸர்வேஸ் வரி, கௌளினீ என்று எட்டு தேவியர் வாசம் செய் கின்றனர். இவர்களை 'வாக் தேவதைகள்' என்றும் அழைப்பர். 'ரகஸ்ய தேவியர்' என்றும் குறிப்பிடு வார்கள்.

இவர்கள் பிந்துவில் வாசம் செய்யும் ஆதிசக்தி யான அந்த ராஜராஜேஸ்வரியை கதை, பாட்டு, நாட்டியம், ஸ்தோத்திரம், இசை என்கிற அம்சங் களால் சந்தோஷப்படுத்துபவர்கள்.

இவர்களை நாம் உபாசிக்கும்போது நமக்கும் இந்த ஆற்றல்கள் சித்திக்க இதன் மூலம் நாம் அந்த தேவதேவியான ராஜராஜேஸ்வரியை உணரும் (அ) நெருங்கும் வாய்ப்பும் வழிமுறையும் சித்திக்கும். அப்படி ஒரு வாய்ப்பு சித்திக்கும்போது 'அஹம் ப்ரம்மாஸ்மி' என்று கூறப்படுவதற்கான காரணம் நமக்கு எளிதில் விளங்கி விடும்!"

அடுத்து எட்டாவது தளமான த்ரிகோணம்...

அதில்...

அந்த சக்தி மாளிகையின் கொல்லைப்புறத்திற்கு அழைத்துச் சென்று மாடியில் மூட்டை மூட்டையாக நகைகள் இருப்பதை கல்யாணி கூறவும் தேவநாதனுக்கு திக்குமுக்காடியது.

நெடுநேரம் பேச்சே வரவில்லை...! அப்படியே நெற் றியை தேய்த்துக் கொண்டு கையை குத்திப் பிசைந்து கொள்ளத் தொடங்கிவிட்டான்.

"என்ன தேவா... எதுக்கு இப்படி உன் மனசைப் போட்டு குழப்பிக்கறே...?" கல்யாணி மிக மிக இதமான குரலில் கேட்டாள்.



"எல்லாம் உங்களால்தான்... நான் உனக்கு போன் பண்ணும்போது கூட மாடிப்பக்கம் போகக் கூடாதுன்னு சொன்னேனா இல்லையா?"

"எல்லாம் சரிடா... திவ்யா சொன்னதை கொஞ்சம் யோசிச்சுப்பார். பூனை ஒண்ணு எப்பப்பார் உடம்புல நகைங்களோட குறுக்கு நெடுக்க ஓடினா யாராலப்பா சும்மா இருக்க முடியும்.

நம்ம வீட்டை விடு... அது நகை நட்டுங்களோட அக்கம்பக்கம் போனிச்சுன்னு வை..."

"அம்மா... இதெல்லாம் நீ சொல்ற சமாதானம். பெரியவர் சாதாரணமானவரில்லை. அவருக்கு நான் செய்து கொடுத்த சத்தியத்தைப் பத்தி நீ யோசிச்சுப் பாத்தியா?"

"அட என்னய்யா நீ? அவர் உயிரோட இல்லைங்கறது தெரிஞ்ச நில்லலதானப்பா மேல போய் பாத்தாங்க.

நாளைக்கு போலீஸ்காரங்களே வராங்கன்னு வை. மேல போய் பாக்காம இருப்பாங்களா?

யோசிச்சுப் பாரு..."

"இல்லம்மா... எனக்கென்னமோ ரொம்ப பயமா இருக் குது. நடக்கற எதுவும் சாதாரணமா தெரியல. நான் திவ்யாவைப் பார்த்த நேரமே சரியில்லை. ஓடுற பஸ்ல அவளைப் பார்த்ததுலதான் ஆரம்பிச்சிச்சு எல்லாம். அடுத்தடுத்து நடக்கற எதுவுமே நார்மலா இல்லை."

"அதை நானும் ஒத்துக்கறேன். சேலத்துல இருந்தவரை கஷ்டமோ நஷ்டமோ மன உளைச்சல் இல்லாம இருந் தோம். ஆனா ஒரு பத்து பதினைஞ்சு நாள்லதான் நம்ம குடும்ப வாழ்க்கை என்னமா திரும்பிடிச்சு.

உனக்கு நடந்த கல்யாணமே ஒரு அதிசயம்னா, அடுத்த அதிசயம் இந்த வீட்டுக்கு தப்புத்தப்பு இந்த மாளிகைக்கு நீ குடி வந்தது... இங்க இருந்த அந்த

மனுஷன் காசிக்குப் போனது - அவரை முதலை விழுங்கினதுன்னு அடேங்கப்பா... எவ்வளவு ஆச்சரியங்க அதிசயங்க..."

-கல்யாணி வாயைப் பிளந்தாள். கச்சிதமாக அவன் மாமனார் ராமநாதன் வேறு மெல்ல எட்டிப் பார்த்தார். நெருங்கி வந்தார்.

"உங்க அண்ணன் சந்தானத்தை சமாளிக்கிறது பெரும் பாடாகி போச்சு. உன் பொண்ணு கல்யாணத்துல ஏகப்பட்ட குழப்பமாமேன்னு ஏகப்பட்ட கேள்வி. டேங்கப்பா..."

-என்று தேவநாதன் எதிரில் கைவிரல்களை மடக்கி சொடக்கு எடுத்தார். தேவநாதன் அவரை ஒரு குழப்பப் பார்வை பார்த்தான்.

"என்ன மாப்ளே... நாம இங்க இல்லாதப்ப என் பொண்ணு திகிடுதம்பா ஏதாவது பண்ணிட்டாளா?"

"ஆமாம் மாமா... சொல்லச் சொல்ல கேக்காம மாடிக்குப் போய் அங்க என்ன இருக்கு, ஏது இருக்குன்னு ஆராய்ச்சியெல்லாம் பண்ணியிருக்காங்க.

அங்க போய் பார்த்த தைரியத்துலதான் வனிதாவுக்கு 125 பவுனே போடறேன்னு உங்க மகளையும் பேச வெச்சிருக்கு..."

"வாஸ்தவம் தான் மாப்ளே... நீங்க இப்ப எதை வெச்சு வருத்தப்படறீங்கன்னு எனக்கு நல்லா தெரியுது."

-அவர் சஸ்பென்சில் விட்டார். கல்யாணி அது என்ன என்று தவிப்போடு அவரைப் பார்க்க 'நான் சொல்லச் சொல்ல கேக்காம அவசரப்பட்டு காசியில நீங்க அந்த சத்தியத்தை' பண்ணியிருக்க வேண்டாம் மாப்ளே..." என்றார்.

"என்ன சத்தியம்... தேவா என்ன சத்தியத்தடா பண்ணுனே...?"



"காசிக்கு போறவங்க ரொம்ப விரும்பற ஒரு விஷயத்தைக் கைவிடணும்னு ஒரு சாங்கியம் இருக்குதுல்ல..."

"ஆமாம்... ஆனா நீங்க ஏதோ சத்தியம்னுல்ல சொல்றீங்க..."

"அதுவும்தான். ஒரு விருப்பம், ஒரு சங்கல்பம்னு இரண்டு விஷயத்துல மாப்ள அவசரப்பட்டுட்டார். ஓடற கங்கை தண்ணி மேல நான் இனி சொன்ன சொல்லுல நிப்பேன்னுல்ல சத்தியம் பண்ணியிருக்கார்..."

"அடப்பாவி... அதான் இந்த நல்ல நேரத்துல இப்படி சங்கடப்படறியா?"

"நல்ல நேரமா?"

"ஆமாம் சம்பந்தி... அந்த பெரியவர் சச்சிதானந்தம் ஒண்ணும் சும்மா சாகலை. இந்த மாளிகை, இதுல இருக்கற தங்க நகைங்கன்னு எல்லாத்தையும் இவனுக்குன்னு விட்டுட்டுல்ல போயிருக்காரு..."

"அவர் விட்டுட்டு செத்து போயிருக்கலாம். ஆனா இது எப்படி மாப்ளையைச் சேரும். உயிலா எழுதி வெச்சிருக்காரு?"

"அப்படி ஒண்ணு தேவைப்படுதோ?"

"இல்லையா பின்னே... இருந்தாலும் வக்கீலைக் கலந்துகிட்டா ஒரு தெளிவு கிடைக்கும். ஆமா நகை நட்டுங்க நிறைய இருக்குதுன்னு சொன்னீங்களே. எவ்வளவு இருக்கும்?"

"அது இருக்கு மூட்டை மூட்டையா... நீங்களே சொல்லுங்க. அவர்தான் செத்துப் போயிட்டாரே அவருக்கு செய்து கொடுத்த வாக்குக்கு எப்படி உயிர் இருக்க முடியும்?"

"நானும் அந்த கோணத்துல யோசிச்சு பார்த்தேன். நீங்க சொல்றது வாஸ்தவம்தான். இருந்தாலும் வேற ஒரு வழியும் இருக்கு..."

"என்ன மாமா அது...?" -தேவநாதன் பாய்ச்சலுடன் முன் வந்தான்.

"எதுக்கு மாப்ளை குழப்பம்? சாமி படத்து முன்னால திருவுளச் சீட்டு போட்டு அவர் கிட்டயே அடுத்து என்ன செய்றதுன்னு உத்தரவு கேட்போம். அவர் என்ன நம்மள மாதிரி சராசரி மனுஷனா? தவசி... எனவே அவர் நிச்சயம் ஒரு திடமான தெளிவான பதிலைத் தருவாரு. என்ன சொல்றீங்க?" -ராமநாதன் எடுத்துக் கொடுக்க அதை அடுத்த நொடியே கெட்டியாகப் பிடித்துக் கொண்டான் தேவநாதன்.

கல்யாணியும் "ரொம்ப நல்ல முடிவுதான்" என்றாள்.

"அப்ப வாங்க இப்பவே சாமிகிட்ட உத்தரவு கேட்போம்." -தேவநாதன் கொல்லையிலிருந்து அகலத் தொடங்கினான். அந்த நொடி எங்கோ வெகு தொலைவில் யாரோ அவன் பேசியதை எல்லாம் கேட்டுவிட்டு கலகலவென்று சிரிப்பது போல ஒரு சப்தம்.

சட்டென்று நின்றான். திரும்பிப் பார்த்தான்.

"இப்ப யார் சிரிச்சாங்க இங்க?" -கேட்டான்.

"யாரும் இல்லையே..." என்றார் ராமநாதன்.

"இப்ப என் காதுல விழுந்துச்சே..."

"இல்லையே மாப்ளே..."

"என்ன மாமா சொல்றீங்க..."

"தேவா... உனக்கு பிரமைடா. நானும்தான் இங்க இருக்கேன். எனக்கும் எதுவும் கேக்கலையே." -இருவரும் சேர்ந்து அவனை ஒரு அமுக்கு அமுக்கி உள்ளே தள்ளிச் சென்றனர்.

கல்யாணி நேராக செண்பகத்திடம் போய் உத்தரவு கேட்க இருப்பதை விலாவாரியாக எடுத்துக்கூற அது பக்கத்திலேயே அமர்ந்த நிலையில் படுக்கையில் சாய்ந்திருந்த திவ்யாவின் காதுகளிலும் விழுந்தது.



"இது என்ன புதுப்பழக்கம்...?" என்றாள் படபடப்பாக.

"வாய மூடுடி... குழப்பமான நேரத்துல யாரா இருந்தாலும் இப்படித்தான் நடந்துப்பாங்க. ஒரு விதத்துல இது நல்ல முடிவுதான். அதுக்கு முந்தி மாப்ளை ஒரு தடவை அந்த மாடிக்கு போய் அங்க இருக்கற நகை நட்டுங்களை ஒரு பார்வை பார்த்துட்டு வந்துடட்டுமே..."

"இல்ல அத்தை... சாமி அனுமதிக்காம நான் மேல கால் வைக்க மாட்டேன். ஒரு சத்தியத்துக்கு இரண்டு சத்யம் நான் இப்ப பண்ணியிருக்கேன்." என்று திட்டவட்டமாக மறுத்துவிட்டான்.

திவ்யாவுக்கே அடிவயிற்றை கலக்கியது. ஒருவேளை தனக்கு எதிராக ஒரு பதில் திருவுளச் சீட்டில் வந்து விட்டால்? தாடையை தேய்க்கத் தொடங்கிவிட்டாள் திவ்யா.

❖ ❖ ❖

பைவ் ஸ்டார் அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் என்கிற பெயர் பலகைக்குப் பின்னால் பிரம்மாண்டமாகத் தெரிந்தது அதன் கட்டடம்!

அங்குலத்துக்கு அங்குலம் நடப்புக் கால ஹைடெக் உத்திகளோடு கட்டப்பட்டு ஒரு கோணத்தில் இருந்து பார்த்தபோது அமெரிக்க ஜனாதிபதி வாழ்ந்து வரும் ஒய்ட் ஹவுஸ் மாளிகை சாயல் கூடத் தெரிந்தது.

அந்தப் பக்கமாக போய் வருகின்றவர்களில் ஒருவர் கூட நின்று பார்க்கத் தவறவேயில்லை. முகப்பில் ஒரு ஆஸ்பெஸ்டாஸ் டென்ட்! அதனுள் செக்யூரிட்டி ஒருவர் அமர்ந்துகொண்டு உள்ளே வருவோர் போவோருக்கெல்லாம் சலாம் போட்டுக் கொண்டிருந்தான்.

படகுபோல ஒரு கார் வரவும் மிகவும் விரைப்பானான். காரணம்... உள்ளே இருந்த நபர்தான் அந்த இண்டஸ்ட்ரியின் ஓனரான சுகுமார் என்பவர்.

முப்பது வயது மதிக்கலாம். ஆனாலும் இளவயதில் அபாரமான ஒரு முன்னேற்றத்தைக் கண்டுவிட்டதால் முகத்தில் ஒரு மினுமினுப்பு. ஜிலுஜிலுப்பு.

காருக்குள் ஒரு மூவி கேமராவோடு ரிப்போர்ட்டர் ஒருவர் அமர்ந்திருந்தார். அவருக்கு பக்கத்தில் சுடிதாரில் ஒரு இளம்பெண்! அவள் அந்த சுகுமார் என்கிற மனிதனைப் பார்த்து "பேட்டியை ஆரம்பிக்கலாமா?" என்று கேட்டாள். அவர் தலையும் ஆடியது. கேமராவும் ஓடத் தொடங்கியது.

"இந்த பேட்டி இன்னிக்கே ஈவினிங் டெலிகாஸ்ட் ஆயிடும் சார்... இன்றைய தொழில் அதிபர்ங்கற பகுதிக்காகத்தான் இந்த பேட்டி.." என்று ஒரு சின்ன முன்னோட்டம் கொடுத்த அந்த இளம் பெண் தன் ரசம் பூசிய உதட்டை ஒரு முறை செயற்கையாக ஈரப்படுத்திக் கொண்டாள்.

"சரி என்ன கேக்கணுமோ கேளுங்க..."

"இந்த ஊருக்கு வந்தப்போ வெறும் நூத்திப் பத்து ரூபாயோட மட்டுமே வந்ததா நீங்க முன்ன பேசும்போது சொன்னீங்க. அப்படி வந்த நீங்க எப்படி கிட்டதட்ட ஒண்ணரை கோடி மதிப்புள்ள இந்த அக்ரோ இண்டஸ்ட்ரிக்கு சொந்தக்காரர் ஆனீங்க..."

"ஒரே ஒரு வார்த்தைல நான் இதுக்கு பதில் சொல்லவா?"

"என்ன... அதிர்ஷ்டம்னு சொல்லப் போறீங்களா?"

"வெரி சாரி... எனக்கு பிடிக்காத வார்த்தை அது. நம்பிக்கை இல்லாத விஷயமும் அது."

"அப்ப நீங்க சொல்ல வந்த அந்த ஒரு வார்த்தை..."



"உழைப்பு..."

-சுகுமாரின் பதிலால் அந்தப் பெண்ணின் புருவத்தில் ஒரு வில் வளைவு விழுந்தது.

"நான் ஒரு அனாதை... தாய் தந்தைன்னு யாரும் இல்லை. அவங்க யார் எங்க இருக்காங்கன்னே தெரியாது. ஒரு அனாதை ஆசிரமத்துல வளர்ந்தவன் நான். விடுதிய சேர்ந்த ஸ்வாமி சரண்யானந்தாங்கறவர்தான் என்னை மனுஷனாக்கினவர்.

ஒரு கட்டத்துக்கு மேல என்னால ஆஸ்ரமத்துல இருக்க முடியல. ஸ்வாமிஜிகிட்டகூட சொல்லிக்காம கிளம்பிட்டேன். அப்ப என் கைல வெறும் நூத்திபத்து ரூபாதான் இருந்தது. அதை செலவு செய்யாம ஒரு கூடை சப்போட்டா பழம் வாங்கி தெருத்தெருவா அலைஞ்சு வித்து இருநூறு ரூபா ஆக்கினேன். அப்புறம் அதை நானூறு, ஐநூறுன்னு ஆக்கி ஒரே வருஷத்துல ஐம்பதாயிரம் வரை ஆக்கிட்டேன்.

அப்புறம்தான் மாடுகள் வாங்கி பால் பண்ணை வச்சேன். எந்த பால்பண்ணைக்கு நான் இப்ப முதலாளியோ அந்த பால்பண்ணைக்கு அதிகம் பால் சப்ளை செய்த பெஸ்ட் சப்ளையர் நான். அதுக்காக எனக்கு கோப்பை எல்லாம் பரிசா கொடுத்தாங்க.

அது ஒரு ஆரம்பம்தான்... கடைசில பால்பண்ணையை சரியா நடத்த முடியாம இதோட அதிபர் கஷ்டப்பட்டார். வர்ற விலைக்கு வித்துடமுடிவு செய்தார். அப்பதான் எனக்கு நாம ஏன் வாங்கக் கூடாதுன்னு தோணிச்சு. பேங்க்ல போய் லோன் கேட்டேன். எவ்வளவுன்னாலும் தரச் சம்மதிச்சாங்க.

பிறகென்ன...

ஒரு சிக் இண்டஸ்ட்ரியா இருந்த இந்த ஃபைவ் ஸ்டார் அக்ரோ இண்டஸ்ட்ரி இன்னிக்கு ஒரு ரிச் இண்டஸ்ட்ரி. இதோட மாதாந்திர டர்ன் ஓவர் மட்டுமே

ஐம்பது லட்சம். கூடிய சீக்கிரம் கோடியை தொட்டுடும். எனக்கு நம்பிக்கை இருக்கு!"

-சுகுமாரின் நீண்ட விளக்கத்தை கேமராவில் பதிவு செய்யும்போது கூடவே இவர்தான் எத்தனை பெரிய அதிர்ஷ்டசாலி என்றும் ஒரு எண்ணம் அந்த பெண்ணிடம். ஆனால் ஐய்யோ பாவம் அவர் என்கிற மாதிரி ஒரு லாரி பிரேக் பிடிக்காமல் அவன் கார் மேல் மோதுவது போல் வந்து கொண்டிருந்தது.

## 25

ஸ்ரீயந்த்ரத்தின் தளங்களிலேயே எட்டாவது தளம் பலவகைகளில் சிறப்புடையது. அப்படியானால் மற்ற தளங்கள் சாதாரணமானதா என்று குயுக்தியுடன் கேட்டுவிடக் கூடாது.

ஆண்டு முழுக்க ஒருவர் பள்ளிக்குச் சென்று படித்தாலும் பரீட்சை சமயத்தில் ஒருமனப்பட்டு படிக்கவில்லை என்றால் எல்லாம் வீணாகி விடுகிறதல்லவா?

அதேபோல, ஸ்ரீ யந்த்ரத்தினை ஒரு ஆண்டுக் கல்வி போல எடுத்துக் கொண்டால் எட்டாவது தளம் பற்றிய அறிவும் புரிவும் ஒரு முகப்பட்டு படிப்பதைப் போன்றது.

இந்த எட்டாவது தளத்தை ஸர்வ சித்திப்ரதாய சக்கரம் என்பர்.

மஹாகாமேஸ்வரி, மஹா வஜ்ரேஸ்வரி, மஹாமகமாலினி என்று 'மஹா' இணைப்பு பெற்ற தேவியர்கள் இதில்தான் உள்ளனர். அதிரகஸ்ய யோகினிகள் என்றும் இவர்களை அழைப்பார்கள்.

இம்மூவரும் பலவித ஆயுதம் தாங்கியபடி சாதகனை ரட்சிக்கிறார்கள். ஒவ்வொரு ஆயுதமும்



சாதகன் மனதில் உலகின் மாயையால் உருவான ஒவ்வொரு விதமான இச்சைகளைக் கட்டுப்படுத்தி மனதையும் ஒருமுகப்படுத்தி அடுத்த தளத்திற்கு அனுப்பி வைக்கும்.

பொதுவில் மனித சக்தியின் செயல்பாட்டை இச்சை, க்ரியை, ஞானம் என்று மூன்று விதங்களில் அடையாளப்படுத்தியுள்ளனர்.

அந்த மூன்றுமே மண்ணில் பிறப்பெடுத்த நிலையில் வாழ்க்கை ரகத்தை வேறுபடுத்தவும் உணரவுமே உள்ளது. அசையாத பாறை எந்த நன்மை தீமைகளையும் அடைவதில்லை.

அசைகின்ற இடத்தில்தான் சக்தி விளங்குகிறது. அப்படி அசையும் போது அதை உணர மேல்கீழ் இடம் வலம் என்று நமக்கு அடையாளங்கள் தேவைப்படுகிறது.

வாழ்க்கை அசைவிலும் இது அப்படியே பிரதிபலித்து மேலானவர், கீழானவர், இடதுசாரி, வலதுசாரி என்று அடையாளங்களை அவர்களுக்கு அளித்து விடுகிறது.

ஒரு கோணத்தில் பார்த்தால் சக்தி விளங்குவதால் தான் இந்த நிலைப்பாடு. விளங்காவிட்டால் ஜடம். அதாவது பாறை! (பாறைக்குள்ளேயும் சக்தி உண்டு. அது இறுக்கமான உறுதி. அதாவது வைராக்யம் போன்ற ஒன்று அது.)

விளங்கு சக்தியால் நேரிட்ட மாற்றங்களை எல்லாம் எட்டாம் தளத்து தேவியர் அடக்கி சமப்படுத்தி எல்லாமே மாயை என்பதையும் புரியச் செய்து சாதகனை ஒருமுகப்படுத்தி அடுத்த ஆவரணமாகிய அதாவது தளமாகிய 'பிந்து' பாகத்திற்கு அனுப்புகின்றனர்.

இந்த பிந்துவில்தான் ஸ்ரீ மஹாசக்தியாகிய அன்னை ராஜராஜேஸ்வரி காட்சி தருகிறாள்.

அந்த லாரி மின்னல் வேகத்தில் வந்து, தன்னை மறந்து பேட்டியளித்துக் கொண்டிருந்த சுகுமாரின் காரின் மேல் மோதும் என்று ஒருவரும் கற்பனை செய்துகூடப் பார்த்திருக்க மாட்டார்கள்.

அந்த அழகிய கார் ஒரு வட்ட அப்பளம் இருகைகளுக்கு நடுவில் நொறுங்கித் தூளானது போல சிதைந்து போனதோடு பக்கவாட்டில் சுகுமாரையும் பேட்டி எடுத்த அந்த பெண்ணையும் வீசி எறிந்தது!

**சக்தி இல்லம்**

சச்சிதானந்த சுவாமிகளின் படத்தை தேடிப்பிடித்து எடுத்துவந்து அதற்கு மாலையெல்லாம் அணிவித்து அதன்முன் விளக்கு ஏற்றிக் கொண்டிருந்தாள் கல்யாணி.

காலில் கட்டுடன் நாற்காலியில் அமர்ந்திருந்த 'திவ்யாவின் பார்வை, நடப்பதை எல்லாம் ஒருவித அச்சத்தோடு பார்த்துக் கொண்டேயிருந்தது. அவள் அருகில் இளையவள் ஜெயந்தி.

"அண்ணி..."

"உம்!"

"சாமிகிட்டதான் உத்தரவு கேட்பாங்க. இங்க தலைகீழா இருக்குதே அண்ணி."

"இதை உன் அண்ணன்கிட்ட போய் சொல்."

"ஐய்யய்யோ... அண்ணன் பிச்சிப்பிடும்."

"இந்த பயம்தான் உங்களை எல்லாம் உருப்படாம பண்ணிக்கிட்டு இருக்கு."

"நீங்க என்ன சொல்றீங்க அண்ணி."

"புரியலையாக்கும்... நான் இப்ப உன்னை ஒண்ணு கேக்கவா?"

"தெரியும். என்ன கேக்கப் போறீங்கன்னு எனக்குத் தெரியும். தப்பித்தவறி இப்ப உத்தரவு கேட்கும்போது அந்த சாமி நமக்கு எதிரா உத்தரவு கொடுத்துட்டா என்ன பண்றதன்னுதானே கேக்கப் போறீங்க?"



"உனக்கு கூட கொஞ்சம் மூளை இருக்குடி..."

"நமக்கு மூளை இருந்து என்ன பிரயோஜனம். அண்ணன் சுத்தமா மூளை இல்லாமல்ல நடந்துக்குது. இப்படி ஒரு மாளிகை. மூட்டை மூட்டையா நகை இவ்வளவும் கிடைச்சும் அதுக்கு அனுபவிக்க தைரியமில்லை..."

"இவ்வளவு வருத்தப்பட்றியே... நான் ஒண்ணு சொன்னா கேப்பியா?"

"என்ன அண்ணி?"

"அதோ அங்க அந்தசாமி படம் முன்னால இரண்டு திருவுளச்சீட்டு இருக்குதுதானே?"

"ஆமாம்."

"ஓசைப்படாம அது இருக்கற இடத்துல நான் கொடுக்கற சீட்டை வைக்கணும் வைப்பியா?"

"அண்ணீ... ஈ... ஈ..."

"வாயப் பொளக்காதே. உனக்கும் 125 பவுன் போட்டு பெரிய இடத்துல கல்யாணம் நடக்கணுமா வேண்டாமா?"

திவ்யாவின் அஸ்திரம் பிரமாதமாக வேலை செய்யத் தொடங்கியது. திவ்யா கொடுத்த திருவுளச்சீட்டை ஜெயந்தி வாங்கிக் கொண்டாள். ரகசியமாக பிரித்தும் பார்த்தாள். இரண்டிலும் 'சொத்து இனி உன் சொந்தம்' என்கிற குறிப்புகள்.

அவளுக்குப் புரிந்துவிட்டது. திருவுளச்சீட்டையே தன் திருட்டு உள்ளத்தால் மாற்றப்போகும் சீட்டுகள் இவை.

ஜெயந்திக்கு திருட்டுத்தனங்கள் புதியவை. எனவே, கை நடுங்கியது. எப்பொழுதும் மனித மனம் கூடச் சேர்பவர்களுக்கு தகுந்த மாதிரியும் பாதிப்புகளுக்கு உள்ளாகும். அதைத் தவிர்க்கவும் ஜெயிக்கவும் அசாத்திய பக்குவமும் துணிச்சலும் வேண்டும். பதினாறு வயசுப்

பெண்ணான் ஜெயந்தியிடம் அதை எதிர்பார்ப்பதில் அர்த்தமேயில்லை. இந்த மாதிரி இடங்களில்தான் விதி தன் வீரியத்தை எல்லா விதங்களிலும் காட்டுகிறது.

விதியைப் பற்றி ஆய்வு செய்பவர்கள் கவனிக்க வேண்டிய இடமாகவும் அந்த சம்பவம் மாறிப் போக படுவெற்றிகரமாக திருவுளச்சீட்டை மாற்றிவிட்டு ஓசைப் படாமல் திரும்பிவந்தாள் ஜெயந்தி. திவ்யா அப்பாடா என்று பெருமூச்சு விட்டாள். ஜெயந்திகிட்டே நெருங்க வும், "இனி நாம் கோடீஸ்வரர்கள்" என்றாள். அவளுக்கு பக்கத்திலேயே தினசரி பேப்பர் கிடந்தது. அதில் சுகுமார் கார் விபத்தில் உயிர் இழந்த சம்பவமும் அவன் மனைவி அதைக் கேட்டு மயங்கி விழுந்துவிட்ட சம்பவமும் ஒரு சேர இடம்பெற்றிருந்தது!

"பைத்தியக்கார பொண்ணு. புருஷன் போய்ட்டா உடனே மயங்கிப் போய்டணுமா... மனசுன்னா என்ன மாதிரி இரும்பாட்டம் இருக்க வேண்டாம்?" என்று அந்த செய்திக்கு ஒரு கமெண்ட்டை பாஸ் செய்திருந்தாள். அது ஜெயந்தி அந்த பேப்பரை பார்க்கும்போது ஞாபகத் துக்கு வந்தது.

"அண்ணி தப்பு செய்துட்டோமோன்னு ஒரே உறுத்தலா இருக்கு" என்றாள்.

"ஒரு தப்பும் செய்யல. நீ இந்த மொத்த குடும்பத்தை காப்பாத்தியிருக்கே. புரிஞ்சுக்கோ..."

-அவள் ஆறுதல் கூறும்போது தேவநாதன் குளித்து முடித்தவனாக நெற்றியில் விபூதி குங்குமத்தோடு பக்திப்பழமாக வந்து சேர்ந்தான். மற்றவர்களும் வந்து சூழ்ந்து கொண்டனர். ஜெயந்தியும் போனாள். தேவநாதன் கண்களை மூடிக் கொண்டு பிரார்த்தனை செய்யத் தொடங்கினான். கல்யாணி சேர்ந்து கொண்டாள். ராம நாதன் முகத்திலும் சலனரேகைகள். வனிதா கொஞ்சம் திக்திக் என்கிற இதயத்துடிப்போடுதான் இருந்தாள்.



ஏறுக்குமாறாய் பதில் வந்து தன் கல்யாண நிச்சயம் நொறுங்கி விட்டால் என்னாவது என்கிற பயம் அப்பட்ட மாக அவள் கண்களில் தெரிந்தது.

ஆனால், அவள் பயப்படத் தேவையே இல்லை என்பதுதான் அவளுக்குத் தெரியாதே...

தேவநாதன் ஒரு மாதிரி கண்விழித்தான்.

அம்மா கல்யாணியைப் பார்த்தான்.

"சாமிகிட்ட மனசுல வேண்டிக்கிட்டு கற்பூர ஆரத்தி காட்டு" என்றாள்.

அப்படியே செய்து முடித்தான். பின் இறுதிக்கட்டத்தை தொட்டான். அங்கு இருப்பதிலேயே வயதில் இளையவள் ஜெயந்திதான்.

அவளை அருகில் அழைத்தான். சீட்டை கண் ஜாடை யால் காட்டினான். அவளுக்கு உடம்பெல்லாம் நடுங் கியது.

"அண்ணே நான் இல்லண்ணே... அண்ணிதான்" என்று அந்த உண்மைக்காக உதட்டைத் திறந்தாள். ஆனால், அவனோ, "அவளை இழுக்காதே... இங்க வயசுல சின்னவ நீதான். நீயே ஒரு சீட்டை எடு" என்றான்.

திவ்யாவே ஒரு வினாடி திக்குமுக்காடி, மலை உச்சி யில் இருந்து சறுக்கி விழப் போனவள் போல ஆகி விட்டாள். ஜெயந்தியும் சீட்டை எடுத்துக் கொடுத்தாள். நெற்றியில் ஐந்தாறு வியர்வை உடல்பாம்புகள் ஓடத் தொடங்கிவிட்டன.

எல்லாமே அங்கு உள்ளவர்களால் தலைகீழாக அர்த்தம் செய்து கொள்ளப்பட்டது.

"சாமி அப்படியே ஜெயந்திக்குள்ள இறங்கிட்டார்ங் கறது அவளைப் பார்க்கும்போது நல்லாத் தெரியும்" என்றாள் செண்பகம். தேவநாதன் சீட்டைப் பிரித்துப் பார்த்தான். மற்றவர்களும் ஆவலாக அவன் முகத்தையே

பார்த்தனர். சீட்டை அவன் கல்யாணியிடம்தான் முதலில் காட்டினான். அதைப் பார்த்த அவள் முகமும் மலர்ந்தது. "அப்பாடா... நல்ல வழிய காட்டிட்டார் சாமி..." என்றாள் உரத்த குரலில். மற்றவர்களிடமும் பூரிப்பு. குறிப்பாக வனிதா ஓடிப்போய் கல்யாணியை கட்டிக் கொண்டாள்.

தேவநாதன், ராமநாதனை நெருங்கினான். "மாமா... இனி கொஞ்சமும் உறுத்தல் இல்லாம நான் செயல் படுவேன்" என்றான்.

"ஆமாம் மாப்ள... அதேசமயம் உங்களுக்கு ஒரு வேண்டுகோள்."

"என்ன மாமா?"

"சாமி இங்க இருந்தவரை மாடி ஒரு கோவிலாத்தான் இருந்தது. மாடில அவர் ஒரு ஸ்ரீ யந்த்ரத்தைத்தான் அம்பாளா நினைச்சு பூஜை செய்து வந்தார். எனக்கு நல்லாத் தெரியும்... பல பக்தர்கள் குறைகளை ஒரு தாள்ல எழுதிக் கொடுப்பாங்க. அதை அவர் அந்த ஸ்ரீ யந்த்ரம் மேலதான் வைப்பார். அதெல்லாம் அப்படியே பலிச்சு ஈடேறியிருக்கு. அதுமட்டுமல்ல... அந்த ஸ்ரீயந்த்ரத்தை அவர் கருவியாவோ மெஷினாவோ பார்க்காம அம்பா ளாவே பார்த்து அதுகூட பேசவும் செய்வார். எனக்கு ரொம்ப வியப்பா இருக்கும்."

"சரி மாமா... அதுக்கு நான் என்ன பண்ணணுங் கறீங்க...?"

"நீங்களும் அந்த யந்த்ரத்தை வணங்கி வழிபடணும். சாமி இருந்தப்போ மாடி எப்படி இருந்ததோ அது தொடரணும்."

"நிச்சயமா என்னால என்ன முடியுமோ அதை நான் செய்யறேன்."

"காசிக்கு போய்ட்டு வந்த உடனேயே உங்க வாழ்க்கை எப்படித் திரும்பியிருக்குன்னு பார்த்தீங்களா?"



"உண்மைதான். நான் இனி எப்படி நடந்துக்கப் போறேன்னு எனக்கே தெரியல..."

"முதல்ல சேலம் புறப்படு. உன் சினேகிதன் பிரகாஷ் ஆஸ்பத்திரியில உயிருக்கே போராடிக்கிட்டு இருக்கான். துடிச்சிக்கிட்டு இருக்கா அவன் பொண்டாட்டி லக்ஷ்மி. அவதான் நீ திவ்யாவை கல்யாணம் பண்ணிக்கவே காரணம். அவங்க சொந்தக்காரங்க வீட்டு கல்யாணத் துக்கு போய்தானே நீ திவ்யாவுக்கு புருஷனானே...?"

-கல்யாணி பதிலோடு வந்து இணைந்து கொண்டாள். வேகமாக ஆமோதித்தான் தேவநாதன்.

"சரி மாப்ளை... அதான் சாமி உத்தரவு கொடுத்துட் டாரே, மேல போய் என்ன இருக்கு, ஏது இருக்குன்னு பார்த்துடுவோமா?"

ராமநாதன் பாய்ன்ட்டைத் தொட்டார். "அதத்தான் நானும் சொல்ல நினைச்சேன்" என்று கல்யாணியும் சேர்ந்து கொண்டாள். நடக்கின்ற அவ்வளவையும் சாது பூனை போல எதுவுமே தெரியாதபடி பார்த்துக் கொண் டிருந்தாள் திவ்யா.

ஒரு கண் தேவநாதன் மேல் இருந்தது. மறுகண் அந்த வார ஆனந்த விகடனில்! இதை யார் கவனித்தார்களோ இல்லையோ அவளது அம்மாவான செண்பகம் கவனித்துக் கொண்டுதானிருந்தாள்.

அவளுக்குள் குறுகுறுப்பு.

திருவுளச்சீட்டு சாதகமாக வந்ததற்காக ஒரு தீபா வளியே கொண்டாடி விடவேண்டிய அளவுக்கு குதூ கலிக்க வேண்டியவள் இப்படி அமைதியாக பட்டும்படாத மாதிரி அமர்ந்து கொண்டிருக்கிறாள் என்றால் அதில் ஏதோ காரணம் இருக்க வேண்டும் என்று தோன்றியது. மெல்ல மகளை நெருங்கினாள்.

"திவ்யா."

"சொல்லும்மா..."

"என்னடி இது ஆச்சரியம். திருவுளச்சீட்டு போடவே நீ விடமாட்டே. மீறி போட்டாலும் இல்லாத தெய்வத்தை எல்லாம் கூப்பிட்டு கும்பிடுவேன்னு நான் ஒரு கணக்கு போட்டுக்கிட்டிருக்கேன். நீ என்னடான்னா ஒண்ணுமே தெரியாத மூணாம் மனுஷி மாதிரி உட்கார்ந்துகிட்டிருக்கே."

"இப்ப உனக்கு என்ன வேணும்?"

"இல்லடி நீ இப்படி இருக்கேன்னா என்னவோ நடந்துருக்குது. நான் உன் அம்மா. என்கிட்ட மறைக்காதே."

"நீ நினைச்சது கேட்டது எல்லாம் சரிதாம்மா. இவ்வளவு சொத்துக்களையும் ஒரு துண்டு சீட்டு கொண்டு கிட்டுப்போக நான் விடுவேனா என்ன?"

"அப்ப என்னத்தான் பண்ணே?"

அவள் தான் செய்த திரிசம வேலையை மெல்லிய குரலில் கூறினாள். செண்பகத்துக்கு இதயமே நின்று விட்டது.

ஆனால், எந்த குற்ற உணர்வும் இன்றியும் பயமும் இன்றியும் தேவநாதன் மாடிக்கதவை திறந்து உள் நுழைந்திருந்தான்.

தெய்வீகமான சூழல்!

ஏட்டுக்கட்டுகள்... அச்சடிக்கப்பட்ட நூல் வரிசைகள். அழகான மரத்தேர். அதில் அற்புதமான ஸ்ரீ யந்த்ரம்.

உள்ளே நுழைந்தவன் முதல் காரியமாக அந்த யந்த்ரத்தின் முன் விழுந்து வணங்கினான். ராமநாதன் அதை மரியாதையோடு ரசித்தார். அவரும் கீழே விழுந்து வணங்கினார். அப்படியே தொட்டுத் தொட்டு மாடி முழுவதையும் அலசிவிட்டு விக்ரகம் இருக்கும் பெட்டி, தங்க நகைகள் குவிந்திருக்கும் பெட்டி இவைகளையும் பார்த்து விட்டு திரும்ப அந்த ஸ்ரீ யந்த்ரம் அருகில் வந்தனர்.



யந்த்ரம் இருந்த தேரின் அடியில் மேஜை டிராயர் போல ஒரு பாகம் கண்ணில் பட்டது. இழுத்தபோது அதில் கட்டுக்கட்டாய் ரூபாய் நோட்டுகள். சற்றே விக்கித்து விட்டு அதை எடுத்து எண்ணியபோது கிட்டத்தட்ட மூன்று லட்சரூபாய் இருந்தது. அப்படியே பேங்க் பாஸ் புக்கும் இருந்தது. அதில் மூன்று லட்சத்தை சாமி ட்ராப் செய்து எடுத்ததற்கான குறிப்பு! அவரது அக்கவுண்ட்! அவரது பணம் என்பது தெளிவானது... அக்கவுண்டில் மேற்கொண்டு முப்பத்து இரண்டு லட்ச ரூபாய் இருந்தது.

"நீங்க இனி வேலைக்கே போக வேண்டாம்!" என்றார் ராமநாதன்.

"இப்ப நான் இதுல லட்ச ரூபாயோட சேலத்துக்கு கிளம்பறேன். அதான் முக்கியம்" என்றவன். அவருடன் அந்த அறையை விட்டு வெளியில் வந்து திரும்ப மாடியை பூட்டினான்.

பூட்டிவிட்டு திரும்பியவன் எதிரில் விசுக்கென்று குதித்து ஓடியது பூனைக்குட்டி போன்ற ஒன்று! முதலில் தேவநாதனும் பூனை என்றுதான் நினைத்தான். ஆனால், உற்றுப் பார்த்தபோத பகீர் என்றது. அது சின்னஞ்சிறிய சிங்கக்குட்டி!

"மாமாாா!" அலறிவிட்டான்.

## 26

**ஸ்ரீயந்த்ரத்தைப் புரிந்து கொள்ளும் முயற்சியில் படிப்படியாக முன்னேறி எட்டுத் தளங்கள் வரைப் பார்த்து விட்டோம்.**

**ஒவ்வொரு தளத்திலும் தேவியர்கள்!**

அவர்களுக்கென்று பிரத்யேக குணங்கள்-கடமைகள்.

அவற்றால் ஸ்ரீயந்திரத்தை உபாசிக்கும் உபாசகனும் தனக்குள் மெல்லத் தெளிகிறான்.

ஒருவகையில் கண்ணாடி முன்னால் நின்று கொண்டு மொத்த உருவத்தையும் ஒரு பார்வை பார்த்து முடித்து, பிறகு அது அமைந்திருக்கும் விதத்தை ரசிப்பதாகக் கொள்ளலாம். அதற்குப் பின் இப்படிப்பட்ட நாம் எதற்காகப் பிறந்தோம் என்று கேள்வி கேட்டு, நமக்கு இப்படி ஒரு முகம், ஆண் அல்லது பெண் என்று இனம் கொடுத்து ஒரு தாயின் வயிற்றில் தூக்கிப் போட்டு, எப்படியோ வெளியே வர வைக்கப்பட்டோம். அந்த நேரத்து நினைவுகள் எதையும் நினைக்கக் கூட இயலாதபடி ஒரு சூன்யமாக வைத்திருந்து, பிறகு மெல்ல... உலகத்தைக் காட்சிப்படுத்தி, அர்த்தப்படுத்தி இன்று கண்ணாடி முன் நின்று... நான் யார்? என்று கேட்கச் செய்தது யார்?

அது நானேதானா? இல்லை வேறு ஒன்றா? நான் பிறக்கும்முன் எங்கு இருந்தேன்? எப்படி இருந்தேன்? எதற்காக இப்போது பிறந்திருக்கிறேன்?

பிறந்து விட்டதாலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறேனா... இல்லை. வாழ்வதற்காகத்தான் பிறந்தேனா? என்ற கேள்விகள் கேட்டு அதற்கு விடை கிடைக்காமலும், கிடைக்கும் விடையில் திருப்தி அடையாமல் போகின்றவர்கள்தான் நாம். இப்படிப்பட்ட கேள்விகள், குழப்பங்கள் என்று உள்ள நம்மை தெளிவித்து, மெல்ல மெல்ல கை தூக்கிவிடும் தெளிவுக்கும் அல்லது சிந்தனைக்கும் அப்படிச் சிந்திக்கும் காலகதிக்கும் பேர்தான் தளங்கள். தளங்களில் உள்ள தேவியர்கள்.

உடம்பு... உடம்புக்குள் ஆன்மா அல்லது உயிர். அதன் இயக்கம் -அது காற்றால் இயங்குவது, உணவால் செரிவடைவது, வெப்பத்தால் மாறுவது,



ஆகாயமாகிய மனதால் உணர்வது, நீரால் சாந்தி அடைவது என்றெல்லாம் உணர்ந்து உணர்ந்து... உணர்ந்து இவ்வளவையும் ஒருசேர இயக்குவது எது? அது உயிர் என்று உணர்ந்து அந்த உயிரை உடம்புக்குள் தேடிச் சென்று, அந்த உயிராக இருப்பதே ஒன்பதாவது தளமாகிய பிந்து... அதில் இயக்கச் சொரூபியாக, சக்தியாக விளங்குபவள் அந்த ராஜேஸ்வரி என்று உணரும்போது ஆத்மா... பரமாத்மா, ஜீவாத்மா என்ற பேதங்கள் ஏன்? எதற்கு? எப்படி? என்பதெல்லாமும் ஒருவாறு தெளிவாகி விடுகிறது. அந்தத் தெளிவுதான் ஒளி!

அந்த ஒளிதான் இங்கே மகாதேவியான பிந்து நாயகி! லலிதா என்றும், ராஜராஜேஸ்வரி என்றும் அழைக்கப்படுபவள்...

இவள் முன் ஒரு கருப்புத் திரை உண்டு. அதற்கு 'திரஸ்கரணி' என்று பெயர். அந்தத் திரஸ்கரணிக்கு இன்னொரு பெயர் 'மாயை'. மாயைதான் வாழ்க்கை. வாழ்க்கையின் மாயையைப் புரிந்து அதிலிருந்து விடுபட்டு மேலேறி பிந்துவை அடைந்து கருப்புத் திரையை நீக்கி விட்டுப் பார்த்தால் மாதா அழகாக, அமுதமாக, ஒளியாக அமர்ந்திருக்கும் காட்சிப் புலனாகும்.

தேவநாதன் ஒரு விநாடி மிரண்டு போனான். அந்த மாடி வீட்டில் எங்கிருந்து சிங்கக் குட்டி வர முடியும் என்று கேள்வியும் அச்சமும் அவனைக் கொத்தியது.

ஒரு சில விநாடிகள்தான் அந்தச் சிங்கக் குட்டியும் நின்று அவனைப் பார்த்தது. பிறகு பூனைக் குட்டி போலவே அது ஜன்னலுக்குத் தாவி கண்ணை விட்டு மறைந்தும் போனது.

தேவநாதன் கண்களைக் கசக்கிக் கொண்டான்.

மெல்ல படியிறங்கினான். கல்யாணி எதிரில் வந்தாள்.

கலக்கமாகத் தெரிந்த தேவநாதனைப் பார்த்து, “என்ன தேவா... ஏன் ஒரு மாதிரி இருக்கே?” -கேட்டாள்.

"ஒண்ணுமில்லம்மா... சிங்கக் குட்டி ஒண்ணு!"

"சிங்கக் குட்டியா...? என்னடா உளர்றே?"

"இல்லம்மா... இப்பத்தான் மேலே பார்த்தேன். ஸ்தம்பிச்சுட்டேன். நொடியில் ஓடியும் போயிடுத்து"

"உளறாதே... இது என்ன மிருகக் காட்சி சாலையா? சிங்கக் குட்டியும் புலிக் குட்டியும் ஓடி வர்றதுக்கு...?"

"இல்லம்மா.... நான் பார்த்தேன்"

"அந்த மாதிரி உன் கண்ணுக்குத் தெரிஞ்சிருக்கும். பூனையைப் போய் சிங்கக் குட்டின்னு நினைச்சிக் கிட்டு..." -கல்யாணி நம்ப மறுக்க, திவ்யாவும் படுக்கை யில் இருந்தபடியே கேட்டுக் கொண்டிருந்தாள். தேவ நாதன் தன்னிடம் வருகிறானா என்றும் நோட்டமிட்டாள். அவனோ, "நான் சேலம் போய் பிரகாஷைப் பார்த்துட்டு வந்துடறேன்" என்று புறப்படத் தயாரானான்.

செண்பகமும், ராமநாதனும் கூட கவனித்துவிட்டு அவனருகில் வந்தனர்.

"மாப்ளே..."

"சொல்லுங்க மாமா"

"நீங்க இனி ஆக வேண்டியதைப் பாருங்க. நாங்க கிளம்பறோம்."

"ஏன் மாமா... நீங்களும் இங்கேயே எங்க கூட இருங்க..."

"இல்ல மாப்ளே. அது தப்பு. சரியாவும் வராது. இப்ப என்ன? உள்ளூர்லதானே இருக்கோம்? அவசர ஆத்தி ரம்னா போன் இருக்கு... உங்ககிட்டேயும் வண்டியிருக்கு. என்ன இப்போ? வந்து பாத்துக்கிட்டாப் போவுது"

"ஏன் மாமா... மாப்ள வீட்ல மாமனார், மாமியார் இருக்கக் கூடாதா?"



"அப்படி இல்ல... இப்பத்தான் கல்யாணம் ஆகி யிருக்கு. எங்களுக்குத்தான் வீடு இருக்கே. நாங்க என்ன அனாதரவாவா இருக்கோம்"

"அப்ப என் பேச்சை கேக்க மாட்டீங்க"

"கேக்கற நேரம் வரும்போது கேட்பேன் மாப்ள. எந்த உதவின்னாலும் கூப்பிடுங்க. ஓடி வரேன். சுயமா முடிவெடுங்க. அவசரமே வேண்டாம்."

-அவர் சொன்ன விதத்தில் நல்ல வாத்சல்யம். தேவநாதனும் ரசித்து விடை கொடுத்தான்.

பின் மேல் இருந்து எடுத்து வந்திருந்த தொகையை ஒரு துணிப்பையில் வைத்து, தோல் பையில் அதை வைத்து எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

"போய்ட்டு வரேம்மா... போய்ட்டு வரேன் ஜெயந்தி. வனிதா உனக்கும்தான்" என்றான்.

திவ்யா அருகே வந்து "இந்தக் காலோட இனி நீ எங் கேயும் போகக் கூடாது" என்றான் இரண்டு பொருளில்.

"அம்மா கவனமா பாத்துக்குங்க. நான் ஒரே நாள்ல வந்துடுவேன். வந்து மத்த விஷயங்களைப் பேசலாம்" -என்றபடியே வெளியேறினான்.

திவ்யா வெறித்துக் கொண்டேயிருந்தாள்.

❖ ❖ ❖

**ஆஸ்பத்திரி!**

ஹார்லிக்ஸ் கலக்கிக் கொண்டிருந்தாள் லஷ்மி. அந்த வார்டு அறைக்குள் தேவநாதன் நுழையவும்... "வாங் கண்ணா" என்று உற்சாகமானாள். வந்த வேகத்தில் பிர காஷ் அருகே போய் அவன் முகத்தை உற்றுப்பார்த்தான் தேவநாதன். பிரகாஷின் முகத்தில் 10 நாள் தாடி!

"வா தேவா"

"என்னடா இது கோலம்?"

"விதிடா... விதி"

"மண்ணாங்கட்டி... ஜாலிக்கு ஜாலிக்குன்னு அடிச்ச தண்ணியால வந்த வினைடா"

"அட போடா... அறுபது வருஷமா தண்ணி அடிக்கற ஒருத்தன் இன்னும் கிண்ணுன்னு இருக்கான். ஒரே தடவை மூக்கு முட்டக் குடிச்சுப் போய்ச் சேர்ந்தவனும் இருக்கத்தான் செய்யறான். விதிடா... விதிதான் எல்லாம்"

"அண்ணா, அவர்கிட்ட எதுவும் பேசாதீங்க. அவர் அப்படித்தான் பேசுவாரு. யாருக்கும் அவங்க செஞ்ச தப்பு பெரிசாவே தெரியாது"

"ஆமாம், இவ பெரிய நீதி மாணிக்கம். சிபிச் சக்கரவர்த்திப் பரம்பரை" -பரஸ்பரப் பேச்சு வேறுவிதமாக மாறும் போலத் தோன்றியது.

"சொன்னாலும் சொல்லாட்டியும் நான் சிபிச் சக்கர வர்த்தி பரம்பரைதான். எனக்கு நீதியும் நியாயமும்தான் பெரிசு" -லஷ்மி பதிலுக்கு சீறி விழுந்தாள்.

"சரி, சரி... அடிச்சிக்காதீங்க. நான் ஒருத்தன்! அம்மாடி... பணத்தோட வந்திருக்கேன். முதல்ல பிடி" - தேவநாதன் தன் தோல் பையை அவள் எதிரில் நீட்டினான். அவளும் பனித்த விழிகளுடன், அதே நேரம் தயங்கி விட்டு வாங்கிக் கொண்டாள்.

"இந்தப் பணத்தை நான் நிச்சயமா திருப்பித் தந்துடுவேண்ணா..." என்றாள்.

"தேவா... உன்கிட்ட இருந்து இப்படி ஒரு உதவி கிடைக்கும்னு எதிர்பார்க்கலடா..." என்று பிரகாஷும் நெகிழ்ந்தான்.

"சரி, சரி... ஆளுக்கு ஆள் நன்றி சொல்லி என்னை அன்னியனா ஆக்கிடாதீங்க. அம்மாடி நீ கொஞ்சம் அப்படி வா..." என்று லஷ்மியுடன் சற்று தனியே ஒதுங்கினான். அவளும் அவனோடு சேர்ந்து அறைக்கு வெளியே வந்து காரிடாரில் போடப்பட்டிருந்த நீண்ட மர பெஞ்சில் அமர்ந்தாள்.



"என்னண்ணா?"

"ஒண்ணும் ஆபத்தா இல்லையே..."

"இல்லண்ணா... பணத்தைக் கட்டிட்டா ஆபரேஷன் தான். அதுக்கப்புறம் அந்த ராட்சஸனைத் தொடாம இருந்திட்டா தப்பிச்சிடுவார்..."

"இவ்வளவுக்குப் பிறகு தொடுவான்னு நீ நம்பறியா?"

"நம்பித்தானே ஆகணும். சந்தேகப்படாமலும் இருக்க முடியல. உடம்பு குணமானா திருப்பதிக்குப் போய் முடி எடுக்கறதாவும் வேண்டிக்கிட்டிருக்கேன்"

"அட என்னம்மா இப்படி வேண்டுதல் தேவையா?"

"இல்லண்ணா... திருப்பதி சாமி விஷயத்தைத் தப்பா சொல்லாதீங்க. அது பொல்லாத சாமி"

"அப்படி இல்லைம்மா... சாமிக்கு எதுக்கு முடியைக் கொடுக்க வேண்டிக்கிட்டே. ஒரு பத்தாயிரம் உண்டியல்ல போடலாமே"

"பணம் பெரிசில்ல... ஒரு மனுஷனுக்குத் தான்ங்கற கர்வமும் அழகுணர்ச்சியும் எப்பவுமே பெரிசு. அதையே காணிக்கையாக்கறது ஒண்ணும் சாதாரண விஷயமில்ல. லட்ச ரூபாயைச் சம்பாதிச்சுடலாம். ஆனா, முடியைக் கொடுத்துட்டு பலநாள் அழகுக் குறைவோட இருக்க மனத்துணிவு வேணும். கடவுள் அந்தத் துணிச்சலுக்கும். தியாகத்துக்கும்தான் மகிழ்வார்"

லஷ்மி ஒரு புது அர்த்தம் கொடுத்துப் பேசினாள். தேவநாதனுக்கே அவளைப் பார்க்கப் பெருமையாக இருந்தது.

"சாதாரண தலைமுடி சமாசாரம். ஆனா, பெரிய அர்த்தம் கொடுத்துட்டே. சந்தோஷமா இருக்கு எனக்கு. அப்ப நான் கிளம்பட்டுமா?"

"என்னண்ணே அவசரம்?"

"நிறைய வேலை இருக்கும்மா"

"இந்தப் பணத்துக்கு ரொம்ப சிரமப்பட்டீங்களா?"

"இல்லம்மா... இது என்னைத் தேடி வந்த பணம். அதிர்ஷ்டம், அதிர்ஷ்டம்னு ஒரு வார்த்தை சொல்வாங்களே... நான் இப்ப அதுக்கு நல்ல உதாரணம்" -தேவநாதன் பீடிகையோடு, நடந்தவற்றை அவளிடம் மறைக்காமல் அதே நேரம் சுருக்கமாகச் சொல்லி முடித்தான்.

லஷ்மியின் முகத்தில் பலத்த மாறுபாடுகள்.

"என்ன லஷ்மி... ஸ்தம்பிச்சுட்டே? நம்ம முடியலையா?"

"இல்லண்ணே... இப்படிக் கூட நடக்குமான்னு யோசிச்சுப் பாக்கறேன்"

"ஏன் நடக்காது. எதுவும் நடக்கும் இந்த நாட்டுல... இல்லாட்டி, ஒரு கல்யாண மண்டபத்துல 60 பேர் கருகிச் செத்துப் போவாங்களா... யாராவது கற்பனை செஞ்சுப் பாத்திருப்போமா... இப்படி நடக்கும்னு? அதேமாதிரி ஒரு கூட்டம் மானசரோவர், அமர்நாத்னு யாத்திரை போய் ஆனந்த தரிசனம்தான் செய்வாங்களா?"

"அப்ப இது சாமி பணமா?"

"ஆமாம்... அதனால என்ன? ஒரு நல்ல காரியத்துக்கு இது முதல்முதலா பயன்பட்றத நினைச்சு எனக்கு சந்தோஷம்தான். நீ இதைப் பத்தி பெருசா யார்கிட்டேயும் பேசாதே. அதேநேரம் இன்னும் எவ்வளவு பணம் வேணும்னாலும் கேள். என் அதிர்ஷ்டத்துல உனக்கும் ஒரு பங்கு தரேன்..." -தேவநாதன் உற்சாகமானான்.



ஆனால், லஷ்மியோ அவன் துளியும் எதிர்பாராத விதத்தில் அந்தப் பணத்தை அவன் எதிரில் நீட்டி...

"அண்ணே... இது சாமி காசு... சாமி அருளாலதான் அவர் பொழைக்க விரும்பறேன். சாமி காசால இல்ல. தயவு செய்து பிடிங்க..."

-லஷ்மி சொன்னது பொட்டில் அடிச்சது போல இருந்தது. அருகிலேயே அன்றைய தினசரி... அதில் பிரபல தொழிலதிபர் சுகுமார் மறைவு... அவரது பால் பண்ணை விற்கப்படுகிறது! என்று ஒரு தகவல் குறிப்பு.

தேவநாதன் அந்தத் தகவலையும் லஷ்மியையும் மாறி மாறிப் பார்த்தான். ஆனால் பணத்தை வாங்கிக் கொள்ளவில்லை.

## 27

'ஸ்ரீயந்த்ரத்தின் ஒன்பது தளங்களை பற்றி அறிந்த நிலையில் ஒன்பதாவது தளமான பிந்துவில் அன்னை லலிதா ஒட்டு மொத்த சக்திகளின் தலைவியாக வீற்றிருக்கிறாள் என்றும் பார்த்தோம். தொடக்கத்திலேயே ஸ்ரீ யந்த்ரம் பற்றி அறிய நமது உடல் பற்றி நமக்கு நன்கு தெரிந்திருக்க வேண்டும் என்று கூறி வந்தேன்.

ஒரு முறையல்ல... பல முறை இதை வலியுறுத்தினேன்.

இப்போது ஒன்பது தளங்கள் பற்றியறிந்த நிலையில் மீண்டும் உடம்புக்கு திரும்ப வருகிறேன்.

இனி நீங்கள் அறிந்த இந்த ஒன்பது தளங்களை அப்படியே உங்கள் உடலோடு பொருத்திப் பார்த்து கற்பனை செய்து கொள்ள வேண்டும்.

அதாவது நமது பாதம்தான் ஆரம்பமாகிய முதல் தளம். அதாவது பூபுரம். தொடைகள் இரண்டும்

தான் அடுத்து உள்ள மூன்று வட்டங்கள் என்னும் 'த்ரை லோக்ய மோகன சக்கரம்.'

அடுத்து வருவது இடுப்பு! இதுதான் பதினாறு தள பத்மம். அதற்கும் துளிமேல் வயிறும் தொப்புளும் அஷ்டதளபத்மங்கள்!

மார்பு பதினான்கு கோணம்

கழுத்து வெளிப்பத்து கோணம்

புருவமத்தி உள்பத்து கோணம்

நெற்றி அஷ்ட கோணம்.

சிரசுவாகிய தலைபாகம் மூன்றாகிய த்ரிகோணம். தலை உச்சிதான் பிந்து ஸ்தானம்.

-இப்படி சரீரத்தோடு ஸ்ரீயந்த்ரத்தைப் பொருத்திக் கொள்ள வேண்டியது அதை மேலும் புரிந்து கொள்ளவும், நம்மை நாம் அறியவும் மிகவும் துணை செய்யும்.

இப்படி பொருத்திப் பார்த்துக் கொள்வதில் ஒவ்வொரு பாகத்திலும் இயங்கும் விசை சிவமூலம் என்றும் சக்தி மூலம் என்றும் அதன் விசை நோக்கிற்கு ஏற்ப அடையாளம் காணப்படுகிறது.

உதாரணமாக பிந்து ஸ்தானம் சிவமூலம். ஆனால் அதற்கு கீழ் உள்ள த்ரிகோணம் சக்தி மூலம். எதற்கு இப்படி இருவிதமான மூலங்கள் என்று கேள்வி எழலாம்.

காரணம் உள்ளது.

சிவமூலம் என்பது சக்திபெற்று இயங்குவது

சக்தி மூலம் என்பது தன் சக்தியால் இயங்குவது.

சக்தி உள்ள இடத்தில் இயக்கம். இயக்கம் உள்ள இடத்தில் அசைவு, அசைவு உள்ள இடத்தில் மேல் கீழ் என்கிற பேதம் தானாக உண்டாகி விடுகிறது. அப்பொழுதுதான் நாம் அதை அடையாளம் கண்டு தெளியமுடியும்.



இந்த மேல் கீழ் (அ) முன்பின் (அ) இடவலம் எல்லாமே அசைவதால் (அ) இயங்குவதால்தான்... இயக்கம் நின்று விட்டால் இது எதுவுமேயில்லை. இதைதான் மாயை என்கின்றனர்.

இதன்மூலம் சக்திமூலம் என்பது மாயையால் ஆனது-சிவமூலம் என்பது மாயை தெளிந்த திட உள்வைராக்கிய நிலை...

இப்பொழுது விளங்கியிருக்கும்.

ஸ்ரீயந்த்ரம் இப்படி ஒன்பது ஆவரணங்களுடன் பற்பல தேவியர்களுடன், சிவமூலம், சக்தி மூலம் சிறப்புகளுடன் நமது உடலோடும் பொருத்திப் பார்க்க ஏற்றதாக உள்ளதை இதுவரை பார்த்தோம்.

ஏன் உடலோடு பொருத்த வேண்டும்!

நமது உடம்புக்கும் ஸ்ரீயந்த்ரத்துக்கும் என்ன தொடர்பு?

இந்த கேள்விக்களுக்கு விடையை இனி பார்ப்போம்!

அருகில் கிடந்த அந்த தினசரியில் தெரிந்த விஷயம் தேவநாதனை ஒரு கிள்ளுகிள்ளியது. அனைத்தையும் மறந்து பதறிக் கொண்டு அதை கையில் எடுத்தான். படுவேகமாக அந்த செய்தியை படிக்க ஆரம்பித்தான். அவன் படபடப்பாவதை லஷ்மியும் கவனித்தாள்.

"அண்ணா... என்ன திடீர்னு டென்ஷனுக்கு மாறிட்டீங்க."

"லஷ்மி... இந்த பேப்பரை பார்த்தியா...?"

"ஓ... அந்த ஆக்சிடென்ட்டை சொல்றீங்களா? ரொம்பக் கொடுமைண்ணா... வாழ்க்கைல ரொம்ப கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்தவராம். பாவம் ப்ச்ச்..." - லஷ்மி வருத்தப்பட்டுக் கொண்டாள்.

"இந்த சுகுமார் என் காலேஜ் மெட்டும்மா..."

"அப்படியா?"

"ஒரு ஆஸ்ரமத்துல இருந்துகிட்டு படிக்கறதுக்காக காலேஜுக்கு வருவான்... இவன் ஒரு தொழிலதிபர் ஆனதும் தெரியாது. இப்படி அநியாயமா ஒரு முடிவு வந்ததும் தெரியாது. இப்பதான் இந்த பேப்பர்ல பாக்கறேன்..."

"என்னண்ணா பண்ணப் போறீங்க?"

"குறைந்தபட்சம் இவன் வீட்டுக்குப் போய் துக்கமாவது விசாரிக்கணும்மா... அதான் மனிதப்பண்பு."

"அப்ப நீங்க புறப்படுங்க..."

"போயிட்டு வந்துடறேன். தயவுசெய்து இந்த பணத்தை மறுக்காதே. ஆமா எங்க உன் புருஷன்?"

-பிரகாஷைத் தேடிவந்து "பிரகாஷ் கொஞ்சம் வெளிய போயிட்டு வந்துடறேண்டா..." -என்றபடி கிளம்பினான். அவனும் தலையை அசைத்து விடை கொடுத்தான். லஷ்மி கைகளில் அந்த பணம் கனத்துக் கொண்டிருந்தது.

"நானும் டாக்டரைப் போய் பார்த்துட்டு வந்துட றேன்." -என்று டாக்டரைச் சந்திக்கப் புறப்பட்டாள்.

❖ ❖ ❖

டாக்டர் குரூப்பாக வந்திருந்த சிலரிடம் பேசிக் கொண்டிருந்தார். தாடியும் மீசையுமாக சபரிமலைக்கு மாலை போட்டவர்களைப் போல பக்திப் பழமாக தெரிந்தார்கள் அவர்கள்.

லஷ்மி வரவும் சற்று தள்ளி இருந்த பெஞ்சு ஒன்றில் அமரச் சொல்லி விட்டு அவர்களுடன் பேச்சைத் தொடர்ந்தார்.

"என்னால நீங்க கேக்கற அளவுக்கெல்லாம் பணம் தர முடியாது. என்னதான் டாக்டர் லைஃப் இருக்குன்னாலும்



அவ்வளவு தொகை தரக்கூடிய நிலைல நான் இல்லை. இந்த ஆஸ்பத்திரி பெரிய ஆஸ்பத்திரிதான். ஒரு நாளைக்கு அஞ்சாறு பைபாஸ் சர்ஜரி எல்லாம் சாதாரணமா நடக்குதுதான்.

ஆனா அந்த சர்ஜரி பேரைச் சொல்லி நான் கொள்ளையடிக்கிறதில்ல. ரொம்ப குறைஞ்சபட்ச பீஸ்தான் வாங்கறேன்.

என் தொழிலையே ஒரு பூஜை போல செய்யறதால தனியா நான் தர்மம் செய்ய வேண்டிய அவசியமும் எனக்கு இல்லை. நிலைப்பாடும் எனக்கு இல்லை..."

-டாக்டரின் விளக்கத்தில் அவர்கள் கொஞ்சம் போல தங்களுக்குள் தேங்கித்திணறினர்.

"டாக்டர் சார்... ஒரே ஒரு லட்ச ரூபா மட்டும் சேர்ந்துட்டா கட்டட வேலை முடிஞ்சிடும். ரொம்ப புராதனமான கோயில். ஒரு வேளை விளக்குக்குக் கூட வழி இல்லாம இருக்கறதால தான் இவ்வளவுதூரம் வந்து உங்ககிட்டெல்லாம் டொனேஷன் கேக்கறோம். நீங்க நிச்சயம் லட்ச ரூபா வரை தர்றதா சொன்னீங்க... இப்ப இப்படி பேச்சு மாறினா எப்படிங்க?"

"இதோ பாருங்க... நான் ஆறுமாசத்துக்கு முந்தி சொன்னதை இப்ப சொல்லிக் காட்டாதீங்க. அப்ப இருந்த நிலைமையே வேற. இப்ப நிலைமையே வேற.

பின்னால திரும்பிப் பாருங்க. உக்காந்திருக்குதே இந்த பொண்ணு... இதுக்கு கூட இதோட புருஷன் ஆபரேஷனுக்கு கட்டறதுக்கு பணம் இல்ல. ஆனா நான் வேற ஆஸ்பத்திரிக்கு போகச் சொல்லலை.

தவணைல தரச் சொல்லி ஆபரேஷன் பண்ணப் போறேன்.

நான் இப்படி இருக்கும்போது பணத்துக்கு எங்க போக?"

-டாக்டருக்கும் அவங்களுக்குமான பேச்சில் ஒரு முடிவுக்கு வரமுடியாத குழப்பம் தொடர்ந்து கொண்டே இருப்பது போல லட்சுமிக்குத் தோன்றியது.

சட்டென்று எழுந்தவள் அவர்களை நெருங்கினாள்.

"ஐயா... உங்களை நான் ஒண்ணு கேட்கலாமா?"

"என்னம்மா..."

"டாக்டர் லட்சரூபா தரேன்னு சொல்லியிருந்தாரா?"

"ஆமாம்மா... அதை நம்பி செங்கல், சிமெண்ட்டுன்னு எல்லாத்துக்கும் ஆர்டர் கொடுத்துட்டோம்."

"உங்க திருப்பணி ஊதாரித்தனமில்லாம நடக்குதா?"

"வந்து பாத்துட்டு சொல்லும்மா. ஆயிரம் வருஷத்து கோயில் அது. அதுல விளக்கெரிஞ்சா ஊரே சுபீட்சத்துக்கு மாறிடும்னு நாடி கூட வந்துருக்கும்மா..."

"நல்லது... டாக்டர் தர்றதா சொன்ன அந்த லட்ச ரூபா இந்தாங்க. போய் காரியத்தை நல்லபடி பாருங்க."

தன் வசம் தேவநாதன் தந்த பணத்தை அவர்களிடம் அவள் நீட்டியதுதான் தாமதம், டாக்டரும் அவர்களும் ஆடிப்போய்விட்டனர்.

"அம்மா இந்தப் பணம்..."

"இதுவும் சாமி பணம்தான். என் புருஷன் உயிரை காப்பாத்த இப்பதான் ஒருத்தர் கொண்டு வந்து கொடுத்தார். நான் வேலை செய்து தவணைலேயே பணத்தை கட்டிக்கிறேன். இதை நீங்க எடுத்துகிட்டு போங்க. உபயம் செய்தவங்க யார்னு கேட்டா நம்ம டாக்டர் பேரோட தேவநாதன்கறவர் பேரையும் சேர்த்துக்குங்க..."

-அவள் சொல்ல அவர்கள் அப்படியே ஸ்தம்பித்து சிலைபோல வெறித்தனர்.



"டாக்டர் சார்... என்னடா உங்களுக்கு கொடுக்க வேண்டிய பணத்தை எடுத்து போற போக்குல இவங்களுக்கு கொடுக்கறேனேன்னு நீங்க நினைக்க வேண்டாம்.

கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு ஒண்ணும் நான் உடைக்கல. நீங்க வாக்கு கொடுத்துருக்கீங்க. அதுல நீங்க நிக்கணும். அடுத்து நிஜமாலுமே இந்த சாமி பணம் சாமி காரியத்துக்கு பயன்படறதுதான் நியாயம். அதே சமயம் ஆபரேஷன் சார்ஜை நான் நிச்சயமா உழைச்சு உங்களுக்கு திருப்பித் தந்துடுவேன்..."

-அவளது சமாதானம் டாக்டரையும் சிந்திக்க வைத்தது. வியந்து போனவர் பணத்தை வாங்கி அவர்கள் கையில் கொடுத்து அவர்கள் அளித்த ரசீதை வாங்கிக் கொண்டார். பெரிய கும்பிடுபோட்டு அனுப்பிவைத்தார்.

அவர்களும் போகும்போது சும்மா போகவில்லை. "நீ தீர்க்க சுமங்கலியா அமோகமா இருப்பேம்மா" என்றனர் மனம் குளிர.

லஷ்மிக்கு கண்கள் பனித்துவிட்டன.

❖ ❖ ❖

அந்த பங்களா முன் எல்லா மாடல் கார்களும் தேங்கி நின்றிருந்தன. கோட்டும் சூட்டும் போட்டவர்களில் இருந்து கதர் வேட்டி சட்டைக்காரர்கள் வரை வந்து வந்து போய்க்கொண்டிருந்தனர்.

முகத்தில் தெரிந்த இறுக்கத்தில் இருந்து அவர்கள் துக்கம் கேட்க வந்தவர்கள் என்பது பளிச்சென்று தெரிந்தது. ஆட்டோவில் வந்து இறங்கிய தேவநாதனுக்கு அந்தக் கூட்டத்தில் யாரைப்போய் பார்ப்பது என்பது முதலில் பிடிபடவேயில்லை.

எல்லா முகங்களுமே அன்னியமாகத் தெரிந்தன.

"எல்லாம் அந்த இடத்தை வாங்குன நேரம்..."

-இப்படி ஒரு குரல் அருகில் இருந்து காதில் விழுந்தது. திரும்பினான்.

இரண்டு பேர் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"ஆமாம் பிரபாகர்... அந்த இடத்தை வாங்கும்போதே சாமியார் ஒருத்தர் வந்து தடுத்தாராம்ல..."

"தடுத்தாராவா... வேண்டவே வேண்டாம்னுட்டார். ஆனா சுகுமார்சார் தான் கேக்காம வாங்க இன்னிக்கு இல்லாமலே போயிட்டார்..."

-அவர்கள் பேசியதில் இருந்து தேவநாதனுக்கு ஒரு உண்மை விளங்கியது. சுகுமாரின் தொழில் முயற்சிகளில் ஏதோ சிடுக்கு இருந்திருக்கிறது என்பதுதான் அது... அவர்களை அவனும் சமீபித்தான்.

"வணக்கங்க..." -அவர்களைத் திருப்பினான்.

"உங்களுக்கு யார் வேணும்..."

"நீங்க பேசிட்டிருந்ததை கேட்டேன். செத்துப்போயிட்ட சுகுமார் என் காலேஜ் மெட். அவன் ரொம்ப புத்திசாலி. ஆனா நீங்க பேசறதப் பாத்தா முட்டாள்தனமா அவன் எதையோ செய்துட்ட மாதிரி தெரியுதே..."

"சாரிங்க... நாங்க சும்மா எங்களுக்கு தெரிஞ்சதை பேசிகிட்டிருக்கோம். நீங்க போங்க..."

"இல்ல... நீங்க என்னைப் பார்த்து பயப்படவோ ஆச்சர்யப்படவோ தேவையில்லை. சும்மா சொல்லுங்க."

"என்னத்தங்க சொல்றது... இந்த பால்பண்ணையை எப்ப வாங்குனாரோ அப்ப இருந்தே பிரச்னைதான்."

"ஏன் சரியா நடக்கலையா?"

"அதெல்லாம் அமோகமா நடந்தது. ஆனா இடத்துல ஏதோ வாஸ்து கோளாறு. அதனாலதான் இந்த பண்ணையை முதல்ல வெச்சிருந்தவரே வித்தாரு. சுகுமார் சார் போய் தைரியமாக இதைவாங்கினாரு. இடத்தோட ராசி இவரையும் விடலை."



"ஆக்சிடெண்ட் ஆனது எங்கேயோ ரோட்ல... இடம் என்னங்க பண்ணிச்சு இதுல..."

"அட நீங்க வேற... அந்த பால்பண்ணையை யார் வாங்கினாலும் சரி, உருப்பட முடியாதுன்னு ஆயிடிச்சு. ஒரு விஷயம் தெரியுமா உங்களுக்கு..."

"என்ன...?"

"இப்பவே அதை வர்றவிலைக்கு வித்துட்டு தன் சொந்த ஊருக்கப் போக சுகுமார் சார் மனைவியும் அவங்க அப்பாவும் தயாராயிட்டாங்க. ஆனா ஒருத்தரும் கிட்ட வரமாட்டேங்கறாங்க."

"நம்ப முடியலையே... நல்லா லாபகரமா நடக்கற ஒரு பிளான்ட்டை வாங்க யோசிக்கிறாங்களா?"

"ஏன் யோசிக்க மாட்டாங்க. வாஸ்துவாவது கீஸ்துவாவது துன்னு தொடையை தட்டிட்டுதான் சுகுமார்சார் வாங்கினாரு. என்ன ஆச்சு? இன்னிக்கு அவருக்கே பால் ஊத்தியாச்சு..."

"என்னால நம்பவே முடியலை. இப்படி கூடவா இருப்பாங்க."

"என்ன இருப்பாங்க... இந்த மாதிரி உருப்படாம போய் ஒருத்தரும் வாங்கமாட்டாத இடம் எவ்வளவு இருக்கு தெரியுமா?"

-அவர்கள் சொல்லச்சொல்ல தேவநாதனுக்குள் வேறு மாதிரியாக முடிவு.

இந்த பால்பாண்ணையை நாம் வாங்கி நடத்தினால்... அவன் கண்ணில் தென்பட்ட நகை மூட்டையும் சக்திமாளிகையும் அவனுக்கு ஒரு தனித்தெம்பை தந்து அவனை உந்தித்தள்ளின!

## 28

பூபுரம் முதல் பிந்து வரையான ஒன்பது ஆவரணங்களைக் கொண்ட ஸ்ரீயந்த்ரமானது, நமது சரீரத்தோடும் பொருத்திப் பார்க்கக் கூடிய ஒன்றாக இருப்பதைப் பார்த்தோம். ஒவ்வொரு ஆவரணமும் உடம்பின் ஒவ்வொரு பாகங்களில் பொருந்த, உச்சந்தலை பிந்துவாய்த் திகழ்வது வரை பார்த்தோம்.

இது வெறுமனே புரிந்து கொள்வதற்காக மட்டும் சொல்லப்படவில்லை. இதனுள்ளும் ஏராளமான உட்பொருள் இருக்கிறது.

நமது பாதத்தில் தொடங்கும் முதல் ஆவரணமானது ஒன்பது ரசங்களை உள்ளடக்கியது. அதை உணர்த்துவதுதான் முதல் ரேகை.

அடுத்த ரேகை அஷ்டமாசித்தியைத் தொட்டு அது சார்ந்த நமது குணாம்சங்களை எதிரொலிக்கிறது. அதாவது, காமம், குரோதம், லோபம், மோகம், மதம், ஆச்சரியம், புண்ணியம், பாவம் என்று எட்டு குணங்களே எட்டுவித சக்தியாக இரண்டாம் ரேகையில் கருதப்படுகிறது. மூன்றாவது ரேகையோ தேகத்தில் உள்ள மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அநாஹதம், விசுக்தி, ஆக்ஞை என்று ஆதாரங்களை எதிரொலிக்கிறது.

இரண்டாவது ஆவரணத்தில் உள்ள பதினாறு இதழ்கள் நமது உடலில் இருக்கும் சதை, நெருப்பு, உஷ்ணம், காற்று, மனம் ஆகியவற்றுடன் கண், காது, நாக்கு, வாய், கை, கால் மற்றும் பிறப்புக் குறிகள், தோல், ஆச்சிராணம் என்று அனைத்தையும் சேர்த்துப் பாருங்கள். பதினாறு வரும்.

அந்தப் பதினாறே பதினாறு இதழ்கள்!



மூன்றாவது தளமும் இப்படித்தான். பக்தி சார்ந்து பார்த்தல், கேட்டல், நடத்தல், விடுதல், செய்தல் என்று உணர்வுகளின் ஸ்வரூபம் ஆகிறது. இவைகளை வகைப்படுத்தினால் ஒரு மனிதன் புத்தி மூலம் எட்டு விதமாக இயங்குவது தெரியும். அதைக் குறிப்பதே மூன்றாவதான அஷ்டதள பத்மம்.

நான்காவது தளம் காற்றைத் தொட்டு உடம்பில் துடிக்கும் நாடிகளைக் குறிக்கிறது. இடகலை, பிங்கலை, சுஷிம்சிதை என்று பிரதான சுவாச முறை மூன்றோடு சரஸ்வதி, சங்கினி, பூஷா, காந்தாரி, பயஸ்வினி, யசோவதி, ஹஸ்திதா, வாரனா, விஸ்வோதரி, குஹு, அலம்புஸா என்று 14 நாடிகளை நமது உடல் கொண்டுள்ளது.

இந்த நாடிகளின் துடிக்கும் விதத்தைப் பொறுத்தே ஒருவருடைய மன ஓட்டம் அமைகிறது. தியானிக்கும்போது இவை துடிக்கும் விதத்தில்தான் மன அமைதி உருவாகிறது.

இப்படி ஒவ்வொரு தளமும் மனித உடம்பின் செயல்பாடுகளையும், அதன் குண நலன்களையும் கூட எதிரொலிக்கிறது.

அடுத்து வரும் ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது தளங்கள் நமது உடலுடன் வேறு எந்த வகையில் தொடர்பு உள்ளவை என்பதை இனி பார்ப்போம்.

*காசி!*

புனித கங்கைக் கரையோரமாகவே தொட்டுத் தொட்டு போனால் ஒரு பசுமையான கிராமம் ஒன்று கண்ணில் படும். திரும்பின பக்கமெல்லாம் கோதுமை வயலாகக் காட்சி தரும். அந்தக் கிராமத்துக்குக் கூட துர்காபூர் என்பதுதான் பெயர். பெயருக்கு ஏற்ப அந்தக் கிராமத்தின் நடுவில் ஒரு துர்க்கை ஆலயம் உள்ளது. வடவர்களுக்கே உரிய பளிங்குக் கல்லால் ஆனவள் அந்தத் துர்க்கை.

விக்ரமாதித்த சக்ரவர்த்தி அடிக்கடி வந்து வழிபட்ட சிறப்பினை எல்லாம் உடையவள். அந்த துர்க்கை ஆலயத்தை நிர்வகிக்கும் ஒரு சாதுக்களின் குழுவுக்கு தலைவர்தான் சங்கர்ராம் தேவ்ஜி!

நூறு வயதைத் தாண்டி விட்டதாகக் கூறுகிறார்கள் அவரை! ஆனால், உடம்புக்குள் உப்பு, புளி, காரம் என்கிற ருசியான விஷயங்களை மிக மிகக் கட்டுப் பாடான அளவில் செலுத்தியும், தியானத்தில் அமர்ந்து நாடிகளை எப்போதும் சீராக துடிக்க விட்டும் ஒரு வகை யில் உடம்பை முழுக்க முழுக்க தனது கட்டுப்பாட் டுக்குள் கொண்டுவந்து விட்டவராக அவர் இருந்தார். அதனால் அவர் வயதை ஐம்பது அல்லது அறுபது என்றுதான் எல்லாரும் கூறுவர். அப்படி ஒரு இளமை சங்கர்ராம் தேவ்ஜியிடம்!

அன்றும், தியான யோகம் முடிந்து தன் இருப் பிடத்தை விட்டு வெளியே வந்தவர், தனது உதவி யாளரைத்தான் தேடினார்.

அவர் அப்படித் தேடுவார் என்பது தெரிந்தோ என்னவோ எங்கிருந்தோ அவரும் ஓடி வந்தார். பளீர் என்று வெண்ணிற பைஜாமா, குர்தாவில் இருக்கும் அவரது சிரத்தில் கிராப்போடு கூடிய அழகான குடுமி. நெற்றியில் கட்டை விரல் பருமனில் துர்க்கா தேவியின் செந்தூரம். ஓடி வந்து நிற்கும் அவர் நெற்றிச் செந் தூரத்தை வியர்வைக் கோடு ஒன்று கரைக்கப் பார்த்தது. அதை ரசித்தபடியே அந்த சங்கர்ராம் தேவ்ஜி, அவரிடம் இந்தியில் பேசத் தொடங்கினார். இனி அதன் தமி ழாக்கம்.

"லக்ஷ்மண்... இப்ப அந்தப் பெரியவருக்கு எப்படி இருக்கு?"

"நல்லா இருக்கார் ஜி. கால்ல ஏற்பட்ட காயம் அவ்வளவும் ஆறிடுச்சு. உடம்புல எல்லா நாடியும் சீரா துடிச்சிட்டு இருக்கு. அவர்கூட ஒரு யோகி போல இருக்கு. நான் சொல்லிக் கொடுத்த விஷயங்களை நொடியில புரிஞ்சுக்கிட்டார். மருந்தையும் விடாம சாப்பிட்டார். அதுலையும் காளாவ்ஷதம் சாப்பிட பிரம்ம ஞானிகளே யோசிப்பாங்க. அவ்வளவு கசப்பு. அதைக்கூட ரெகுலரா சாப்பிடறார்..."



"சந்தோஷம்... எழுந்து நடக்கறாரா?"

"உம் நடந்து கங்கைக்குப் போய் குளிச்சிட்டே வர்றார்"

"கங்கைக்கா... அந்த முதலை பயம் அவருக்கு இல்லையா?"

"இல்ல... ஆனானப்பட்ட சனீச்வரன்தான் முதலையா வந்து என்னை விழுங்கப் பாத்தான். அது அவன் கடமை இருந்தும் எனக்கு ஆயுளைத் தந்து ரட்சணை செய்தது இந்தக் கங்கா மாதா. இல்லேன்னா இந்த துர்காபூர் சாதுக்கள் கங்கைல என்னைப் பாத்து காப்பாத்தியிருப் பீங்களான்னு அழகா திருப்பிக் கேக்கறார் அவர்."

-லக்ஷ்மண் என்கிற அந்தத் தொண்டரின் பதிலைத் தொடர்ந்து சங்கர்ராம் தேவ்ஜியின் முகத்தில் ஒரு மெல்லிய பரவசம்.

"அவர் இப்ப எங்க இருக்கார்?"

"ஸ்ரீசக்ர யந்த்ரம் முன்னால அவரை உக்கார வெச்சு ருக்கோம். ஆழ்ந்த யோகத்துல இருக்கார். ஸ்ரீசக்ர யந்த்ரம் பத்தி அவருக்குத் தெளிவா தெரிஞ்சிருக்கு. ஒவ்வொரு தளத்துக்குமான பீஜாட்சர மந்திரங்களும் அவருக்குத் தெரிஞ்சிருக்கு. அதையெல்லாம் அவர் சொல்லி ஜெபிக்கும்போது நமக்கே புல்லரிப்பா இருக்கு"

-லக்ஷ்மண் சொல்லச் சொல்ல, சங்கர்ராம் தேவ்ஜிக் கும் ஆர்வம் தொற்றிக் கொண்டது. படுவேகமாக அங்

கிருந்து யந்த்ரம் பிரதிஷ்டை செய்யப் பட்டிருக்கும் மந்திராலயம் நோக்கி நடந்தார்.

மிக மிக அமைதியான தியானக் கூடத்தோடு கூடியது அந்த மந்திராலயம். ஆங்காங்கே சிலர் அமர்ந்து தியான யோகத்தில் இருந்தனர். நடுநாயகமாக ஒரு பீடம் மேல் ஐம்பொன்னால் செய்யப்பட்ட ஆறடி உயர ஸ்ரீயந்த்ரம் இருபுறம் பன்னிரண்டு திரிகள் போடப்பட்ட இடுப்புயர குத்து விளக்குகள்.

பார்க்கவே மிக ரம்மியமாக கண்களுக்கு குளிர்வாகவும். மனதுக்குள் ஒரு வித பரவசத்தையும் ஏற்படுத்துவது போல இருந்தது அந்தச் சூழல்.

அதில் ஸ்ரீயந்த்ரத்துக்கு மிக மிக சமீபத்தில் கம்பீரமாக தியான கோலத்தில் அமர்ந்திருந்தார் சங்கர்ராம் தேவ்ஜி ஆர்வமாகப் பார்க்க வந்த அந்தப் பெரியவர்.

குருஜி வந்து விட்டார் என்பது தெரிந்து அவரும் கண் விழித்தார். அவர் சச்சிதானந்த சாமிதான். வேறு யாராக இருக்க முடியும்?"

திரும்பவும் ஆஸ்பத்திரிக்கு வந்த தேவநாதனுக்கு ஆச்சரியமாக இருந்தது. பிரகாஷின் படுக்கை ஒரு ஏ.சி. ரூமுக்கு மாற்றப்பட்டிருந்தது. அந்த அறைக்குள் நுழைந்தபோது ஜில்லென்ற ஒரு பூஞ்சோலைக்குள் நுழை வதுபோல் இருந்தது. உள்ளே அந்த அளவு பெர்ப்யூம் வாசம்.

லட்ச ரூபாய் பணத்தைக் கட்டியதன் எதிரொலியா?

தேவநாதன் அப்படித்தான் நினைத்தான்.

ஆனால், அவனுக்கு லஷ்மி என்ன செய்திருந்தாள் என்பதுதான் தெரியாதே?

எதிரே வந்த டாக்டர் அப்போதுதான் பிரகாஷை பரி சோதித்துவிட்டு வந்திருந்தார். லஷ்மியைக் காண வில்லை.



"டாக்டர் இவன்தான் தேவா. என் உயிர் நண்பன்" - என்று படுக்கையில் இருந்தபடியே பிரகாஷ் சொல்ல, அவனைக் கடந்து சில அடி சென்றுவிட்ட டாக்டர் திரும்பி வந்தார்.

அவனை உற்றுப் பார்த்தார். பிறகு தன் அறைக்கு அவசியம் வரவேண்டும் என்று சொல்லிவிட்டு விடை பெற்றுக் கொண்டார்.

தேவநாதன் அதற்காக ஆச்சரியப்பட்டபடியே பிரகாஷை நெருங்கினான்.

"பிரகாஷ்... இப்ப எப்படி இருக்கே... ரூமெல்லாம் மாறிடிச்சே. பணம் கட்டிட்டதாலையா?"

"தெரியலடா, ஆனா ஒண்ணு! டாக்டர்கள் ரொம்ப கிளியரா சொல்லிட்டாங்க. எவ்வளவு செலவானாலும் சரி, உங்களை பரிபூரணமா குணப்படுத்திட்டுதான் அனுப்புவோம்னு... நேற்று வரை யோசிச்சுகிட்டிருந் தவங்க எனக்காக சில இஞ்செக்ஷன் வாங்க சிங்கப்பூர் மெடிக்கல் சென்டரோட பேசியிருக்காங்கன்னா பார்த்துக் கையேன்."

"குட்... எல்லாம் நான் பணம் கட்டுன நேரம்னுதான் சொல்வேன். முதல்ல லஷ்மிகூட மறுத்தா. அப்புறம் அமைதியாயிட்டா, அவ புத்திசாலி..."

"அதுமட்டுமில்லடா... அவ கிடைக்க நான் குடுத்து வெச்சருக்கணும். இந்த ஹாஸ்பிடல்லையே அவளுக்கு ஏற்ற ஒரு வேலையும் போட்டுக் கொடுத்திருக்காங்க ளாம். அப்படி செய்துட்டா எனக்கான மருத்துவ செலவை இலவசமாவே செய்யலாமாம். அது அவங்க ஆஸ்பத்திரி ரூல்ஸ்லயும் இருக்காம்."

"வெரிகுட்... எப்படியோ உன் பிரச்னை தீர்ந்தா சரி..."

"எல்லாருக்கும் பழம் நழுவி பால்ல தான்டா விழும். எனக்கு அதுவும் நழுவி வாய்லயே விழுந்திருக்குன்னு தான் சொல்வேன்."

-தேவநாதன் முன்னால் பிரகாஷ் சந்தோஷத்தின் உச்சிக்கே போனான். தேவநாதனும் எல்லாவற்றுக்குமாக மகிழ்ந்தவனாக "எப்படியோ எல்லாம் நல்லவிதமா நடந்தா சரி... நான் சேலம் வந்ததும் இன்னொரு வகைல நல்லதா போச்சு" என்றான்.

"எப்படி?"

"சொல்றேன். அது நடந்து முடியட்டும். ஆனா, அது ரொம்ப பெரிய விஷயம். போன மாசம் நான் என் மோட்டார் பைக்கை சர்வீஸ் பண்றதுக்கே யோசிச்சவன், அவ்வளவு பொருளாதார நெருக்கடி. இன்னிக்கு எல்லாம் தலைகீழ். ஒரு சர்வீஸ் சென்டரையே நான் இப்ப விலைக்கு வாங்கற அளவு உயரத்துல இருக்கேன்..."

"என்னடா... பெரிய பெரிய வார்த்தையெல்லாம் பேசறே. உன்னை லஷ்மி ஒரு பணக்கார பெண் தலைல கட்டிட்டதாதான் நான் நினைச்சேன். வாழ்க்கை கொடுக்கப் போய் எங்கே சந்தோஷமான வாழ்க்கையை இழந்துடுவியோன்னு கூடபயந்தேன். ஆனா, நீ பேசறத பார்த்தா ரொம்ப சந்தோஷமா இருக்கேன்னு தெரியுது..."

"ஆமாண்டா... என் மனைவி வந்த பிறகுதான் எல்லா மாற்றமும். அவ ஒரு அபூர்வ சக்தியாதான் இருக்கணும். இல்லேன்னா என் வாழ்க்கை இப்படி மாறுமா?"

"உன் மனைவி ஒரு விதமான சக்தின்னா என் மனைவி இன்னொரு விதம். பாவம்டா லஷ்மி. எனக்காக ரொம்பவே கஷ்டப்பட்டா. அவளுக்காகவாவது நான் திருந்தி நல்லவிதமா வாழ்ந்து காட்டணும். இனி எந்த காலத்துலையும் மதுவை நான் கையால தொடமாட்டேன். இதை என் சக்தியான லஷ்மி மேல சத்தியமா சொல்றேன்" -பிரகாஷ் உணர்வில் பொங்கினான். பதிலுக்கு அவனை தட்டிக் கொடுத்து விட்டு டாக்டரைப் பார்க்க புறப்பட்டான் தேவநாதன்!



அந்த ஆஸ்பத்திரியின் ஒரு மையத்தில் எல்லோரும் வேகமாக தொடர்பு கொள்ளும் விதத்தில் இருந்தது அவரது அறை. உள்ளே நுழைந்த தேவநாதனை, உற்சாகமாக வரவேற்ற டாக்டர், முதல் காரியமாக ஒரு நன்கொடை ரசீதைதான் எடுத்து அவரிடம் நீட்டினார்.

அதில் அவன் பெயரும் டாக்டர் பெயரும் சேர்ந்தே இருந்தது.

"என்ன டாக்டர் இது?"

"லஷ்மி உங்ககிட்ட எதுவும் சொல்லலையா?"

"இல்லையே... அவளை நான் இப்ப பாக்கவே இல்லையே."

"ஓ... அயாம் சாரி... அவங்கள நான்தான் எங்க ஹெட் ஆபீசுக்கு அனுப்பியிருக்கேன். லஷ்மி ஒரு வித்தியாசமான கேரக்டர். ஏழ்மையில் நேர்மைன்னு கேள்விப்பட்டிருக்கேன். ஆனா லஷ்மி கிட்டதான் பாத்தேன். ஷி ஈஸ் ஹைலி ஸ்ட்ரெய்ட் பார்வர்ட். அவங்க கிட்ட நல்ல எதிச்செல்லாம் இருக்கு..."

டாக்டர் பேசிக் கொண்டே போனார். ஆனால், தேவநாதனுக்குதான் எதுவும் விளங்கவில்லை.

"உங்களுக்கு நான் சொல்றது புரியலைன்னு நினைக்கறேன். நானே விளக்கமா சொல்லிட்றேன். ஏதோ சாமி பணத்தை எடுத்து நீங்க அவங்களுக்கு உதவினீங்களாம். சாமி பணம் சாமிக்குத்தான் போகணும். அதுவும் கொடுத்த உங்க பேராலையும், அதுக்கு காரணமான என் பேராலையும்கறது அவங்க விருப்பம். அதைச் சொல்லி நீங்க கொடுத்த பணத்தை அவங்க என்கிட்ட கொடுத்தப்போ நான் ஆடிப் போய்ட்டேன். இப்ப அது ஒரு கோயில் பராமரிப்புக்கும் கும்பாபிஷேகத்துக்கும் போய் சேர்ந்துடுச்சு.

அதுவரை சும்மா இருந்த நானும் சம்திங் ஏதாவது செய்ய ஆசைப்பட்டேன். அந்த ஸ்டார்ட்டிங் பயருக்குக்

காரணமும் லஷ்மிதான்... இப்ப நான் மொத்த கோயில் கும்பாபிஷேகத்தையும் ஏற்க முன் வந்துருக்கேன். அப்படியே பிரகாஷை பரிபூரணமா குணப்படுத்தறதும் என் பொறுப்பு. அதுக்கு பதிலுதவியா லஷ்மி இங்க வேலைல சேரப்போறாங்க.

அவங்க பேஷன்சுக்கு இந்த ஆஸ்பத்திரி ரொம்ப ஏற்ற இடம். என்ன சொல்றீங்க?"

டாக்டர் பேசி முடித்தார். தேவநாதனுக்கு வார்த்தையே வரவில்லை. எழுந்து நின்றான். கையெடுத்து கும்பிட்டான். கண்களில் நீர் திரள அங்கிருந்து அவரிடம் விடையும் பெற்றுக் கொண்டான். வெளியே வந்தவன் மனதில் திவ்யாவும் எழும்பி நின்றாள். திவ்யாவும் லஷ்மி போல தர்ம நியாயங்களுடன் நடந்து கொள்வாளா? தனக்குள்ளே கேட்டுக் கொண்டவன் மெல்ல அவர்களை மறந்தான். அவன் பார்க்க அந்த ஃபைவ் ஸ்டார் அக்ரோ கம்பெனியின் பால் வேன் ஒன்று சாலையில் ஓடி மறைந்தது.

அது அவனுக்குள் புதிது புதிதான எண்ணங்களைத் தூண்ட ஆரம்பித்தது. சுகுமாரின் மரணத்துக்கு துக்கம் கேட்கச் சென்ற இடத்தில் காதில் விழுந்ததெல்லாம் துல்லியமாக எதிரொலித்தது.

அவன் மனைவியிடம் பேசிவிட்டு திரும்பும்போது அவளது அப்பாவைப் பார்த்ததும் அவரிடம் அந்த பால் பண்ணையின் விலை மதிப்பைக் கேட்டதும் அவர் உடனே செல்போனில் டிப்போ மானேஜரை தொடர்பு கொண்டு அவரை அழைத்ததும் ஞாபகம் வந்தது.

அதன்பின் ஓடிவந்த மேனேஜர் தனியாக ஒரு அறைக்கு அவனை அழைத்துச் சென்று, "ஜஸ்ட் ஓனர் ஷிப்பை மாத்திக்கிட்டா போதும் சார்... இண்டஸ்ட்ரீல ஒரு பிராப்ளமும் இல்ல. இவங்கதான் சென்டிமென்ட்டா தேவையில்லாம கவலைப்படறாங்க. அதனால



தொழிலாளிகளும் பயப்பட ஆரம்பிச்சுட்டாங்க" என்று ஆரம்பித்து அவனிடம் குழையக் குழைய பேசியதையும் எண்ணிப் பார்த்தான்.

இறுதியாக மூன்றரை ஏக்கரில் பண்ணை உள்ளிருக்கும் எந்திரங்களின் மதிப்பு, தொழிலாளர் எண்ணிக்கை, மாதச் சம்பள பட்டுவாடா விவரம், பால் கொள்முதல் அளவு, விநியோகிக்கும் அளவு, டெய்லி கலெக்ஷன் ரிப்போர்ட், சராசரியாக இருபது பர்சன்ட்டுக்கு குறையாத மார்ஜின் என்று அவரோடு அக்கவுண்டன்ட்டும் சேர்ந்து கொண்டு சொன்னதெல்லாம் அவனுக்குள் ஒரு ஓட்டம் ஓடியது.

அதன் எதிரொலியாக எண்பது லட்ச ரூபாயை அவன் திரட்டியாக வேண்டும்.

அவ்வளவுக்கு அந்த நகைகளே கை கொடுக்குமா? கேள்வியில் விழுந்தான்.

மதுரை!

சக்தி இல்லத்துக்குள் பேங்க் மேனேஜர் ஒருவரும் அவரது உதவியாளர் ஒருவரும் நுழைந்து கொண்டிருந்தனர்.

பெரிய கும்பிடாக போட்டு வரவேற்று அமர்த்திய திவ்யாவை மேனேஜரும் தன் மூக்கு கண்ணாடியை இறக்கிவிட்டுக் கொண்டு பார்த்தார். கூடவே புன்னகையோடு தேவநாதன்.

மற்றபடி வீட்டில் ஒருவருமில்லை.

"அத்தை... வனிதா, ஜெயந்தி நீங்கல்லாம் உடனே திருப்பதி கிளம்பறீங்க. ஒரு வாடகை கார் எடுத்துக்கிட்டு போய்ட்டு வாங்க..." என்று அவர்கள் விழிக்க விழிக்க துரத்தி அடித்து விட்டாள்.

அதுதான் அத்தனை அமைதி. அதை அவளே கலைக்கத் தொடங்குகிறாள்.

"நீங்களே நேர்ல வந்ததுல ரொம்ப சந்தோஷம் மேனேஜர் சார். எங்ககிட்ட இருபது லட்சரூபா இப்ப இருக்கு. மேற்கொண்டு ஐம்பத்தி அஞ்சு லட்சம் வேணும் இப்போ... இந்த மாளிகையே ஐம்பத்தி அஞ்சு என்ன அறுபதுக்கு போகும். இருந்தாலும் பேங்க் லோன்ல பிசினஸ் ஸ்டார்ட் பண்றதுதான் புத்திசாலித்தனம். டேக்ஸ் பிராப்ளம்லாம் பெரிசா வராதுன்னு எங்க ஆடிட்டர் சொன்னதாலதான் உங்ககிட்ட வந்துருக்கோம்..."

அவள் முடித்துவிட்டாள். மானேஜர் ஆரம்பித்தார். "நாங்க பிசினசுக்கு லோன் கொடுக்கத் தயாராயிருக்கோம். எங்களுக்கு பேப்பர்ஸ் பக்காவா இருந்தா போதும். உங்ககிட்ட அது இருக்குல்ல...? குறிப்பா இந்த பங்களா பத்திரம்..." -மேனேஜர் கேட்க வேண்டியதைத்தான் கேட்டார். ஆனால், தேவநாதன் திணறினாலும் திவ்யா திணறவில்லை. "ஓ... இருக்கே" என்றாள்.

## 29

ஸ்ரீயந்த்ரத்தை நமது உடலோடு பொருத்திப் பார்த்து ஒவ்வொரு ஆவரணத்திற்கும் நமது உடலுக்கும் உள்ள தொடர்புகளை நாம் உணர்ந்து வருகிறோம்.

இதைப் புரிந்து கொள்வது சற்று குழப்பமாக இருக்கலாம். ஆனால், இயல்பாகவே இறைதேடலில் உள்ளவர்கள், அன்றாடம் தவறாமல் அம்பாளை சேவிப்பவர்கள், அவளது ஸ்லோகங்களைச் சொல்லி பூஜிக்கிறவர்களுக்கு இந்த விஷயங்கள் நிச்சயமாகப் புரிந்துவிடும்.

புரிய வேண்டும்.

கோடி வார்த்தைகளில் சொல்லியும் புரியாத விஷயங்கள் சமயத்தில் ஒரு புகைப்படத்தில் உள்ள



அதில் தென்படும் உணர்ச்சியில் நமக்கு புரிய வந்துவிடும்.

அதே போன்றதுதான் குறியீடுகளும்...

நான் முன்பே குறிப்பிட்டது போல ஒரு சாலையில் பயணிக்கும்போது வழியில் பாலம் வருகிறது. குறுகலான சாலை வருகிறது. (அ) பள்ளம் வெட்டிப் போடப்பட்டிருக்கிறது என்றால் அதை விளக்கமாக சொல்லிக் கொண்டு அருகே யாரும் நிற்பதில்லை. ஒரு குறியீடாக வரைந்து நட்டு வைத்து விடுவார்கள். நாமும் அதைப் பார்த்து புரிந்து கொண்டு விடுவோம்.

பல வார்த்தைகள் கொண்டு சொல்லப்பட வேண்டியதை எப்படி ஒரு சிறு படக்குறிப்பு நமக்கு புரியவைக்கிறதோ அங்கே எப்படி நாம் புரிந்து கொள்கிறோமோ அதே அடித்தளத்தில் நின்று ஸ்ரீ யந்த்ரத்தையும் அதன் ஒவ்வொரு தளங்களையும் நாம் பார்த்து புரிந்து கொள்ள வேண்டும்.

இதில் ஐந்தாவது தளம் என்பது பத்து இதழ்களால் ஆனது என்பது தெரியும். இந்த பத்து இதழ்களும் பத்து தேவியரைக் குறிப்பதையும் அவர்கள் யார் என்பதையும் கடந்த வாரங்களில் பார்த்தோம். இந்த பத்து இதழ்கள் அதாவது பத்து தேவியர் நம் உடம்பில் எவ்வாறு இருக்கிறார்கள் தெரியுமா?

பிராணன், அபானன், வியானன், உதானன், ஸமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவநந்தன், தனஞ்ஜெயன் என்கிற அடையாளப் பெயர்களில் இவர்கள் நமது உடம்பின் நாடிகளில் சஞ்சரிக்கும் வாயுக்களாக உள்ளனர்.

காற்று ஒன்றுதான்.

அதை நாம் சுவாசிக்கிறோம். (இந்த கருத்தே தவறு என்பது சித்தர்கள் கருத்து. நாம் சுவாசிப்பதில்லை. அதாவது நமது கரத்தில் அந்த செயல்பாடு இல்லை. அதன் செயல்பாட்டால்தான் நமது உடம்பில் உயிர் இயக்கம் நடைபெறுகிறது. எனவே

நாம் சுவாசிக்கிறோம் என்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளலாம்.

உண்மையில் நம் பங்கு அதில் இல்லை. தாயின் வயிற்றைவிட்டு வந்த நொடி மூச்சுப் பயணம் ஆரம்பம். அதே போல அது என்று நிற்கும் என்பதும் நமக்குத் தெரியாது. அது ஒருவித இயக்கம். நாம் அதை உணரும் நிலையில் உள்ளவர்கள். அவ்வளவே!)

இப்படி நாம் சுவாசிக்கும் காற்று உடம்பு முழுக்க பரவி நாடிகளில் துடிப்பாக செயல்படுகிறது. மார்புக் கூட்டோடு அது நின்று விடுவதில்லை. மலஜலம் கழிக்க ஒரு காற்றழுத்தம் தேவைப்படுகிறது. அதே போல ரத்தம் ஓட, இதயம் இயங்க, மூளை செயல் பட, தூங்க, விழிக்க என்று ஒவ்வொன்றுக்கும் பின்னாலும் ஒவ்வொரு வாயு உள்ளது. அவை களுக்கான பெயர்தான் மேலே நாம் பார்த்தது. அந்த வாயுக்கள்தான் பத்து இதழ்களாக, பத்து தேவியர் களாகவும் பார்க்கப்படுகிறது.

ஸ்ரீயந்த்ரம் நமக்குள் என்னமாய் பொருந்துகிறது பார்த்தீர்களா?

உடம்பில் இருந்து உயிர் பிரிதல் என்பது எல்லாருக்கும் ஒருநாள் நடந்தே தீரும் விஷயம். இதில் சிலர் இறந்து விட்டதாகக் கருதி கட்டைகள் அடுக்கப்பட்டு தீயிட்ட பிறகும் அவர்கள் உடல் அசைந்து அவர்கள் எழுந்து நின்ற சம்பவங்கள் நிறைய உண்டு. அங்கே உண்மையில் என்ன நடந் திருக்கும் என்று பார்த்தால் இந்த பத்து வாயுக்களில் சில வாயுக்கள் உடம்பில் அங்கங்கே இயக்கத்தில் இருந்திருக்கும். உயிர் பிரிய ஒன்பது வாயுக்கள் ஒன்று சேர்ந்து வெளியேற வேண்டும். ஒன்று மட்டும் தங்கி உடம்பை ஊதிப் பருக்க வைத்து பின் வெளியேறும். பிணத்தை அப்படியே போட்டால் உடம்பில் ஏற்படும் வேதி மாற்றத்துக்கு அதுவே காரணம்.



இந்த ஒன்று நீங்கலாக ஒன்பது வாயுவும் ஒன்றுபட்டு வெளியேறினால்தான் உயிர் இயக்கம் தடைபடும்.

இதில் சில வாயுக்கள் உடம்பில் தங்கி விட்டாலும் மற்ற வாயுக்களை இழுத்துப்போட்டு அந்த உடம்புக்குள் உயிர் இயக்கத்தை திரும்பக் கொண்டு வந்து விடலாம்.

சித்த புருஷர்கள் இதனடிப்படையில்தான் இறந்தவர்களை உயிர்ப்பித்த சம்பவங்கள் நடந்துள்ளன.

அந்த வீட்டின் தப்புதப்பு... மாளிகையின் பத்திரம் இருப்பதாகவும் அதில் ஒரு குந்தகமும் இல்லை என்பது போலவும் திவ்யா பேசியதைக் கேட்ட தேவநாதனுக்கு தூக்கி வாரிப்போட்டது. திவ்யாவை வெறித்தான்.

அவளோ சட்டையே செய்யவில்லை. பேங்க் மேனேஜ ரிடம் "சார்... எங்க தரப்புல எல்லா பேப்பர்சும் பக்காவா இருக்கும். உங்க தரப்புல இழுத்தடிக்காம ஒரே செக்கா கொடுத்துடணும்" என்றாள்.

"தயாரா இருக்கோம் மேடம்... குறிப்பா இப்படி நல்ல இன்டஸ்ட்ரீசை அடாப்ட் பண்ணும் போது நாங்க பெருசா ரூல்சை பாக்கறதே இல்லை. இப்பதான் பாக்கறீங்களே... தனியார் நிதி நிறுவனங்கள்ல யாரும் பணத்தை முதலீடே செய்யறதில்லை. செய்தாலும் அவங்க தூக்கிகிட்டு ஓடிட றாங்க. அதனால பேங்கில் டெபாசிட் பண்றத தவிர ஜனங்களுக்கும் வேற வழியில்லை.

அதனால எல்லா பேங்க்லையும் சர்ப்ளஸ்சாவே மணி லெவல் இருக்கு. அதை சும்மா வெச்சுகிட்டிருந்தா ஆச்சா... பணத்தைப் போட்டவங்களுக்கு வட்டி கொடுக் கணுமே. ஆகையால நாங்க யார் எவ்வளவு கடன் கேட்டா லும் தர்றதுக்கு தயங்கறதேயில்லை.

சுருக்கமா சொல்லப்போனா கடன் வாங்கி நேர்மையா தொழில் செய்ய நினைக்கறவங்களுக்கு இது பொற்காலம். வீடு கட்ட நினைக்கறவங்களுக்கும் இது யோக காலம்தான். எவ்வளவுன்னாலும் தர்றதுக்குத் தயாரா இருக்கோம்."

அவர் ஒரு லெக்சரே கொடுத்தார். பிறகு...

"சரி உங்க பேப்பர்செல்லாம் எப்ப ரெடியாகும்?" என்று கேட்டார்.

"ஒரு இரண்டு நாள் கொடுங்களேன்..."

"ஓ.கே.. அப்புறமா நீங்களும் எனக்கு இரண்டு நாள் டயம்தாங்க. நாங்க எங்க பேங்க் லாயர்கிட்ட லீகல் ஒபீனியனுக்காக உங்க பேப்பர்சை அனுப்புவோம். அவர் ஓ. கேன்னுட்டா ஒரே செக்ல உங்க லோன் அமவுண்ட் சேங்ஷனாயிடும்" என்றவர் புறப்படுவதற்காக எழுந்தார்.

"ஆமா உங்க லாயர் யாரு... தெரிஞ்சுக்கலாமா?"

"ஏன் கேக்கறீங்க... அருணாசலம்கறவர்தான் எங்க லாயர்"

"ஓ... அவரா! நான் என் ரிலேடிவ் ஒருத்தர் லாயரா இருக்கார். அவரா இருப்பாரோன்னு பார்த்தேன்..."

-திவ்யா லாயர் பெயரை தெரிந்து கொண்ட சந்தோஷத்தோடு அவருக்கு விடைகொடுக்க அவரும் புறப்பட்டுப் போனார்.

அவளை தேவநாதன் வெறித்துக்கொண்டேயிருந்தான்.

"என்ன பார்வை இது... எதுக்கு இப்ப இப்படி பாக்கறீங்க?"

"பாக்காம... இந்த வீட்டோட ஒரிஜினல் பத்திரத்துக்கு நான் எங்க போக..."

"உங்களை யார் போகச் சொன்னா?"



"பெருசா பேங்க் மானேஜர் கேட்டப்போ இருக்குன்னு சொன்னியே"

"ஆமாம்... இருக்குதான். புதுசா பத்திரம் வாங்கறோம். அதுல இந்த வீட்டை வெச்சிருந்த சச்சிதானந்தம் நமக்கு பவர் கொடுத்துட்டதா எழுதி ரிஜஸ்டரும் பண்ணிகிட்டா முடிஞ்சு போச்சு. அப்படியே ரிஜிஸ்தர் ஆபீசுக்குப் போய் இந்த வீட்டு பத்திரம் காணாம போயிடிச்சு. டூப்ளிகேட் வேணும்னா தந்துட்டு போறாங்க."

-திவ்யா தேர்ந்த கிரிமினல் புத்தியோடு சொன்னதைக் கேட்டு ஆடிப் போய் விட்டான்.

"திவ்யா... என்ன நீ? என்னமோ கடைக்கு போய் மளிகை சாமானை கேட்டு வாங்கற மாதிரி ரொம்ப சாதாரணமா சொல்றே?"

"இது ரொம்ப சாதாரண விஷயங்க"

"எப்படி அவ்வளவு சாதாரணமா சொல்றே... நமக்கு பவர் கொடுக்க சச்சிதானந்தம் சாமி வேண்டாமா?"

"அவர் எதுக்கு... எங்கப்பாவை சச்சிதானந்தம்னு கையெழுத்துப் போடச் சொன்னா முடிஞ்சிச்சு"

"அது எப்படி சொல்லும்?"

"ஏன் செல்லாது. சச்சிதானந்தசாமி செத்துப் போன விஷயம் இன்னும் இங்க யாருக்கும் தெரியாது. நாம லோனை வாங்கி முடிச்ச பிறகு மெல்ல சொல்லிக்கலாம். கேட்டா சாகறதுக்கு முந்தி அவர் பவர் கொடுத்துவிட்டு காசிக்குப் போய்ட்டதா சொல்லிகிட்டா போச்சு. அது என் கையெழுத்து இல்லைன்னு அவர் வந்து சொல்லாத வரை கையெழுத்தாலயும் ஒரு பிரச்னையும் வரப் போறதில்ல"

"என்ன நீ... உலக மகா பிராடு மாதிரி சிந்திக்கறே. ஆனா சாதாரணமா எக்ஸ்ப்ரஸ் பண்றே?"

"நீங்க ஒரு கிணத்து தவளை. அதுலையும் இடம், வீடு, ரிஜிஸ்தர் ஆபீஸ் விஷயத்துல நீங்க ஒரு தெள்ளுப் பூச்சி. அது ஒரு ஜெகஜ்ஜால உலகம். பணம் இருந்தா போதும் அங்க இருக்கறவங்க இந்தியாவையே நமக்கு எழுதிக் கொடுத்துடுவாங்க. அது தெரியுமா உங்களுக்கு?"

"அதுசரி... லீகல் ஒப்பீனியன்ல எல்லாம் தெரிய வந்துட்டா?"

"மண்ணாங்கட்டி. அந்த அருணாசலத்துக்கும் ஒரு விலை இருக்குங்க. நீங்க பேப்பர் படிக்கறதே இல்லையா... பல அரசியல்வாதிங்களுக்கு இன்னிக்கும் பணம் காய்ச்சு கொட்றதே இந்த மாதிரி வீடு, வாசல் இடத்தாலதாங்க. அதுலையும் ஒரே இடத்தை பத்து பேருக்கெல்லாம் வித்தவங்க உண்டு. தெரியுமா?"

"அவங்க கோர்ட்டுக்கு போவாங்களே..."

"போ... தாராளமா போ... என்ன நாளைக்கு காலைலயா தீர்ப்பு சொல்லிடப் போறாங்க. வாய்தா வாங்கியே அந்த விஷயத்தை தாட்டிடுவாங்க. அதான் பாக்கறோமே... அப்பன் போட்ட கேஸ் பேரன் தலைமுறைல கூட முடியறதில்லையே. மீறி ஏதாவது அதிகமா நடந்தாலும் நீதிபதிக்கு ஒரு விலை கொடுத்துட்டா முடிஞ்சுபோச்சு"

இரண்டு நாளைக்கு முந்தி நீங்க பேப்பர் பார்க்கலையா? நம்ம ஜனாதிபதியை அரெஸ்ட் பண்ண ஒரு நீதிபதி அரெஸ்ட் வாரண்ட் கொடுத்திருக்கார். அதுவும் நாப்பதாயிரம் லஞ்சத்துக்கு. இங்க ஜனாதிபதிக்கே பாதுகாப்பில்ல. பேச வந்துட்டீங்க..."

திவ்யா பிளந்து கட்டினாள். அடுத்த நொடி ஒரு ஆவேசச் சிரிப்பொலி மாடியில் இருந்து கேட்க ஆரம்பித்தது.



இதற்கு முன்பும் அவ்வப்போது கேட்டு பிறகு அது ரேடியோ, டிவியில் வெளிப்பட்டதாக இருக்கும் என்று அனுமானிக்கப்பட்ட அதே சிரிப்பு சப்தம்!

தேவநாதன் ஒரு வினாடி உறைந்து போய் மாடியைப் பார்த்தான்.

திவ்யாவும்!

"திவ்யா... என்ன இது பழையபடி சிரிப்பு சப்தம் கேட்குதே..."

"ஆமாங்க..."

"என்ன ஆமாங்க... யார்னு தெரியலியே. இல்லை இது ஏதாவது டி.வி.. ரேடியோ வாய்சா?"

"போய்தான் பாருங்களேன்..."

-கொஞ்சம் வெளிறலோடு திவ்யா அவனைத் தள்ளி விட்டாள். அவனும் படிகளில் தயங்கித் தயங்கி மேல் ஏறினான்.

யாராக இருக்கும் என்கிற அந்த கேள்வி பிரதானமாக இருந்தது. ஆனால் உள்ளே நுழைந்து அவன் பார்த்த அளவில் யாரும் இருக்கின்ற மாதிரியே தெரியவில்லை. அங்கே இருந்த அவ்வளவு நகை பணத்தையும் திவ்யா கீழே கொண்டு போய்விட்டாள். புத்தக அலமாரியில் புத்தகங்களும், ஏட்டுக்கட்டும் மட்டும் இருந்தது.

நடுநாயகமாக மரத்தேரில் அந்த ஸ்ரீயந்த்ரம், சில பூக்கள் கிடந்தன. கொஞ்சம் போல பால் சிந்தியிருந்தது. பூ அப்போது பறித்தது போல இருந்தது.

தேவநாதனுக்கு அதைப் பார்க்கவும் கை, காலெல்லாம் உதறலெடுக்க ஆரம்பித்துவிட்டது.

யாரோ வந்து வழிபாடு செய்துவிட்டு போயிருக்கிறார்கள். யாராக இருக்கும்? வேறு வழியாக அங்கே வந்துபோக ஏதாவது வழி இருக்கிறதா? சுற்றிச்சுற்றி

வந்து பார்த்தான். ஒரு வழியும் இருப்பதாகத் தெரிய வில்லை.

குழப்பத்தோடு கீழே இறங்கி வந்தான். திவ்யாவிடம் சொன்னான். அவள் முகத்திலும் ஆச்சர்ய அதிர்ச்சி.

சற்று தீவிரமாக சிந்தித்தவள் இறுதியாக ஒரு முடிவுக்கு வந்து விட்டவள் போல வாயைத் திறந்தாள்.

"இனி இந்த மாளிகை நமக்கு சரிப்படாதுங்க... சேலத்துல அந்த பால் பண்ணையை வாங்கிட்டு பேசாம அங்கேயே போய்டுவோம். இது கொஞ்ச நாள் பூட்டியே கிடக்கட்டும். அப்புறமா இதை விக்கிறது பத்தி முடிவு செய்யலாம்" என்றவள் வேகமாக தொலைபேசியை நெருங்கினாள். விபத்தில் இறந்துவிட்ட அந்த சுகுமாரின் மனைவிக்குதான் போன் செய்தாள்.

"லோனுக்கு எல்லா ஏற்பாடும் செய்துட்டோம். இருந்த நகையை எல்லாம் பல இடங்கள்ல அடகுல வெச்சு ஒரு இருபது லட்சம் வரை புரட்டியிருக்கோம். ஒரே வாரத்துல முழுப்பணத்தோட உங்களைப் பார்க்கறோம். நீங்களும் பிராப்பர்டி டீடெய்ல்ஸ் பேப்பர்சோட ரெடியா யிடுங்க" என்று படுவேகமாக அவளுக்கும் உத்தரவிட்டு விட்டு அவன் பக்கம் திரும்பினாள்.

அவனோ கசங்கிப் போயிருந்தான். "இன்னும் என்ன தயக்கம்... எல்லாம் நல்லபடியா நடக்குமோ நடக்கா தோன்னு பயமா இருக்குதா?"

"ஆமாம் திவ்யா.. நான் ரொம்ப வேகமா போறே னோன்னு தோணுது.."

"இதைத்தான் மிடில்கிளாஸ் பயம்கறது. சந்தர்ப்பத் தைப் பயன்படுத்திக்கறீங்கன்னு நினையுங்க. அவ்வளவு தான்..."

"இல்ல... திவ்யா... அடிப்படையே இல்லாம வெறும் காத்துல நான் கயிறு கட்டி அதுல பொன்னூஞ்சலும் ஆட ஆசைப்படறேன்"



"போதும்... வெண்ணை திரண்டு வரும்போது தாழி உடைஞ்ச கதையாயிடப்போகுது. வாய மூடுங்க. இந்த வீட்ல நாம ஒரு வாரம்தான் இருக்கப் போறோம். ஞாப கத்துல வெச்சுக்குங்க. அப்புறமா இங்க யார் சிரிச்சாலும் சரி, அழுதாலும் சரி... கவலையில்லை."

"அதுசரி... மேல இருந்த அவ்வளவு நகைகளையுமா நீ பேங்க்ல வெச்சுருக்கே..."

"என்ன... சந்தேகம் வந்துடுச்சாக்கும்...? ஒரு முன்னூறு பவுனை எனக்குன்னு எடுத்து வெச்சுகிட்டுதான் அதையெல்லாம் அடகு வெச்சேன். பேங்க்ல என்னென்ன கேள்வி கேட்டாங்க தெரியுமா? ஜமீன் பரம்பரை அப்படி இப்படின்னு சொல்லி சமாளிச்சேன்"

-திவ்யா படபடவென்று பேசியவிதம் அவள் காட்டிய மதர்ப்பும் அப்போதே அவள் ஒரு தொழிலதிபர் ஆகிவிட்டதைப் போலத்தான் இருந்தது.

❖ ❖ ❖

**ஆ**ஸ்பத்திரியில் பிரகாஷ் அருகே நின்று கொண்டு ஆரஞ்சின் தோலை உரித்துக் கொண்டிருந்தாள் லஷ்மி. உள்ளே நுழைந்து கொண்டிருந்தனர் அந்த கோயில் குழுவினர்!

அவர்கள் கைகளில் பெரிதாக ஒரு பிரசாதக் கூடை!

## 30

**பத்து வித வாயுக்கள் நம் உடலுக்குள் இத யத்தில் பிரதானமாகவும், நாடிகளில் அப்பிரதான மாகவும் இருந்து செயல்படுவதைப் பார்த்தோம்.**

**உடம்பின் இயக்கத்துக்கும் துடிப்புக்கும் பிரதான காரணமே இந்த சுவாச முறையும், நாடித் துடிப்பும் தான்.**

உயிர் பிரிவது என்பது மொத்த நாடியும் அடங்குவது என்பதன் சுருக்கம். இந்த நாடிகள், வாயுக்களைப் பற்றி எல்லாம் புத்தியாலும் அதற்கும் மேலான ஞானத்தாலும் புரிந்து கொள்ளுதல் மிக முக்கியம்.

அதில்தான் மனிதன் மனிதனாகப் பிறந்ததன் காரணம் விளங்குவது இருக்கிறது. இதைப் புரிந்து கொண்டு நாம் நம்மையறிய நமது பட்டறிவால் மட்டும் இயலாது. அது எவ்வளவு கூர்மையானதாக இருந்தாலும் இயலாது.

'குரு' என்று ஒருவர் இந்த வேளையில்தான் துணை புரிய வேண்டும். அவர்தான் பத்துவித வாயு பற்றியும், அது துடிக்கும் விதம், அதன் குணம் பற்றியும் கூற முடியும்.

சுருக்கமாகச் சொன்னால் யோகத்தில், மூச்சுப் பயிற்சிக்குள் இருக்கிறது எல்லாமே...

இப்படி ஸ்ரீ சக்ரம் பற்றி அறிந்தவர்கள் யோகம் பயின்று, மூச்சுப் பயிற்சியிலும் ஈடுபடும்போது மிக திட்பமாகவும் நுட்பமாகவும் ஸ்ரீயந்த்ரத்துக்கும் தன் உடம்பாகிய யந்த்ரத்துக்கும் பெரிய வேற்றுமை இல்லை என்பதை மிகச் சுலபமாக உணர்ந்து கொள்வார்கள்.

இதன் மூலம் 'உள்ளம் கோயில்; ஊனுடம்பு ஆலயம்' என்னும் திருமூலர் வாக்கு நிதர்சனம் ஆகிவிடுகிறது.

உடம்பு ஒரு ஆலயம் என்று உணர்ந்து கொண்ட பிறகு, அந்த உடம்பில் ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு பொருளுடன் ஒவ்வொரு செயல்பாட்டுடன் இருக்கிறது என்பதும் புரிந்து விட்டால் அதன்பின் என்ன செய்வோம்?

உபவாசம் இருந்து அதன் உள் ஒளியைக் கூட்டுவோம். உணவுப் பொருளால் வரும் சக்தி, உடம்பை ஒருபுறம் அழிக்கவும் செய்கிறது.



உபவாச சக்தியோ உடம்பைக் காக்கிறது. எனவே, உடம்பைக் காத்திடும் நிலைப்பாடும், அதற்காக ஆரோக்கியமாகத் திகழ்வதும் அவரிடம் ஆரம்பமாகி விடுகிறது.

இப்படிப்பட்டவர் உடம்பில் இருந்து ஒருவித வசீகரக் கதிர்வீச்சு வெளிப்படத் தொடங்குகிறது. அதற்கு 'தேஜஸ்' என்று பெயர்.

தேஜஸ் வந்துவிட்டால் மவுனம் வந்துவிடும். மவுனம் வந்து விட்டால் பார்வைக்கு கூடுதல் ஒளி வரும். இப்படிப்பட்டவர்கள் ஒருவரைத் தீண்டினாலே போதும்... தீண்டப்பட்டவர்களுக்கு மிகப் பரவச உணர்வு ஏற்படும்.

லஷ்மிக்கு அந்தப் பிரசாதத்தைப் பார்த்தவுடன் கடவுளையே பார்த்தது போல் இருந்தது.

"இந்தாங்கம்மா... லட்ச ரூபாயைக் கொடுத்த உங்களுக்குப் பூமி பூஜை போட்டதோட முதல் பிரசாதம் இது. நேர்ல கொடுத்து நன்றி சொல்லிட்டுப் போக வந்தோம்" என்றனர் அந்த கோயில் கட்டும் குழுவினர். மகிழ்ச்சியுடன் மறுப்பேதும் சொல்லாமல் வாங்கிக் கொண்டாள் லஷ்மி.

அதில் இருந்து குங்குமப் பிரசாதத்தை எடுத்து முதல் காரியமாக பிரகாஷின் நெற்றியில் வைத்தாள். அவனுக்கும் மின்சாரம் பாய்ந்த மாதிரி இருந்தது.

"டாக்டர் சாருக்கு கொடுத்திட்டீங்களா?" -லஷ்மி அவர்களிடம் கேட்டதற்கு...

"அதெல்லாம் கொடுக்காம இருப்போமா?" என்றனர். அப்படியே ஒரு இன்விடேஷனை எடுத்து அவளிடம் கொடுத்தனர்.

"என்ன இது?"

"கோயில் வளர்ச்சிக்காகவும் ஊரோட நன்மைக்காகவும் சண்டி ஹோமம் பண்ணப் போறோம். இதை மதுரையில

இருக்கிற சச்சிதானந்த சாமிதான் நடத்தித் தர இருக்கார். இப்ப அவர் காசியில இருக்கார். நேத்து அவரே போன் பண்ணி தன் சம்மதத்தைச் சொன்னார். நேத்தே அவர் காசியை விட்டுப் புறப்பட்டுட்டார்..." -என்று பணிவாகப் பேசியவர்கள்...

"ஹோமத்தின்போது நீங்க கட்டாயம் இருக்கணும்" என்றனர்.

அவர்கள் கொடுத்த இன்விடேஷனில் சச்சிதானந்த சாமியின் படம் பிரின்ட் செய்யப்பட்டிருந்தது. அதைப் பார்த்தவள், தீவிரமாக யோசிக்கத் தொடங்கி விட்டாள். பிரகாஷும் கவனித்தான்.

"என்ன லஷ்மி?"

"இந்த இன்விடேஷன்ல இருக்கற சாமியை நான் எங்கேயோ பாத்திருக்கேன்" என்றபடி அவனிடம் காண்பித்தாள். அடுத்தநொடி...

"உனக்கு இவ்வளவு ஞாபக மறதி ஆகாது" என்று சிரித்தான் பிரகாஷ்.

"என்னங்க சொல்றீங்க...?"

"பின்ன என்ன... இவரை நம்ம தேவநாதன் கல்யாணத் துல பாத்தோம். ஞாபகமில்லையா?"

"ஆங்... இப்ப ஞாபகம் வந்துடுச்சு. அவரேதான்..."

"பய இப்ப இவர் வீட்லதானே இருக்கான்"

"அப்படியா?"

"இதையெல்லாம் அவன் உன்கிட்ட சொல்லலை யாக்கும்?"

"எங்க... அண்ணன் பேப்பர்ல அந்த பைவ் ஸ்டார் பால் பண்ணைக்காரர் செத்துப் போனதைப் பாத்துட்டு அதைப் பத்திதான் பேசிட்டு இருந்தார்."

"இவன் எதுக்கு அந்த ஆளைப் பத்திப் பேசணும்?"



"உங்களை மாதிரி அவரும் நண்பராம்ல?"

"அப்படியா... எனக்குத் தெரிஞ்சு அப்படி யாரும் இருக்கற மாதிரி தெரியலியே.."

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. அண்ணன் அந்த வீட்டுக்குத் துக்கம் விசாரிக்க போகணும்னு சொல்லிக் கிட்டிருந்தார்..."

"என்ன லஷ்மி, என்னென்னமோ சொல்றே... தேவா எண்கிட்ட எதையுமே சொல்லலியே..."

"மறந்திருக்கலாம். அதைவிடுங்க. முதல்ல இந்த ஜூசைக் குடியுங்க..."

-லஷ்மி பிழிந்து வைத்திருந்த ஜூசை நீட்டினாள். பிரகாஷும் அவளை ஆசையாகப் பார்த்தபடியே குடிக்கத் தொடங்கினான்.

❖ ❖ ❖

பத்திரம் எழுதும் எழுத்தர் ஒருவர் நெற்றி நிறைய பட்டை, கழுத்திலும், ஒரு ருத்ராட்சக் கொட்டை சகிதப் சக்தி இல்லத்துக்குள் நுழைந்து திவ்யாவிடம் பேசிவிட்டு வெளியேறிக் கொண்டிருந்தார்.

அவர் முகத்தில் ஒரே சந்தோஷம்.

உள்ளே நுழைந்து கொண்டிருந்த தேவநாதன் அவரைப் பார்த்தபடியே திவ்யாவிடம் சென்றான்.

"திவ்யா யார் அது?"

"பத்திரம் எழுதறவர். இந்த வீட்டு பத்திரத்தை நாம தயார் பண்ணணும்ல?"

"எப்படி பண்ணப்போறே?"

"நமக்கு ஒரு வேலையும் இல்ல. விலை மட்டும்தான். அதைக் கொடுத்துட்டா எல்லா வேலையையும் முடிச்சு

ரிஜிஸ்டிரார் கையாலயே பத்திரத்தை நாம வாங்கிக்கலாம். அந்த விலையைத்தான் வாங்கிட்டு போறார்..."

"ஒண்ணும் பிரச்னை வந்துடாதே..."

"எப்படி வரும்... இல்ல எப்படி வரும்னு கேக்கறேன்"

"என்ன இருந்தாலும் ஒரிஜினல் பத்திரம் இல்லாத நிலைல இப்படி எல்லாம் செய்யறது தப்பு இல்லையா?"

"இதோ பாருங்க... இதுக்கு உரியவர் போய் சேர்ந்தாச்சு. அவருக்கோ வாரிசுன்னு யாரும் கிடையாது. அவரே பார்த்துதான் நம்மளை இங்கே குடி வெச்சிருக்கார். நாமளும் இந்தச் சொத்தை மதிச்சு பாதுகாக்கலைன்னா யார்தான் பண்ணுவா?"

"அதெல்லாம் சரி... இதை பாதுகாக்கறதுக்கும் அடமானம் வைக்கிறதுக்கும் வித்தியாசம் இருக்குல்ல...?"

"இன்னிக்குப் பெரிய பிசினஸ் மேக்னட்டுன்னு சொல்லிக்கிற எல்லாரும் இப்படி ஒரு சாமர்த்தியத்தை நிச்சயம் எப்பவாவது காட்டியிருப்பாங்க. வாழ்க்கைல இதெல்லாம் தவிர்க்க முடியாதவை. இன்னும் எவ்வளவு நாளைக்கு? ஒரு வருஷம்! அதுக்குள்ள அந்த டெய்ரி யூனிட்ல நல்ல லாபத்தைப் பாத்துடுவோமே..."

-அவள் முடித்த விதத்தில் ஆசையின் வருடல் இருந்தது. அது தேவநாதனைக் கட்டிப் போட்டது.

"அதுசரி... நீங்க வேலையை ரிசைன் பண்ணிட்டு வரச் சொன்னேனே லெட்டர் கொடுத்திட்டீங்களா?"

"அது வந்து திவ்யா..."

"என்ன கொடுக்கலையா?"

"ஆமாம். மேனேஜர் லீவு..."

"அவர் லீவுல போகுறதுக்கும் நீங்க எழுதிக் கொடுக்கறதுக்கும் என்ன சம்பந்தம்?"

"இல்ல... எனக்கும் கொஞ்சம் தயக்கமா இருந்துச்சு"



"என்ன தயக்கம்... இங்க வேலைல இருந்துகிட்டு அங்க எப்படி அந்த பால் பண்ணையை நிர்வாகம் பண்ணுவீங்க?"

"இல்ல... உங்க அப்பா இருக்கார் இல்லையா? அப்புறம் என் தங்கை வனிதா, ஜெயந்தி, என் அம்மா கூட சில பொறுப்புகளை நல்லாவே பார்த்துப்பாங்க..."

-அவன் அப்படிச் சொன்னதுதான் தாமதம், அவள் கண்களில் நெருப்புப் பொறி பறந்தது.

"என்ன திவ்யா... நான் சொல்றத நீயும் கொஞ்சம் நல்லா யோசிச்சு பாரேன்"

"நல்லா யோசிக்கறத பத்தி நீங்க என்கிட்ட சொல்றீங்களா?"

"...."

"நாளைக்கு அந்த யூனிட் நல்லா லாபம் சம்பாதிக்க ஆரம்பிக்கும்போது இவங்க எல்லாரும் வந்து என்னால தான் இவ்வளவு லாபம்னு உங்க முன்னால நிக்கறதுக்காகவா?"

"நீ என்ன சொல்ல வர்றே..."

"பால் பண்ணைங்கறது நமக்குதான் சொந்தமா இருக்கணும். இப்படி ஒரு பால் பண்ணையை நாம வாங்கி இருக்கோம்கறது கூட யாருக்கும் தெரியக்கூடாது..."

"திவ்யா என்ன இது? அது எப்படி அம்மா, தங்கச்சிங்களுக்கு தெரியாம போகும்?"

"உங்கம்மா, தங்கச்சிங்க மட்டுமல்ல எங்க அப்பா, அம்மாவுக்குக்கூட தெரியக் கூடாது. தெரியத் தேவையில்லை... நீங்க உங்க பழைய வேலையை விட்டுட்டு பால் பண்ணைல ஜெனரல் மேனேஜரா ப்ரமோஷன்ல போய் சேர்ந்துட்டீங்கன்னு மட்டும் சொன்னா போதும்..."

"ஏன் இப்படி மறைக்கணும்ங்கறே?"

"ஆமாம்... மறைச்சுத்தான் தீரணும். இல்லாட்டி கண்ணு வெச்சே எல்லாத்தையும் கெடுத்துடுவாங்க. அதுமட்டு மில்ல, நம்மகிட்ட நிறைய எதிர்பார்க்கவும் ஆரம்பிச்சிடு வாங்க..."

"சரி, எவ்வளவு நாளைக்கு இப்படிச் சமாளிக்க முடியும்னு நினைக்கிறே?"

"ரொம்ப சிம்பிள். 6 மாசம் அதிகபட்சம்! வனிதாவை உங்க மாமா பையனுக்கு கல்யாணம் பண்ணிக் கொடுத்து அமெரிக்காவுக்கு அவளை அனுப்பும்போது உங்கம்மா, தங்கச்சியையும் கூட அனுப்பிட வேண்டியதுதான்... என் அம்மா, அப்பாவை நான் பாத்துக்கறேன்.

அவங்க இங்க வர்றது உங்களுக்கு சுத்தமா பிடிக்க லைன்னு எங்கப்பாக்கிட்ட நான் சொன்னா போதும். அப்பா ரோஷக்காரர். திரும்பிக்கூட பார்க்க மாட்டார்..."

"திவ்யா இதெல்லாம் வேண்டாம். எல்லாருடைய கூட்டுறவுல இந்த பண்ணையை வாங்கி நடத்துவோம். என் வீட்ல யாரும் பொறாமைப்பட மாட்டாங்க... உன் அப்பா அம்மாவும் நல்லவங்கதான்..."

அவன் எவ்வளவு சொல்லியும் திவ்யா சமாதானமாக வில்லை.

"இன்னும் இரண்டு நாள்ல பேங்க் லோன் கிடைச் சுடும். அப்ப அதை வாங்கிட்டு ஒரு எம்.டி.யா நீங்க அந்த பைவ் ஸ்டார் டைரி யூனிட்டை வாங்கப் போறீங் களா? இல்லை சீனியர் கிளார்க் நான்... ஓசியில பணம் வந்தது. அருமை தெரியலை. அதான் இந்த யூனிட்டை ஒரு கிளார்க்காவே இருந்து வாங்கறேன்னு சொல்லப் போறீங்களா?"

"திவ்யா..."



"திவ்யாவாவது, கொய்யாவாவது... உங்க ஸ்டேட்டஸ் மாறாம, நீங்க அதை மாத்திக்காம எதைச் செய்தாலும் அது உருப்படாது. புரிஞ்சுக்குங்க..."

"இப்ப என்னை என்ன பண்ணச் சொல்றே..."

"இன்னிக்கே போய் முதல்ல ஒரு கார் வாங்கறோம். அந்தக் கார்லையே உங்க ஆபீசுக்கு போய் ராஜினாமா கொடுக்கறோம். அப்புறமா தாஜ் ஹோட்டலுக்கு போய் டின்னர் சாப்பிடறோம்."

"கார்லாம் வாங்கணுமா... அவசியமா?"

"ஒரு டெய்ரி யூனிட் முதலாளி பைக்லையும் ஸ்கூட்டர்லையும் போனா சிரிப்பாங்க..."

"இல்ல... இதுக்கே கடன் வாங்க வேண்டியிருக்கு. கார்னா... அதுக்கு எங்க போக?"

"55 லட்ச ரூபா லோனை அறுபது லட்சத்துக்கு மாத்தச் சொல்லிட்டேன். அதுலையே 5 லட்சம் இருக்கு. பைனான்ஸ்ல நமக்கெல்லாம் எவ்வளவுன்னாலும் தரு வாங்க. ஒரு குவாலிஸ் கார் இன்னிக்கு எல்லாம் சேர்த்தே ஏழு எட்டு லட்சம்தான் வருது... வாங்கிட்டா பாக்க நல்லா வும் இருக்கும். உங்க வீட்ல கேட்டா எங்க அப்பா, அம்மா வாங்கித் தந்ததா சொல்லுங்க... நான் எங்க அப்பா, அம்மாகிட்ட சொல்லிடறேன்."

"திவ்யா..."

"ஐய்யோ இன்னும் என்ன திவ்யா? நீங்க உருவத்துல தாங்க ஆம்பளை. மனசுல ரொம்ப பூஞ்சைங்க. எதுலை யும் துளிகூட தைரியமோ துணிச்சலோ இல்லை. அவன வன் கொலை கொள்ளை நடத்திட்டே எனக்கென்னன்னு இருக்காங்க. நீங்க நம்ம மடியில வந்து விழுந்ததையே வளப்படுத்திக்க அவ்வளவு தயங்கறீங்க..."

-அவளது வார்த்தைகள் சாட்டையாகி அவன் முதுகில் விழுந்தது.

"சரி... சரி... உடனே மூஞ்சியை தூக்கிக்காம என் கூட புறப்படுங்க..."

"எங்க?"

"கார் பார்க்கப் போறோம். நான் ரெண்டு நாளைக்கு முந்தியே அட்வான்ஸ் பணம் கொடுத்து எல்லா ஏற்பாட்டையும் செய்துட்டேன்"

-விட்டால் உலகையே என்ன விலை என்று திவ்யா கேட்பாள் போலத் தோன்றியது. பிரமித்துப்போன தேவ நாதனும் அரைமனதாக அவளுடன் கிளம்பினான்.

போன் செய்து ஒரு கால் டாக்சியை வரச் சொல்லி யிருந்தாள்.

டாக்சியும் டிராபிக்கில் ஒரு சிக்னல் அருகே சற்று தேங்கி நின்றது. அந்த சமயத்தில் பாதசாரிகள் காருக்கு முன்னே திபுதிபுவென்று கடந்து போனார்கள். அந்த கூட்டத்தில் சச்சிதானந்தமும் இருந்ததுதான் ஆச்சரியம்!

## 31

**சக்தியின் ஆதாரம் மூச்சுக் காற்றுதான்! இந்தக் காற்று நம்முள் புகத்தொடங்கியதில் இருந்துதான் இந்தப் பிரபஞ்சத்தில் நமது பஞ்சபூத சரீரத்துக்கான வாழ்க்கை உருவாகிறது.**

**ஏனைய நான்கு பூதங்கள் நமது சரீரத்தில் இருக்க, காற்றானது இந்த நான்கினுள் இயங்கித் துடிக்க வைக்கிறது. நமது சரீரத்தின் மனம்தான் ஆகாயம்.**

**இந்த மனதைக் கொண்டு உடம்புக்கும் பிரபஞ் சத்துக்குமான தொடர்பைப் புரிந்து கொள்ளும்போது மனமாகிய ஆகாயத்தில் ஒரு ஞானஒளி**



**ஏற்படுகிறது. புரிந்து கொள்ளத் துணை செய்யும் சாதனங்களில் ஸ்ரீயந்த்ரம் பிரதானம்.**

**உறுதியான ஒரு கோபுரத்தைக் கட்ட நினைப் பவர்கள் முதலில் உறுதியற்ற ஒரு சாரத்தைக் கட்டுவார்கள். அந்தச் சாரத்தில் நின்று கொண்டு கோபுரத்தைக் கட்டி முடிப்பார்கள். உறுதியான கோபுரம் உருவான பிறகு சாரம் விலக்கப்பட்டு விடும்.**

**அதேமாதிரி மனிதப் பிறப்பும் ஒரு சாரம் போன்றதுதான். சாரம் போன்ற இந்த உடம்பைக் கொண்டு ஸ்ரீயந்த்ரத்தை புரிந்து கொண்டும் தெரிந்தும் கொண்டும் நம்முள் ஞான விளக்கேற்றிக் கொள்ள வேண்டும்.**

**இந்த உடம்பு அழிந்து விடும். அதிகபட்சம் இதை இரு வட்டச் சுழற்சி ஆண்டுகளுக்கு (120 வருடங்கள்) நாம் பேண முடியும். அதற்கு மேல் ஸ்தூலமாகிய இதைப் பேண முடியாது. சூட்சமத்தை தான் பேணமுடியும். அந்த சூட்சமத்தை மோட்ச கதிக்குக் கொண்டு செல்ல துணை செய்வதுதான் ஸ்ரீயந்த்ரம்.**

**இரு வட்டச் சுழற்சி ஆண்டு இந்தப் பூவுலகில் உயிர் வாழ்ந்து காட்டியவர் ஸ்ரீராமானுஜர். ஒரு வட்டச் சுழற்சி என்பது அறுபது ஆண்டு காலம். நமது தமிழ் ஆண்டுகளும் இதைக் கருத்தில் கொண்டே அறுபதாகப் பிரிக்கப்பட்டு பெயரிடப் பட்டன.**

**ஒருவருக்கு அறுபதாவது திருமணம் நடக்கும் போது அவர் பிறந்த ஆண்டே திரும்ப வந்து அந்த ஆண்டில் வாழ்ந்த வண்ணம் இருந்தால் அது ஒரு முழு சுற்றாகும்.**

**அறுபது ஆண்டுகள் ஒருவர் இந்த உடலில் வாழ்வது என்பது பெரிதல்ல. மனைவி, மக்கள் என்கிற செல்வங்களுடன் அவர் காய், கனிவிட்ட**

ஒரு மரமாகத் திகழ்வது என்பதுதான் பெரிய விஷயம்.

சக்தி மிகுந்திருந்தாலே இந்த அறுபது நிகழும். அறுபதும் கிட்டும்.

தேவநாதனுக்கு ஒரு வினாடி சர்வாங்கமும் நடுங்கி விட்டது. ஆனால், எதிரில் மின்னலாய் மறைந்து விட்டார் சச்சிதானந்த சாமி.

அவர்தானா இல்லை, வேறு யாராவதா என்றும் ஒரு சிறு குழப்பம் அவனுக்குள். இப்படிக்கூட நடக்குமா என்ற தயக்கம். தோன்றி மறைந்தது சச்சிதானந்த சாமி தான் என்றும் உள்மனம் அடித்துச் சொன்னது. பொசுக் கென்று வியர்த்து முகமெல்லாம் ஸ்ப்ரே செய்தது போல ஆகிவிட்டது.

"என்ன ஆச்சு?" -திவ்யா கவனித்து விட்டுக் கேட்டாள்.

"திவ்யா... அந்தச் சாமி... அந்தச் சாமி"

"எந்தச் சாமி?"

"என்ன எந்த சாமி... நீ இப்பப் பாக்கல? இப்ப... இப்ப... இந்தக் கார் முன்னால கிராஸ் பண்ணிப் போனாரே... அவரேதான்"

"நீங்க யாரைச் சொல்றீங்க...? என்னாச்சு உங்களுக்கு?"

"நான் யாரைச் சொல்வேன். நம்ம சச்சிதானந்த சாமியைத்தான். நீ பாக்கலியா"

"உளறாதீங்க..." -திவ்யா அலட்சியமாக திரும்பிக் கொண்டாள்.

அதற்குள் காரும் சிக்னல் கிடைத்துக் கிளம்பியது.

தேவநாதன் பரபரப்பாக வெளியே பார்த்தான். கூட்டத்தில் அவர் தெரியவில்லை.



"என்ன பாக்கறீங்க...? செத்துப்போனவங்க எப்படிங்க வர முடியும்? அப்படியே ஆவியா வர்றதா இருந்தாலும் ராத்திரியில நாம தனியா இருக்கும் போதுதான் வருவாங்க. இப்படிப் பட்டப்பகல்ல நடுரோட்ல எல்லாம் வரமாட்டாங்க...

-திவ்யா கொஞ்சம் கேலியும் பேசினாள். தேவநாதனால் அவ்வளவு சுலபத்தில் சமாதானம் ஆகமுடியவில்லை.

❖ ❖ ❖

நியான் விளக்குகளில் ஜொலித்துக் கொண்டிருந்தது அந்தக் கார் ஷோரூம். பரவசமாகப் பார்த்துக் கொண்டே உள்ளே நுழைந்தாள் திவ்யா.

எட்டாயிரம் ரூபாய் மைசூர் சில்க் புடவை கட்டியிருந் தாள். ரவிக்கையைத் தைத்து அணிந்திருந்த விதம் யாரை யும் திரும்பிப் பார்க்க வைக்கும். அந்தளவுக்கு அந்த ஆடைகள் அவளைத் தூக்கலாகக் காட்டிக் கொண்டிருந் தன.

இப்போதெல்லாம் ஷாம்பூ போட்டுக் குளித்து விட்டு தலையை வாராமல் அப்படியே விட்டு வருவதுதான் பேஷன். திவ்யாவும் அப்படித்தான் விட்டிருந்தாள்.

ரிசப்ஷனில் அவளைப் போலவே ஒரு பெண்! அவளும் தலையை வாரிக் கட்டியிருக்கவில்லை. அது பிரண்டு பிரண்டு முன்னே விழும் போதெல்லாம் ஒதுக்கி ஒதுக்கி விட்டுக் கொண்டே திவ்யாவை வரவேற்றாள். இருவருக்கும் தாய்மொழி தமிழ்தான். இருந்தாலும் அவள் ஆங்கிலம் பேச, திவ்யாவும் ஆங்கிலத்திலேயே பதில் சொன்னாள்.

தேவநாதன் திவ்யாவின் எந்தச் செயலையும் ரசித்த மாதிரி தெரியவில்லை. அவன் மனசெல்லாம் சாமிதான் இருந்தார். சாமி நிஜமாலுமே திரும்பி வந்து நின்றால்...?

'அடப்பாவி என் சொத்து அவ்வளவையும் உன் சொத்தாக ஆக்கிக் கொண்டு விட்டாயே...' என்றுதான் கேட்பார். என்னதான் சமாதானம் கூறினாலும் அதெல்லாம் நிற்குமா...?

'செய்து கொடுத்த சத்தியத்தை மீறி விட்டாயே?' என்று அவர் கேட்டு நின்றால்...? நினைக்கும்போதே தேவநாதனுக்கு நெஞ்சு நடுங்கியது. இன்னொரு புறத்திலோ ஒரு டை கட்டிய மனிதன். ஷோரூமில் நிற்கும் கார்களை எல்லாம் திவ்யாவுக்கு காட்டிக் கொண்டிருந்தான். நடுநடுவே அவளிடம் சில கலர் கலரான பொய்கள்.

"நாங்க நேத்துவரை ஒரு செவ்ராலெட் வெச்சிருந்தோம்... அதை மாத்த மனசே வரலை. அவ்வளவு ராசி. டிரைவர் திடீர்னு ஆக்சிடெண்ட் பண்ணி அதை அப்பளமாக்கிட்டான். இல்லேன்னா நான் இங்க குவாலிஸ், ஓபல் ஆஸ்டரான்னு கார் பார்க்கவே வரமாட்டேன்..."

"அப்கோர்ஸ் மேடம்... ஆமா, உங்க வீட்டுக்காரர் தானே சார்..."

"எக்ஸாக்ட்லி"

"அவர்கிட்ட ஒரு இன்ட்ரஸ்ட்டே தெரியல? நீங்க கார் வாங்கறதுல சாருக்குப் புடிக்கலியா?"

"சேச்சே... அப்படியில்ல. அவர் கொஞ்சம் ரிசர்வ் டைப். இன்பாக்ட் பென்ஸ் வாங்கணும்கறது அவர் விருப்பம். நாப்பது லட்சத்தை அதுல போட்றதுக்கு பிசினஸ்ல போடலாமேங்கறது என்னோட தாட்"

"குட் தாட்.. குட் தாட்..."

அவர்களிடம் இப்படி மின்னலடிக்கும் வெண்மையில் அலட்டல்கள். தேவநாதனுக்கோ நெருப்பின் மேல் நிற்கிற மாதிரி இருந்தது. திவ்யா செருமினாள்.



"என்னங்க... இந்தக் காரைப் பாருங்க. இதுதான் எனக்கு புடிச்சிருக்கு... வாங்கட்டுமா? ஏன் இப்படி குழம்பித் தவிக்கறீங்க?" என்றாள்.

அவன் பார்த்தான். அவ்வளவுதான் அவனுக்கோ டிரைவிங்கே தெரியாது... இதை எல்லாம் வாங்கி என்ன செய்யப் போகிறோம் என்றுதான் தோன்றியது.

சம்பிரதாயங்களை முடித்துவிட்டு இருவரும் வெளியில வந்தனர். வீடு திரும்பும்போதும் தேவநாதனிடம் எந்தப் பேச்சு மூச்சும் இல்லை.

"இப்படி உர்ர்ன்னு ஊமைக் கோட்டானா நீங்க இருக்கறதுக்கு நீங்க செத்துப் போயிடலாம்..."

-திவ்யா எரிச்சலுடன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு அதிர்ந்தான் தேவநாதன்.

"பின்ன என்ன? கார் வாங்கறதுங்கறது ஒரு மனுஷனோட வாழ்க்கையில நடக்கப் போற எவ்வளவு முக்கியமான விஷயம். இப்படியா முகத்தை வெச்சுப்பீங்க..."

"திவ்யா, இதெல்லாம் நான் சம்பாதிச்சது இல்ல..."

"உடனே உங்க ஒப்பாரியை ஆரம்பிச்சிடாதீங்க. நீங்க ஒரு கோழை. அவனவன் என்னவெல்லாம் பண்றான் தெரியுமா?"

அருகில் ஒரு வார இதழ். அதில் நீதிபதி ஒருவரே லஞ்சம் வாங்கியிருந்த தகவல் ஏறியிருந்தது. கொஞ்சம் பணத்துக்காக அதிமுக்கியப் பிரமுகர்களுக்கு கண்டபடி வாரன்ட் பிறப்பித்திருந்தார். அதேபோல, கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்டவனைக் கொலை செய்த மற்றொரு புள்ளி பற்றிய செய்தியும்!

"பாத்தீங்களா... நாட்டோட யோக்யதைய. இப்ப இதெல்லாம் ரொம்பச் சாதாரணமா ஆயிடுச்சு"

அவனுக்குள்ளும் அது வேலை செய்ய ஆரம்பித்தது.

"சாரி திவ்யா... நான் வளர்ந்த விதம் என்னை ரொம்பவே குழப்பிடிச்சு. இப்பதான் மனசு கொஞ்சும் தெம்பாகியிருக்கு"

"அப்படிச் சொல்லுங்க..." -அவள் தட்டிக் கொடுத்தாள். வீட்டு வாசலில் கார் நிற்க உள்ளே நுழையும்போது எதிரில் கல்யாணி, தங்கைகள் வனிதா, ஜெயந்தி.

சுருக்கென்றுதான் இருந்தது திவ்யாவுக்கு.

"வந்துட்டீங்களா?" என்றபடியே அவர்களை நோக்கி பாசமாகச் சென்றாள்.

கல்யாணி முகத்தில் ஒரு இனம் புரியாத சோகம்.

"அம்மா... ஏம்மா ஒரு மாதிரி இருக்கே?"

"ஒண்ணுமில்ல, பயணக் களைப்பு"

"உள்ள போலாம் வாங்க. ஆமா, திருப்பதியில நல்ல சாமி தரிசனமா?"

"கூட்டமே இல்லண்ணி பரீட்சை நேரமில்லையா, மூணு மணி நேரத்துல சாமி தரிசனம் கிடைச்சிடிச்சு" பூட்டிய கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தனர். திவ்யா கலகலப்பாக அவர்களிடம் எதையும் கேட்கவில்லை.

இவ்வளவு சீக்கிரம் திரும்பிவிட்டார்களே என்றுதான் தோன்றியது. இருந்தும் சமாளிக்கும் விதமாக அவளும் வாயைத் திறந்தாள். அது தேவநாதன், பால் பண்ணை, புதிய கார் வாங்குதல் என்று சகலத்துக்கும் ஒரு பிட்டு போடுவது போல இருந்தது.

"ஆங்... அத்தை, உங்களுக்கு ஒரு குட் நியூஸ். இனிமே நாம இங்க இந்த வீட்லயும் சரி, மதுரைலையும் சரி இருக்கப் போறதில்ல. இவருக்கு சேலத்துல ஒரு பால் பண்ணைல ஜெனரல் மேனேஜரா வேலை கிடைச்சிருக்கு. அவங்களே ஒரு குவாலிஸ் கார் தந்து பெருசா வீடும் பாத்துக்கச் சொல்லிட்டாங்க..."



-திவ்யா போட்ட போடில் தேவநாதனே திக்கு முக்காடி விட்டான்.

"அப்படியாம்மா... ஏண்டா, எப்படா நீ அந்தப் பால் பண்ணைக்கு எனக்குத் தெரியாம அப்ளிகேஷன் போட்ட...?"

-கல்யாணி அவன் பக்கம் திரும்பினாள்.

"அது வந்தும்மா..." சமாளிக்க முனைந்தவனை பார்வையாலேயே தடுத்தவள்...

"நீங்க உங்க திருவாயைக் கொஞ்சம் மூடுங்க. நானே சொல்றேன்" என்றபடி திரும்பவும் புளுகத் தயாரானாள்.

"அது வந்து அத்தை... இது அப்ளிகேஷன் போட்டு வாங்கின வேலை இல்லை. தானா தேடி வந்தது. நேரம் வந்தா எல்லாம் தானே தேடிக்கிட்டு வரும்னு சொல்வாங்களே... அதுமாதிரி. அந்தப் பால் பண்ணைக்காரர் யாரோ இல்ல. இவரோட கிளாஸ் மேட்தான்.."

"யாருண்ணே அது... உன் கிளாஸ் மேட் ஒருத்தர் பெரிய பொசிஷன்லையா?" -ஜெயந்தியிடம் சந்தேகத் துளிர்.

"நம்ம சுகுமார்மா, அதாம்மா ஆஸ்ரமத்துல இருந்து வருவானே..." தேவநாதன் உடனே எடுத்துக் கொடுத்தான். கல்யாணி முகம் உடனே பிரகாசமானது.

"என்னமோப்பா... திருப்பதி போய்ட்டு வந்தாலே ஒரு திருப்பம் நேரும்னு சொல்வாங்க. அது சரியாத்தான் இருக்கு" -கல்யாணியிடம் ஒரு சந்தோஷமான அங்கலாய்ப்பு. குறுக்கில் வனிதா கத்தரித்தாள்.

"தேவா... இன்னொரு முக்கியமான விஷயம்"

"என்ன வனிதா?"

"நீ நம்பினாலும் சரி, நம்பாட்டாலும் சரி... நான் இதோ இந்த போட்டோவுல இருக்காரே சாமி... இவரைத் திருப்பதில பார்த்தேன்..."

அடுத்த நொடி பகீரென்று தேவநாதனுக்கு. அவளை அதிர்ச்சியுடன் பார்த்தான்.

"இவ ஒருத்திடி... இந்தச் சாமியார் மாதிரியேன்னு சொல். நம்பலாம். இவரைத்தான் முதலை விழுங்கிடிச்சே..." கல்யாணி அதற்கு சொன்ன பதிலை வனிதா வேகமாக மறுத்தாள்.

"இல்லம்மா... எனக்கு மாதிரிக்கும் அசலுக்கும் நல்லா வித்தியாசம் தெரியும். அவரும் என்னைப் பார்த்துச் சிரிச்சார். கையை உயர்த்தி ஆசீர்வாதம்லாம் பண்ணினார். நான் அப்படியே பிரமை பிடிச்சு நின்னுட்டேன். சுதாரிச்சு கிட்டுப் பாத்தா ஆளைக் காணோம்..."

வனிதாவின் விளக்கம் தேவநாதனை வெகுவேகமாக திவ்யாவை நோக்கித் திருப்பியது. அவளோ...

"நான் உங்க அம்மா கட்சி... வனிதா பாத்த ஆளைத் தான் நீங்க இங்கயும் பாத்ருக்கணும்" என்றபோது மாடியில் மணியடிக்கும் சத்தம் கேட்டது.

எல்லார் பார்வையும் ஒரு சேர மாடி நோக்கித் திரும்பியது. மணி சத்தமும் சட்டென்று நின்று குபுகுபுவென்று சாம்பிராணி புகை வாசத்தோடு வெளிப்பட்டது.

"யாருடா மேல பூஜை செய்யறது?"

"தெரியலியே... பூட்டிய வீட்டுக்குள்ள இப்பதானே நுழையறோம்"

"ஆச்சரியமா இருக்கே... போய்ப் பாரு"

கல்யாணி தள்ளிவிட, பயத்துடன் தேவநாதன் மாடிப்படியில் காலை வைத்தான்.

"ஒரு நிமிஷம்" கல்யாணியே அவனைச் சட்டென்று தடுத்தவள்-

"வாங்க எல்லாரும் சேர்ந்து போய் பார்ப்போம்" என்று அழைத்தாள். ஒரு சேர அவ்வளவு பேரும் மாடிப் படியில் காலை வைத்தனர்.



திவ்யமாக தசாங்க வாசம் வேறு அவர்களை வரவேற்றது. மெல்லிய கால் சலங்கை அதிரும் சத்தம் வேறு...

## 32

**உலகில் எவ்வளவோ உயிர்கள். ஆனால் தன்னைப் பற்றிய பட்டறிவோ உலகைப் பற்றிய பட்டறிவோ எந்த அளவிற்கு அந்த உயிர்களிடம் இருக்கிறது என்பது கேள்விக்குறி.**

**மனிதன் ஒருவனே இம்மட்டில் தன்னையறிந்து உலகையும் அறிய முயன்று பின் அதனையும் கடந்து பிரபஞ்சம் முழுவதையும் துழாவி எங்கே எது இருக்கிறது என்பதை எல்லாம் கண்டறிந்தவன்.**

**இது ஒரு வகையில் கண்ணாடி முன் நின்று நாம் நம்மை கண்டு கொள்வதைப் போன்ற ஒரு செயலே.**

**திடக்கண்ணாடி உருவத்தை காட்டுகிறது. மனக் கண்ணாடி உலகத்தை காட்டுகிறது.**

**மனிதர்களின் பட்டறிவில் ஆன்மீக ஞானம் என்பது மட்டும் அறிவுக்கெல்லாம் அறிவு எனலாம்.**

**அதிலும் நமது சனாதன இந்து மதத்தில் உள்ள ஆராய்ச்சித் தெளிவு மிக அற்புதமான ஒன்றாகும்.**

**பொதுவில் சிரித்துப் பேசி நடந்து திரியும் ஒரு உயிராகிய நமது சக்தி இன்னொரு பெரிய சக்தி ஒன்றின் ஒரு துளி என்றால் அது மிகையே இல்லை.**

**அந்த பெரிய சக்தி எது என்பதை அறிய துணை செய்யும் நமது ஆன்மீக சிந்தனைகளிலும் பலவித வழிகாட்டுதல்கள் உள்ளன.**

**த்வைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் என்கிற மார்க்கங்கள்... சைவம், வைணவம், கவுமாரம், காணாபத்யம், சாக்தம் என்றும் பல்வேறு**

வழிமுறைகள். இவை எதனையும் தழுவமறுத்து தன்னிச்சையாக ஞானம் தேடி அலைந்த புத்தர் போன்றவர்களும் இம்மண்ணில் உண்டு.

தேடலிலும், புரிதலிலும் வாழ்வின் பெரும் பாலான நாட்களை செலவிட்டு பின் மெல்ல ஞானத் தில் கடைத்தேறுதல் என்பது போன நூற்றாண்டின் நிலை.

இன்று அதற்கு அவசியங்களே இல்லை. அனைத்து விதமான சித்தாந்தங்களும் ஆன்மீக ஞான விளக்கங்களும் போதனைகளும் நம்முன் விரிந்து கிடக்கின்றன. கூர்ந்து ஒவ்வொன்றாக வாசித்து அறிந்து பின் கொள்வன கொண்டு தள்ள வேண்டியதைத் தள்ளுவதே நமது செயலாக இருக்க வேண்டும்.

அம்மட்டில் சாக்த வழிமுறையில் சக்தி பற்றி அறிய ஸ்ரீயந்த்ரம் புரியும் துணையும் அதன் பேரருளும் எப்படிப்பட்டது தெரியுமா?

ஒரு கூட்டமாய் மொத்த குடும்பமே மாடிப்படியில் காலை வைத்தது. அப்படி கூட்டமாக செல்வதுகூட திவ்யாவுக்கு மிகவும் சவுகர்யமாகத்தான் இருந்தது. இன்று இந்த மாடியின் மர்மத்துக்கு ஒரு விடை கண்டு பிடித்தே தீர வேண்டும் என்று ஒரு அழுத்தமான தீர்மானமும் திவ்யாவிடம் இருந்தது.

இளையவள் ஜெயந்தியிடம் மட்டும் மெல்லிசாக ஒரு பயம். படிகளில் ஏறி மேலே செல்லும் போது-

"எம்மா காத்து கறுப்புன்னு அடிக்கடி சொல்வியே... அப்படி ஏதாவது மேல இருக்குமோ" என்று கேட்டு வைத்தாள். பதிலுக்கு கல்யாணி ஒரு முறை முறைத்தாள். தேவநாதன் சற்று முன்பாக தாவித்தாவி ஏறினான். மேலே செல்லச்செல்ல அற்புதமான தசாங்க வாசமும், பூஜை மலர்களின் வாசமும் அவனைக் கவ்வி இழுத்தது.



கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்து பார்த்த போது நேர் எதிரே அந்த மரத்தேரில் இருக்கும் ஸ்ரீயந்த்ரம் தான் ஒரு விக்ரகம் மாதிரி ஆராதிக்கப்பட்டிருந்தது. அதன் மேல் மாலை சாற்றப்பட்டு உதிரிப் பூக்களால் அது அர்ச்சிக்கப்பட்டிருந்தது. முன்னால் ஒரு மரத்தாங்கி. அதில் லலிதா சஹஸ்ர நாம ஸ்தோத்ர பாராயண புத்தகம் விரிக்கப்பட்ட நிலையில் கிடந்தது. ஒரு பக்கம் பஞ்ச திரிவிளக்கு எரிய, மறுபுறத்தில் தசாங்கம் கமழ யாரோ ஆற அமர அமர்ந்து பூஜித்திருக்கிறார்கள் என்பது துல்லியமாக விளங்கியது.

எல்லாருக்குமே அந்தக் காட்சி தூக்கிவாரிப்போட்டது.

"ஸ்ரீயந்த்ரத்துக்கு யாரோ பூஜை செய்துருக்காங்க" என்றாள் கல்யாணி.

"ஆமாம்மா... பூட்டின வீட்டுக்குள்ள யார் வந்திருக்க முடியும். எப்படி வந்திருக்க முடியும்?"

தேவநாதன் தலையை உதறிக் கொண்டான். மேலே உள்ள அறைகளை எல்லாம் சென்று துருவித் துருவி பார்த்தான். சந்தேகத்துடன் தரையும் பார்த்தான். பிறகு கூரையைப் பார்த்தான். அவன் பார்த்த நொடி கூரைச் சரிவில் ஒரு இடுக்கில் சர்பம் ஒன்றின் முழு உடலும் சென்றுவிட வால் பாகம் மட்டும் காட்சியளித்தபடி இருந்தது. அதுவும் அவன் முழுவதுமாக பார்ப்பதற்குள் மின்னல் போல மறைந்து விட்டது. உடம்பு நடுங்கி அந்த பாம்பு வடிவில் யாராவதுதான் வந்த பூஜித்து விட்டுப் போகிறார்களோ என்று எண்ணிப்பார்த்தான்.

"என்னப்பா இது.. யாரையுமே காணலை. என்னடா நடக்குது இங்க?"

கல்யாணி பீதியுடன் வாய்திறந்தாள்.

"இங்கே என்னவோ நடக்குது. காரணமில்லாம அந்த சச்சிதானந்த கிழம் இந்த வீட்டை நம்மகிட்ட ஒப்படைச் சுட்டு போகலை. இங்க ஏதோ மாயம் இருக்கவும்தான்

நம்ம தலைல கட்டிட்டு காசிக்கு போய் அந்த கிழம் ஒரேயடியா போயும் சேர்ந்துடிச்சு" என்று படபடத்தாள் திவ்யா.

கல்யாணிக்கு அதை ஒப்புக் கொள்ளவும் மனசில்லை. ஒப்புக் கொள்ளாமல் இருக்கவும் முடியவில்லை.

"சரி... எதுவா இருந்தாலும் கீழ போய் பேசுவோம்" என்று ஒரு சேர இறங்கும்போது திவ்யாவின் அப்பா ராமநாதனும் அம்மா செண்பகமும் வீட்டிற்குள் நுழைந்து கொண்டிருந்தார்கள்.

"வாங்க மாமா..." என்று தேவநாதனும் ஓடிப் போய் வரவேற்றான்.

"எங்கப்பா இந்தப் பக்கம்?" -திவ்யாதான் கேட்டாள்.

அவள் கேட்ட தொனியில் 'உங்களை நான் இப்போது எதிர்பார்க்கவில்லை' என்கிற மாதிரியாக ஒரு பொருள்! அதே சமயம் அவள் என்னவோ வெகு காலமாக பிரிந்து வாழ்ந்து கொண்டிருப்பவள் போலவும் அப்பாவும் அம்மாவும் எப்போதாவதுதான் வந்து பார்க்கிறார்கள் என்கிற மாதிரியும் ஒரு உள்ளடக்கம்.

"என்னங்க... அப்பா அம்மாகிட்ட நாம சேலம் போற விஷயத்தை நீங்களே உங்க வாயால சொல்லிடுங்க..." என்றாள்.

அதைக்கேட்ட ராமநாதன் திகைப்புடன் பார்த்தார். செண்பகமும் அதிர்ந்தாள்.

"என்ன மாப்ள சொல்றா இவ.." ராமநாதன் கேட்க தேவநாதன் அவரை தனியே தள்ளிக்கொண்டு வெளியே சென்றான்.

"சாரி மாமா... உங்ககிட்டே எப்படி சொல்றதுன்னு தெரியல.." என்றவாறு விழுங்கினான்.

"என்னன்னு முதல்ல சொல்லுங்க. இந்த வீடும் ஊரும் உங்களுக்கு ஒத்து வரலையா?"



"கொஞ்சம் அப்படித்தான் சொல்லணும். இப்பகூட மாடில யாரோ பூஜை பண்ற சப்தம் கேட்டுச்சு. போய் பார்த்தா யாரையும் காணோம். அங்கங்க பாம்புங்க வேற தெரியுது. நிம்மதியாவே இருக்க முடியல..."

"வீடுதான் பிரச்னைன்னா அதுக்கு காரணம் நீங்கதான். சாமிக்கு செய்து கொடுத்த சத்தியத்தை நீங்க மீறியிருக்கக் கூடாது. போதாததுக்கு சொல்லுல நிக்கறதா காசியில வேற சங்கல்பம் பண்ணிகிட்டீங்க... ஒரு பூட்டுக்கு இரண்டு பூட்டு..."

"போதும் மாமா... பழசு எதையும் இப்ப பேசாதீங்க. எனக்கு சேலத்துலயே ஒரு நல்ல வேலை கிடைச்சிருக்கு. கார் பங்களான்னு அவங்களே தராங்க..."

"இப்படி என் மக உங்களை சொல்லச் சொன்னாளா?" -ராமநாதன் ஷணத்தில் திருப்பவும் தேவநாதன் வெலவெலத்து விட்டான்.

"மாமா..."

"என்ன மாப்ள... இக்கட்டான தருணத்துல கை கொடுத்த ஒரு நல்ல மனுஷர் நீங்க. ஆனா, உங்ககிட்ட இப்ப அந்த நல்ல குவாலிடியை என்னால பார்க்க முடியல. என் மகளைப் பத்தி எனக்கு தெரியும். அவவேற ஆசைவேற கிடையாது. அவ பேச்சை எந்த விஷயத்துல கேட்கணுமோ அதுக்கு மட்டும் கேளுங்க. அவ்வளவுதான் சொல்வேன்"

-ராமநாதன் பேசியது அந்த நிலையிலும் அவன் மனதை தொட்டது.

"சாரி மாமா... எல்லாம் என் கையை விட்டு போயிடிச்சு" என்றான் அமட்டலாக.

"என்ன நடந்துச்சு... அதை சொல்லுங்களேன்"

"சுருக்கமா சொல்றேன். இந்த வீட்டை பேங்கில அடகு வெக்கப் போறோம். அதுல வர்ற பணத்தை

கொண்டும் இந்த வீட்ல கிடைச்ச நகைகளைக் கொண் டும் ஒரு பால் பண்ணையை விலைக்கு வாங்கி நடத்தப் போறேன்"

"அதுக்கு பத்திரமெல்லாம் வேணுமே. எங்க போவீங்க?"

"எல்லாத்துக்கும் ஒரு ஏற்பாட்டை திவ்யாவே பண் ணிட்டா. பணத்தை வீசி எறிஞ்சாதான் பாராளுமன்றத் தையே நமக்கு எழுதி வெக்க ஆள் இருக்கே"

"இல்ல... நீங்க பேராசைப்பட்றீங்க. அதுமட்டும் இல்ல. இந்த வீடு ஒரு கோயில். இதைப் பார்த்து நீங்க பயப்படத் தேவையே இல்லை. இங்க இருக்கறது ரொம்ப பாதுகாப்பான ஒரு இடத்துல இருக்கற மாதிரி..."

"தலைகீழா சொல்றீங்களே மாமா. அந்த மாடில என்ன இருக்கு. என்ன நடக்குதுன்னே தெரியலியே..."

"அங்கதான் சூட்சமம் இருக்கு. அந்த சாமி ஒரு சக்தி உபாசகர். அவருக்கு பல உபாசகர்களும், சித்தர்களும் பழக்கம். அவங்களெல்லாம் பறவையா, பாம்பா, காத்து ரூபத்துல கூட வந்துட்டு போவாங்க. பல சமயம் சாமி மேல போய்ட்டு வந்து இரண்டு பொருளோட பேசினதை நான் கேட்டிருக்கேன். அவரேகூட ஒரே சமயத்துல இரண்டு இடத்துல இருந்துருக்கார். எப்படி அது சாத்ய மாச்சுன்னு கேட்டப்போ ஒரு சிரிப்புதான் அவர்கிட்ட பதில்... நமக்கு இருக்கற அறிவால சாமியை புரிஞ்சுக்க முயற்சி செய்தா தோத்துதான் போவோம் மாப்ள..."

"என்ன மாமா நீங்க... சித்தர்கள், உபாசகர்கள்னு குழப்பறீங்களே. காத்தா வர்றதும் பறவை, பாம்பா வர்றதும் சினிமாவுலையும், டி.வி. சீரியல்லயும் சாத்ய மாகலாம். நிஜ வாழ்க்கையில் எப்படி உங்களால இதை எல்லாம் நம்ப முடியுது"

"சரி உங்களால நம்ப முடியல. அப்ப சட்டுன்னு ஒரு தெளிவான பதில் சொல்லுங்க. பூட்டின வீட்டுக்



குள்ள எப்படி ஒருத்தர் பூஜை செய்திருக்க முடியும். இந்த சாத்யங்கள் இல்லேன்னா அவர் அங்க இருந்துருக்கணும் இல்லியா?"

ராமநாதனின் கேள்வி தேவநாதனை கட்டிப்போட்டது. கச்சிதமாக திவ்யா வேறு அங்கே வந்தபடி இருந்தாள்.

அவளுக்குள் உள்ளூர உதறல். தேவநாதன் எங்கே எல்லாவற்றையும் உளறிக் கொட்டி விடுவானோ என்று... அவள் வரவும் ராமநாதன் பார்த்த விதத்திலேயே எல்லாம் விளங்கிவிட்டது.

"என்ன... எல்லாத்தையும் சொல்லி முடிச்சிட்டீங் களா?"

"திவ்யா... நான் உன் அப்பா. மாப்ளை என்கிட்ட எதையும் சொல்லக் கூடாதுங்கற மாதிரி இருக்கே உன் பேச்சு"

"ஆமாம்ப்பா... உங்களுக்கு எதுலையும் வேகம் போதாது. இப்படி செய்யாதீங்க... அப்படி நடந்துக்காதீங் கன்னு எதையாவது சொல்லி டிஸ்கரேஜ் பண்ணப் பார்ப்பீங்க. அதனாலதான் நான் என் குடும்ப விஷயத்தை உங்ககிட்டே பேச விரும்பலை..."

-திவ்யாவின் பதில் அவர் கன்னத்தில் அறைந்தது போல் இருந்தது.

திருமணம் ஆகி முழுசாய் ஒரு மாதம் ஆகவில்லை. அதற்குள் என் குடும்பம் என்று பிரித்துக் கொண்டு அவள் பேசுவதற்காக பெருமைப்படுவதா, இல்லை வருத்தப்படுவதா? அவருக்கு கண் கலங்கிவிட்டது.

"என்னங்க... நீங்க வாங்க! இனியும் இங்க நாம இருக்க வேண்டாம். இன்னிக்கேகூட நாம புறப்பட்டுடு வோம். பேங்க்குக்கு போன் பண்ணி பேசினேன். செக் நாளைக்கு ரெடியாயிடுமாம். அதை சேலம் அட்ரஸுக்கு கூரியர் பண்ணச் சொல்லிடுவோம். நாம சாமான் செட் டோட இன்னிக்கே கிளம்பலாம். என்ன சொல்றீங்க...?"

திவ்யாவின் பாய்ச்சல் தேவநாதனை திகைப்பில் புதைத்தது.

"என்ன திவ்யா... இப்பவே கிளம்புன்னா எப்படி? சேலத்துல வீடு பார்க்க வேண்டாமா... பால் காய்ச்ச வேண்டாமா?

"அதுவரை நாம இங்க இருந்தா மேல நடக்கற விஷயங்கள் நம்பளை பைத்தியமாவே ஆக்கிடும். கடைசில ஒரு பேய் வீட்ல இருக்கறதா ஊர் பேசினா அவ்வளவுதான். கதை முடிஞ்சிச்சு. அப்புறம் இதை ஒரு பிச்சைக்காரன்கூட வாங்கிக்க யோசிப்பான். நான் காரணமாத்தான் சொல்றேன்..."

-திவ்யாவின் லாஜிக் தேவநாதனையும் கட்டிப் போட்டது. ஆனால், ராமநாதனோ முறைப்புடன் மகளைப் பார்த்தார். பின் தேவநாதனிடம் ஊன்றியவர்.

"மாப்ள... வேண்டாம் மாப்ள! என் பொண்ணு பேச்ச கேக்காதீங்க. இந்த வீடு கிடைக்க நீங்க பூர்வ ஜென்மத்துல புண்ணியம் செய்திருக்கணும். இப்பகூட கெட்டுப் போயிடலை. சாமி படத்துகிட்ட போய் நின்னு எல்லா தப்புக்கும் மன்னிப்பு கேட்டுட்டு மாடியை பூட்டிடுங்க. அந்த பக்கம் தலை வெச்சும் படுக்காதீங்க. எல்லாம் சரியாயிடும்"

தேவநாதன் அவர் பேச்சால் தேங்கினான், திணறினான்.

"அப்பா நீங்க கொஞ்சம் வாயை மூடிகிட்டு சும்மா இருங்க. அவரை நான் படாத பாடுபட்டு பிடிச்சு வெச்சிருக்கேன். அதை பேசி கெடுக்கப் போறீங்களே..."

கெடுக்கறது எல்லாம் நீதான். ஒரு மனுஷனுக்கு அவன் மனைவிதான் உண்மையான சக்தி. அவமட்டும் சரியா அமையலேன்னா அவ்வளவுதான். வாழ்க்கைங்கறதும் கார், பங்களா, பணம் காசுல ஆனதுல்ல. உண்மை, சத்தியம், நேர்மை இதுல ஆனது. இதை நீ இப்ப புரிஞ்சிக்க மாட்டே. ஆனா, நிச்சயம் போகப் போக புரிஞ்சுக்குவீங்க..."



"போதும்ப்பா... உங்க உபன்யாசத்துக்கு நன்றி. என்னங்க கிளம்பறீங்களா?"

-திவ்யா தூண்டியபடி இழுக்க எதிரில் கூரியர்தபால்காரர். அவனிடம் ஒரு கவர்.

பேங்கில் இருந்துதான் எதாவது தகவல் வந்திருக்க வேண்டும் என்றபடியே வாங்கிய திவ்யா வேகமாக பிரித்தாள். உள்ளே இருந்ததைப் பார்த்தவளுக்கு அப்படியே பொட்டில் வியர்க்க ஆரம்பித்தது.

காலடியில் பூமியே பிளந்த மாதிரியும் இருந்தது.

## 33

எது இன்பம்?

மனிதனாகப் பிறந்து, உலகத்தோடு கலந்து, உடம்பை வளர்த்து, அதனால் உயிரைக் காத்து, ஆசாபாசங்களில் உழன்று, அதற்குப் பின் அவற்றில் இருந்து விலகி, ஞானம் பெற்று... எந்தச் சரீரத்தால் பிறவி என்னும் பெருங்கடலை நீந்திக் கடந்தோமோ அந்தச் சரீரத்தாலேயே முக்திக்கு வழி கண்டு, மீண்டும் பிறவாத நிலையை அடைவதுதான் உண்மை இன்பமா?

இல்லை. திரும்பத் திரும்பப் பிறந்து, உலகின் எல்லாவித இன்பங்களையும் என்ன விலை கொடுத்தாவது வாங்கி அனுபவிப்பதுதான் இன்பமா?

எது உண்மையான இன்பம்?

இந்தக் கேள்விக்கு நமது வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் விடை கிடைத்தபடிதான் இருக்கிறது. நாம்தான் அதை உணர்வதில்லை.

நமக்குக் கிடைக்கும் இன்பம் எப்படிப்பட்டது என்று சிந்தித்துப் பார்த்தாலே புரிந்துவிடும். உணவுப் பொருட்களின் சுவையிலே அது புரிந்து விடும். சுவையில் இருந்து உடுத்தும் உடை, வாகன சுகம், பணவரவு, புகழ் போதை என்று சுக மளிக்கும் எல்லாமே அந்த நொடிக்குதான் பெரிதாகக் காட்சி தருகிறது. பிறகு, அதைவிடப் பெரிதாக அல்லது அதற்கு மாற்றாக ஒரு சுகம் கிடைக்கும் போது மனம் பரவசப்படுகிறது.

எந்த இன்பத்தையும் நிலையாகப்பிடித்து வைத்துக் கொள்ள முடியவில்லை. புகையும் அதுவும் ஒன்றாக இருக்கிறது. பார்த்துக் கொண்டிருக்கும் போதே மறைந்து போகிறது. அதற்கு நாம் படும் பாடோ மிக அதிகமாக இருக்கிறது.

ஒரு நாள் முழுக்க உழைத்தால் நூறு ரூபாய் கிடைக்கிறது. அதை ஐந்து பேர் சாப்பிட்டு அரை மணியில் அழிக்கிறோம். அந்த அரை மணிக்காக நாள் முக்க உழைக்கிறோம். எல்லா இன்பகரமான விஷயங்களின் பின்னாலும் அளவிட முடியாத துன் பங்களின் பதிவுகள் இப்படித்தான் இருக்கின்றன.

நிறைய துன்பப்பட்டு, குறைவாக அனுபவிக்கும் இந்த நிலையில்லாத இன்பத்தால் ஒரு உண்மை விளங்கும். இது துளியும் நிரந்தரமில்லாதது. நமது புலன்களை ஏமாற்றி அடிமைப்படுத்தி வைத்திருக் கிறது. வாழ்க்கை என்னும் அரிய காலகதியைப் புரிந்துகொள்ள செலவழிக்காமல் அல்பமான இன்பங்களை அனுபவிப்பதிலேயே இருக்கிறோம்.

உண்மையான பயன் என்பது அல்பமான இன் பங்களைப் புரிந்து கொள்வதிலும், அவைகளுக்காக அலைவதை நிறுத்திக் கொள்வதிலும்தான் இருக்கிறது.

வயதான ஒருவர் இறந்துவிட, அவரது சடலம் சாலையில் செல்கிறது. அவரோடு எடுத்துச் செல்வது எதுவும் இல்லை. விட்டு வைத்தால்



நாற்றமடித்து சூழ்நிலையைப் பாழ் பண்ணி விடும் என்பதற்காகவே உடலைக்கூட எரியூட்டவோ, அடக்கம் செய்யவோ எடுத்துப் போகின்றனர். உண்மையில் எதுதான் மிச்சம்?

எதுவுமில்லை. எல்லாம் பளிச்சென்று தெரிந்தும் நம்மால் அல்ப இன்பங்களைத் துறந்து இருக்க முடியவில்லை. இந்தக் கடின நிலையைத்தான் 'மாயை' என்கின்றனர்.

மாயையில் இருந்து விடுபட, தெள்ளத் தெளிவாக நம்மை நாம் உணர, நமக்கிருக்கும் ஒரு வழிமுறையே ஸ்ரீயந்த்ர பரிமாணம். அதனுள் நாமும், நம்முள் அதுவும் இருப்பதை இதுவரை வந்த அத்தியாயங்களில் பார்த்தோம். ஸ்ரீயந்த்ரத்தை வணங்கும்போது, நாம் உணரும் விஷயங்கள் இன்னமும் அதிகரிக்கும். ஒரு கட்டத்தில் இனி, விளங்கிக் கொள்ள ஏதுமில்லை என்னுமளவுக்கு ஒரு தெளிவும் அமைதியும் தோன்றும். அதுமட்டுமல்ல புறத்தில் உள்ள நிரந்தரமற்ற செல்வங்கள்கூட நம்முன் நாம் கூப்பிட்டது போல வந்து நிற்கும். நமக்கு ஏவல் செய்ய அவை தயாராக இருக்கும். ஆனால், நாம் அப்போது துளியும் அதை லட்சியம் செய்ய மாட்டோம்.

ஏனெனில், எது அழியாத நித்ய இன்பம் என்பது அப்போது விளங்கியிருக்கும். நாம் அதில் இருந்து கொண்டிருப்போம்.

திவ்யாவின் கையில் அந்த கூரியர் கடிதம். முகத் திலோ அபரிமிதமான அதிர்ச்சி. நின்று கொண்டிருக்கும் இடம் அப்படியே இரண்டாகப் பிளந்து அதனுள் விழுந்து கொண்டிருக்கிற மாதிரிகூட உணர்ந்தாள். நெருங்கி வந்த தேவநாதன் அந்தக் கடிதத்தை வாங்கிப் பார்த்தான்.

அது கடிதமல்ல... சேலத்தில் இருந்து வந்திருந்த சண்டி ஹோமப் பத்திரிகை, லஷ்மியும் பிரகாஷும்

அனுப்பி இருந்தனர். பத்திரிகையில் சச்சிதானந்த சாமி படம். அவர் முன்னிலையில் ஹோமம் நடைபெறப் போவதாக பெரிதாக அச்சிட்டிருந்தனர். மெல்ல ராமநாத னும் பத்திரிகையை வாங்கிப்பார்த்தார்.

"அட..." சாமி உயிரோடதான் இருக்கார் போல..." என்றார் பரவசத்தோடு.

அதன்பின் ஒவ்வொருவராகப் பத்திரிகையைப் பார்த்து விட்டு ஆச்சரியப்பட்டனர்.

கல்யாணிக்கு வீட்டை பேங்க்கில் அடகு வைக்க முயற்சி செய்ததில் இருந்து பால் பண்ணை வாங்க குறுக்கு வழியில் திட்டம் தீட்டியது வரை எதுவுமே தெரி யாது. எனவே, அவளுக்குள் பெரிதாக அதிர்ச்சி இல்லை.

"என்ன மாயம் இது... எப்படி இந்த மனுஷர் முதலை வாயில இருந்து தப்பிச்சார்... தப்பிச்சவர் நேரா இங்க வராம ஹோமம் பண்ணப் போயிருக்காரே" என்றாள்.

செண்பகமும் ஒத்து உதினாள். அவர்கள் ஒருவருக்கும் திவ்யாவின் உள்மனம் பற்றித் தெரியாது... மேலே இருந்து கீழே கொண்டு வந்த நகைகள் அவர்களைக் கொஞ்சம் உறுத்தின.

"தேவா... மேல இருந்த நகைகளைத் திரும்பக் கொண்டு போய் வெச்சுடு. அந்த நகைலயும் தங்கத்துல யும் நம்ம பேர் எழுதல போலிருக்கு" என்றாள். வனிதா வுக்கும் ஜெயந்திக்கும் மட்டும் கொஞ்சம் ஏமாற்றமாக இருந்தது. மாமன் மகனை மணந்து, அமெரிக்கா போக ஆசைப்பட்ட கனவு அப்படியே சிதறிச் சின்னாபின்ன மாகிற மாதிரி ஒரு பிரமை ஏற்பட்டது.

தேவநாதனுக்கு ஒன்றுமே புரியவில்லை. திவ்யாவைத் தான் பார்த்தான். அவளோடு மெல்லத் தனியே சென்றான்.

"இப்ப என்ன பண்றது திவ்யா?"



"எனக்கு எதுவுமே தோணல"

"முதல்ல கார் கம்பெனிக்குப் போன் பண்ணி கார் வேணாம்னு சொல். அப்படியே கைல இருக்கற நகை களை எல்லாம் கொண்டு போய் மேல எடுத்த இடத்துல வெச்சுடு"

"இருக்கறத வெச்சுடலாம்... அடகு வெச்சதை... வித்துட்டோமே கொஞ்சத்தை... அதுக்கெல்லாம் என்ன பண்றது?"

"எல்லாத்தையும் மீட்போம்... பால் பண்ணையும் வேண்டாம், ஒண்ணும் வேண்டாம். நல்ல வேளை உன் பேச்சைக் கேட்டு நான் இன்னும் வேலையை ரிசைன் பண்ணல. தப்பிச்சேன்"

-அவன் ஆயாசப்பட, அவனைக் கூர்மையாகப் பார்த்தாள் அவள்.

"என்ன திவ்யா?"

"உயரமா உச்சிக்குப் போன ஒருத்தன் பொதேர்னு விழுந்துட்ட மாதிரி இல்ல?"

"அதுக்கும் மேலயே இருக்கு... சாமி ஏன் நம்மகிட்டப் பேசலன்னு தெரியல"

"ஒருவேளை இவர் அவரில்லையோ?"

"பைத்தியமே... பத்திரிகைல பேர் மட்டுமில்ல, போட்டோவும் போட்டுட்டாங்க. பாத்தேல்ல?"

"எதுக்கும் ஒரு தடவை நேர்ல போய் அவர்தானான்னு பாத்தா என்ன?"

"உனக்கு இன்னுமா சந்தேகம்? நான் நேர்ல பாத்தேன்னு சொன்னப்ப நம்பலை நீ. வனிதாவும் பாத்திருக்கா... பத்திரிகையிலயும் பேர் வந்தாச்சு. என்ன சந்தேகம் உனக்கு?"

"அப்ப முதல் காரியமா உங்களைத்தானே தொடர்பு கொண்டுகிட்டிருக்கணும்"

"அங்கதான் எனக்கும் கொஞ்சம் உதைக்குது"

தேவநாதன் லேசாக சலித்துக் கொள்ளும்போது ராமநாதன் வந்தார்.

"என்னம்மா.. உன்னோட ஆகாசக் கோட்டை இடிஞ்சு போயிடிச்சா?" கச்சிதமாகக் கேட்டார்.

"சும்மா இருங்கப்பா... வயித்தெரிச்சலைக் கிளப்பா தீங்க"

"எதைம்மா உன் கைய விட்டு இழந்துட்டே... இவ்வளவு வருத்தப்படறே..."

"மாமா... நாங்களே ரொம்ப டென்ஷன்ல இருக்கோம். நீங்க வேற எரியற நெருப்புல எண்ணையை விட்ட மாதிரி பேசறீங்களே"

"போதும் மாப்ளே... நீங்க என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்கன்னு பார்த்துட்டுதான் இருக்கேன். சாமி இப்படி உயிரோட திரும்பி வந்ததை உங்களால ஜீரணிக் கவே முடியல. இந்த மாளிகை நகை, நட்டுன்னு அவ்வள வுக்கும் சொந்தமாயிட்ட பேராசை உங்களுக்குள்ள கொழுந்து விட்டு எரிஞ்சுக்கிட்டு இருந்தது. இப்ப அது மேல மழை பெய்ய ஆரம்பிச்சிடிச்சு போல இருக்கு..."

-ராமநாதன் குத்தலாகத்தான் பேசினார்.

"இப்பக்கூட கெட்டுப் போயிடல. செய்த தப்பைத் திருத்திக்கப் பாருங்க... சாமி நிச்சயம் மன்னிச்சிடுவார். அவர் தலைக்கு வந்தது தலைப்பாகையோட போகட்டும். அவர் உயிர் பிழைச்சும் இங்க வராம இருக்க சரியான காரணம் இருக்கு. அதே நேரம் இப்ப நாம பேசிக்கிட்டு இருக்கற இந்த நொடியில அவர் இங்க காத்தா இருந்து நம்ம பேச்ச கேட்டுக்கிட்டுகூட இருக்கலாம். அவர் ஒண்ணும் நம்மைப் போல சராசரி மனிதர் இல்லை. யோகத்தால குறிப்பா ஸ்ரீயந்த்ர உபாசிப்பால அவர் எங்கேயோ போய்ட்டாருன்னுதான் சொல்வேன். தயவு செய்து நான் சொல்றதக் கேளுங்க. நான் முந்தியே சொன்னேன். மேல மாடியை அவர் ஒரு கோயிலா வெச்சிருந்தார். அப்படியே அதை உங்களை பராமரிக்கச் சொல்லியிருந்தேன். நீங்க எதையும் காதுல வாங்கிக்கல. என் மக உங்களை காதுல வாங்கிக்க விடல. சக்திய இரண்டு கூறா பிரிச்சு நல்ல சக்தி, கெட்ட சக்திம்பாங்க. அந்தக் காலத்துல தேவ சக்தி, அசுர சக்திம்பாங்க. இதுல நாம எப்பவும் தேவசக்திக்குக் கட்டுப்பட்டவர்களா இருக்கணும். அசுர சக்தியோட பேச்சைக் கேட்டா அவ்வளவுதான்..." என்றபடியே திவ்யாவைப் பார்த்தார்.



தேவநாதன் திவ்யாவை சற்று திடமாகப் பார்த்துவிட்டு அனைவர் எதிரிலும் போனை நெருங்கினான். முதலில் கார் ஷோரூமுக்கு போன் செய்தான். கார் வேண்டாம் என்றான். அடுத்து பேங்க் மேனேஜருக்கு போன் செய்து லோனுக்கு முற்றுப்புள்ளி வைத்தான். "மன்னிக்கணும்... என்னால பணத்தைப் புரட்ட முடியல. நீங்க வேற நல்ல பார்ட்டிய பார்க்கலாம்" என்று பால் பண்ணைக்கும் போன் செய்தான். அவர்களுக்கெல்லாம் அப்போதுதான் அதுவரை நடந்த ஒவ்வொன்றும் வெளிச்சமானது.

"போதும் மாப்ள... இந்த மாற்றங்கள் போதும். இனிமே பாருங்க. எல்லாம் நமக்கு சாதகமாகவும் நல்லபடியாவும் இருக்கும்" என்றார்.

"அப்படியே அவசியம் சண்டி ஹோமத்துக்குப் போய் நாம கலந்துக்கணும்" என்றும் சொன்னார்.

❖ ❖ ❖

*சேலம்!*

பதிதாகக் கட்டப்பட்டிருக்கும் அந்த கோயில் வளாகத்தில்தான் சண்டி ஹோமம். ஓடியாடி காரியங்களில் ஈடுபட்டிருந்தான் பிரகாஷ். அவனுக்கு மேல் லஷ்மி. நேற்று வரை படுத்த படுக்கையாக இருந்தவன் என்று

சத்தியம் செய்தாலும் நம்ப மாட்டார்கள். ஹோம குண்டம் அருகில் சச்சிதானந்த சுவாமி!

ஆயிரக்கணக்கில் மக்கள். தேவநாதனும் திவ்யாவுடனும் அம்மா, அக்கா, தங்கைகளுடன் வளாகத்தில் நுழைந்தான். அவனுக்குள் ஏகப்பட்ட நெருடல். சாமி அவனைப் பார்த்தால் என்ன கேட்பார் என்று குழப்பம். லக்ஷ்மியும், பிரகாஷும் வரவேற்றனர்.

"என்னடா இது... ஒரு பேஷன்ட் நீ... இங்க ஓடியாடி காரியம் பாக்கறியே..." -தேவநாதன் விசாரித்தான்.

"எனக்கு இப்ப எதுவும் இல்லடா... நான் இப்ப பூரணமா குணமாயிட்டேன். டாக்டர்களே, மிராகிள்னு சொன்னாங்கடா..." என்றான் பிரகாஷ். அப்படியே "லக்ஷ்மி போல ஒருத்தி எனக்கு மனைவியா இருக்கும் போது எமனாலையும் என்னை ஒண்ணும் செய்ய முடியாது..." என்றான். அந்த நொடி திவ்யாவைத்தான் ஒரு பார்வை பார்த்தான் தேவநாதன்.

அவர்களை அழைத்து சாமிக்கு முன் நிறுத்தினான் பிரகாஷ். சாமியும் யாரோ புதியவர்களைப் பார்ப்பது போலப் பார்த்தார். ஆசீர்வதித்தார். திவ்யாவுக்கு என்னவோ போலிருந்தது. மெல்ல தேவநாதன் காதைக் கடித்தாள்.

"ஏங்க... இவர் நம்ம சாமிதானா! கொஞ்சமும் தான் யார்னு காட்டிக்காம இருக்காறே..."

"சும்மா இரு..." என்றவன், சாமியை நெருங்கினான்.

"சாமி போதும் சாமி... தயவு செய்து என்னை மன்னிச்சு மவுனம் கலையுங்க..." என்றான். நிமிர்ந்த அவர். "தப்பு செய்யறது தப்பே இல்ல... அதைத் தொடர்ந்து செய்யறதுதான் மகாதப்பு" என்றபடியே "நான் மறுபடி காசிக்குப் போக விரும்புகிறேன். வர கொஞ்ச நாளாகும். அதுவரை மாடிப் பக்கம் போகாம எனக்கு கொடுத்த வாக்கை காப்பாத்துவியா?" என்றுதான் கேட்டார்.



"நிச்சயமாக சாமி... நீங்க இறந்ததா நினைச்சு மட்டும் நாங்க உங்க நகை, நட்டைத் தொடலை. உங்ககிட்ட உத்தரவு கேட்டப்போ சரின்னு சொன்னீங்க... அதனால காரியங்கள்ல இறங்கினேன்" என்றான். திவ்யாவைப் பார்த்தார் சாமி. அவளோ வியர்த்துக் கொண்டிருந்தாள்.

"மன்னிச்சிடுங்க... அந்த உத்தரவுக் காகிதம் என்னோட சதி" என்றாள் தலைகவிழ்ந்து. பகீரென்றது தேவநாதனுக்கு.

"அடிப்பாவி..." என்றவன் பொத்தென்று சாமி காலில் விழுந்தான். அவர் சிரித்தார்.

"சாமி... உங்களைப் புரிஞ்சுக்கவே முடியல. அதைவிட அந்த மாடிய சுத்தமா புரிஞ்சுக்க முடியல... அங்க யாரோ இருக்கற மாதிரியும் இருக்கு. இல்லாத மாதிரியும் இருக்கு. எது சாமி உண்மை?" என்று கேட்டான்.

"நான் கூட நேத்து வந்து பூஜை பண்ணிட்டு போனேன். நீ என்னைத் தேடி வந்து பாத்தப்போ என் வால்தான் உனக்குத் தெரிஞ்சிருக்கும்" என்றார்.

தேவநாதனும், திவ்யாவும் சிலிர்த்துப் போயினர்.

"சாமி... அது எப்படி சாமி நீங்க ஒரு பாம்பா வர முடியும்..."

"ஸ்ரீயந்த்ரத்தால அஷ்டமா சித்தியை அடைஞ்சுட்டவங்களுக்கு பாம்பா மட்டுமில்ல எதாவேணும்னாலும் வர முடியும்"

"அது போகட்டும் காசியில் உங்களுக்கு உண்மையில என்ன நடந்தது...?"

"கர்மப்படி என்னை முதலை பிடிக்கணும். அது நடந்தது"

"நீங்க சொல்ற எதையுமே புரிஞ்சிக்க முடியல. ஏதோ அதிசயம் நடந்துருக்குன்னு மட்டும் தெரியுது. எப்படிப்

பிழைச்சீங்க? நேரா வீட்டுக்கு வராம எங்களைச் சோதிச்சது ஏன்?"

"உன் சொல்லுல நீ நிக்கறியா, இல்லையான்னு தெரிஞ்சுக்கத்தான்..."

"அவரது பதில்முன் மெல்லத் தலைகுனிந்தான். திவ்யாவும் அதிசயமாக தலைகுனிந்தாள்"

"தேவசக்தியை மனதில் கொண்டு ஸ்ரீயந்த்ரத்தை வணங்குவதால் கிடைக்கும் அற்புதச் சக்தியில் எல்லாமே சாத்தியம். நிலையில்லாத இன்பத்தில் நாட்டம் கொண்டு நடந்தால் நல்வழி, தீய வழி வித்தியாசம் தெரியாமல் போகும். எல்லாவற்றையும் கடந்த நிலையை அடைவதன் மூலமே நம்மை வந்து எல்லாமே அடையும்" என்றார் சாமி.

தேவநாதனும், திவ்யாவும் அந்த உண்மையின் அர்த்தம் புரிய... அவர்களது குடும்பத்தினரும் சேர்ந்து கொண்டனர். ஹோமத்தில் பங்கேற்று திரும்பிய போது அவர்கள் முகத்தில் புதிய சக்தி தெரிந்தது.

முற்றும்